# மாதர் போதினி

No. 264 | ஜனவரி 1920 | No. 1


## A NEW YEAR'S GREETING

### நவ வருட வாழ்த்து

'நீ ஆசீர்வாதமாயிருப்பாய்' என்ற நவ வருட வாழ்த்து மாதர் போதினியிடமிருந்து வருகிறது. இவ்வாழ்த்து எப்படிப்பட்டதோ வென்று சந்தேகியாதே. இது உண்மையானது; தேவனுடைய பிள்ளைக்குத் தேவ வாக்கு. சந்தோஷத்தோடே ஏற்றுக்கொள்.

அநேகர் பெற்றோரிடமிருந்தும், பெரியோரிடமிருந்தும், முதியோரிடமிருந்தும், நல்லோரிடமிருந்தும் புது வருஷத்திற்காக ஆசீர்வாதம் பெற்றுக்கொள்ள ஆசிப்பதுண்டு. தந்தை தாயரிலும் மிக்க அன்பும் உரித்துமுடையவரும், சர்வ ஞானமும் சர்வ வல்லமையும் சர்வாதிகாரமும் சர்வ பரிபூரணமும் நிறைந்துள்ளவரும், எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருமான தேவனுடைய வற்றாத களஞ்சியத்தில் எவ்வித ஆசீர்வாதம் வேண்டுமானாலும் நிறைவாய் உண்டு. 'அவரையுடையவன் சகலத்தையு முடையவன்.' அவர் ஆசீர்வதித்தால் தடுப்பாரொவருமில்லை. அவர் தமது பிள்ளைகளைப் பார்த்து: 'நீ ஆசீர்வாதமாயிருப்பாய்' என்று வாழ்த்துக் கூறுகிறார். நீ அவருடைய பிள்ளையாகில் இவ்வாக்கு உனக்கு நிச்சயம்.

அவர் பிள்ளைகள் யாரென்றறியலாம்? நீ அவர் பிள்ளையாவென்றறிய விரும்பினால் யோவான் 1 : 12 பார். 'அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ அத்தனைபேரும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்.' நீ அவரை ஏற்றுக்கொண்டதுண்டானால், அதாவது உன்னில் அவரிருந்தால், நீ அவருடைய பிள்ளையே.

தேவனுடைய பிள்ளைகள் வீட்டிலும் வெளியிலும் போக்கிலும் வரத்திலும் ஆசீர்வாதமாயிருப்பார்கள். உனக்கு இந்த சலாக்கியம் இலவசமாய்க் கிடைக்கும். அவரை ஏற்றுக்கொள்ளாதிருப்பாயாகில், இப்புதுவருஷத் துவக்கத்திலேயே அவரை ஏற்றுக்கொள்;



தமிழ்நாடு ஆவணக் காப்பகம்

162017



அப்போது ஆசீர்வாதமாயிருப்பாய். யோசேப்போடு தேவனிருந்ததால் அவன் போனவிடமெங்கும், எவ்விடத்திலும் ஆசீர்வாதமாயிருந்தான். அவ்வண்ணமே நீயுமிருப்பாய்.

உன் வீட்டில் நீ ஆசீர்வாதமாயிருந்தால் அதை எவ்வாறு காணலாம்? உன் வீட்டில் தேவ சமாதானமும் மெய்த் திருப்தியும் ஆளும். மனரம்மியத்தால் உனக்கு யாதொரு குறையுமிராது.

'எப்போதுமே இன்ப வாழ்வே
என்னருமை நேச யேசுநாதர்
எனக்கெல்லா மவர்
பின்னே எது குறை?'

இயேசைய ரென்னோ டிருப்பதாலே என்று சொல்லி ஆனந்திப்பாய். வீட்டிலுள்ள சகலருக்கும் உன்னால் நன்மையுண்டாகும். உன் ஆகாரம் இலைக்கறியாயிருப்பினும் இனிதாயிருக்கும். உன் வஸ்திரம் சுத்தமாயும், உன் தலைக்கெண்ணெய் குறையாமலுமிருக்கும். 'முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்' என்றபடி, வஸ்திரமும் ஆகாரமும் குறைவின்றிக் கிடைக்கும். நாளைக்கென்ன செய்வேனென்ற கவலை உன்னை வருத்தாது. உன் வீட்டார் உன்னைப் பாக்கியவதி என்று வாழ்த்துவதோடு, உன் வீட்டுக்கு வருவோரும் உன்னை வாழ்த்திப்போவார்.

உன் வேலை ஸ்தானத்தில் நீ ஆசீர்வாதமாயிருப்பதை எவ்வாறு அறியலாம்? உன் கையின் கிரியைகள் அநுகூலமாகும். ஞானத்தோடு நடந்துகொள்வாய். உன்னோடு வேலைசெய்பவர் நீ கூடவிருப்பதால் கிடைக்கும் மகிழ்ச்சியை வெளியிடுவார். உன் தோழமை ஊழியர் உன்னால் ஆசீர்வாதம் பெறுவார். 'உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம். உனக்கு விரோதமாய் நியாயத்திலெழும்பும் எந்த நாவையும் நீ குற்றப்படுத்துவாய்.' கஷ்ட வேலை உனக்கும் உன்னோடிருப்பவருக்கும் எளிதாகும். கடமை பாரமாயிராமல் தோழமையாகும். உன்னோடிருப்பவருக்கு சமயத்திற்கேற்ற ஆலோசனை சொல்வதால் அவர்களுக்கு ஆசீர்வாதம் வருவிப்பாய். வழிகாட்டி உன்னோடிருப்பதால் பிறருக்கு வழிகாட்டியாவாய்.

இதே வண்ணம் போக்கிலும் வரத்திலும் யாரைப் பார்த்தாலும், யாரோடு பேசினாலும், யாரோடு சம்பந்தப்பட்டாலும், அவர்களுக்கெல்லாம் ஆசீர்வாதமுண்டாகும். உன்னையறிந்த யாவரும் உன்னை வாழ்த்துவார்கள். 'நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்.'

JL
TSS m 211, N 11



(1) ஆசீர்வாத கர்த்தரே
புறம்பே நில்லாதேயும்
அன்பாய் எந்தன் நெஞ்சிலே
வந்து பிரவேசியும்.

(2) இயேசுவே பேரின்பங்கள்
உம்மிலே இருக்குது
மாறா இன்ப சுகங்கள்
உம்மாலே உண்டாகுது.

(3) எந்த நல்ல ஈவுக்கும்
நீரே ஆதி காரணர்
பாக்கியங்கள் யாவுக்கும்
உறைவிட மானவர்.

(4) நீர் என் நெஞ்சில் தங்கினால்
எந்தன் உள்ளம் பூரிக்கும்
உற்றோர் மற்றோர் யாருக்கும்
என்னால் நன்மை பெருகும்.

## A SERMON BY SADHU SUNDER SINGH

## சாது சுந்தர் சிங் என்பவர் செய்த ஓர் பிரசங்கம்

'ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது, நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன். நீங்கள் எனக்கு குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்கள் என்று சர்வ வல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்' (2 கொரி. 6 : 17, 18).

நாம் இந்த உலகத்தில் அக்கினியிலிருப்பதுபோல் ஜீவிக்கவேண்டியவர்களாயிருக்கிறோம். ஐசுவரியம் தன்னில்தானே தீங்குள்ளதல்ல. ஆனால், ஐசுவரியத்தின் மூலமாக அநேக தீமையான காரியங்கள் உண்டாகக்கூடும். ஒரு ஐசுவரியவான் இருந்தான். அவன் உலகத்தை நம்பி ஜீவித்தான். நித்தியத்தைப்பற்றி அவன் சற்றாகிலும் சிந்தித்தவனல்ல. அவனுடைய இருதயம் முழுவதும் ஐசுவரியத்தின் மேலும், சிற்றின்பத்தின்மேலும் சாய்ந்தது. அவனுடைய சாவு அதிக பயங்கரமாயிருந்தது.

நான் இமய மலைபக்கமாய் பிரயாணம் செய்துகொண்டிருக்கும் பொழுது ஒரு நதியோரத்தில் ஒரு அழகான விருக்ஷம் இருந்தது. சாயந்திரத்தில் திரும்பவும் அங்கே வந்து பார்த்தபொழுதோ, அந்த மரம் அவ்விடத்திலில்லை. அது இருந்த இடத்தையும் அறிவது அரிதாகிவிட்டது. காரணமென்னவென்றால், அன்றையத்தினம் ஒரு பெருமழை பெய்து, நதியில் வெள்ளம் புரண்டோடினபடியால் அந்த மரத்தையும் அடியோடே சமுத்திரத்தில் தள்ளிவிட்டது. இதே விதமாகத்தான் உலகமுமிருக்கிறது. உலகமும், உலகத்திலுள்ள யாவும் அழிந்துபோகும். தங்களுடைய இருதயங்களை உலகத்திலும், உலகத்திலுள்ளவைகளிலும் செலுத்துகிறவர்கள், அதோடே வாரிக்கொள்ளப்படுகிறார்கள். நமதருமை ரக்ஷகர் எருசலேமுக்குப் பவனி போகிறார். தெருக்களிலும், வீதிகளிலும் வஸ்திரங்கள் விரிக்கப்பட்டன. ஆனால் இயேசுவானவர் அதின்மேல் நடந்துபோகவில்லை. அவர் ஏறியிருந்த கழுதையே அந்த வஸ்திரங்களின்மேல் நடந்தது. ஆகையால், நாம் உலகத்திலிருந்தபோதிலும், உலகத்தாரல்லாதவர்களாகவே ஜீவிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். ஏனென்றால், அவர் பவனிபோகும்பொழுது 'ஓசன்னா! ஓசன்னா!!' என்று ஆர்ப்பரித்தார்கள். நாலுநாளைக்குப் பிறகு, 'சிலுவையிலறையும்! சிலுவையிலறையும்!!' என்று கூக்குரலிடுகிறார்கள். இன்றைக்குச் சிநேகிதர்களாயிருக்கிறவர்கள், நாளைக்கு விரோதிகளாயிருக்கலாம். பெரிய மாறுதல்!

அழகும் அழிவுள்ளது. ஒரு அம்மாள் இருந்தார்கள். அவர்களிடம் நான் சென்று: 'அம்மா, எவ்வளவு நேரம் நீங்கள் ஜெபம் செய்கிறீர்கள்?' என்று கேட்டேன். அதற்கவர்கள்: 'ஏன்! நான் தினந்தோறும் கோவிலுக்குப் போகிறேன்' என்றார்கள் 'இல்லை, இல்லை, நான் அதைக் கேட்கவில்லை. ஒருநாளில் எவ்வளவு நேரம் ஜெபத்தில் செலவிடுகிறீர்கள்?' என்று கேட்டேன். அதற்கவர்கள்: 'எனக்கு காலையில் எழும்பினால், தலையைச் சீவவும், நகைகளைப் போட்டுக்கொள்ளவுந்தான் சரியாயிருக்கிறது. இது காரணத்தால் அடிக்கடி கோவிலுக்கும் பிந்தி வரும்படி நேரிடுகிறதே! கோவிலில்தான் எல்லாரோடும் சேர்ந்து ஜெபம்செய்வேன்' என்றார்கள். பாருங்கள், இந்த அம்மாள் தங்களை அலங்கரிக்கிறதிலும், உலக ஆடம்பரத்திலுமே தங்கள் நேரத்தைச் செலவழித்தபடியால் பரம பிதாவண்டையில் சேர்க்கக்கூடாத நிலைமையிலிருந்தார்கள். சிறிது நாள் கழித்து, பெரிய வைசூரி என்னும் வியாதி வந்து அவர்களுடைய அழகைக் கொள்ளைகொண்டு போய்விட்டது. இனிமேல் கண்ணாடியைப் பார்க்கவும் வெட்கம்! தங்களை அலங்கரித்துக்



கொள்வதையும் விட்டுவிட்டார்கள். குணப்பட்டார்கள். இனிமேல், தங்களுடைய ஆத்துமாவை அலங்கரிக்கத்துவங்கி தங்கள் இருதயத்தை தேவனிடத்தில் ஊற்றிவிட்டார்கள். இவ்விதமாகவே, தேவன் ஒவ்வொருவருடைய இருதயத்தையும் இழுத்துச் சுத்திகரிக்க ஆசையாயிருக்கிறார். ஆனால், நாமோ அசுத்தமாயிருக்கவே பிரியப்படுகிறோம். நாம் சுத்தமும் மாசற்றவர்களாகவும் இருக்கவேண்டும். அவர் நம்மை பரிசுத்தமாயிருக்க விரும்புகிறார். நாமோ உலகத்தால் இழுப்புண்டுபோகிறோம். ஆனால், ஒரு காரியம்; துக்கமும், சஞ்சலமும், அவமானமும் வரும்பொழுதுதான் உணருகிறோம். அப்பொழுதுதான் தேவன் நமக்கு ஒரு செய்தி அனுப்பியிருக்கிறதாக நினைக்கிறோம். அப்பொழுதுதான் அவரிடத்திற்குச் செல்லுகிறோம்.

இமயமலையின்மேல் ஒரு பாறையில் நான் உட்கார்ந்திருந்தேன். ஒரு பறவை அங்குமிங்கும் பறந்து கடைசியில் என் மார்பின்பேரில் வந்து விழுந்தது. சாதாரணமாக, பழக்கப்படாத பறவைகள் மனிதரண்டை வருகிறதில்லை. ஆகையால், இந்தப் பறவை என்மேல் வந்து விழுந்தது இயற்கைக்கு விரோதமாயிருக்கிறதே யென்று நான் கவனித்தபோது, மேலே ஒரு வயிரி பறந்து இந்த ஏழைப் பறவையைப் பிடிக்கும்படி வட்டம் போட்டுக்கொண்டிருந்தது இந்தப் பறவை அங்குமிங்கும் ஓடியும் தப்பித்துக்கொள்ள வழியில்லாதிருந்ததினால், கடைசியில் தஞ்சமென்று என் மார்பில் விழுந்தது. இவ்விதமாகவே, துன்பங்களின் மூலமாகவும், துக்கங்களின் மூலமாகவும் தேவன் நம்மைத் தேடுகிறார். துன்பமும் துக்கமும் உலகத்தில் இல்லாவிட்டால் நாம் அவரிடத்தில் போகவேமாட்டோம். இப்பேர்ப்பட்ட காலங்களிலாவது நாம் அவரிடத்தில் தஞ்சமென்று போனால், அவர் தமது மார்பில் நம்மை அணைத்துக்கொள்ள மாட்டாரோ? இவ்விதமாக அவர் துன்பங்களின் மூலமாகவும், துக்கங்களின் மூலமாகவும் நம்மை இழுக்கிறார். ஆனால், நாமோ சந்தேகத்திலிருக்கிறோம். சந்தேகமே ஒரு வியாதியாய் இருக்கிறது. ஒரு வியாதியை நாம் எப்படி சுகப்படுத்திக்கொள்ளப் பார்க்கிறோமோ, அப்படியே, சந்தேகத்தையும் நம்மைவிட்டு அகற்றிவிடவேண்டும். கை எலும்பு ஒடிந்துபோனால், வேதனை உண்டாகிறது. அவ்விதமாகவே, சந்தேகமும் [illegible] உண்டாக்குகிறது. [illegible]மானால், சந்தேகம் தீரவேண்டும். சந்தேகம் தீரவேண்டுமானால், அவரிடம் செல்லவேண்டும். ஒருவனுக்கு கை முறிந்துபோனபடியால் வேதனை அதிகரித்தது. வேதனையால் அலறினான். கை எலும்புகளைச் சரியாய் வைத்துக் கட்டினால்

வேதனை நீங்கும் என்று டாக்டர் சொன்னார். அதற்கவன்: 'முதலாவது வேதனையை நீக்குங்கள். அதின்பின்பு, எலும்புகளைச் சரியாய் வைத்துக் கட்டலாம்' என்று சொன்னான். சந்தேகத்தைத் தீர்த்துவிட்டால், பிறகு தேவனிடத்தில் போவேனென்று சொல்வது பிசகு. தேவனிடத்தில் போனபிறகே சந்தேகமும் தீரும். எலும்புகள் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்ட பிறகே வேதனை தீருகிறதுபோல, தேவனோடு ஐக்கியப்பட்டபிறகே சகல சந்தேகங்களும் நீங்குகிறது. ஒரு காலத்தில், எனக்கும் சந்தேகங்களும் பயங்கரங்களும் இருந்தது. மனச்சமாதானமற்றிருந்தேன். நான் அவரோடு ஐக்கியப்பட்டபிறகு சகல சந்தேகங்களும் பறந்துவிட்டன. எல்லா எலும்புகளும் சரியாய் வைத்துக் கட்டினபிறகே உயிரடைகிறோம். கேள்விகள் கேட்டுக்கொண்டிருக்க இது காலமல்ல. ஏனென்றால் நாமெல்லாரும் பாவத்தில் செத்திருக்கிறோம். செத்த சரீரத்தில் சரணையில்லாதிருப்பதுபோல நமது இருதயமும் சரணையில்லாதிருக்கிறது. நமக்கும் தேவனுக்குமுள்ள சம்பந்தம் முறிந்திருக்கிறது. நாம் உத்தம மனஸ்தாபப்பட்டு தேவனோடு ஒப்புரவாகும்பொழுது எல்லாச் சந்தேகங்களும், தொல்லைகளும் அடியோடே நம்மைவிட்டு எடுபட்டுப்போகிறது. தேவனைவிட்டுப் பிரிந்திருக்கிற ஜனங்களுக்கு அனுபவமே கிடையாது. அவர்கள் தேவனோடு ஒப்புரவாகும்போதுதான் சகலத்தையும் அனுபவத்தில் காண்கிறார்கள்.

**உதாரணமாக:** நான் வசித்த இடங்களில் பூமி பனிக்கட்டியால் மூடப்பட்டிருந்தது. ஆனால், ஒருபக்கத்தில் சூடான தண்ணீர் (Hot Spring) ஓடிக்கொண்டிருந்தது. இது குளிர்ச்சியான தேசங்களில் எங்கும் காணப்படும். இதைப்பற்றி நான் ஒரு சிநேகிதனுக்குச் சொன்னபோது அவன் நம்பவேயில்லை. 'குளிர்ச்சியான தேசத்தில் தண்ணீரெல்லாம் பனிக்கட்டியாய் உறைந்திருக்கும்பொழுது சூடான தண்ணீர் ஏது? இதை எப்படி நம்புவது? என் கண்ணால் கண்டாலொழிய நம்பமாட்டேன்' என்று சொல்லிவிட்டு, என்னோடு வந்து அந்தத் தண்ணீரில் தன் கையை விட்டுப் பார்த்தபிறகே நம்பினான். இவ்விதமாக, தேவ ரகஸ்யங்களை நமது அறிவினால் கிரகிப்பது கூடாத காரியம், அனுபவத்திலேயே காணவேண்டும். கல்வியினாலும், சாஸ்திரத்தினாலும் [illegible]னத்தை அறியமுடியாது.

அறிவானது தேவ ஞானத்தை வெளிப்படுத்தாது. அ[illegible] கிறிஸ்துவானவரிடத்தில் வாராமல், தங்களுடைய அறிவினாலேயே அவரைக் கண்டுபிடிக்கப் பிரயாசப்படுகிறபொழுது, துன்பத்தையும் துக்கத்தையும் அநுபவிக்கிறார்கள். ஆனால், கிறிஸ்துவானவரிடத்தில் சென்று அவரோடு ஐக்கியப்பட்டாலோ சந்தோஷமும் சமாதானமும் அனுபவிக்கிறவர்களாயிருக்கிறோம்.



அவரண்டை வாருங்கள், வேலைக்காரராய் அல்லது கைதிகளாய் அல்ல, தேவ புத்திரராயும் புத்திரிகளாயும் அவரண்டை வரலாம். அவருடைய கையிலிருந்து ஒருவனும் உங்களைப் பிடுங்கிக்கொள்ள மாட்டான். நாம் எதையாகிலும் ஆகாயத்தில் எறிந்தால், அது திரும்பவும் பூமிக்கே வருகிறது. அதாவது, பூமியிலுள்ள கவர்ச்சியானது (Gravity) அதை இழுக்கிறது. ஆனால், என் கையிலிருக்கிற புஸ்தகத்தை அந்த கவர்ச்சி இழுக்கிறதில்லை. ஏனென்றால் என் கையில் உயிர் இருக்கிறது. ஆனால், பூமியில் உயிரில்லை. உலகத்திலுள்ளவைகள் எவையானாலும் நம்மை இரட்சகருடைய கையிலிருந்து இழுத்துக்கொள்ளமுடியாது. அவர் தம்மண்டை வரும்படியாக நம்மை அழைக்கிறார். அவரிடத்தில் ஜீவனிருக்கிறது. ஒரு பறவை ஆகாயத்தில் பறக்கும்பொழுது, பூமியிலுள்ள கவர்ச்சியானது அந்தப் பறவையை இழுத்துக்கொள்ளமாட்டாது. ஏனென்றால், அதற்கு சிறகுகள் இருக்கிறது. சிறகுகளை வெட்டிவிட்டாலோ பூமியின் கவர்ச்சியானது அந்தப் பறவையை இழுத்துக்கொள்ளும். இவ்விதமாகவே, கிறிஸ்தவர்களுடைய சிறகுகள் வெட்டப்பட்டிருக்கிறது. அந்தச் சிறகுகள் எவை? ஜெபமே! ஜெபஜீவிகள் உலக ஆசாபாசங்களை விட்டு மேலானவைகளை நோக்கிப் பறக்கக்கூடியவர்களாயிருக்கிறார்கள். உலகத்திலுள்ள எவ்விதமான ஆசாபாசங்களும் அவர்களை இழுத்துக்கொள்ளமாட்டாது. மேலே பறந்து கடைசியில் அவரிடத்தில் சேருகிறவர்களாயிருக்கிறார்கள். மேலே பறந்துவிட்டாலோ மோசமில்லை.

ஒருதரம் நான் மலையின் உன்னதமான சிகரத்திலிருந்தேன். மேகங்களெல்லாம் எனக்குக் கீழேயிருந்தது. அப்பொழுது மின்னல் உண்டாகி பெரிய இடி ஒன்று இடித்தது. முதலில் நான் பயந்தேன். அதன்பின்பு தைரியங்கொண்டு, ஆச்சரியப்பட்டேன். ஏனென்றால், மின்னலும் எனக்குக் கீழேதான் உண்டானது என்றும், இடியும் எனக்குக் கீழேதான் இடித்தது என்றும் அறிந்தேன். ஆகையால், மேலேயிருக்கிற எனக்கு எவ்விதமான மோசமும் கிடையாது. இவ்விதமாக, ஜெபமாகிய சிறகினால் நாம் பறந்து மேலே சென்றுவிட்டால், சாத்தான் நம்மிடத்தில் வரவும் தீங்கு செய்யவும் முடியாது. நாம் நம்முடைய ஜெபமாகிய சிறகுகள் கத்தரிக்கப்பட்டு தாழ்விடங்களில் இருக்கும்பொழுதுதான் மோசம்! விழுங்கிவிடுவான் நிச்சயம்! நாம் உலகத்தின் ஆசாபாசங்களை விட்டு

பிரிந்திருக்கும்பொழுதுதான், தேவன் நம்மைக் கூப்பிடும் நிமிஷத்திலேயே அவர் சமுகத்தில் நிற்கப் பாத்திரவான்களாயிருப்போம்.

இன்றைக்கு இரண்டு இந்துக்கள் என்னிடம் வந்து, என் கையினால் ஞானஸ்நானம் கொடுக்கும்படியாகக் கேட்டார்கள். அதற்கு நான்: 'இதோ, கிறிஸ்துவானவரண்டை போங்கள். அவருடைய தழும்புள்ள கைகளைப் பாருங்கள். அவருடைய கையினால் ஞானஸ்நானம் பெறுங்கள். அவர் உங்களை ஏற்றுக்கொள்வார்' என்றேன். ஒரு மனிதன் ஒரு பெரிய பாவத்தில் நிலைத்திருந்தான். ஆகையால் அவனை வீட்டைவிட்டும், ஊரைவிட்டும் எல்லாரும் துரத்திவிட்டார்கள். 'ஐயோ! ஒரு இடத்திலும் ஆறுதலில்லையே!' என்று புலம்பினான். இப்பொழுது, வெகு அனுசரணையாகக் காணப்படுகிற உலகமே நம்மைக் கைவிட்டுவிடும். நாம் மனந்திரும்பும்பொழுது, நம்முடைய இருதயம் தேவசந்தோஷத்தையும் தேவசமாதானத்தையும் பெறுகிறது. நாம் உலகத்திலிருக்கும்போதே உலகத்தாரல்லாதவர்களாக ஜீவிக்கவேண்டியவர்களாய் இருக்கிறோம். அசுத்தமானவைகளைத் தொடாமல் பரிசுத்த ஜீவிகளாயிருப்போமானால், அவர் நம்மை புத்திரரும், புத்திரிகளுமாய் ஏற்றுக்கொள்வார். அந்தப் பாக்கியத்தைப் பெற்றுக்கொள்ள தேவன்தாமே நமக்குக் கிருபை செய்வாராக.

S. R. Doss.

## THE MADRAS PRESIDENCY AND THE WAR

## சென்னை இராஜதானியும் சண்டையும்

**மனிதர்களைச் சேர்த்தது.**—இந்த பெரிய சண்டையில், மாட்சிமை தங்கிய மன்னனும் சக்கரவர்த்தியின் சேனைகளுக்குதவியாக, சென்னை இராஜதானியிலிருந்து போனவர்கள் அறுபதினாயிரத்திற்கு மேலேயே சண்டை செய்தார்கள். ஒவ்வொரு ஜில்லாவிலிருந்தும் சேர்த்து அனுப்பப்பட்ட மனிதர்களின் தொகை அடியில் காட்டப்பட்டிருக்கிறது:

| ஜில்லா. | சேர்க்கப்பட்டவர்கள். | |
|---|---|---|
| | சண்டை செய்தவர்கள். | சண்டைசெய்யாத படைப் பின்னாட்கள். |
| மலையாளம் ... ... | 4,473 | 2,583 |
| வட ஆற்காடு ... ... | 2,906 | 1,940 |
| விசாகப்பட்டணம் ... ... | 2,549 | 1,049 |



| ஜில்லா. | சேர்க்கப்பட்டவர்கள். | |
|---|---|---|
| | சண்டை செய்தவர்கள். | சண்டைசெய்யாத படைப் பின்னாட்கள். |
| கிருஷ்ணா ... ... | 2,376 | 2,197 |
| திருநெல்வேலி ... ... | 1,529 | 861 |
| மதுரை ... ... ... | 1,555 | 815 |
| திருச்சினாப்பள்ளி ... ... | 1,462 | 673 |
| குண்டூர் ... ... ... | 1,437 | 1,215 |
| ராமநாதபுரம்... ... ... | 1,207 | 762 |
| தென் ஆற்காடு ... ... | 1,103 | 570 |
| கோயம்புத்தூரும், நீலகிரியும் | 1,053 | 913 |
| சேலம் ... ... ... | 1,207 | 762 |
| தஞ்சாவூர் ... ... ... | 897 | 1,182 |
| மதராஸ் ... ... ... | 841 | 986 |
| கோதாவரி ... ... ... | 756 | 1,575 |
| கஞ்சம் ... ... ... | 588 | 1,217 |
| கர்நூல் ... ... ... | 587 | 523 |
| செங்கல்பட்டு ... ... | 521 | 1,443 |
| சித்தூர் ... ... ... | 482 | 501 |
| பல்லாரி ... ... ... | 466 | 318 |
| கடப்பை ... ... ... | 358 | 464 |
| தென் கன்னடம் ... ... | 342 | 401 |
| அனந்தப்பூர் ... ... | 228 | 247 |
| நெல்லூர் ... ... ... | 176 | 211 |

மதராஸ் மனிதர்கள், வடமேற்கு எல்லையிலும், மெசொப்பொட்டோமியாவிலும், பெர்சியாவிலும், அரேபியாவிலும், சினாய் என்னுமிடத்திலும், பலஸ்தீனாவிலும், சிரியாவிலும், கீழ் ஆப்பிரிக்காவிலும், கலிபோலியிலும், மிசிடோனியாவிலும், பிரான்சு தேசத்திலும், பிளாண்டர்சிலும், மாட்சிமை தங்கிய மன்னனும் சக்கரவர்த்தியின் சைனியங்களோடு சேர்ந்து சண்டை செய்தார்கள். இந்தப் பெரும் சண்டையில், மாண்டுபோன சென்னை மனிதர்களின் தொகை, 1,500 க்கு மேலேயிருக்கும்.

இந்தியாவில், சென்னை நகர் ஒன்றுமட்டுந்தான் எதிரிகளின் ஆயுதங்களால் துன்பப்படுத்தப்பட்டது. 1914-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 22-ந் தேதி இராத்திரி ஜர்மானிய சண்டை கப்பலாகிய 'எம்டன்' சென்னை துறைமுகத்திற்கு வெளியே வந்து அங்கிருந்தபடியே அதிலிருந்த பீரங்கிகளால், கடற்கரையோரமாயிருந்த மண்ணெண்ணெய்க் குளங்களைப் பார்த்து வெடிபோட்டார்

கள். அக்கப்பலிலிருந்து சுமார் 20 வெடிகுண்டுகள் போட்டார்கள். இவைகளில் அநேகம், குளத்திற் படவில்லை; துறைமுகத்திலிருந்த கப்பல்களிலும், பட்டணத்திலும் விழுந்தன. அக்கப்பல் சுட்ட வெடியால், 3 மனிதர்கள் கொல்லப்பட்டார்கள். சுமார் 16 பெயர்கள் காயம்பட்டார்கள்.

பணம் கொடுத்தல்.—மாட்சிமைதங்கிய சக்கரவர்த்தியின் சேனைகளுக்குதவியாக சண்டைசெய்ய மனிதர்களை அனுப்பினதுமல்லாமல், துணையாசர்களுக்கு உதவிசெய்ய, சென்னையிலிருந்து பணமும் கொடுத்தார்கள். சென்னை யுத்த கடனுக்காக, கொடுக்கப்பட்ட பணத்தொகை அடியிற் காட்டப்பட்டிருக்கிறது :

| ஜில்லா. | 1-வது யுத்த கடன். | 2-வது யுத்த கடன். | மொத்தம். |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| கஞ்சம் ... ... | ... | 1,57,600 | ... |
| விசாகப்பட்டணம் | ... | 2,37,300 | ... |
| கோதாவரி ... | ... | 6,16,800 | ... |
| கிருஷ்ணை ... | ... | 4,41,000 | ... |
| குண்டூர் ... | ... | 6,24,000 | ... |
| நெல்லூர் ... | ... | 2,70,600 | ... |
| கடப்பை ... | ... | 3,71,000 | ... |
| அனந்தப்பூர் ... | ... | 2,24,100 | ... |
| பல்லாரி ... | ... | 4,13,400 | ... |
| கர்னூல் ... ... | ... | 2,30,500 | ... |
| மதராஸ் ... | ... | 1,63,58,300 | ... |
| செங்கல்பட்டு ... | ... | 6,45,600 | ... |
| சித்தூர் ... ... | ... | 10,40,500 | ... |
| வட ஆற்காடு ... | ... | 1,33,600 | ... |
| தென் ஆற்காடு ... | ... | 1,78,300 | ... |
| தஞ்சாவூர் ... | ... | 6;71,300 | ... |
| திருச்சிறுப்பள்ளி ... | ... | 3,67,800 | ... |
| மதுரை ... | ... | 7,49,600 | ... |
| ராமநாதபுரம் ... | ... | 10,90,700 | ... |
| திருநெல்வேலி ... | ... | 8,10,300 | ... |
| கோயம்புத்தூர் ... | ... | 6,30,400 | ... |
| நீலகிரி ... ... | ... | 12,95,700 | ... |
| சேலம் ... ... | ... | 2,08,300 | ... |
| தென்கன்னடம் ... | ... | 3,38,000 | ... |
| மலையாளம் ... | ... | 9,32,500 | ... |
| | | | ... |
| | 2,83,66,000 | 2,90,37,000 | 5,74,03,000 |



சென்னை இராஜதானியிலிருந்து இந்திய இராஜாங்க உபகார நிதிக்கு (Indian Imperial Relief Fund) பெரும் தொகை கொடுத்திருக்கிறதுமல்லாமல், 74 லக்ஷம் ரூபாய் சென்னை யுத்த நிதிக்குக் கொடுத்திருக்கிறார்கள். சென்னை யுத்த நிதிக்குக் கொடுத்த பணத்தைக்கொண்டு 'மதராஸ்' என்னும் வைத்தியசாலைக் கப்பலை (Hospital ship) தயார் செய்து, 1918-ம் வருஷம், மே மாதம் 31-ம் தேதி வரையில் அக்கப்பற் செலவை நடத்திவந்தார்கள். அதிலிருந்த வைத்தியர்களும், மருந்து கொடுத்து வியாதியஸ்தரைப் பார்த்து வந்தவர்களும், சென்னையிலுள்ள ஆண்களும் பெண்களுமாக விருந்தார்கள். சண்டை ஆரம்பம் முதல் 1918-ம் வருஷம் மே மாதம் 31-ந் தேதி வரையில், அந்த வைத்தியசாலைக் கப்பல், மொம்பாசாவுக்கு 3 நடையும், பஸ்ராவுக்கு 27 நடையும், சூயஜ்க்கு 11 நடையும், அலெக்சாண்டிரியாவுக்கு 2 நடையும், ஷாட்டல் அராப் என்னு மிடத்திற்கு 13 நடையும் போய்வந்தது. அந்தக் கப்பல், வியாதியஸ்தர்களும், காயம்பட்டவர்களுமாகச் சேர்ந்து, 595 பிரித்தானிய இராணுவ உத்தியோகஸ்தர்கள், 5,177 பிரித்தானிய கீழ் ராணுவ உத்தியோகஸ்தர்கள் போர்வீரர்கள், 313 இந்திய இராணுவ உத்தியோகஸ்தர்கள், 16,682 இந்திய கீழ் இராணுவ உத்தியோகஸ்தர்கள் சிப்பாய்கள், 407 ஜர்மானிய, துருக்கிய, கைதிகள் ஆகிய இவர்களைக் கொண்டுவந்தது.

மேலும், சென்னை யுத்த நிதியைக்கொண்டு, ஆற்றில் ஓடும் வைத்தியசாலைக்கப்பலாகிய 'சிக்கிம்' என்னும் கலத்தைத் தயார் செய்து அதற்கு வேண்டிய வைத்தியர் முதலிய ஆட்களையும் சேகரித்தார்கள். இந்த ஆற்றில் ஓடும் நீராவிக்கப்பல், மெசொப்பொட்டோமியாவில், பஸ்ராவிலிருந்து, சண்டை செய்யும் இடம் வரையிலும் 249 நடை ஆற்றிற்போய் வந்திருக்கிறது. அக்கப்பல் வியாதியஸ்தர்களும், காயம்பட்டவர்களுமாகச் சேர்ந்து—927 பிரித்தானிய இராணுவ உத்தியோகஸ்தர்கள், 11,641 பிரித்தானிய இராணுவ கீழ் உத்தியோகஸ்தர்கள் போர்வீரர்கள், 97 இந்திய இராணுவ உத்தியோகஸ்தர்கள், 8,496 இந்திய இராணுவ கீழ் உத்தியோகஸ்தர்கள், சிப்பாய்கள், 254 துருக்கிய போரில் கைதியாக்கப்பட்டவர்களாகிய இவர்களைக் கொண்டுவந்தது.

யுத்தகாரியங்கள் கொண்டு [illegible] நடத்துவதற்கு, துணையரசர்களுக்குத் தேவையாயிருந்த சாமான்கள், சென்னை ராஜதானியிலிருந்து ஏராளமாய்க் கொடுக்கப்பட்டது. சேனைகளுக்கு வேண்டிய, பதனிட்டதோல் செய்வதற்காக, சென்னையிலிருந்து, யுத்த ஆபீஸ்காரர்கள், 6½ கோடி விலைபெறுமான தோல் வாங்கினர்

கள். ஏராளமான தேங்காய் எண்ணெயும், காய்ந்த புல்லும், மரமும் இங்கிருந்து அனுப்பப்பட்டன. சேனைக்கு வேண்டிய காக்கி முதலிய துணிகளை நெய்வதைத் தவிர பக்கிம்ஹாம், கர்நாட்டிக் என்னும் பஞ்சாலைகள் வேறுவேலை செய்யவில்லை. ஆங்கிலோ, பிரான்சு, கோயம்பத்தூர் நூல்நெய்யும் பஞ்சாலைகள், பக்ரி துணியும், துசோட்டியும் நெய்தன. பெங்களூரிலுள்ள கம்பளம் நெய்யும் ஆலைகள், சேனைக்குக் கம்பளிநெய்து கொடுத்தன. சிந்தாதிரிப்பேட்டையில் கூடார நெய்கிறவர்கள், காக்கியில் வைத்துத்தைக்கும் கூடார நெய்துகொடுத்தார்கள். மெசொப்பொட்டோமியாவிலும் மற்றிடங்களிலுமிருந்த சேனைகளுக்கு உபயோகப்படும்படி, தோல், வேஸ்ட் கோட்டுகளும், மிதியடிகளும், கூடாரங்களும், அடுப்புக்கரியும், நார்க்கயிறும், லோகத்தாலும் மரத்தாலும் செய்யப்பட்ட சிறிய பொருத்தும் ஆணிகளும் மற்றச் சாமான்களும், தட்டிகளும் மற்றும் பலவிதமான சாமான்களும் ஏராளமாய் அனுப்பப்பட்டன.

**யுத்தம் செய்யும்பொழுது மாண்டவர்கள் அல்லது காயத்தினால் சக்தியற்றவர்களாக்கப்பட்ட போர்வீரர்களுக்கும் அவர்களைச் சேர்ந்தவர்களுக்கும் கொடுக்கப்பட்ட பரிசுகளும், உதவியும்.**

**சிப்பாய்களுக்கு செய்யப்பட்ட உபகாரங்கள்.**—சண்டை நடந்த காலத்தில், மாட்சிமை தங்கிய சக்ரவர்த்தியின் சேனைகளிலிருந்து சண்டைசெய்த சிப்பாய்கள், கேட்பார்களானால், அவர்களுக்குத் தலைக்கு, 5 ஏக்கரா நஞ்சை நிலமாவது, 10 ஏக்கரா புஞ்சை நிலமாவது கொடுக்கக்கூடுமிடத்தில், இனமாகக் கொடுக்கும்படி, இராஜாங்கத்தார் கட்டளையிட்டிருக்கிறார்கள்.

இதுவரையிலும், நிலமானியம் பெற்றுக்கொண்ட சண்டைக்காக சேர்ந்தவர்களின் (Recruits) தொகையும், ஒவ்வொரு ஜில்லாவிலும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட நில விஸ்தீரணமும் அடியில் காட்டப்பட்டிருக்கிறது :

| ஜில்லா. | சேர்க்கப்பட்டவர்களின் தொகை. | ஏக்கராவில் நில விஸ்தீர்ணம். |
|---|---|---|
| அஞ்சங்கோ ... | ... | ... |
| மலையாளம் ... | 43 | 94.88 |
| கஞ்சம் | 138 | 638.00 |
| விசாகப்பட்டணம் | 12 | ... |
| கோதாவரி ... | 15 | 104.80 |
| கிருஷ்ணா ... | 143 | 540.38 |
| குண்டூர் ... | 288 | 1,141.00 |
| நெல்லூர் ... | 3 | 15.00 |



| ஜில்லா. | சேர்க்கப்பட்டவர்களின் தொகை. | ஏக்கராவில் நில விஸ்தீர்ணம். |
|---|---|---|
| கடப்பை ... | 7 | 35.47 |
| அனந்தப்பூர் ... | 24 | 128.65 |
| பல்லாரி ... | ... | ... |
| கர்நூல் ... | 21 | 105.00 |
| மதராஸ் ... | ... | ... |
| செங்கல்பட்டு ... | 48 | 240.00 |
| சித்தூர் ... | 18 | 45.07 |
| வட ஆற்காடு ... | 348 | 785.68 |
| தென் ஆற்காடு ... | 173 | 642.39 |
| தஞ்சாவூர் ... | 9 | 45.00 |
| திருச்சிணுப்பள்ளி | 105 | 610.00 |
| மதுரை ... | 14 | 55.14 |
| ராமநாதபுரம் ... | 58 | 290.00 |
| திருநெல்வேலி ... | 43 | 130.00 |
| கோயம்புத்தூர் ... | 64 | 249.72 |
| நீலகிரி ... | 1 | 5.31 |
| சேலம் ... | 22 | 117.28 |
| தென்கன்னடம்... | 19 | 95.00 |

மேலும், சர்க்கார் உத்தியோகம் கொடுப்பதில், சண்டையில் வேலைசெய்தவர்களுடைய பாத்தியத்தை முக்கியமாய்க் கவனிக்க வேண்டுமென்றும் சர்க்கார் கட்டளையிட்டிருக்கிறார்கள். சண்டையிலிருந்து திரும்பிவரும் சிப்பாய்களுக்கு, சர்க்கார் எத்தனை உத்தியோகங்கள் கொடுக்கலாமோ அத்தனையும் கொடுக்கும் நோக்கத்தோடு, சண்டையிலிருந்து சிப்பாய்கள் திரும்பிவருமளவும், ரூ. 15, அல்லது குறைந்த சம்பளமுள்ள காலியாயிருக்கும் இடங்களில், காயமாக ஒருவரையும் நியமிக்கக்கூடாது என்று பெரிய உத்தியோகஸ்தர்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறார்கள்.

**சண்டையில் நல்லபெயர் வாங்கினவர்களுக்கு இனங்கள்.**—சண்டையில் நல்ல பெயர்வாங்கின இந்திய இராணுவ உத்தியோகஸ்தர்களுக்கும், மற்றுள்ள கீழுத்தியோகஸ்தர்களுக்கும், இனம் அளிப்பதற்காக, இராஜாங்கத்தார் இப்பொழுது ஏற்பாடு செய்துவருகிறார்கள். இவ்வித இனங்கள், சண்டையில் நல்ல பெயர்வாங்கிய இராணுவ உத்தியோகஸ்தர்களுக்கும் போர்வீரர்களுக்கும் தொடுப்பதுமல்லாமல், நல்ல இனம்பெற அருகராகக்கூடியவிதமாய் நடந்துகொண்ட; படைப்பின் செல்வோர்களுக்கும், சேனைகளின் கூலிப் படையிலுள்ளவர்களுக்கும்கூட கொடுக்கப்படும். போரில் பேரெடுத்த சிப்பாய்களுக்கு, கொடுக்கக்கூடிய இடங்களில், ரூபாய் 3,500 பெறுமானமுள்ள நிலம் கொடுக்கப்படும். நிலத்தை விற்காமலும், அடமானம் வைக்காமலுமிருந்தால், தீர்வையில்லாமல்

இரண்டு தலைமுறைக்கு அனுபவித்துக்கொள்ளலாம். தீர்வையில்லாமல் அனுபவிக்கும் காலமாகிய அந்த கெடுவுக்கப்புறமும், அந்த இனாம் வாங்கினவர்களின் வார்சுக்காரர்கள் இராஜபத்தியோடிருக்கும் வரையில், சாதாரண குடிகளைப்போல சர்க்காருக்குத் தீர்வை செலுத்திவிட்டு நிலத்தை எப்பொழுதும் அனுபவித்துக்கொள்ளலாம். ஒரு இராணுவ உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுக்கப்படும் மானிய நிலத்தின் விஸ்தீர்ணம், ஒரு சிப்பாய்க்குக் கொடுப்பதைப்போல இரண்டு பங்கு. நல்ல பெயரெடுத்ததற்காக இனாம் அளிக்கக் குறிக்கப்பட்ட சண்டை செய்யாதவர்களுக்கு, சிப்பாய்க்கு கிடைப்பதில் பாதி கிடைக்கும். நில மானியம் கொடுக்க முடியாவிட்டால், இரண்டு தலைமுறைக்கு, அதற்குப்பதிலாக, மாதமாதம் பணம் கொடுக்கப்படும். சண்டையில் நல்ல பெயரெடுத்த போர்வீரனுக்கு மாதம் 1-க்கு ரூபாய் 5-0-0 கொடுக்கப்படும். இனாம் பெற யோக்கியமுள்ள இராணுவ உத்தியோகஸ்தனுக்கு, மாதம் 1-க்கு ரூபாய் 10-ம், இனாம் பெற யோக்கியதையுள்ள சண்டை செய்யாதவர்களுக்கு, மாதம் 1-க்கு ரூபாய் 2-8-0 ம் கொடுக்கப்படும். இந்த இனாம்களைப் பெற்றுக்கொள்பவர்களுக்கு வேறுவகையில் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய, சம்பளம் அல்லது உபகாரச் சம்பளத்தை அன்னியில் இனாம் கொடுக்கப்படும். இந்த இராஜதானியில், சுமார் 900 மனிதர்களுக்கு இனாம் கிடைக்கு மென்று நினைக்கிறோம். இனாமாக ஒவ்வொரு ஜில்லாவிலும் கொடுக்கப்படும் நிலத்தின் விஸ்தீரணம் அடியில் காட்டப்பட்டிருக்கிறது :—

| ஜில்லா. | நிலத்தின் மொத்த விஸ்தீரணம். ஏக்கர். | நிலத்தின் பொறுமானம். ரூ. |
|---|---|---|
| சேலம் ... ... ... | 9,013 | 10,30,500 |
| மதுரை ... ... ... | 4,581 | 4,93,500 |
| திருச்சிராப்பள்ளி ... | 253 | 56,000 |
| தஞ்சாவூர் ... ... | 648 | 2,03,000 |
| விசாகப்பட்டணம் ... | 842 | 1,26,000 |
| கோதாவரி ... ... | 295 | 87,500 |
| நெல்லூர் ... ... ... | 581 | 80,500 |
| குண்டூர் ... ... ... | 191 | 59,500 |
| கிருஷ்ணா ... ... | 364 | 31,500 |
| கோயம்பத்தூர் ... ... | 42 | 21,000 |
| பல்லாரி ... ... ... | 100 | 10,500 |
| தென்கன்னடம் ... ... | 21 | 10,500 |
| | 16,931 | 22,12,000 |

(இன்னும் வரும்.)



## CHILDREN'S PAGE—பாலர் பக்கம்

## SERVICE OF LOVE

## அன்பினால் ஊழியம்

பாலரே, உங்களுக்கு மாதர் போதினி ஓர் அருமையான ஈவு அனுப்புகிறார்கள். அது கலாத்தியர் $5^{13}$-ல் உண்டு. 'அன்பினால் ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யுங்கள்' என்பதே.

ஊழியம் மேன்மையானது. அன்பின் ஊழியம் இன்னும் மேன்மையானது. மனுஷகுமாரன் ஊழியங்கொள்ளும்படி வராமல் ஊழியஞ் செய்யவந்தார். 'நான் உங்கள் நடுவில் பணிவிடைக்காரன்போல் இருக்கிறேன்' என்றார். 'உங்களில் முதன்மையானவன் ஊழியக்காரனாயிருக்கக்கடவன்' என்றார்.

புத்தியீன மனுஷர் வேலையை இழிவாய் எண்ணுவதுண்டு. பிறருக்கு ஊழியஞ்செய்வது ஓர் அருமையான சலாக்கியம் என்பது மதியீனருக்கு விளங்காது. பெருமை மதிகேட்டா லுண்டாகும் தீமையே யன்றி வேறல்ல.

ஊழியஞ் செய்வோரை மேலோர் யாவரும் நன்குமதித்துக் கொண்டாடுவார்கள். நீ உன் வகுப்பிலுள்ள யாவருக்கும் சமயங் கண்டு ஊழியஞ் செய்வாயாகில் உன் வகுப்புத் தோழரும் உபாத்தியாயரும் உன்னை நன்கு கொண்டாடுவார்கள்.

காலஞ்சென்ற கற்சர்பர்ட்டில் விரர் பம்பாய்க்கு கவர்னராகவும் பின்பு தென் ஆப்பிரிக்காவுக்கு கமிஷனராகவும் இருந்தார். பிறருக்கு ஊழியஞ் செய்வதில் மிக்க ஆசையுள்ளவர். ஒரு தரம் அவர் பற்பல இடங்களைச் சுற்றிப்பார்த்துத் திரும்பி வீட்டுக்கு வருகையில், அவர் மனைவி அவரை அழைத்துவர தன் புதிய வேலைக்காரனை அனுப்பினார்கள். அவன் தான் அவரை எப்படிக் கண்டுகொள்ளலாமென்று அடையாளங் கேட்டபோது, வண்டிவந்தவுடன் இறங்கி யாருக்காவது உதவிசெய்துகொண்டிருக்கும் துரையைக் காண்பாயாகில் அவரையே அழைத்துவா என்று சொல்லியனுப்பினார்கள். அப்படியே வண்டி வந்தவுடன் ஒரு விருத்தாப்பிய துரைசானிக்கு அன்பாய் உதவிசெய்த துரையைக் கண்டு வேலைக்காரன் அவர்தான் கற்சர்பர்ட்டில் விரர் என்றறிந்து வீட்டுக்கு அழைத்து வந்தான்.

சிறு பிள்ளையே! உன்னைப்பற்றி இப்படிச் சொல்லக்கூடுமா? நீ பிறருக்கு அன்பாய் உதவிசெய்கிறாயா? உன் சொந்த சாமான்களைத் தூக்கித் தெருவில் நடக்க நீ வெட்கப்படுவாயாகில், பிறருக்கு

எவ்வாறு ஊழியஞ் செய்யப்போகிறாய்? பெருமையை விட்டு கிறிஸ்துவின் தாழ்மையைத் தரித்துக்கொள். அப்போது மேன்மையடைவாய்.

இந்தப் புது வருஷத்தில் இந்த அருமையான வேதவாக்கியத்தை உன் மனதில் பத்திரப்படுத்தி அதின்படி செய். முதலாவது உன் வீட்டில் ஊழியத்தைத் துவக்கு. உன் பெற்றாருக்கும் சகோதரர் சகோதரிகளுக்கும் ஊழியஞ்செய். உன் வகுப்புப் பிள்ளைகளுக்கும் உபாத்தியாயருக்கும் என்ன ஊழியஞ் செய்யலாமென்று பார்த்துச் செய். நீ சந்திக்கும் யாவருக்கும், உனக்குத் தெரிந்தவர்களுக்காகிலும் தெரியாதவர்களுக்காகிலும், உனக்கு நன்மைசெய்தவருக்கும் அப்படிச் செய்யாது தீமைசெய்தோருக்குங்கூட உன்னால் இயன்றமட்டும் ஊழியஞ் செய். இதினால் உனக்கு மெய்ச் சந்தோஷமும் வாழ்வும் உண்டாகும். தேவனுடைய பார்வையிலும் நல்லோர் பார்வையிலும் கனமடைவாய். உன் சத்துருக்களும் உன் சிநேகிதராவார். உன் மகிழ்ச்சி பெரிதாகும்.

'நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால் அதினால் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்' என்று இரட்சகர் சொல்லுகிறார்.

C. L. S. PRESS, MADRAS—1920


# மாதர் போதினி

No. 265 பெப்ருவரி 1920 No. 2


## THE SECOND COMING OF CHRIST

## கிறிஸ்துவின் இரண்டாம் வருகை

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப்பற்றி வாசிக்கிறவர்களும், கேட்கிறவர்களும், ஆசையோடு எதிர்பார்த்திருக்கிறவர்களும் பாக்கியவான்கள். காலம் சமீபித்திருக்கிறது என்பதை அறிய வேண்டும்.

### இயேசுவானவர் திரும்ப வருவது நிச்சயம்

(1) இயேசுவானவர் தாமே இதைச் சொன்னார். யோவா. $14^{3}$.

(2) தூதர் சொன்னார்கள். அப். $1^{11}$. தூதர் இயேசுவின் முதல் வருகையைப்பற்றிச் சொன்னது நிறைவேறியாயிற்று.

(3) அப்போஸ்தலர் பரிசுத்தாவியின் ஏவுதலால் உரைத்திருக்கிறார்கள். 1 தெச. $4^{16}$; எபி. $9^{28}$, $10^{37}$; 1 கொரி. $1^{7}$; பிலி. $3^{20,21}$; 2 பேது. $5^{5-13}$.

### எப்படி வருவார்?

(1) ஏக சக்கராதிபதியும், ராஜாதி ராஜாவும் கர்த்தாதி கர்த்தருமாக வருவார். 1 தீமோ. $6^{15}$.

(2) மகிமையுள்ள சிங்காசனத்தில் வீற்றிருக்கிறவராக. மத். $25^{31}$.

(3) விசுவாசிக்கிறவர்களிடம் மகிமைப்படுகிறவராக. 2 தெச. $1^{10}$.

(4) [illegible] சகல ஜாதிகளையும் நீதியோடும் நியாயத்தோடும் ஆளுகிற ராஜாவாக. அப். $17^{30,31}$; வெளி. $20^{11-15}$; யோவா. $5^{22}$; சங். $9^{7}$, $98^{17}$; மத். $16^{27}$, $25^{31}$; அப். $10^{42,43}$; 1 தெச. $3^{13}$; தானி. $7^{13}$; சக. $14^{4,5}$ மத். $24^{30-44}$; லூக். $21^{34-36}$; 2 பேது. $3^{10}$. தூதரோடும், பரிசுத்தவான்களோடும், எக்காளத்தோடு, மேகங்களோடு திருடன் வரும் விதமாய்த் திடீரென்று வருவார்.

VOL. XXXV.

## இரண்டாம் வருகையில் நிறைவேறும் வாக்குத்தத்தம்

1. *கிறிஸ்து தாமே வருவார்.* 1 தெச. $4^{16}$.

2. *மரித்தவர்கள் அவர் சத்தத்தைக் கேட்பார்கள்.* யோவா. $5^{28}$.

3. *விழித்திருக்கும் ஊழியக்காரருக்கு பணிவிடை செய்வார்.* லூக். $12^{37}$.

4. *தாம் எடுத்துக்கொள்ளப்பட்ட இடமாகிய ஒலிவ மலைக்கு வருவார்.* சக. $14^{4}$.

5. *பூமியில் வந்து நிற்பார்.* யோபு $19^{25}$; அப். $1^{11}$.

6. *அவருடைய பரிசுத்தவான்கள் அவரோடு வருவார்கள்.* உபா. $33^{2}$; 1 தெச. $3^{13}$; யூதா 14.

7. *சகல கண்களும் அவரைக் காணும்.* வெளி. $1^{7}$.

8. *அந்திக்கிறிஸ்துவை அழிப்பார்.* 2 தெச. $2^{8}$.

9. *தமது சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பார்.* மத். $25^{31}$; வெளி. $5^{13}$.

10. *சகல ஜாதிகளும் அவர்முன் கூட்டப்படுவார்கள். அவர்களை நியாயந்தீர்ப்பார்.* மத். $25^{32}$.

11. *தாவீதின் சிங்காசனம் அவருக்குக் கொடுக்கப்படும்.* ஏசா. $9^{6,7}$; லூக். $1^{32}$, எசே. $21^{25-27}$.

12. *அவருக்கு ஒரு ராஜ்யமிருக்கும். பூமியில் அரசாளுவார். பரிசுத்தவான்களோடு ஆளுவார்.* தானி. $7^{13,14}$, $7^{18-22,27}$; எரே. $23^{5,6}$; வெளி. $5^{10}$.

13. *பூமியின் ராஜ்யங்கள் அவருடையவையாகும்; சகல ராஜாக்களும் ஜாதிகளும் அவரைச் சேவிப்பார்கள்.* சங். $72^{11}$; ஏசா. $49^{6,7}$; வெளி. $15^{4}$.

14. *முழங்கால் யாவும் அவர்முன் முடங்கும்.* ஏசா. $45^{23}$.

15. *சீயோனைக் கட்டுவார்.* சங். $102^{16}$.

16. *அப்போஸ்தலர் 12 சிங்காசனங்களில் 12 கோத்திரங்களை ஆளுகிறவர்களாய் உட்காருவார்கள.* மத். $10^{28}$; லூக். $22^{28-30}$.

17. *எருசலேம் தேவாலயம் திரும்பக் கட்டப்பட்டு தேவனுடைய மகிமை அதற்குள் வரும்.* எசே. 40–48, $43^{2-5}$, $44^{4}$.

18. *ஆளுகையிலுள்ள சந்தோஷமும் வாழ்வும்.* ஏசா. $35^{1-13}$, 11.

---



# BIBLE STUDIES

# வேத ஆராய்ச்சி

## உபாத்தியாயராகிய நமது ஆண்டவர்

**I. மகா உபாத்தியாயரின் பயிற்சி.**

1. *இளம்பிராயப் பயிற்சி.* லூக். $2^{39-52}$.
2. *ஆயத்தம்—*
   - (a) *ஞானஸ்நானம்* } மாற். $1^{9-11}$; மத். $3^{16,17}$.
   - (b) *பரிசுத்த ஆவி* }
   - (c) *சோதனை.* மத். $4^{1-11}$.
   - (d) *ஜெபம்.*
   - (e) *படிப்பித்தவர்களைப்பற்றிய அறிவு—*
     - (1) *அனுபோகத்தால்—*மத். $4^{23,24}$; மாற். $6^{6}$; லூக். $11^{37}$, $15^{1,2}$; யோவா. $2^{1}$.
     - (2) *உள் சக்தியால்—*லூக். $7^{36-38}$, $19^{5-10}$; யோவா. $3^{1-13}$.

*தியானித்துக் கேள்வியாலறியும் விஷயங்கள்—*

(1) *எவ்வித லக்ஷணங்கள் 2 (a), (b), (d) முதலியவற்றால் விர்த்தியாயின?*

(2) 2 (a)—(d) *யில் கண்டிருக்கும் பயிற்சி நமக்கு எவ்விஷயங்களில் தேவை? எவ்விதமாய் நமக்கு அவ்விதப் பயிற்சி கிடைக்கும்?*

(3) 2 (e) *யில் காட்டியிருக்கும் அறிவு நமக்கு அவசியமா? ஏன்? என்ன உதாரணங்களால் அறியலாம்?*

**II. மகா உபாத்தியாயரின் முறைகள்.**

1. *உவமைகள்.* மத். 13; லூக். 15.
2. *பொருட்பாடங்கள், அற்புதங்கள்.* மாற். $9^{33-37}$, $10^{16}$; யோவா. $13^{4-17}$.
3. *சம்பாஷணைகள்.* யோவா. 3, 4, 5, 6.
4. *பிரசங்கங்கள்—மலைப்பிரசங்கம்.* யோ. 3, 4, 5, 6; மாற். $3^{16}$.

*விசாரித்தறியும் கேள்விகள்—*

(1) *இயேசுவானவர் ஏன் உவமைகளால் போதித்தார்? நாம் இந்த முறையைக் கையாடலாமா? ஏன்?*

(2) அறிவுக்கும் அறிந்தபடி செய்வதற்கும் உள்ள சம்பந்தத்தை நாமும் பிள்ளைகளும் எவ்விதம் கண்டு மனத்திற்கொள்ளலாம்?

(3) நாம் எப்போது பிரசங்கிக்கலாம்? நமது வேலையில் இம்முறையை எவ்வாறு கையாடலாம்?

III. படிப்பித்த வகுப்புகள்.

1. சாதாரண உபதேசம்:

(a) கூட்டமான பேருக்கு
- 1. பொது உபதேசம்.
- 2. பலன்
  - கவனம்.
  - பிரிந்துபோதல்.
  - சேர்ந்துகொள்ளுதல்.

(b) தனி ஆட்களுக்கு—
- (1) அவரவர்க்கு வேண்டிய அவசியத்தைக் கண்டு பிடித்து அதற்கேற்க உபதேசித்தல்.
- (2) அவரவர் தன்மைக்குத் தக்கதாகப் பேசுதல். மத். $19^{16-29}$; யோவா. $4^{7-42}$, $9^{1-14}$.

2. விசேஷித்த உபதேசம்:

தெரிந்துகொள்ளப்பட்ட சிலருக்கு—

(a) அவர்களைப் பயிற்றுவித்தல். மத். $17^{1-9}$, $18^{1-6}$, $26^{31-40}$, $^{36-46}$; யோவா. $15^{15}$; உவமைகளின் கருத்து, யோவா. 15, 16.

(b) கற்பித்த நோக்கம் — கிறிஸ்துவின் வேலையை நடத்த—
- (1) குணம் மாறி விருத்தியாவதால்.
- (2) உத்திரவாதத்தை உணர்ந்துகொள்ளச் செய்வதால்.
- (3) சிநேகத்தால் அவர்களை விசேஷமாய் அறிந்துகொள்வதால்.

கேட்டறியும் விஷயங்கள்—

(1) இந்தப் பாடத்தில் காட்டின முறைப்படி விதைக்கிறவன் உவமையை விளக்கு.

(2) நாம் கற்பிப்பதில் சிநேகத்தை எவ்வாறு காட்டலாம்? அது எவ்விதத்தில் உதவியாகும்?



## (CHILDREN'S PAGE)

## A CHRISTMAS STORY

## கிறிஸ்மஸ் கதை

ஜனநெருக்கம் மிகுதியுள்ள பட்டணத்தில், சீமானான பிரௌன் என்ற ஒரு துரை இருந்தார். அவருக்கு ஆர்தர் என்னும் சிறிய குமாரன் உண்டு. ஆர்தர் பிறந்து சிறிது நாட்களுக்குள் அவனுடைய தாயார் இறந்துபோனாள். பிரௌன் துரை தன் மகனை அதிகமாய் நேசித்துவந்தபோதிலும், அவன் எப்போதும் நிர்ப்பாக்கியமுள்ளவனாகவே காணப்பட்டான். அப்பிள்ளை பிறந்ததுமுதல் வியாதியஸ்தனாய்ப் படுக்கையிலேயே இருந்தான். குழந்தையைக் கவனிக்க ஒரு சிறியபெண்ணை பிரௌன் துரை வேலைக்கு அமர்த்தியிருந்தார். இப்பெண் ஆர்தரை அதிக கவனத்தோடு பார்த்துவந்தாள். ஆனால் அவன் அடிக்கடி தொந்தரவுசெய்து அழுதால் அவனுடைய தகப்பன் பிரியமுள்ளவராயிரார் என்று பாலில் அதிகமாகச் சர்க்கரைபோட்டு, அவனுக்குக் குடிக்கக் கொடுத்துவந்தாள். இவ்வாறு செய்தது நாளடைவில் அவன் சரீரத்தை மெலியப்பண்ணிவிட்டது. இரண்டு வருஷத்துக் குழந்தை ஒரு வருஷத்துக் குழந்தைபோல் ஆகிவிட்டான். பிரௌன் ஒருநாள் தன் மகனைப் பார்த்தபோது, அதிக விசனமுற்று, டாக்டரை அழைத்து, பையனைக் கவனிக்கும்படி சொன்னார். எவ்வளவு வைத்தியம் செய்தபோதிலும், ஆர்தர் அநேக வருஷங்களாகப் பலவீனமுள்ளவனாகவே இருந்தான். இப்போது தன் மகனை இன்னும் அதிகமாய்க் கவனிக்கும்படி பிரௌன் வயது சென்ற ஒரு அம்மாளை வேலைக்கு அமர்த்தினார். இந்த அம்மாள் ஆர்தரைத் தன் சொந்தப்பிள்ளையைப்போல் பார்த்துவந்தாள். நவம்பர் முதல் வாரத்தில் ஒரு நாள் அதிகாலையில் ஆர்தர் படுத்துக் கொண்டிருந்த அறையில் காந்தவிளக்கு ஜோதியாய் எரிந்துகொண்டிருந்தது. ஆர்தர் காலை 5 மணிக்குமேல் தூங்குகிறதில்லை. அவன் சந்தோஷமாயிருக்கும் பொருட்டு அவனைக் கவனித்து வந்த ராபட்ஸன் என்னும் பெரிய அம்மாள் ஒரு கோப்பை கொக்கோத்தண்ணீர் கொடுத்துவந்தாள்.

இப்படியிருக்கையில் ஒருநாள் யாரோ ஒருவர் அவன் அறையின் தாழ்வாரத்தின் ஜன்னல் வழியாய் ஏறி மேஜையில் காலைப்பத்திரிகையை எறிந்துவிட்டு அகமகிழ்ச்சியுடன் வாய்க்குள்ளாகவே பாட்டுப்பாடி விரைந்துபோன சப்தம் இவன்காதில் விழுந்தது. 'ஆயாள்! இந்தக் காலைப்பத்திரிகையை இங்கு கொண்டுவந்தது யார்? மூன்று நாட்களாய் ஒருவருடைய காலடிசத்தம் என்காதில் விழுகிறது. அது

பத்திரிகை விற்கும் ஒரு பையனாயிருக்கலாம் என்று நினைக்கிறேன். அவன் இவ்வழியாய் வரும்போதெல்லாம் சந்தோஷமுள்ளவனாய் பாட்டுப்பாடிச்செல்வதைக் கேட்டிருக்கிறேன்' என்றான் ஆர்தர். ராபட்ஸன் அம்மாள், 'நாளைக்கு நான் அவனைப் பார்க்கிறேன். அவன் காற்றைப்போல் பறந்துபோய்விடுகிறான். அவனைப் பிடிக்க வேண்டுமானால் வாசலில் காத்திருக்கவேண்டும்' என்று சொன்னாள். அடுத்த நாள் அதிகாலை ராபட்ஸன் அம்மாள் தன் சிறிய எஜமானனைப் பிரியப்படுத்தும்படி வாசலில் காத்துக்கொண்டு நின்றாள். அப்போது 12 வயதுள்ள ஒருவன் வழக்கம்போல் தன் பத்திரிகையை எறியும்படி ஜன்னலண்டை வந்தான். அவன் முகமலர்ச்சியுடையவனாயிருந்தனன். அவன் கண்கள் பிரகாசமாயுமிருந்தன. ஆயாள் அந்தப் பையனைப் பார்த்து : 'சிறுபையா! இங்கேவா, நான் உன்னைப் பார்க்கவேண்டும். என் சிறிய எஜமான் உன்னைப்பற்றி அறிய விரும்புகிறார். உன் பேர் என்ன?' என்று கேட்குமுன், பையன் ஓட ஆரம்பித்தான். என்றாலும் பையன் சற்றுநின்று, என் பேர் சாமு. உன் எஜமான் யார்? சிலவேளைகளில் மெத்தைவீட்டில் உட்கார்ந்து, துக்கமுகத்தோடு காணப்படுகிற அந்த வியாதிக்காரப் பையனா?' என்று கேட்டான். சாமு டம்பமான வஸ்திரமில்லாதவனாயிருந்தபோதிலும், சுத்தமும், நல்லொழுக்கமு முள்ளவனாய்க் காணப்பட்டான். ஆயாள் அவனைப்பார்த்து, 'சற்று உள்ளேவந்து என் எஜமானனுக்குக் காலைவந்தனம் சொல்' என்று கேட்டாள். சாமு சற்று திகைத்தான். அவனுக்கு அதிகநேரமில்லை. என்றாலும் இந்த நல்ல அழைப்பைத் தள்ளிவிடவும் அவனுக்கு இஷ்டமில்லை. ஆர்தருடைய அறை திறந்ததும், பையன் உள்ளேபோய்த் தன் பத்திரிகை மூட்டை முழுவதையும் அவன் படுத்திருந்த கட்டிலில் வைத்துவிட்டு, 'நீ எப்போதும் படுக்கையிலேயேதானா இருக்கிறாய்?' என்று கேட்டான்.

ஆர்தர் 'ஆம்! நான் அடிக்கடி ஒண்டியாயிருக்கிறேன்' என்றான். 'உனக்குச் சகோதரர் சகோதரிகள் உண்டா?' என்று சாமு கேட்டான். அதற்கு ஆர்தர், 'இல்லை' என்றான். தனக்குள்ளதுபோல் ஒரு நல்லதாயும், சகோதரனும், சிறிய தங்கையும் ஆர்தருக்கு இல்லையே என்று பையன் அதிக விசனமுற்றான். சாமு கொக்கோவை உற்று நோக்கினதைக் கவனித்த ஆர்தர், தன் ஆயாளைப்பார்த்து, அடுத்த நாள் காலையிலிருந்து சாமுவுக்கும் ஒருகோப்பை கொக்கோபானம் கொண்டுவந்து கொடுக்கும்படி உத்தரவுபண்ணினான்.

அந்நாள் முதல், வெவ்வேறான அந்தஸ்துள்ளவர்களாயிருந்தபோதிலும், ஒரேவயதுடைய அவ்விருவருக்கும் சிநேகம் உண்டாயிற்று.



சாமுவின் தகப்பனாருக்கு ஒரு பெரிய நிலம் இருந்ததாகவும், வியாதியினாலும் மற்றும் நஷ்டத்தினாலும் அந்த நிலத்தை விற்றுவிட்டு, அந்தப்பட்டணத்துக்கு வரவேண்டியதாயிருந்தது என்பதாகவும், இப்போது அவர்கள் ஒரு சிறு வீட்டில் வசிப்பதாயும், அவன் தகப்பனார் இன்னும் சுகமடையாததினால் வேலைசெய்ய முடியாமலிருப்பதாயும், சாமு குடும்பத்தில் பெரியவனானபடியால் பத்திரிகைவிற்கும் பையனாக வேலைக்கு அமர்ந்திருப்பதாயும், அவன் பள்ளிக்கூடம் போகிறதற்குள் அந்த வேலையை முடித்துவிடுவதாயும் ஆர்தர் அறிந்துகொண்டான்.

ஏழை சாமு அடிக்கடி வந்துசெய்த சம்பாஷணைகளினால் ஆர்தர் மனோற்சாகமடைந்துவந்தான். அடிக்கடி அவன் தான் செய்த வேலையில் தனக்கு நேரிட்ட நல்ல சங்கதிகளைப்பற்றிச் சொல்வது வழக்கம். ஆர்தர் தன் வியாதியை மறந்து தன் சிறிய சிநேகிதனுடைய கதைகளுக்குச் செவிகொடுத்து வந்தான். ஆர்தருடைய தகப்பனார் பட்டணத்து மத்தியிலுள்ள தம் ஆபீசில் பகல் முழுவதும் வேலை செய்துவிட்டு, ஒருமணி நேரம் மாத்திரம் தம் மகனோடு செலவழிப்பதுண்டு. அந்நாட்களில் ஆர்தர் முன்னில்லாத பிரகாரம் அதிக முகமலர்ச்சியடைந்திருப்பதை கவனித்துவந்தார். ஒரு ஓய்வு நாள் காலையில் ஆர்தர் மறுபடியும் மனச்சோர்வுள்ளவனாய்க் காணப்பட்டான். இந்த மாறுதலைக்கண்ட அவன் தகப்பனார் காரணம் என்ன என்று மகனைக் கேட்டார். அப்போது ஆர்தர், 'இன்று சாமு வரவில்லை, பத்திரிகைகள் ஓய்வுநாட்களில் விற்பனையாவதில்லை' என்றான். 'சாமு யார்?' என்று பிரௌன்துரை கேட்டபொழுது, ஆர்தர், 'அவன் பத்திரிகை விற்கும் ஒரு பையன்' என்றான்.

தாழ்ந்த அந்தஸ்திலுள்ள சாமு, ஆர்தருடைய அறைக்குள் விடப்பட்டதை அறிந்த பிரௌன்துரை அவன்மீது சற்று கோபமுற்றார். ஆயினும் சிறிதுநேரத்திற்கப்புறம், சாமு நல்ல பையனாகவிருக்க வேண்டும்; ஏனென்றால் சாமு தன் பெற்றோருக்காகச் செய்யும் எல்லாக் காரியங்களைப்பற்றியும் தன் மகன ஆர்தர் மெச்சிக்கொள்ளுகிறான் என்பதை அறிந்துகொண்டார். ஆம், சாமு ஆர்தரை அடிக்கடி ஆறுதல்படுத்தி, அவன் கடவுளை நேசிக்கவும் அவரை நோக்கி ஜெபிக்கவும் செய்தான். தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது.

இவைகள் எல்லாம் பிரௌன்துரைக்கு ஆச்சரியமாகவேயிருந்தது. ஆனால் ஆர்தர் சொன்னபடி சாமு நல்ல பையன்தான் என்பதை அறியும்படி, தன் வேலைக்காரர்களில் ஒருவனை விட்டுச் சாமுவை அழைத்துவரச் சொன்னார். சாமு வந்ததும், ஆர்தருடைய

தகப்பனைப் பார்த்து நாணமடைந்தது போல் காணப்பட்டான். ஆனால் பிரௌனன் ஒரு புஸ்தகத்தை எடுத்து வாசிக்கிறதுபோல் காட்டி, சாமு ஆர்தரோடு பேசும் சம்பாஷணையைக் கவனித்துக் கொண்டிருந்தார். ஆர்தருக்கு விசேஷித்த ஒரு சிநேகிதன் சீக்கிரத்தில் கிடைத்தான் என்றும், அவனைச் சந்தோஷப்படுத்தக்கூடிய சக்தி அவனுக்கு உண்டென்பதையும் பிரௌனன் கண்டுகொண்டார். அந்த நாள்முதல் சாமு அடிக்கடி ஆர்தருடைய வீட்டிற்கு விருந்தாளியாக வந்து அவனுக்கு உதவிசெய்து வந்ததினால், இருவரும் இணைபிரியாச் சிநேகிதரானார்கள்.

அப்போது கிறிஸ்மஸ் பண்டிகை சமீபமாயிருந்தது. ஒருநாள் ஆர்தர் தன் தகப்பனாரைப் பார்த்து, 'அப்பா! நீங்கள் அதிகப் பணக்காரர் அல்லவா?' என்றான். 'ஆம், மகனே! நான் அதிகப்பணம் சம்பாதித்திருக்கிறேன்' என்றார் பிரௌனன்துரையும். 'இவைகள் எல்லாம் ஒருநாள் என்னுடையதாகுமல்லவா?' என்று ஆர்தர் சொன்னான். 'ஆம், அது இப்போது நீ நினைக்கவேண்டிய காரியமன்று' என்றார். ஆர்தர், 'அப்பா! பிற்காலத்தில் எல்லாம் எனக்குச் சொந்தமாகும். ஆனால் இப்போது எனக்குக் கொஞ்சம் பணம் வேண்டும்' என்றான். பிரௌனன்துரை தன் மகனைத் திடீரென்று பண ஆசை பிடித்துவிடும் என்று பயந்தபோதிலும், அவனுடைய ஆசையுள்ள முகப்பார்வையைப் பார்த்து: 'நல்லது, என் மகனே! உனக்குத் தேவையான பணத்தை நான் தருகிறேன். இது உனக்கு கிறிஸ்மஸ் இனாமாகவிருக்கும். அதற்குமேல் நீ எதிர்பார்க்கமுடியாது' என்றார். ஆர்தர்: 'அப்பா! எனக்கு அதிக சந்தோஷமாகவிருக்கிறது, ஆனால் ஒரு காரியம் கேட்டுக்கொள்ளுகிறேன். அதாவது கிறிஸ்மஸ் இரவு எனக்குப் பிரியமான சில சில சிநேகிதர்களை நான் வரவழைப்பேன்' என்றான். இதற்கும் அவன் தகப்பனார் சம்மதித்தார். ஆர்தர் தனக்கு வேண்டிய சாமான்களின் ஜாபிதா ஒன்று தயார்பண்ணினான். ராபட்ஸன் அம்மாள் ஜாபிதாபிரகாரம் சேர்த்தியான உடுப்புகள், விளையாட்டுப் பொருள்கள், புஸ்தகங்கள், மிட்டாய் முதலிய சிற்றுண்டிகள் வாங்கி வந்தாள்.

ஆர்தர் வரவழைத்த விருந்தாளிகள் யார்? சாமுவும் அவன் குடும்ப முழுவதுமே. அவர்கள் முகங்களில் சந்தோஷம் குடிகொண்டிருந்தது. அவர்களுடைய இருதயத்தில் அவர்கள் கஷ்டத்தில் உதவிசெய்த நல்ல சிநேகிதர்களைக் கொடுத்த கடவுளுக்கு ஸ்தோத்திரம் நிறைந்து விளங்கின. கிறிஸ்மஸ் இனாம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டபோது ஒவ்வொருவரும் தமக்கு அதிக அவசியமான சாமான்கள் பெற்றுக்கொண்டதாகக் காணப்பட்டார்கள்.



எல்லாவற்றிற்கும் மேலாக, சாமுவுக்கு உயர்தரக்கல்வி கற்பதற்கு உதவியாக அதிக பணமடங்கிய ஒரு பணப்பை கிடைத்தது. ஆர்தர் முன்னொருநாளுமில்லாத பிரகாரம் அதிக மனச்சந்தோஷமுள்ளவனாய்க் காணப்பட்டான். அவன் அன்று இராத்திரி தன் தகப்பனுக்கு அன்புள்ள இராத்திரி வந்தனம் சொன்னபோது, அதிக அன்போடும் கனிவோடும் தன் தகப்பனாருடைய இருகன்னங்களிலும் முத்தங் கொடுத்து, அந்தக் கிறிஸ்மஸ் தினம் அதிக மேலானதும், அந்தக் கிறிஸ்மஸ் இனாம் அதிக சிரேஷ்டமுமானதென்றும் சொன்னான்.

பிரௌனன்துரை சீக்கிரத்தில் சாமுவின் தகப்பனாரை அதிக உண்மையுள்ளவனென்று மதித்து, தன் வீட்டுக்காரியங்களுக்கெல்லாம் அதிகாரியாக ஏற்பாடு செய்தார். அந்தக் குடும்பமுழுவதும் தங்கள் கஷ்ட தசையிலிருந்து நிவர்த்தியாயிற்று. ஆர்தருக்கும் சாமுவுக்குமுண்டான சிநேகம் அவர்கள் ஜீவகாலமுழுவதும் நீடித்திருந்தது. அவர்கள் இருவரும் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறதென்றும் கற்றுக்கொண்டார்கள்.

Estrid Hoff.

## THE MADRAS PRESIDENCY AND THE WAR

## சென்னை இராஜதானியும் சண்டையும்

(தொடர்ச்சி)

**சண்டையில் கஷ்டப்பட்ட போர்வீரர்களுக்கும் அவர்களுடைய குடும்பங்களுக்கும் உதவி.**—சண்டையில் இறந்துபோன அல்லது காயம்பட்ட போர்வீரர்களின் பிள்ளைகளை, சர்க்கார் செலவில் அல்லது சர்க்கார் பணத்தின் உதவியால், நடத்தப்படும் ஆரம்பக் கல்வி (Elementary Schools) அல்லது உயர்தரக் கல்வி (Secondary Schools) கற்பிக்கும் பாடசாலைகளில் பள்ளிக்கூடச் சம்பளமில்லாமல் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றும், அவர்களுக்கு வேண்டிய பாடசாலை புஸ்தகங்கள் சர்க்கார் செலவில் வாங்கிக்கொடுக்கப்படவேண்டுமென்றும், கவர்ன்மெண்டார் கட்டளையிட்டிருக்கிறார்கள்.

இதைத் தவிர, அங்க ஈனர்களாக்கப்பட்ட போர்வீரர்களுக்கும், சண்டையில் இறந்துபோன போர்வீரர்களின் குடும்பத்தார்களுக்கும் உதவிசெய்து வருகிறார்கள். சண்டையில் உயிரிழந்த போர்வீரர்களின் சவாட்சணையிலிருந்தவர்களுக்குக் கொடுத்து உதவும்படி, இந்திய இம்பீரியல் உதவி நிதியிலிருந்து, ரூபாய் 3,30,000 கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஜில்லாவிலும், கொடுப்பதற்கு ஏற்

பட்டிருக்கும் தொகையின் விவரம் அடியில்வரும் அட்டவணையில் காட்டப்பட்டிருக்கிறது :

| ஜில்லா. | தொகை. | ஜில்லா. | தொகை. |
|---|---|---|---|
| | ரூ. | | ரூ. |
| அனந்தப்பூர் ... | 1,350 | நெல்லூர் ... ... | 1,050 |
| வட ஆற்காடு ... | 54,450 | நீலகிரி ... ... | 2,300 |
| தென் ஆற்காடு ... | 15,550 | ராமநாதபுரம் ... | 5,800 |
| பல்லாரி ... | 1,750 | சேலம் ... ... | 15,200 |
| செங்கற்பட்டு ... | 12,550 | தஞ்சாவூர் ... ... | 10,500 |
| சித்தூர் ... ... | 4,250 | திருநெல்வேலி ... | 10,200 |
| கோயம்புத்தூர் ... | 3,600 | திருச்சிறுப்பள்ளி ... | 12,450 |
| கடப்பை ... ... | 1,350 | விசாகப்பட்டணம் ... | 13,350 |
| கஞ்சம் ... ... | 2,600 | திருவாங்கூர் கொச்சின் சமஸ்தானம் ரெஸிடெண்டு ... | 21,350 |
| கோதாவரி ... | 6,000 | | |
| குண்டூர் ... ... | 10,250 | | |
| தென் கன்னடம் ... | 6,650 | புதுச்சேரி காரைக்கால் பிரித்தானியகான்சல் | 2,150 |
| கிருஷ்ணா ... ... | 11,500 | | |
| கர்நூல் ... ... | 3,250 | | |
| மதராஸ் ... ... | 50,950 | | |
| மலையாளம் ... | 42,550 | மொத்தம் ... | 3,30,000 |
| மதுரை ... ... | 7,050 | | |

யாதொரு ஆதரவுமில்லாமல்போன குடும்பங்களுக்கு ரூபாய் 300 கொடுக்கப்படும். அதிக செலவில்லாத குடும்பங்களுக்கு, அவரவர்கள் நிலைமைக்குத்தக்கபடி அதிகம் ஏழையாயிருந்தால் ரூபாய் 250-ம், கொஞ்சம் வரும்படியுள்ளவர்களாயிருந்தால் ரூபாய் 200-ம் கொடுக்கப்படும். சண்டையில் உயிரிழந்த மனிதர்களின் குடும்பங்களுக்குக் கொடுத்து உதவ, கொடுக்கப்பட்ட 3,30,000 ரூபாயையும் தவிர, சண்டையில் அதிகமாய் காயம்பட்டவர்களாகிய ஒவ்வொரு போர்வீரனுக்கும், இம்பீரியல் உதவி நிதியிலிருந்து சண்டையதிகாரிகள் ரூபாய் 200 கொடுத்து வருகிறார்கள். இந்த இனாம்கள் போர்வீரர்கள் அல்லது அவர்கள் குடும்பத்தார்களுக்குக் கிடைக்கும் மாதப்பணம் அல்லது பென்ஷனையல்லாது வேறாகக் கொடுக்கப்படும். இந்திய போர்வீரர்கள் அல்லது அவர்கள் குடும்பத்தார்களுக்குக் கிடைக்கும் தொகைக்கு மேலே ரூபாய் 50 சண்டையில் காயம்பட்ட இந்திய இராணுவ உத்தியோகஸ்தர்களுக்கும் சண்டையில் உயிரிழந்த இராணுவ உத்தியோகஸ்தர்களின் குடும்பத்தார்களுக்கும் கொடுக்கப்படும். இந்திய இம்பீரியல் உதவி நிதியி



லிருந்து இவ்வாறு கொடுக்கப்பட்ட பணத்தொகையை 1919-ம்ளு டிசம்பர் மாதம் சமாதானக்கொண்டாட்டம் கொண்டாடும் காலத்தில், இவ்வுதவி பெற பாத்தியமுடையவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுப்பதாய் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

யுத்தத்தில் கஷ்டப்பட்டவர்களுக்கு உதவி புரியும்படி ஏற்படுத்தப்பட்ட இந்திய இராஜாங்க சகாயநிதி முதலிய நிதிகளுக்காக ரூபாய் நிதிக்காரர் இப்பொழுது கூட பணம் சேகரித்து அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். இந்த ரூபாய் நிதியின் தலைமை ஆபீஸ் மதராஸிலிருக்கிறது. இந்நிதியின் மூலமாய் வசூல் செய்யப்பட்ட பணம் காயப்பட்ட சிப்பாய்களுக்கும், யுத்தத்தில் தங்கள் உயிரை இழந்த வீரர்களின் குடும்பங்களுக்கும் வேண்டும்போது உதவிசெய்வதற்காக உபயோகிக்கப்படும்.

## PEACE

## சமாதானம்

### சமாதான அறிக்கை

உண்மையுள்ள சாட்சியும், மரித்தோரிலிருந்து முதற்பிறந்தவரும், பூமியின் ராஜாக்களுக்கு அதிபதியுமாகிய இயேசுகிறிஸ்துவினால் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. (வெளி. 1 : 4, 5.)

உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக. (பரி. லூக்கா 2 : 14.)

அல்லாமலும் அவர் வந்து, தூரமாயிருந்த உங்களுக்கும் சமீபமாயிருந்த அவர்களுக்கும், சமாதானத்தைச் சுவிசேஷமாக அறிவித்தார். (எபே. 2 : 17.)

பூமியிலே பாழ்க்கடிப்புகளை நடப்பிக்கிற கர்த்தருடைய செய்கைகளை வந்துபாருங்கள். அவர் பூமியின் கடைமுனைமட்டும் யுத்தங்களை ஓயப்பண்ணுகிறார். (சங்கீதம் 46 : 8, 9.)

கர்த்தர் தமது ஜனத்திற்குப் பெலன் கொடுப்பார் ; கர்த்தர் தமது ஜனத்திற்குச் சமாதானம் அருளி அவர்களை ஆசீர்வதிப்பார். (சங்கீதம் 29 : 11.)

அவர் நாமம் சமாதானப்பிரபு என்னப்படும். (ஏசா. 9 : 6.)

அவரே நம்முடைய சமாதானக் காரணர். (எபே. 2 : 14.)

அதற்கு எகோவா சாலோம் என்று பேரிட்டான் (கர்த்தர் சமாதானம் அனுப்புவார்). (நியா. 6 : 24.)

## மனுஷனுக்கு சமாதானம் அத்தியந்த அவசியம்

துன்மார்க்கருக்குச் சமாதானம் இல்லையென்று கர்த்தர் சொல்லுகிறார். (ஏசாயா 48 : 22.)

உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாக பிரிவினையுண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது. ஏனென்றால், உங்கள் கைகள் இரத்தத்தாலும், உங்கள் விரல்கள் அக்கிரமத்தாலும் கறைப்பட்டிருக்கிறது; உங்கள் உதடுகள் பொய்யைப் பேசி, உங்கள் நாவு நியாயக்கேட்டை வசனிக்கிறது. தீமையை கர்ப்பந்தரித்து அக்கிரமத்தைப் பெறுகிறார்கள். (ஏசாயா 59 : 2–4.)

பாவத்தின் சம்பளம் மரணம். (ரோமர் 6 : 23.)

பாவம் செய்கிற ஆத்துமா சாகும். (எசேக். 18 : 20.)

தேவனைத் தேடுகிற உணர்வுள்ளவன் உண்டோ என்று பார்க்க, கர்த்தர் பரலோகத்திலிருந்து மனுபுத்திரரைக் கண்ணோக்கினார். எல்லாரும் வழிவிலகி ஏகமாய்க் கெட்டுப்போனார்கள். நன்மை செய்கிறவன் ஒருவனாகிலுமில்லை. (சங்கீதம் 14 : 2, 3.)

மாம்ச சிந்தை தேவனுக்கு விரோதமான பகை; அது தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படியாமலும், கீழ்ப்படியக் கூடாமலுமிருக்கிறது. மாம்சத்துக் குட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்கமாட்டார்கள். (ரோமர் 8 : 7, 8.)

துன்மார்க்கரும், தேவனை மறக்கிற எல்லா ஜாதிகளும், நரகத்திலே தள்ளப்படுவார்கள். (சங்கீதம் 9 : 17.)

சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கிவைக்கிற மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாய் தேவ கோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. (ரோமர் 1 : 18.)

குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனையுடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை; தேவனுடைய கோபம் அவனோடிருக்கும். (பரி. யோவான் 3 : 36.)

நீர் அவரோடே பழகி சமாதானமாயிரும். (யோபு 22 : 21.)

## தேவ சமாதானத்தின் வழி

கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார். (ஏசாயா 53 : 6.)



நாம் பாவங்களுக்குச் செத்து நீதிக்கு பிழைத்திருக்கும்படிக்கு அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களை சிலுவையின் மேல் சுமந்தார். (1 பேதுரு 12 : 24.)

அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பில்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமே யல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவுமில்லை. (அப்போஸ்தலர் 4 : 12.)

நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். (ரோமர் 5 : 8.)

அவர் அசட்டைபண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாயிருந்தார்..............மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார். நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவர் என்று எண்ணினோம். நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்கு சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன் தன் வழியிலே போனோம். கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார். அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டுமிருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை; அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப்போலவும், தன்னை மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்......கர்த்தரோ அவரை நொறுக்கச் சித்தமாகி அவரைப் பாடுகளுக்குட்படுத்தினார்...........அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்தில் ஊற்றி, அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து, அக்கிரமக்காரருக்காக வேண்டிக்கொண்டதினிமித்தம் அநேகரை அவருக்குப் பங்காகக் கொடுப்பேன்; பலவான்களை அவர் தமக்குக் கொள்ளையாகப் பங்கிட்டுக்கொள்வார். (ஏசாயா 53 : 3–12.)

கபாலஸ்தலம் என்று சொல்லப்பட்ட இடத்தில் அவர்கள் சேர்ந்தபொழுது, அங்கே அவரை...........சிலுவையில் அறைந்தார்கள். அப்பொழுது இயேசு: பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள்

செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார். (பரி. லூக்கா 23 : 33, 34.)

தேவன் நமது ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான்; விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரே பேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாய் இராதபடியினால், அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று. ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியினால் அவர்கள் ஒளியைப்பார்க்கிலும் இருளை விரும்புகிறதே அந்த ஆக்கினைத் தீர்ப்புக்குக் காரணமாயிருக்கிறது. குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்தியஜீவனை உடையவனாயிருக்கிறான்......(பரி. யோவான் 3 : 16, 18, 19, 36.)

அவரது குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும். (1 யோவான் 1 : 7.)

நம்முடைய பாவங்களை நிவிர்த்திசெய்கிற கிருபாதாரபலி அவரே. ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காக பிதாவினிடத்தில் பரிந்துபேசுகிறவராய் இருக்கிறார். (1 யோவான் 2 : 2.)

இயேசுகிறிஸ்துவினுடைய சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்டதினாலே அந்த சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம். ஏனெனில் பரிசுத்தம் ஆக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார். (எபிரேயர் 10 : 10, 14.)

அவரது நாமத்தினிமித்தம் உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக்கிறது. (1 யோவான் 2 : 12.)

## சமாதானத்தின் ஆசீர்வாதங்கள்

### I. மனுஷரின் ஹிருதயத்தில் உண்டாகும் விதம்

முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள். எப்படியெனில், அவரே நமது சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து, சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தை தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனைச் சிருஷ்டித்து, இப்படி சமாதானம்பண்ணி, பகையை சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாக தேவனுக்கு ஒப்புரவாக்கினார். அல்லாமலும் அவர் வந்து, தூரமாயிருந்த உங்களுக்கும் சமீபமாயிருந்த அவர்களுக்கும், சமாதானத்தை சுவிசேஷமாக அறிவித்தார். (எபேசியர் 2 : 13–17.)



அந்தகாரத்திலும் மரண இருளிலும் உட்கார்ந்திருக்கிறவர்களுக்கு வெளிச்சம் தரவும், நம்முடைய கால்களை சமாதானத்தின் வழியிலே நடத்தவும், அவ்விரக்கத்தினாலே உன்னதத்திலிருந்து தோன்றிய அருணோதயம் நம்மைச் சந்தித்திருக்கிறது. (பரி. லூக்கா 1: 78–79.)

சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்கு கொடுக்கிறேன். உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக. (பரி. யோவான் 14: 27.)

என்னிடத்தில் உங்களுக்கு சமாதானம் உண்டாயிருக்கும்பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவமுண்டு. ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன். (பரி. யோவான் 16 : 33.)

இவ்விதமாக நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம். (ரோமர் 5 : 1.)

ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம். (ரோமர் 8 : 6.)

சந்தோஷத்தினாலும் சமாதானத்தினாலும் உங்களை நிரப்புவாராக. (ரோமர் 15 : 13.)

ஆவியின் கனியோ அன்பும் சமாதானமுமாம். (கலா. 5 : 22.)

எல்லா புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களை நிரப்புவதாக. (பிலிப்பியர் 4 : 7.)

தேவசமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது. (கொலோசெயர் 3 : 15.)

சமாதானத்தின் கர்த்தர் தாமே எப்பொழுதும் சகல விதத்திலும் உங்களுக்குச் சமாதானத்தை தந்தருளுவாராக. (2 தெசலோனிக்கேயர் 3 : 16.)

... வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானம் உண்டு. (சங்கீதம் 119 : 165.)

### II. பூமிமேல் கிறிஸ்துவின் ஆளுகையில் உண்டாகும் சமாதானம்

அவர் உம்முடைய ஜனங்களை நீதியோடும், உம்முடைய ஏழைகளை நியாயத்தோடும் விசாரிப்பார். பர்வதங்கள் ஜனத்திற்குச் சமா

தானத்தைத் தரும், மேடுகள் நீதியின் விளைவோடிருக்கும். ஜனத்தில் சிறுமைப்படுகிறவர்களை அவர் நியாயம் விசாரித்து, எளியவன் பிள்ளைகளை இரட்சித்து, இடுக்கண் செய்கிறவனை நொறுக்குவார்.... ............அவருடைய நாட்களில் நீதிமான் செழிப்பான்; சந்திரனுள்ளவரைக்கும் மிகுந்த சமாதானம் இருக்கும். ஒரு சமுத்திரம் தொடங்கி மறு சமுத்திரம் வரைக்கும், நதிதொடங்கி பூமியின் எல்லைகள் வரைக்கும் அவர் அரசாளுவார்..............அவருடைய நாமம் என்றென்றைக்கும் இருக்கும். சூரியனுள்ளமட்டும் அவருடைய நாமம் சந்தான பரம்பரையாய் நிலைக்கும். மனுஷர் அவருக்குள் ஆசீர்வதிக்கப்படுவார்கள். எல்லா ஜாதிகளும் அவரைப் பாக்கியமுடையவர் என்று வாழ்த்துவார்கள். (சங்கீதம் 72 : 2-17.)

நீதியின்படி ஏழைகளை நியாயம் விசாரித்து, யதார்த்தத்தின்படி பூமியிலுள்ள சிறுமையானவர்களுக்குத் தீர்ப்புச்செய்து, பூமியைத் தமது வாக்கின் கோலால் அடித்து, தமது வாயின் சுவாசத்தால் துன்மார்க்கரைச் சங்கரிப்பார். நீதி அவருக்கு அரைக்கட்டும், சத்தியம் அவருக்கு இடைக்கச்சையுமாய் இருக்கும். அப்பொழுது ஓநாய் ஆட்டுக்குட்டியோடே தங்கும், புலி வெள்ளாட்டுக்குட்டியோடே படுத்துக்கொள்ளும்; கன்றுக்குட்டியும், பால சிங்கமும், காளையும் ஒருமித்திருக்கும்; ஒரு சிறு பையன் அவைகளை நடத்துவான்... ......என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்கு செய்வாருமில்லை; கேடு செய்வாருமில்லை; சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும். (ஏசாயா 11 : 4, 5, 6, 9.)

வனாந்தரமும் வறண்டநிலமும் மகிழ்ந்து, கடுவெளி களித்து, புஷ்பத்தைப்போல செழிக்கும். அது மிகுதியாய்ச் செழித்து பூரித்து ஆனந்தக்களிப்புடன் பாடும்;.........அவர்கள் கர்த்தருடைய மகிமையையும் நமது தேவனுடைய மகத்துவத்தையும் காண்பார்கள். அங்கே சிங்கம் இருப்பதில்லை; துஷ்டமிருகம் அங்கே போவதுமில்லை.........மீட்கப்பட்டவர்களே அதில் நடப்பார்கள். கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி, ஆனந்தக்களிப்புடன் பாடி, சீயோனுக்கு வருவார்கள். (ஏசாயா 35 : 1, 2, 9, 10.)

---

நீதியின் கிரியை சமாதானமும், நீதியின் பலன் என்றுமுள்ள அமரிக்கையும் சுகமுமாம். (ஏசாயா 32 : 17.)

Scripture Gift Mission

C. L. S. PRESS, MADRAS—1920

# மாதர் போதினி

No. 266 | மார்ச் 1920 | No. 3

## THE PRACTICE OF PRAYER

## ஜெபப் பயிற்சி

'கேளுங்கள்.' மத். 7'

கொள்ளக்கூடிய பொருளைக் கிரயங்கொடுத்து வாங்கலாம்; சம்பாதிக்கக்கூடிய வஸ்துவை வேலைசெய்து சம்பாதிக்கலாம்; கொடுக்கப்படுகிற பொருளையோ கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம். கிறிஸ்தவன் தேவனிடமிருந்து பெற்றுக்கொள்ளும் பொருளுக்குக் கிரயமாவது சம்பாத்தியமாவது வேண்டியதில்லை. தேவனிடமிருந்து பெற்றுக்கொள்வது ஈவு, அதைப் பெற்றுக்கொள்ளும் வகை கேட்பதே. மத். 7'-ல் 'கேளுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்' என்றும், மத். 7''-ல் 'பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?' என்றும், யோ. 14''-ல் 'என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்' என்றும் ஆண்டவர் சொல்லுகிறார். ஜெபத்தினால் கிடைக்கும் நேரான ஆசீர்வாதம் கேட்பதினாலேயே உண்டாவதால் முதலாவது நாம் கற்கும் பெரிய பாடம் என்னவென்றால்,

1. கேட்கத் துவங்கு. ஏதாவது கஷ்டமாவது கலக்கமாவது நமது ஜீவியத்திலுண்டாகும்போது இதைச் செய்யாமல், நாம் எங்கித் தவித்து வாடிப் புலம்பி நிற்கிறோம். தேவன் இச்சமயத்தில் என்ன சொல்லுகிறாரென்று பார்ப்போமானால், புலம்பு, யோசி, புரட்டு, உருட்டு என்றல்ல, கேள் நான் கொடுப்பேன் என்கிறார். இப்போது யாராவது, எப்படிக் கேட்கவென்று எனக்குத் தெரியவில்லை; தேவசித்தத்தின் இரகசியம் எனக்கு விளங்கவில்லை; ஜெபஜீவியம் எப்படிச் செய்கிறதென்று எனக்குத் தெரியாது என்பார்களோ? இதற்கு உத்தரம் என்ன? கற்கும் வகை செய்யத்துவங்கு

வதே. சகல முயற்சியிலும் இது வாஸ்தவமாகும். எப்படிக் கேட்கவென்று தெரியாததினாலல்ல, கேட்காதிருப்பதே குறை. கேட்கத் துவங்குகையில் பரிசுத்தாவியானவர் உதவிசெய்வார். ஜெபஞ் செய்யாத மனுஷனுக்கு தேவன் உதவிசெய்வதெப்படி? அவன், தேவன் கிரியை செய்ய இடங்கொடாதிருக்கிறானே. ஜெபக் கல்விச்சாலையில் பிரவேசிக்குமுன் ஜெபத்தின் இரகசியங்களை நாம் அறிந்திருக்க வேண்டியதென்று தேவன் எதிர்பார்க்கிறதில்லை. அவர் நம்மைத் துவங்கச் சொல்லுகிறார். ஜெபிக்கத் துவங்கும்போது பாலர் வகுப்பில் உட்காருகிறோம். ஜெபித்துக்கொண்டு போகும்போதே ஜெபிக்கும் வகை கற்றுக்கொள்ளுகிறோம். கற்பிக்கும் உத்தரவாதம் தேவன்மேலிருக்கிறது. ஜெப ஜீவியத்தின் அறிவீனமல்ல, ஜெப ஜீவிய அசட்டையே தேவனை மனவருந்தச்செய்கிறது.

2. **உடனே கேள்.** அதாவது எதையுஞ் செய்யுமுன் கேள். நாம் நம்மாலியன்ற காரியத்தை முதலில் செய்யாவிட்டால், தேவன் நமக்கு உதவிசெய்யமாட்டாரென்று சொல்லி கூடியமட்டும் தாங்களே செய்து பார்த்துவிட்டு, கூடாத சமயத்தில் தேவனை நோக்கிக் கூப்பிடும் சிலருண்டு. இது சரியான ஞானமல்ல. சாத்தானுடைய தந்திரங்களை மேற்கொள்ள நமக்கு சக்தியில்லை. நாமே எதையுஞ் செய்ய முயற்சித்தால் விழுந்துபோவோம். ஆதலால் முதலாவது தேவனிடத்தில் ஜெபிக்கப் போகவேண்டும். அவரது நடத்துதலுக்காக அவரிடம் முதலில் போவதவசியம். அவருடைய வசனத்திலிருந்து வெளிச்சம் பெற்றுக்கொள்ளப் போ, அவருடைய ஆவியின் பெலன்கிடைக்கப் போ. தப்பிதத்திலகப்பட்டால் அதினின்று மீண்டுவர நாட்செல்லுமாகையால் தப்பிதத்திலகப்படாமல் காக்கப்பட வேண்டிக்கொள். முதலாவது, தேவனிடத்தில் ஜெபித்த நல்ல உதாரணம் ஒன்று நெகேமியா இரண்டாம் அதிகாரம் முதல் ஆறு வசனங்களில் காணலாம். நெகேமியா இராஜாவுக்கு உத்தரவு கொடுக்குமுன் பரலோகத்தின் தேவனை நோக்கி ஜெபித்தான். இராஜ கேள்விக்கு மறுமொழி பகருமுன் தேவனுக்கு விண்ணப்பம் அனுப்பினான். உதவி வந்தது. இதில் நமக்கொரு அருமையான பாடமுண்டு. நமது ஜீவியத்தில் ஓர் கலக்க சமயம் நேரமுறும். என்ன செய்கிறதென்றறியாமல் மயங்கும் வேளை திடீரென்று வருகிறது. தனித்து அறைக்குட்போய் ஜெபிக்க சமயங்கிடையாது, என்றாலும் நெகேமியாவைப்போல நாம் ஜெபிக்கலாம். நாம் இருந்தபடியே தெருவிலோ, வேலை ஸ்தானத்திலோ, தினசரிக் கடமை மத்தியிலோ திடீரென்று ஜெபிக்கலாம். 'கர்த்தாவே எனக்கு உதவி செய்யும், நடத்தும், இந்நேரத்தில் ஞானந்தாரும்'



என்று கேட்கலாம். தனித்து அறைவீட்டில் நெடுநேரம ஜெபிப்பது போலவே, இடைக்கிடையில் உடனுக்குடனே வேலை மத்தியில் திடீர் திடீரென்று ஜெபித்துப் பழகுவது பலனுள்ள ஜெபமாகும்.

3. **கேட்டுக்கொண்டே யிரு.** 1 தெச. 5^17-ல் 'இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்' என்று அப்போஸ்தலன் சொல்லுகிறார். இதின் கருத்தென்ன? நமது ஜெப ஜீவியத்தில் இடையிருக்கக்கூடாது தொடர்ந்தேர்ச்சியான ஜெப ஜீவியம் அவசியம். ஜெப சிந்தை எப்போதும் இருக்கவேண்டும். ஒழுங்கற்று பாடசாலைக்கு வரும் மாணாக்கன் சித்திபெறான். ஒரு வித்தையைக் கிரமமாய்க் கற்காமல் விட்டு விட்டுக் கற்றால் அதில் நிபுணராவதரிது. ஒழுங்கான ஜெபமிராவிட்டால் கிறிஸ்தவ ஜீவியம் குன்றிப்போகும். ஜெபத்தை சிலகாலம் விட்டு விட்டு ஒழுங்கின ஜெபஞ் செய்வோருக்கு ஜெப வல்லமை குறைந்துவிடும். ஒருபோதும் முடியாத ஜெபமல்ல, ஒழுங்கான ஜெபப்பழக்கம் வேண்டியது. இப்படி ஜெபிப்போருக்கு ஆண்டவர்மேல் பற்றும் பிடிப்பும் உண்டாகும்; ஆண்டவரைக் கெட்டியாய்ப்பிடித்திருக்கும் தைரியமும் ஜெயங்கொள்ளும் ஜெபமுமுண்டாகும். இடைவிடாது ஜெபிப்பதுமட்டுமல்ல, லூக். 18^1-ல் சொல்லியபடி சோர்ந்துபோகாமலும் ஜெபிக்கவேண்டும். ஜெபத்தில் ஒழுங்கும் பழக்கமுமிருப்பதோடு விடாமுயற்சியும் அவசியம். ஜெபத்தில் சோர்ந்துபோய் சிலகாலம் கேட்டுப் பின் விட்டுவிடுவது அநேகருடைய ஜீவியத்தில் காணப்படும் பெலவீனமாயிருக்கிறது. ஒரு காரியத்திற்காக ஜெபிக்கும்போது ஒரு நாள், ஒரு வாரம், ஒரு மாதம் கேட்டுப் பின் நேர் உத்தரவு வாராததால் சோர்ந்துபோய் அதைப்பற்றி ஜெபிக்காமல் விட்டுவிடுவது சரியல்ல இது பெரிய தப்பிதம். இது துவங்கின ஜெபத்தை முடிவுக்கு வருமுன் தடுக்கும் சாத்தானுடைய தந்திரம். முடிவைக் காணுமுன் ஜெபத்தை நிறுத்துவது தோல்வியே. உத்தரவு எதிர்பாராமல் அநேக விண்ணப்பங்கள் செய்வதிலும் திட்டமாய் உத்தரவு எதிர்நோக்கி சில விண்ணப்பங்கள் செய்து உறுதியாயிருப்பது நலம்.

சுமார் அரை நூற்றாண்டுக்கு முன் கனம் ஜார்ஜ் முல்லர் என்பவர் 5 சிநேகிதரைக் குறித்து ஜெபித்துவந்தார். ஐந்து வருஷங்களுக்குப் பின் ஒருவர் கிறிஸ்தவரானார். பத்து வருஷங்களுக்குப் பின் இன்னும் இரண்டுபேர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார்கள். 25 வருஷங்களானபின் நாலாவது ஆள் இரட்சிக்கப்பட்டார். ஐந்தாம் ஆளுக்காகத் தமது மரணபரியந்தம் ஜெபித்தார். அவர் இறந்து சில மாதங்களில் இந்த ஐந்தாமவர் குணப்பட்டார். இந்தக் கடைசியானவருக்காக 52 வருஷம் கனம் முல்லர் ஜெபித்துவந்திருந்தார்! இந்த

வாசிக்கும்போது நாம் சோர்ந்துபோகாது ஜெபிக்க ஏவப்படுவோமாக.

ஜெபித்துக்கொண்டே போகும்போது உத்தரவு திட்டமாய்க் கிடைக்கும், அப்போது ஜெபத்தை நிறுத்துகிறோம். சில வேளைகளில் உத்தரவு கிடைக்குமென்ற திட்டமான நம்பிக்கை உண்டாவதால் கிறிஸ்துவுக்குள் பூரண நம்பிக்கையோடு ஜெபத்தை நிறுத்துகிறோம்.

4. எல்லாக் காரியங்களுக்காகவும் கேள். பிலி. $4^{6}$-ல் 'நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல் எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை . . . . தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்' என்று சொல்லியிருக்கிறது. ஒரு பெரிய காரியத்துக்காக, அல்லது கஷ்டம் நேரிடும்போது தேவனண்டை ஜெபிக்கப்போகிறோம். நமது ஜீவியத்தில் நேரிடும் சிறு சிறு காரியங்களில் ஜெபிக்கத் தவறுகிறோம். எல்லாக் காரியங்களையும் தேவனுக்குத் தெரிவிக்கவேண்டும். ஏனென்றால், ஜெபம் தேவ சமாதானத்தை நமக்குத் தரும். ஏதோ ஒரு கலக்கம், கவலையை தேவனிடங் கொண்டுவரும்போது அதை நம்மேலிருந்து அகற்றி அவர்மேல் போட்டுவிடுகிறோம். பின் நமக்கு கலக்கமில்லை. நமது ஜீவியத்தில் ஆறுதலும் அமைதலுமில்லாததற்குக் காரணம், எல்லாவற்றையும் தேவனிடம் சொல்லி ஜெபியாதிருப்பதே. 'நான் ஓர் கடிதம் எழுதும்போது தேவன் அதோடு போகக் கேட்கிறேன். ஓர் வார்த்தை பேசும்போது அவர் அதை ஆசீர்வதிக்கக் கேட்கிறேன். எதையுஞ் செய்யும்போது அவர் பிரசன்னம் அதிலிருக்கக் கேட்கிறேன். இப்படியே எல்லாவற்றையுங் குறித்து ஜெபிக்கிறேன்' என்று ஸ்டோன்வால் ஜாக்ஸன் என்பவர் சொல்லுகிறார்.

James H. McConkey.

## EVANGELISTIC CAMPAIGN

## சுவிசேஷப் படைமுயற்சி

சுவிசேஷப் படைமுயற்சி சம்பந்தமாய் பெண்கள் வேலையை விருத்திசெய்யும்பொருட்டு கனம் குரோவர் அம்மாளவர்கள் (Miss Grover) பெண் தலைவருக்குத் தன் வீட்டில் மூன்று மாதத்துக்கொருமுறை ஓர் கூட்டம் ஏற்படுத்தி தேயிலைப்பானம், பலகாரம் களைப்பு நீங்கக் கொடுத்து நடத்திவருகிறார்கள். இக்கூட்டத்தின் நோக்கம் என்னவென்றால், தலைவர்களை உற்சாகப்படுத்தி ஏவி



எழுப்புவதும், வேதவாசிப்புக் கூட்டம் (Bible Circle), தனி ஆள் வேலை, கூட்டவேலை, கிராமவேலை முதலியவற்றை நடத்தும் முறைகளைக் காட்டுவதும், புதிதாகத் தலைவரை பற்பல விடங்களில் ஏற்படுத்த ஆலோசனை சொல்வதும், படைமுயற்சிக்காக ஏற்பட்ட காலங்களிலன்றி எக்காலத்தும் தொடர்ந்தேர்ச்சியாய் வேலையை நடத்த ஏவி அதை எப்படி நடத்தலாமென்று காட்டுவதும், நடந்தேறின வேலைகளைப்பற்றிக் கூடிப்பேசி, ஸ்தோத்திரமும் ஜெபமும் செய்வதுமே.

கடைசியாய் நடந்த கூட்டத்தில் கனம் சவரிமுத்து போதகர் பேசினார். அவர் தெரிந்துகொண்ட பொருள்—வேதம்.

I. வேதம் எது?

(1) விதை, லூக். $8^{11}$; (2) இருபுறமும் கருக்குள்ள பட்டயம், எபே. $6^{17}$; (3) தீபம், சங். $119^{105}$; (4) கண்ணாடி, யாக். $1^{23,24}$; (5) பொக்கிஷம், சங். $119^{72}$; (6) தேன், சங். $119^{103}$; (7) பால், 1 பேது. $2^{2}$.

II. வேதத்தைப் படிக்கும் விதம்.—வேதத்தை வேதத்தைக் கொண்டு படிக்கவேண்டும். ஒத்து வாக்கியங்கள் மூலமாய் அதிகாலையில் படிப்பது நல்லது.

(1) Y. M. C. A. முறைப்படி தனி வாசிப்பும் தியானமும், (Bible Circle) சமசகிதராய்க் கூடிப் படிப்பதும்.

(2) ஓர் நாளுக்கு ஓர் அதிகாரம் காலை மாலை வாசிக்கும்முறை.

(3) இங்கிலாந்து திருச்சபை அட்டவணைப்படி வாசித்தல்.

(4) அதிகாரத்தின் பெயர், பொருளடக்கத் தியானம், போதனை, தங்கவசனம் என்று கனம் எடிதுரை முறைப்படி படித்தல்.

III. வேதத்தைப் படிப்பதால் லாபம் என்ன?

பாவத்தில் விழாதபடி காக்கும்—சோதனையை ஜெயிக்க உதவும். இயேசுவானவர் சோதனையை ஜெயித்த விதம், சங். $119^{11}$. 119-ம் சங்கீதம் படித்தால் லாபம் நன்கு விளங்கும்.

சுவிசேஷப் படைமுயற்சி சம்பந்தமாய் இந்து ஸ்திரீகளைக் கூட்டி ஒளிச்சித்திரப்படங் காட்ட விரும்புவோர் ஏற்ற ஏற்பாடுடன் கனம் குரோவர் அம்மாளவர்களை (Miss Grover) அழைத்தால் சந்தோஷத்துடன் அங்கு வந்து படங்காட்டி உதவிசெய்வார்கள். அவர்கள் மேல்விலாசம்: Miss P. Grover, C. E. Z. M., Egmore.

## (CHILDREN'S PAGE)

## THE BIBLE

### சத்திய வேதம்

லண்டன் நகரத்தில் ஐசுவரியவானான ஓர் பிரபு தான் பிறந்த நாளன்று வேலைக்காரர்களை வீட்டிற்கு அழைத்து வெகுமதி கொடுத்தார். வீடு சுத்தம்பண்ணுகிறவனைக் கூப்பிட்டு, 'இந்த வேத புத்தகம் வேண்டுமோ, அல்லது 50 ரூபாய் நோட்டு வேண்டுமோ?' என்றார். வேலைக்காரன், 'ஐயா! எனக்கு வாசிப்பு தெரியாதே புஸ்தகத்தை வைத்துக்கொண்டு என்ன செய்வேன்? அது என் வயிற்றுக்குக் கஞ்சி கொடுக்குமா? பணம் கொடுத்தால் ஏதோ எனக்குப் பிரயோஜனமாயிருக்கும்' என்றான்.

துரை, தோட்டக்காரனைக் கூப்பிட்டு அதே கேள்வி கேட்க, தோட்டக்காரன், 'ஐயா! என் பெண்சாதி வியாதியாயிருக்கிறாள். வேதபுஸ்தகமா அவள் நோயைத் தீர்க்கும்? ஏதோ கையில் ஐந்து காசு கிடைத்தாலும் தற்சமயம் அனுகூலமாயிருக்கும்' என்றான்.

பிறகு துரை, சமையல் வேலைசெய்யும் மேரியை நோக்கி: 'உனக்கு வாசிக்கத் தெரியுமே. இப்புத்தகம் வேண்டுமோ?' என, அவள், 'வாசிக்கத் தெரிந்து என்ன பயன்? வாசிக்கத்தான் நேரத்தைக் காணோம். கையில் நாலு காசு கிடைத்தாலும், ஒரு நல்ல உடுப்பு தைத்துக்கொள்வேன்' என்றாள். பிறகு துரை இன்னொரு வேலைக்காரியை நோக்கி அதே கேள்வி கேட்க, அவள், 'எனக்கு ஒரு வேதபுத்தகம் இருப்பதால் இப்புத்தகம் வேண்டாம்' என்றாள்.

கடைசியாய், தபாற் கொண்டுபோகும் சிறுவன் ஒருவனைப் பார்த்து துரை அதே கேள்வியைக் கேட்க, அவன், 'என் பிரியமுள்ள தாயார், "கர்த்தருடைய வசனம் ஆயிரம் பொன், வெள்ளியைப் பார்க்கிலும் விசேஷம்" என்று சொல்லியிருக்கிறார்கள். ஆதலால் தயவுசெய்து அந்த அருமையான புஸ்தகத்தை எனக்குத் தாருங்கள்' என்றான். அதற்கவர், 'சிறுவனே! கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பாராக. நீ ஞானத்தோடு தெரிந்துகொண்ட அது உனக்கு ஐசுவரியத்தையும், கனத்தையும், நீடிய ஆயுளையும் தந்தருள்வதாக' என்றார்.

பிள்ளையாண்டான் வேதபுத்தகத்தை ஆவலோடு திறந்தான். அதிலிருந்து ஒரு பொன் காசு கீழேவிழுந்தது. அதின் ஏடுகளைத் திருப்பினபோது அங்கங்கே நோட்டுகள் வைத்திருந்ததைக் கண்டான். இதைக்கண்ட பொருளாசைக்காரர் துக்கத்தோடு திரும்பினார்கள்.



'அநேகமாயிரம் பொன் வெள்ளியைப் பார்க்கிலும் நீர் விளம்பின வேதமே எனக்கு நலம்' (சங். 119 : 72).

ஆம், பிரியமானவர்களே! நம்மில் அநேகர், இவ்வாறு மேற்படி வேலைக்காரர் செய்த பிரகாரமே, பொன்னிலும் மேன்மையான, தேனிலும் இனிமையான திவ்விய வாக்கைத் தள்ளிவிட்டு, அழிந்துபோகும் பொன் வெள்ளியையே நாடித் தேடுகிறதில்லையா? அப்படியில்லாமல், நாம் தேவ வசனத்தையே தேடுவோமானால் மற்றும் ஆஸ்திகளும் கூடவே வரும்.

'முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்' (மத். 6 : 33).

## FRIENDSHIP

### சிநேகம்

முகநக நட்பது நட்பன்று—நெஞ்சத்
தகநக நட்பது நட்பு.

கொன்ஸ்தந்தீன் புரியில் தங்கள் தகப்பன்மார் வைத்திருந்த கடைகளிலே, இரண்டு வாலிபர் கையுதவி செய்துவந்தார்கள். இவர்களில் ஒருவன் புகையிலை வியாபாரி; மற்றவன் ரொட்டிக்காரன். இவர்கள் கடைகள் மூரு என்னும் ஓர் இடத்தில் ஒன்றுக்கொன்று எதிர்முகமாய் இருந்தன. இரு வாலிபரும் சீக்கிரத்தில் உற்ற சிநேகிதர் ஆனார்கள்.

இப்படியிருக்க, புகையிலை வியாபாரியின் மகன், தனக்கு இவ்வியாபாரத்தில் சலிப்புண்டானதாகவும், வெளிதேசம் புறப்பட்டுப் போனால் வேறு உத்தியோகம்செய்து தனவான் ஆகலாம் என்பதாகவும் தன் நண்பனுக்குச் சொன்னான். ரொட்டிக்காரன் தன் நண்பனுடைய எண்ணத்தை மாற்ற எவ்வளவோ பிரயாசப்பட்டும் பலன்படவில்லை. புகையிலைக்காரன் துர்க்கிதேசத்தின் தூரமான ஓர் இடத்திற்குப் போய் அங்கே நல்ல உத்தியோகம் பெற்றான். பின்பு இவன் ஒரு பாஷா அதிபதியின் காரியஸ்தனாக அமர்ந்து, பாஷா மரித்தபிறகு அவன் ஸ்தானத்தை அடைந்தான். இப்படியாக படிப்படியாய் இவன் பல உத்தியோகங்களுக்கு மாறி, கடைசியாக, 35 வருஷங்களுக்குப்பின் துர்க்கிதேசத்துச் சுல்தானுக்குத் திவான்ஜியாய் அமர்ந்தான். கொன்ஸ்தந்தீன் புரிக்கு வந்தபோது, அவன் மேன்மையிலும் அதிகாரத்திலும் சுல்தானுக்கு இரண்டாவதாக அமர்ந்

தான். இவனுடைய தோழனை ரொட்டிக்காரனோ இவனைப்பற்றிச் சமாச்சாரம் ஒன்றும் கேள்விப்படவில்லை. இவனோ தன் வாலிப தோழனை மறக்கவில்லை.

தன் தோழன் உயிரோடிருக்கிறானென்று அறிய விரும்பி, இவன் தன் பிரதான சேவகர்களில் ஒருவனை ரொட்டிக்கடைக்கு அனுப்பி, அவ்விடத்தில் தன் தோழனின் பெயரால் ஒருவன் கடை வைத்திருக்கிறானென்று விசாரித்து, அப்படியிருந்தால் திவான்ஜியானவர் உடனே அழைத்துவரச் சொல்லுகிறார் என்று சொல்லி, அழைத்துவரக் கற்பித்தான்.

ரொட்டிக்காரனோ பெரிய குடும்பஸ்தனாக இருந்தான். நினையாத நேரத்தில் திவான்ஜியாரிடமிருந்து தனக்கு அழைப்பு வரவே, அவன் தட்டுக்கெட்டுத் தடுமாறி, திவான்ஜியார் தன்னை அழைக்கும்படியாக தான் ஓர் குற்றமும் செய்யவில்லையே என அங்கலாய்த்து நின்றான்; பெண்சாதி பிள்ளைகளும் கூக்குரலிட்டார்கள். கூக்குரல் சத்தத்தைக் கேட்ட தெரு ஜனமனைத்தும் காரியமென்னவென்று விசாரிக்க, இவன் வாசலை யடைந்தார்கள். சேவகன் தன் கடமையை நிறைவேற்றுவதில் சற்றும் பின்வாங்காமல் பலாத்காரமாய் ரொட்டிக்காரனைப் பிடித்துக்கொண்டுபோய் பிரதான மந்திரியின் முன் நிறுத்தினான்.

ரொட்டிக்காரன் நடுநடுங்கி மந்திரிமுன் சாஷ்டாங்கமாய் விழுந்தான். ஊரூர் என்னும் இடத்திலிருக்கும் இன்ன பெயருடைய ரொட்டிக்காரன் இவன்தானோ வென்று மந்திரி வினவ, ரொட்டிக்காரன் ஒத்துக்கொண்டு, தன்பேரில் ஒரு குற்றமுமில்லையென்று மந்திரிக்கு அறிவித்தான். உடனே, மந்திரி 'வாலிபகால புகையிலைக்கார நண்பனை மறந்துவிட்டாயா? அவன் முகக்குறிப்பும் குரலும் உனக்குத் தெரிகிறதில்லையா?' என்று கேட்க, ரொட்டிக்காரன் தலைநிமிர்ந்து மந்திரியைப் பார்த்து, தன் நண்பனென்றறிந்து கிலேசம் நீங்கி முகமலர்ந்தான். பின்பு இருவரும் முத்தமிட்டு ஒருவரையொருவர் தழுவினார்கள். மந்திரி அவனைப் பொக்கிஷக்காரனாக நியமித்து, தன் சிநேகத்தை வெளியிட்டான்.

இதல்லோ சிநேகத்தின் கூர்மை! நம் சிநேகம் இத்தன்மையதாயிருக்கின்றதா?

Lydia Vedanayagam.



## GREEDINESS

## பேராசையின் முடிவு

'பேராசைத் தரித்திரம் தீராத உபத்திரவம்' என்றபடி, வேதத்தை ஆராய்ந்துபார்க்கையில் அநேகர் மட்டுக்குமிஞ்சின பேராசையினால் ஒருநாளும் செல்வவான்களாகாமல் மரணமாகிய கடலில் அமிழ்ந்து மாண்டார்களென்று காண்கிறோம். ஆகான் என்ற பேராசைக்காரன் தங்கப்பாளத்தினால் சிங்காரமாய் வாழலாமென்றெண்ணி திருடி மறைத்ததினால் கல்லெறியுண்டு நெருப்பினால் தகிக்கப்பட்டு இறந்தான். கேயாசென்ற கேடானன் தீர்க்கதரிசியை ஏமாற்றி நாகமானென்ற அந்நிய தளகர்த்தனிடம் வாங்கின பரிசுகளினால் எந்நாளும் குஷ்டரோகியாகி தரித்திரதசைக்கு உள்ளாயினன். அனனியா, சப்பிராள் என்றவர்கள் பேதுரு அப்போஸ்தலன் முன் பண ஆசையினால் மறைவுசெய்த பாவத்தினிமித்தம் அப்புறம் இவ்வுலகிலில்லாமல் அழிந்தார்கள். தேமா என்பவன் இவ்வுலகத்தின் ஆசையினால் விசுவாசமாகிய கப்பலை உடைத்து உலக மனுஷனானென்று பவுல் அப்போஸ்தலன் கூறுகிறார். ஆகவே, பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறதென்கிற சத்தியவேத உரை உலகத்தன்மையான மனுஷர்களின் ஜீவியத்தில் அனுதினம் நிறைவேறி வருகிறபடியால் இந்த மகா கொடியகாலத்தில் எச்சரிக்கையடைந்து கிறிஸ்துவின் ஒளியைத் தரித்துக்கொண்டு ஒளியற்ற அந்தகாரக் கிரியைகளுக்குத் தப்பிக் கடந்து செல்வோமாக. பேராசையினால் சுகமில்லை. அதினால் தீராத உபத்திரவந்தானுண்டு என்பதை பின்வரும் கதை நன்றாய் விளக்கிக் காட்டும்:

ஒரு காலத்தில் பேராசை மிகுந்த ஓர் பிராமணன் வியாபாரஞ் செய்ய உத்தேசித்து அங்குமிங்கும் ஓடி விசாரித்ததில், தேங்காய் வியாபாரத்தினால் திரண்ட ஆஸ்தி சேர்க்கலாமென்று கண்டுபிடித்தான். அப்படியானால் தேங்காய் எங்கே சாசமாய் வாங்கலாமென்று விசாரிக்க, மலையாளத்தில் வாங்கித் தன்னூட்டில் விற்றால் ஒன்றிற்கு அரை அணா வீதம் இருநூறு ரூபாய்க்குப் பெருத்த லாபம் கிடைக்குமென்று சிலர் சொன்னதின்பேரில் மலையாளம் சென்றான். அங்கே போய் விசாரித்ததில், தன் ஊர் வியாபாரிகள் சொன்னபடியே, ஒரு தேங்காய்க்கு அரை அணா கொடுத்து வாங்கினால் தன் ஊரில் ஒன்றேகால் அணாவுக்கு விற்கலாமென்று கண்டான். ஆனால் 'ஆசைக்கு அளவில்லை' என்றபடி, இதைவிட இன்னும் எங்கே நயமாய் வாங்கலாமென்று அவன் விசாரிக்க, அவர்கள், 'திருவனந்தபுரம் சென்றால் இதைவிட நயமாய் வாங்கலாமென்

றார்கள். அவன் உடனே பிரயாணப்பட்டு அங்கே சென்றான். அங்குள்ளவர்கள் கால் அணாவுக்கு ஒரு தேங்காய் என்றார்கள். உடனே அவன் சந்தோஷமிகுந்தவனாய் தனக்குள்ளே எவ்வளவு சீமாறும் விடலாமென்றெண்ணி ஆசை மிகுந்தவனானான். அங்கே அவன், இதைவிட தேங்காய் எங்கே நயமாய் வாங்கலாமென்று ஒருவனை விசாரித்ததின்பேரில், அவன் 'கொச்சிக்குப் போனால் இதை விட நயமாய் வாங்கலாம்' என்றான். உடனே அவன் அங்கு பிரயாணப்பட்டுச் சென்று விசாரித்ததில் அங்குள்ளவர்கள் 'ஒரு தேங்காய் ஒரு காசு' என்றார்கள். உடனே அவன் பண ஆசையினால் அகமகிழ்ந்தான். மறுபடியும் அவன் இதைவிட தேங்காய் எங்கு நயமாய் கிடைக்கும் என்று விசாரிக்க, அங்குள்ளவர்கள் 'கொல்லத்துக்குப் போனால் தேங்காய் விலையில்லாமல் சும்மா வாரிக் கொண்டு வரலாம்' என்று சொல்லவே, உடனே அவன் தாமதமின்றி கொல்லம் போய்ச் சேர்ந்தான். அங்கே பிராமணன் பார்த்திராதவண்ணம் ஏராளமான தென்னமரங்களைக் கண்டு பூரித்து தேங்காய் வாங்குவதற்காக அங்குள்ளவர்களை விசாரித்தான். அதற்கு அவர்கள் 'இங்கு தேங்காய் விலைக்கு விற்கப்படுகிறதில்லை, ஆனால் அதோ ஓர் ஏரியுண்டு, அதின் கரையில் ஏராளமான மரங்களுண்டு, அங்கே போய் வேண்டியமட்டும் உலுப்பிக்கொண்டு வரவேண்டியதுதான்' என்றார்கள். தாமதமின்றி அவன் அந்த ஏரி போய்ச் சேர்ந்தான். அங்கே தென்னமரங்களின் வளமையைக் கண்கொண்டு பார்க்க முடியவில்லை. தேங்காய்களைக் கீழே விழுத்தக் கூலிகொடுப்பதைவிட தானே ஏறி விழுத்தினால் அதிக லாபமுண்டு என்று கண்டு, தானே ஏறி உலுப்பினான். எல்லா மரங்களும் மகா உன்னதமாய் வளர்ந்திருந்தன. [illegible] ஏரியின் ஆழமான தடாகத்திற்கு மேலே சாய்ந்துகொண்டிருந்தன. [illegible] காய்களை பறித்தபின், பிராமணன் பிடி நழுவி ஓலையின் மட்டையைப் பிடித்தான். உடனே மடல் சாய்ந்தது. சாய்ந்த மட்டையை பிடித்துக்கொண்டு தொங்கினான். பெரிய ஆபத்து நேர்ந்ததென்று தவித்துக்கொண்டிருக்குங்காலையில் ஏரியின் கரையில் ஒருவன் ஒட்டகம் ஓட்டிக்கொண்டு வரக் கண்டு அவனைக் கூப்பிட்டு, 'ஐய! என்னை இந்தப் பெரிய ஆபத்தினின்று தப்புவித்தால் என் மடியில் இருக்கிற இருநூறு ரூபாயையும் உனக்குத் தந்துவிடுகிறேன்' என்றதின் பேரில், அவன் அதிவேகமாய் ஒட்டகத்தை நிறுத்தச் செய்து பிராமணனிடம் நெருங்கி அவன் காலைப் பிடிக்கவே, ஒட்டகம் பிரண்டு ஓட்டம்பிடிக்க, இருவரும் பெரும் மகா பரிதாபமாய்த் தொங்கினார்கள். அதுசமயம் அங்கே எதிர்க்கரையில் ஒரு யானைப்



பாகன் ஒரு யானையுடன் நின்றுகொண்டிருக்கக்கண்டு, அவனைக் கூப்பிட்டு, 'நீ இச்சமயம் எங்களை இரட்சித்தால் எங்களிடத்திலிருக்கும் நானூறு ரூபாயையும் உனக்குக் கொடுத்துவிடுவோம்' என்றார்கள். அவன் தீவிரமாய் யானையை ஓட்டிவந்து ஒட்டகக்காரன் காலைப் பிடிக்கவே, யானை ஓடத் தொடங்கிற்று. ஆகவே யானைக்காரன் ஒட்டகக்காரன் காலைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டான். இவ்வித நிலைமையில் இருவரும் தத்தளித்துக்கொண்டிருக்கையில், ஓர் குதிரைக்காரன் அவ்வழியாய் குதிரையோட்டிக்கொண்டு வரக் கண்டார்கள். அவர்கள் அவனைப் பார்த்து: 'எங்கள் மூவர் மடியிலும் அறுநூறு ரூபாயிருக்கிறது. எங்களுக்கு இச்சமயம் உதவிசெய்து காப்பாற்றுவாயானால் இந்த அறுநூறு ரூபாயையும் உனக்கே கொடுத்துவிடுகிறோம்' என்றார்கள். குதிரைக்காரன் வெகு சந்தோஷத்தோடு குதிரையை அதிவேகமாய் ஓட்டிவந்து யானைப்பாகன் காலைப் பிடிக்கவே, குதிரை ஓடிப்போய்விட்டது. ஆகவே குதிரைக்காரன், யானைப்பாகன் காலைக் கெட்டியாய் பிடித்துக்கொண்டான். இப்போது நால்வரும் ஒருவர் கீழ் ஒருவர் தொங்கினதினால் மடல் பளு தாங்கமுடியாமல் செக்குவிடவே, நாலுபேரும் தடாகத்தில் விழுந்து ஆழியில் அமிழ்ந்து அழிந்தார்கள்.

என்ன பரிதாபம்! இப்படித்தான் அனுதினமும் எத்தனை திரளானபேர்கள் ஆசை இச்சைகளினால் தங்களை உருவக்குத்திக்கொண்டு இருக்கிறார்கள். நம்முடைய ஆசை இச்சைகளை கிறிஸ்துவின் சிலுவையில் ஆணியடித்து அவரோடு கூட வெற்றி சிறந்தவர்களாயிருப்போமாக. நம்முடைய நோக்கம், பார்வை, பணம் சம்பாதிக்குதல் எல்லாம் கிறிஸ்து நடத்துகிறாரென்று பார்த்து அவருடைய ஆலோசனையைக்கொண்டு செய்வோமாக.

V. D. K.

## THE PADDY CROPS OF 1919-20

## 1919-20-ம் வருஷத்திய நெல் பயிர் விளைவு

(அறிவிப்பு குறிப்பிலிருந்து)

விவசாய டிபார்ட்மெண்டு டைரெக்டர் பின்வருமாறு எழுதியிருக்கிறார்:

1919-ம் வருஷம் நவம்பர் மாதம் கடைசிவரை சென்னை இராஜதானியில் நெல் பயிரிடப்பட்ட விஸ்தீரணம் 1,05,22,000 ஏக்கர் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. சென்ற வருஷத்தில் பயிரிடப்பட்ட விஸ்தீரணம் 88,47,000 ஏக்கர்தான். ஆக, இராஜதானி முழு

வதிலும் நெல் பயிரிடப்பட்ட விஸ்தீரணம் இந்த வருஷத்தில் நூற்றுக்கு 26 வீதம் அதிகப்பட்டிருக்கிறது. குண்டூரைத் தவிர மற்றெல்லா ஜில்லாக்களிலும் இந்த வருஷம் நெல் பயிரிடப்பட்ட விஸ்தீரணம் அதிகப்பட்டிருக்கிறது. இதற்கு முக்கிய காரணம் இந்த வருஷம் பெய்த நல்ல மழையே. அதோடு, முந்தின வருஷங்களில் பருத்தி, நிலக்கடலை பயிரிடப்பட்ட நிலங்களிலும், சிறு குளங்களின் ஆயக்கட்டு நஞ்சைகளிலும் இந்த வருஷம் குடிகள் நெல் பயிரிட்டிருக்கிறார்கள். இந்தவருஷ விளைவும் சாதாரண வருஷ விளைவைவிட ஜாஸ்தியாயிருக்கும் என்பது சந்தோஷப்படத்தக்க காரியமே. இதுவரை தெரிந்தமட்டில் சாதாரண வருஷத்தைவிட நூற்றுக்கு ஒன்பது வீதம் இந்த வருஷ விளைவு அதிகமாயிருக்கும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. விசாகபட்டணம், கோதாவரி, கிருஷ்ணா, குண்டூர் ஜில்லாக்களில் அறுவடைக்கு சற்று முந்தி பெருமழை பெய்ததினால் கொஞ்சம் நஷ்டமுண்டாயிற்று. இதனால் மொத்த விளைவு கொஞ்சம் குறையலாம். ஆனால் கஞ்சம், கர்நூல், நெல்லூர், கோயம்புத்தூர், திருச்சினாப்பள்ளி, தஞ்சாவூர் ஜில்லாக்களில் சாதாரண வருஷங்களைவிட மிகவும் நன்றாய் விளைந்திருக்கிறதாகத் தெரிகிறது. மலையாள தேசத்தில் இந்த வருஷத்தில் ஒரு காலத்திலுமில்லாதவிதமாய் நன்றாய் நெல் விளைந்திருக்கிறது.

## A MODEL LESSON FOR THE BIBLE WOMEN'S WORK

## எப்படி இந்துப் பெண்களுக்கு வேதோபதேசம் செய்வித்தல்

கிறிஸ்துமார்க்க சத்தியங்களை வீதிகளிலும் சந்தைகளிலும் மாத்திரமல்ல, அறைவீடுகளிலும் தனித்த இடங்களிலும் பணக்காரர் ஏழைகள், படிப்பாளிகள் அறிவீனர், ஆண்கள் பெண்கள் முதலிய பல வகுப்பாருக்கும் அறிவிப்பது இரட்சிக்கப்பட்ட ஒவ்வொரு ஆத்துமாவின் கடமை என்று பவுல் போதகாசிரியர் உரைத்தார். ரோமர் 1 : 14. இந்தியாவின் இருண்டபாகம் என்பது, பட்டணங்களிலும் கிராமங்களிலும் உள்ள அந்தப்புரம், கைம்மையிருப்பு, சிசுவிவாகம், அறிவீனம், தேவ அடியாள்கள் (சுவாமிகளுக்குத் தாலிகட்டல், அல்லது பொட்டுகட்டல்) என்று சொல்லப்படும் பூர்வீக இந்துமார்க்க வழிபாடுகளே. இவைகள், பீ. ஏ., பீ. எல். பட்டாதாரிகள் வீட்டிலும், ஜமீன்தார்கள் மாளிகைகளிலும்,



ஐசுவரியவான்கள் அறைவீடுகளிலும், வியாபாரிகளின் வேடிக்கை ஸ்தலங்களிலும், சாதாரண ஜனங்களிடையிலும், ஏழைகளின் குடிசைகளிலும் பூரண கேவலத்துடனிருப்பது நாம் கண்ணாரக் கண்ட காட்சிகளே. இவ்விருளை நீக்கும் ஞானவிளக்கில்லையா? தேவன் அருளிய சத்தியவேதமே அவ்விளக்கு. வேதாகம ஸ்திரீகள் என்ற சகோதரிகளே அச்சிறையினின்று மீட்கும் தேவ சேனையின் போர் வீரர்கள். இவர்களே இப்பெரிய பணிவிடைக்குள் பிரவேசித்து நம் தேயத்து இந்த சகோதரிகளை கிறிஸ்துவின் ஒளியண்டை நடத்துகிறவர்கள். ஆப்பிரிக்கா கண்டத்து அடிமைகள் அடைக்கப்பட்டிருந்த அரும் சிறையை மீட்ட தீரனாகிய டாக்டர் லிவிங்ஸ்டோன் என்பவருக்கு ஈடாகமாட்டார்களோ? அருமை சகோதரிகளே! இப்பெரிய வேலையில் பிரவேசித்திருக்கும் நீங்கள், சரியாய் செய்யத்தகுந்த ஆயத்தம் என்ற திறவுகோல்களைக்கொண்டு அடைக்கப்பட்ட அந்தப்புரங்களைத் திறவுங்கள். நமது இந்து சிநேகிதிகளுடன் சரியாய்ப் பழகி சிநேகித்து வருவதுடன், 'வேதோபதேசம் செய்வித்தல்' என்ற வேலையை இதமாயும், பதமாயும், நயமாயும், பயமாயும், ஜெபதபத்துடன், தகுந்த நேரத்தில், ஏற்ற இடத்தில், ஆளின் நிலைமையறிந்து சமயோசிதமாய், சம்பாஷணை ரூபமாகச் செய்யும் முறை பின்னால் சொல்லப்படும் உசிதவழியே. இதில் வேத உபதேசம் கிறிஸ்துவின் ஜீவியம், அவரின் அற்புதங்கள், உவமானங்கள், உபதேசங்கள், தகுந்த பாடல்கள் முதலியவற்றுடன் உலகவிவகாரங்களும் அடங்கியிருக்கின்றன. இது உபாத்திமாரின் பரீட்சைக்கு ஆதாரமாய் ஏற்படுத்தப்பட்ட போதனாமுறைப்படி கையாடப்பட்டு ஆயத்தம் செய்யப்பட்டிருக்கின்றது. இந்த முறையைக் கையாடுமுன், மனதில் வைத்துக்கொள்ளவேண்டிய 6 காரியங்களாவன:

1. பாடத்தையே சுட்டிக்காட்டல். படிப்பிக்கப்போகும் ஒவ்வொரு பாடத்திலும் எந்த சத்தியம் அடங்கியிருக்கிறது என்று நீயே ஆயத்தப்படுத்திக்கொள்.
2. மாணாக்கிகளின் ஆத்துமஸ்திதியைத் திட்டமாயறிந்து படிப்பித்தல்.
3. பாடத்துக்கும் கிறிஸ்துவுக்குமுள்ள சம்பந்தம் காட்டல்.
4. ஞாபக வசனங்களை ஏற்றவிதாய் உபயோகித்தல்.
5. மனோவாஞ்சை, அதாவது இன்னும் கொஞ்சம் படித்துக்கொடு என்று கேட்க ஆசையுண்டாகும்படி செய்தல்.
6. அறிவுறுத்தல், படிப்பிக்கிற சத்தியங்கள் கிறிஸ்துவண்டை நடத்தும்படியாக ஜெபத்துடன் சொல்லுதல்.

## திருஷ்டாந்தமாக மத். 5-ம் அதிகாரம், கிறிஸ்துவின் மலைப்பிரசங்கம். போதிக்கும் முறையிலுள்ள இரண்டு காரியங்கள்: (1) விஷயம், (2) முறை.

| விஷயம் | போதனு முறை |
|---|---|
| 1-ம் பாடம். மத். 5 : 1-10 வசனங்களை வாசித்தல். பேர் : நவ பாக்கியர்.<br>(1) துன்பமுடையவர்.<br>(2) சாந்தமுடையவர்.<br>(3) எளிமையுடையவர்.<br>(4) நீதியுடையவர்.<br>(5) இரக்கமுடையவர்.<br>(6) இருதய சுத்தமுடையவர்.<br>(7) சமாதானம் செய்பவர்.<br>(8) துன்பம் சகிப்பவர்.<br>(9) சிந்தையுடையவர். | சந்திக்கும் வீட்டையும், பக்கத்து வீட்டையும், பணக்காரர் வீட்டையும் முதலாவது விசாரித்து, அவர்களின் தற்கால அந்தஸ்து, கனம், பெருமை, திரவியம், செல்வாக்கு முதலியவற்றையும், ஏழைகளின் தரித்திரம், வறுமை, பசி, குறைவு முதலியவற்றையும் சம்பந்தப்படுத்தி, மேற்கண்ட 9 லட்சணங்களையுடையவர்களை, பணக்காரர் அல்லது பட்டாதார் இவர்களோடு கிறிஸ்து கூறிய நவபாக்கியரை ஒப்பிடு. ஐசுவரியவான், லாசரு சரித்திரம் சொல்லி, 'பொக்கிஷம் சேர்த்திடுவோம்' என்ற பாட்டைப் பாடி 12-ம் வச. முதல் பாகத்தை சொல்லிக் கொடுக்கவும். |
| 2-ம் பாடம். 13-26 வசனங்களை வாசித்து, அடங்கிய விஷயம்.<br>உப்பு, வெளிச்சம், விளக்குத் தண்டு, மலையின் மேல் கட்டப்பட்ட வீடு, நீதி, கொலை, கோபம், காணிக்கை, பலிபீடம், அல்லது கோவில் முதலியவற்றை சாதாரணமாய்ப் பேசவேண்டும்.<br><br>கொலை, அல்லது கோபம். | மறுநாள் சந்திப்பில், வெளிச்சம் கொடுக்கும் சூரியன், சந்திரன், நட்சத்திரங்களைப்பற்றிய சம்பாஷணையுடன், தேவைகையில் பிரயோஜனமானதும் உபயோகிக்கக்கூடியதுமான உப்பைப் பற்றி பேசி, அது கிடைக்குமிடம், செய்யப்படும் வகை, பிரயோஜனம்; அப்படியே பெண்கள், உப்பு, வெளிச்சம், இவைகளைப் போல் வீட்டாருக்கு பிரயோஜனமாயிருக்கவேண்டும். வீட்டில், ஊரில் சண்டையுண்டாவதற்குக் காரணம், கோபம். விசாரிப்பு: உன் வீட்டில் சண்டையுண்டா? இப்படிப்பட்ட நிலைமையுடன், கோவிலுக்குப் போகுதல், பூஜை செய்தல், விரதமிருக்குதல், கா |



## பிரசங்க தொடர்ச்சி மத். 6 : 1-23.

| விஷயம் | போதனு முறை |
|---|---|
| | ணிக்கை செலுத்தல் வீண் என்று காட்டவேண்டும். பிறவிக்குருடன் சரித்திரம் சொல்லி, ஒளி எப்படி வந்தது என்று காட்டவும், 'ஐயையா நான் பாவி' என்னும் பாட்டைப் படிக்கவும். வச. 24. |
| 3-ம் பாடம். 27-48 வாசிக்கவும்.<br>(1) விபசாரம், அல்லது அசுத்தம், கண், கை, கால்.<br>(2) பொய், ஆணை, சத்தியம்.<br>(3) தீமை செய்தல்.<br>(4) பகைவர், அல்லது சண்டைக்காரர். | நமது தேசத்துப் பெண்களில் தாசிகள், வேசிகள், தேவடியாள்கள் நிலைமையை விசாரித்து, அவர்களால் உண்டாகும் பாவங்கள், அதன் கேடு முதலியவற்றை விளக்கவேண்டும். சாதாரண பாவம், பொய், சத்தியம் செய்தல், சண்டையிடல் விளக்கவும். படித்துக் காட்டவும். |
| 4-ம் பாடம். 1-13 வசனங்கள்.<br>I. தர்மம். வ. 2.<br>(1) அந்தரங்க தர்மம்.<br>(2) வெளியரங்க தர்மம்.<br>இந்துமார்க்க உபதேசம்.<br>(1) கோதானம்—பசு.<br>(2) பூதானம்—பூமி.<br>(3) வஸ்திரதானம்.<br>(4) அன்னதானம். | எப்படி இந்துக்கள் செய்கிறார்கள், எங்கே, யாருக்கு, ஏன் என்று சம்பாஷித்து அறிந்துகொண்டு, இந்துக்கள் 4 வகையான தர்மங்களைப் பிராமணர்களுக்குத் தான் செய்கிறார்கள். சரியல்ல, ஏழைகளே இதற்கு உரியவர்கள். அந்தரங்கமாயும், பெருமையில்லாமலும், முழுமனதாயும் செய்ய கிறிஸ்து கற்பிக்கிறார். சுமைதாங்கிக்கல், சத்திரம், தண்ணீர்ப்பந்தல் பேர் பிரஸ்தாபத்திற்காகவல்ல, மற்றவர்கள் நன்மையை நாடுவதே தேவன் விரும்பும் காரியம். |
| II. ஜெபம்.<br>அந்தரங்க ஜெபம், வச 6.<br>அறைவீட்டு ஜெபம் ,, 6.<br>பிதாவுடன் ஜெபம் ,, 6.<br>மாதிரி ஜெபம் ,, 9.<br>மாய்மால ஜெபம் ,, 5.<br>பிரஸ்தாப ஜெபம் ,, 5.<br>வீணான ஜெபம் ,, 7. | இந்துக்களிடம் ஜெபமல்ல, பூஜை, மந்திரம் உண்டு என்பதைக் கேட்கவும். கிரியை அல்ல, சுவாமிகளுக்கு இடும் பொருளல்ல, ஜெபமே விசேஷம். கோயிலைச் சுற்றிவருதல், சீர்சேலையுடன் பிரதக்ஷணம் செய்தல், முச்சந்தியில் நமஸ்காரம் செய்தல் தப்பிதம். இருதயத்தில் தனித்து அறைவீட்டுக்குள் பிதாவை நோக்கி செய்ய |

பிரசங்க தொடர்ச்சி மத். 6 : 1–23.

| விஷயம் | போதனா முறை |
| --- | --- |
| | வேண்டும். மாதிரி ஜெபத்தை விளக்கி பிதாவுக்கடுத்ததும் தனக்கடுத்ததும் கேட்கவேண்டும். |
| 5-ம் பாடம்.<br>(1) உபவாசம் அல்லது விரதம்<br>எண்ணெய் பூசுதல்.<br>முகம் கழுவுதல்.<br>சந்தோஷமாயிருத்தல்.<br><br>தேவன் விரும்பும் உபவாசம் எது? ஏசா. $58^{5-7}$ பார். | விரதமிருக்கும் காலம், காரணம் என்னவென சம்பாஷித்து அறிந்துகொள்ளவும். பிள்ளைவரம் மங்கிலியவரம், சுகவரம் இவைகள் வீண். அதற்காக அல்ல தேவனிடமிருந்து பாவ மன்னிப்பு, சந்தோஷம் முதலியவற்றை பெற்றுக்கொள்ளும் நோக்கம். தியானம், ஜெபம், வேதவாசிப்பு, கிறிஸ்தவ உபவாசம் விளக்கவும். |
| (2) பொக்கிஷம் சேர்த்தல்.<br>பூலோக பொக்கிஷம்<br>பணம், நகை, காடு, வீடு, ஆடு, மாடு, பிள்ளைகள். | பெண்கள் புருஷன் வீட்டிலும், தாய்வீட்டிலும் சேர்க்கும் இவைகள் அழியும், திருட்டுப் போகும். அன்றன்று ஆகாரம், மீதம் ஏழைகளுக்கு. |
| • பரலோக பொக்கிஷம்<br>தர்மம் செய்தல், ஏழைகளை ஆதரித்தல், வீடு கட்டிக் கொடுத்தல், துன்பப்படுகிறவர்களுக்கு உதவிசெய்தல், பள்ளிக்கூடம் ஏற்படுத்தல். | பரலோகத்தில் சேர்க்கும் பொக்கிஷம்பிரயோஜனமானது கிறிஸ்து இப்படிப்பட்டவர்கள் மேல் அன்புவைக்கிறார். புத்தியில்லாத பணக்காரன் உவமை சொல்ல. 274-ம் கீர்த்தனை 'பொக்கிஷம் சேர்த்திடுவோம்' பாடவும். C. Dason. |

## NOTICE—அறிவிப்பு

சென்னை இராஜதானியில் நடக்கிறதும் பெண் கல்வி சம்பந்தமாய் பொதுஜன கல்வி விர்த்தி அதிகாரியானவர் (Director of Public Instruction) தமக்கு உதவி ஆலோசனைக்காரராய் இருக்கும்படி ஓர் உயர்தர மாதுவை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டதின்பேரில் இரண்டு வருஷத்திற்கு மாதம் 800 ரூபாய் சம்பளம் கொடுத்து ஓர் பெண் கல்வி விர்த்தி உப அதிகாரியை (Deputy Directress of Female Education) நியமிக்க ஏற்பட்டிருக்கிறது. இந்த உத்தியோகத்திற்கு பள்ளிக்கூடங்களைப் பரிசோதித்து வந்த Chief Inspectress ஆகிய சங்கை டிரைஸ்டேல் அம்மாளை (Mrs. Drysdale) ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

Publicity Bureau,

C. L. S. PRESS, MADRAS.

# மாதர் போதினி

No. 267 ஏப்பிரல் 1920 No. 4

## THE SURRENDERED LIFE

## தத்தஞ்செய்யப்பட்ட ஜீவியம்

ஓர் விசுவாசியின் சரீரம் பரிசுத்தாவியின் ஆலயம். மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடப்பதே ஓர் விசுவாசிக்குண்டாகும் வல்லமைக்கும், மெய்ச்சமாதானத்துக்கும், பாக்கியத்துக்குங் காரணம். ஆவியின்படி நடக்கவேண்டுமானால் முன் தானே அடக்கி நடத்திவந்த தன்னை முழுவதுமாய்த் தேவனுக்குத் தத்தஞ்செய்வதவசியம். கலா. $5^{6}$, ரோ. $8^{13}$, $^{14}$, $8^{2}$; கலா. $5^{18}$; 2 கொரி. $3^{18}$; ரோ. $6^{13}$, 12.

பரிசுத்தவான்களைக் கண்டும் அவர்கள் ஜீவியத்தை வாசித்துங் கேட்டும் அதிசயிக்கிறாயோ? அவர்களும் உன்னைப்போல் பாடுள்ள மனுஷர்தான். அவர்கள் பரிசுத்தவான்களானதற்குக் காரணம் என்ன? தங்களை முழுவதுமாய் ஆண்டவருக்குத் தத்தஞ்செய்ததே. நீயும் உன்னைப் பூரணமாய்த் தத்தஞ்செய்தால் உனக்கும் இந்த ஆசீர்வாதங் கிடைக்கும். பூரணதத்தம் என்று சொல்லும்போது எதையும் பாக்கிவைக்கக்கூடாதென்பது பொருள். உன் சரீரத்தையும் மனத்தையும், ஆத்துமா ஆவியையும் உனக்குள்ள பொருள், கல்வி, மக்கள், மனிதர் யாவரையும், யாவற்றையும் அவருக்கென்று தத்தஞ்செய்துவிடவேண்டும். வாயினால் சொல்வதல்ல, மனப்பூர்வமாய் இருதயத்தின் ஆழத்திலிருந்து உண்மையோடே ஒப்புக்கொடுக்கவேண்டும். அநேகருக்கு இது கடினமாயிருக்கும். தங்கள் ஆஸ்தியை தங்கள் இஷ்டப்படி செலவழிக்க விரும்புவோருக்கு இது கூடாத காரியம். உன் ஆஸ்தியை செலவிடும்போது ஒவ்வொரு காரியத்திலும் 'இதினால் என் ஆண்டவர் மகிமைப்படுவாரா? என் ஆண்டவர் கையில் பணமிருந்தால் நான் இப்போது செலவிடப்போகும் காரியத்தில் அதை உபயோகிப்பாரா?' என்று கேள். உண்மையான இரு

தயத்தில் அவ்விதஞ் செய்ய மனமற்றோர் தங்கள் பொருளைத் தத்தஞ் செய்வது எவ்விதம் கூடும்? 'என் பிள்ளையை இந்த உத்தியோகத்துக்கு அனுப்புவது என் ஆண்டவருக்கு மகிமையாகுமா? இயேசுவானவர் தமது பிள்ளையை இந்த வேலைக்கு அனுப்புவாரா? என் பிள்ளையை இன்னாருக்கு கலியாணஞ் செய்விப்பது என்ன நோக்கத்தோடு? இயேசுவானவர் தமது பிள்ளையை இன்னாருக்குக் கொடுப்பாரா?' எனக் கேள். அநேகர் கலியாணவிஷயத்தில் பணத்தையும், படிப்பையும், உத்தியோகத்தையும், குடும்ப அந்தஸ்தையும், சரீர அழகையுமே பிரதானமாக நினைப்பதுண்டு. ஆண்டவர் நாமமகிமையையே முதன்மையாகவும் எல்லாமாகவும் நினைப்பவர் சிலரே.

தங்கள் சரீரத்தை முழுவதுமாய் ஆண்டவருக்கு ஒப்புவிக்கச் சித்தமானவர் யார்? அவயவம் ஒவ்வொன்றையும் நீதியின் ஆயுதமாய் ஒப்புவிக்கவேண்டும். சரீரத்தின் ஒவ்வொரு அவயவமும் பரிசுத்தமாயிருக்கவேண்டும். நீ வாசிக்கிற புஸ்தகங்களும், பார்க்கிற காட்சிகளும் படங்களும் ஆண்டவர் பார்க்க விரும்புவாரா? நீ எப்படிப்பட்ட பார்வையோடு உன்னைப் பகைப்போரையும் வெறுப்போரையும் பார்க்கிறாய்? பரிசுத்தமான பார்வையா? அன்பும் தாழ்மையும் சாந்தமுமான பார்வை உனக்குண்டா? உன் சரீர அவயவங்கள் உன் ஆண்டவர் தாம் தொட விரும்பாத வஸ்துக்களையாவது ஆட்களையாவது தொடுகிறதுண்டா? அசுசிக்கும் பாவத்துக்கும் காரணமான வஸ்துக்களையாவது ஆட்களையாவது உன் விரலாலும் தொடாதே. தாழ்ந்தவரையும் எளியோரையும் உதவிக்காகக் காத்திருப்போரையும் தேடித் தொட்டு உதவிசெய். இயேசு இரட்சகர் யாரைத் தொட விரும்புவாரோ அவர்களைத் தொடு; எதைக் கையிலெடுக்க விரும்புவாரோ அதைக் கையாலெடு. இவ்விதமாய் உன் கைகளை ஒப்புவிக்கப் பிரியமா? நீ எந்தவிடத்துக்கும் போகுமுன் இயேசு இரட்சகர் அங்கு போக விரும்புவாரா என்று கேட்டு அவர், விரும்பாதவிடம் என்பதை யறிந்த மாத்திரத்தில் அங்கு போகாதொழிய உனக்கு இஷ்டமா? இவ்விதமாய் ஜீவிக்க உன் கால்களை ஒப்புவிப்பாயா? இயேசுவானவர் பேசாத அல்லது பேசவிரும்பாத எந்த வார்த்தையைப் பேச உனக்கு விருப்பமுண்டாகினும் அதைப் பேசாதுவிட உன் வாயை ஒப்புக்கொடுப்பாயா? இப்படிச் செய்தால் உன் சொந்த வீண் உல்லாசப் பேச்சுகள் புறணிமொழிகளை விடவேண்டியதிருக்கும். இவ்விதமாய் உன் வாயை ஒப்புக்கொடுக்க உனக்கு இஷ்டமா? இவ்விதம் ஒப்புக்கொடுக்க அநேக காரியங்களை வெறுப்பதவசியமாகும். இதெல்லாம் செய்வது உனக்குக் கூடுமா? ஆயத்தமாயிருக்கிறாயா?



சில காரியங்கள் மாத்திரம் இங்கு காட்டப்பட்டிருக்கின்றன. இதிலிருந்து நீயே யோசித்துக்கொள்ளக்கூடிய அநேக காரியங்களுண்டு. பூரணமாய் ஒப்புவித்தால் மாத்திரம் பூரண பரிசுத்த ஜீவியங் கிடைக்கும். பூரண தத்தமே பரிசுத்த ஜீவியத்தின் இரகசியம். பூரண ஒப்புக்கொடுத்தல் அதாவது பூரணதத்தம் இல்லாவிட்டால் பரிசுத்த ஜீவிய நாட்டம் எவ்வளவிருந்தபோதிலும் அநேக தவறுதல்களிருக்கும்; ஜீவியத்தில் நிலையான சந்தோஷமிராது.

நீ உன்னைப் பூரணமாய்த் தத்தஞ்செய்ய ஆயத்தமாயிருக்கிறாயா? உடனே செய். பின்னுண்டாகும் வல்லமையான பரிசுத்த ஜீவியத்தையும் மாறாச் சந்தோஷத்தையுமடைவாய்.

## SALVATION

## இரக்ஷண்யம்

இராகம், சயிந்தவி. ஆதிதாளம்.

### பல்லவி

பாவ மாடருக்காக—ஏசு
தாரணிமீதி லவதரித்தார்.

1. பஞ்சகண்டங்கள் பாவந்தீர்த்தார்—மண்
பரமனேசு பரிந்துவந்தார்
நெஞ்சமே நீ இதையுணர்ந்து—நிமலன்
சரணமடைந்து கொள்வாய். பாவ

2. ஈந்தியா சென்னைமா நகரோ—விண்
ஈசனேசு நேசம்பாரீரோ
இப்போதே நல்தருணமென்று—இசைந்து
ஏசுவைப் பிடித்துக்கொள்வீர்.

3. இருண்ட இருளை யகற்றிப்போக்க—இறைவன்
பரம்விட் டிறங்கிக்காக்க
மரணத்தை யுடுருவிச்சென்று—கடி
கூரையொடித்துத் திரும்பினார்.

4. ஐங்காயங்கள் அங்கங்கொண்டு—அனைவரையும்
ஈடேற்றும் பொருட்டு
இருகரங்களை விரித்துக்காட்டி
வாருமென்றார் வேகம்செல்வீர்.

5. பாவத்தைப் பரிகரிக்கும் பலியாய்—பாவ
சாபக்கேட்டைக் குலைக்கும் குருவாய்
சாத்தான் சிரசைச் சிதைத்துக்கொன்று
சாங்கமாக மேகஞ்சென்றார்.

6. வானமும் பூமியும் ஒன்றாய்ச்சேர்ந்திட—குறை
வானிலைமை யகற்றித்தகர்த்திடத் தானாய்
வானம்விட் டிறங்கித்தோன்றின் தற்பரன்
எசுபதம் பணிவீர்.

7. பரஞ்சோதி இகம்சென்றார்—பாண்பாய்
மானிடர் இடர்தவிக்க
பரிவாக வேதநாயகன்
பகர்ந்துரைத்தான் ஜெகத்தவர்க்கு.

V. D. K.

## THE SECOND COMING OF OUR LORD

## நமதாண்டவரின் இரண்டாம் வருகை

இராகம், சாமா. ரூபகதாளம்.

பல்லவி

காலத்தைக்கண்டு குணப்படுவீர்—கடைசிக்
காலத்தைக்கண்டு குணப்படுவீர்.

அனுபல்லவி

மேலானசத்தியத்தை யுணர்வீர்—அதில்
விளம்பினதை நீரறிவீர்.

1. யுத்தங்கள்உலகி லுண்டாகும்—பல
குழப்பங்கள் மனுஷரைக் குலைக்கும்
எத்தனையாம்பல கஷ்டங்கள் லபிக்கும்—அத்தனையும்
மறுநெஞ்சத்தை யுலைக்கும். காலத்.

2. பஞ்சங்கள்பலமா யுண்டாகும்—கெடு
வஞ்சகங்கள்மனதைக் கலைக்கும்
நரோகரெல்லாம் பேதலிக்கும்—அந்த
நாட்களின்கொடுமை மனுவைவதைக்கும்.

3. சூரியன்அந்த காரமாகும்—வான
சுடர்களெலாம் மறைவாகும்
விண்ணில்ஏசுவின் அடையாளம்காணும்—இம்
மண்ணிலுள்ளவர்கட்குத் தோணும்.



4. வானங்கள்மடி மடப்பாகும்—வல்ல
சத்துவங்கள் நிர்த்தூளியாகும்
நட்சத்திரங்களெல்லாம் ஒழியும்—மறை
வானகாரியமெலாம் வெளியாகும்.

5. பூமிநடுநடுங்கித் திகைக்கும்—கடும்
பூதியங்கள்வெந்துருகிப் பதைக்கும்
பொல்லாரின்துர்மனது வதைக்கும்—ஒரு
க்ஷணப்பொழுதிலெலாம் போயொழிக்கும்.

6. காலத்தைக்கடத்தி வைக்காதே—கொடும்
பாவத்தைமேவிப் பிடிக்காதேநல்ல
வேளைவருமென நோக்காதே—இக்
காயமிதொன்றும் நிலைக்காதே.

7. சுவிசேஷங்க ளதிசத்யம்—அது
சமூலமும்விசுவாச சத்யம்அதைப்
பிடித்துக்கொண்டால் சம்பாத்யம்
பின்வருங்காலத்தில் நேருமாசாத்யம்.

8. சக்ரவர்த்திஏசுக் கிறிஸ்தாவார்—பூச்
சக்கரத்தைத்தாங்கி அரசாள்வார்
நித்தமும்நித்தமுமாக வாழ்வார்—பரி
சுத்தமும்சுத்தமுமாகச் சூழ்வார்.

9. பாவத்தைச்சங்காரம் செய்வார்—பதி
பிசாசையும்பங்கமாய் வதைப்பார்
என்றைக்கும்ராஜா வாயிருப்பார்—தம்
பக்தரைப்பரகதி சேர்ப்பார்.

10. இன்றைக்கே குணப்படுவீரோ—இதை
இழந்துவிட்டால் தவிப்பீரோ
ஜாதிகளான பலபேரோ—இப்
பிரசங்கத்தையே கேட்பீரோ.

11. வேதநாயகன்பாட்டுக் கிசைவீர்—பெரும்
யேசுபரனையே பணிவீர்
மேலோகபதவியே பெறுவீர்—இப்
பூலோகமீதினில் வாழ்வீர்.

V. D. K.

## WHY ARE THE PRICES STILL HIGH?

## விலைவாசிகள் இன்னம் தூக்காய் இருப்பதேன்?

குறிப்பு.—இந்தத் துண்டு பத்திரிகை இன்னும் தேவையாயிருந்தால் சென்னை, விக்டோரியா கட்டடத்திலிருக்கும் பப்ளிஸிடி பீரோவுக்கு எழுதிக்கொள்ளவும்.

ஜர்மானியரோடு யுத்தம் முடிந்து இப்பொழுது ஒரு வருஷத்திற்கு மேலாகிறது. இந்த வருஷத்திய விளைவும் நன்றாயிருக்கிறது. ஆயினும், சாப்பாட்டுத் தானியங்களுடைய விலையும் ஸரி, இதர சாமான்களுடைய விலையும் ஸரி, குறைந்தபாடில்லை. ஏன்? இதற்கு முக்கியகாரணம் சண்டையினால் உண்டான வீண் செலவும், நஷ்டமுமே. சண்டை முடிந்துவிட்டபோதிலும் இந்த அழிவையெல்லாம் ஈடுசெய்ய இன்னும் இரண்டு மூன்று வருஷங்களுக்குள்ளாக முடியாது. வாஸ்தவத்தில், இவ்வழிவு நஷ்டங்களினால் பூலோகமே ஏழையாய்விட்டது; இதுவே விலைவாசிகள் தூக்காயிருப்பதற்குக் காரணம்.

2. உதாரணமாக, நீடித்து வழக்காடி, வக்கீல்களுக்கும் சாக்ஷிகளுக்கும் ஏராளமாகப் பணத்தைச் செலவழித்த இரண்டு குடியானவர்களை எடுத்துக்கொள்வோம். வழக்கு முடிந்தபிறகு கூட, அவர்கள் இருவரும் வியாஜ்ஜியத்திற்குமுன் இருந்ததைவிட ஸவுகரியக் குறைவுபட்டு, தகுந்தபடி பணத்தைச் சேகரம்செய்து முன்போலாக அநேக வருஷங்கள் கஷ்டப்பட்டு உழைக்கவேண்டியதாய் விடுகிறது.

3. ஐந்துவருஷ காலமாக இப்பூலோகத்திலுள்ள பெரும்பாலும் எல்லா தேசத்தவர்களும் சண்டைபோட்டுக்கொண்டிருந்தார்கள். சென்ற வருஷத்தில் தான் அது ஒரு முடிவுக்கு வந்தது. இப்பொழுது, இச்சண்டையில் தோல்வியடைந்த ஜர்மெனியானது அடியோடு நாசமாய்ப்போய்விட்டதாய்த் தோன்றுகிறது. அதோடு ஜயமடைந்த தேசத்தார்களும், தாங்கள் முன்னிருந்ததைக் காட்டிலும், மிகவும் ஏழைகளாய் விட்டார்கள்.

4. குடியானவர்கள் ஏழையாய்ப் போகும்பொழுது, எண்ணை, துணி முதலிய முக்கியமான சாமான்கள் வாங்கப் பணம் தட்டிப்போவதிலிருந்து தங்கள் ஏழ்மையைத் தெரிந்துகொள்ளுகிறார்கள். இம்மாதிரியே இப்பொழுது பூலோகம் முழுமையுமே வறுமை நிலையை யடைந்திருக்கிறதின் உண்மை, நமக்கு, கையில் முன்னிருந்தபடி பணமிருந்தபோதிலும் அதைக்கொண்டு அதற்கு முன்



கிடைத்த அளவு எண்ணை, துணி, அரிசி முதலிய பண்டங்கள் கிடைக்காததிலிருந்து விளங்குகிறது.

5. ஆகையால் விலையேற்றத்திற்குக் காரணம் பூலோகத்தின் வறுமையே. பூலோகத்துக்கு வறுமை யென்றால் என்ன? முன்னைவிட பணம் அல்லது தங்கம் அல்லது வெள்ளி அல்லது நோட்டுகள் உலகத்தில் குறைந்துவிட்டனவென்று தாத்பரியமல்ல. ஏனெனில், உலகத்தின் செல்வம் இவைகளைப் பொருத்தில்லை. இதற்கு திருஷ்டாந்தமாக கடலின் நடுவிலுள்ள ஒரு தீவில், கடலை கடப்பதற்கு படகில்லாமல் பத்து மனிதர்கள் இருப்பதாகவும், பிராணனைக் காப்பாற்றமட்டும் போதுமான அளவே ஆகாரத்தோடு கட்டத்துணியும் தங்க வீடும் இல்லாமல், ஆனால் கையில் லக்ஷம் ரூபாய் ஆஸ்தியோடிருப்பதாக வைத்துக்கொள்வோம். அப்பொழுது அவர்களிடத்தில் பணமிருந்தாலும் அவர்கள் ஏழைகள்தான்; ஏனெனில் மனிதர்களை, செல்வமுடையவர்களாகச் செய்வது, தங்கமல்ல, வெள்ளியல்ல, நோட்டுகளல்ல. ஆனால் தங்கம், வெள்ளி, நோட்டுகள் உடையவர்களைச் செல்வவான்கள் என்று நாம் ஸகஜமாய் சொல்லுவதற்குக் காரணம், அவர்களுக்கு அவைகளைக்கொண்டு அவசியமான பண்டங்களை வாங்கமுடியுமென்பதே. கையிலிருக்கும் தங்கம் வெள்ளியைக் கொண்டு எப்பொழுது போதுமான, ஊண், உடை வாங்க முடியவில்லையோ, அப்பொழுதே அவர்கள் செல்வர்களாயில்லாமல் போகிறார்கள். அப்பொழுது அந்தத் தங்கமும், வெள்ளியும் நகைகள் பண்ண உதவும் என்பது உண்மைதான். ஆனால் நமக்கு வயிற்றுக்கு ஆகாரமும், கட்டத் துணியும் கிடைக்காமலிருக்கும்பொழுது, நகைகளினால் பிரயோசனம் என்ன?

6. ஆகையினால் உலகம் ஏழையாய்விட்டதென்றால் உலகில் பணம் குறைந்துவிட்டதென்று தாத்பரியப்படக்கூடாது. உண்மையில் முன்னைக்காட்டிலும் இப்பொழுது பணம் அதிகமாயிருக்கிறது. சண்டைசெய்த அநேக தேசத்தார்கள், தங்களுக்கு அவசியமாய் வேண்டிய துப்பாக்கிகளையும், பீரங்கிகளையும் வாங்க ஏராளமாய் நோட்டுகளை வெளியிட்டார்கள். போர்வீரர்கள் சண்டைபோடுகையில் தங்கத்தையும் வெள்ளியையும் அழித்துவிடவில்லை; நோட்டுகளைக் கொளுத்திவிடவில்லை. ஆகையினால் சண்டைக்கு முன்னிருந்த தங்கமும், வெள்ளியும், இப்பொழுதும் உண்டு; நோட்டுகளோ முன் இருந்ததைவிட, அபாரமாயதிகப்பட்டிருக்கின்றன.

7. உலகமே ஏழையாயிற்று என்று சொல்வதின் நோக்கம் என்னவென்றால், இப்பொழுது நமக்குவேண்டிய பண்டங்கள் உலகத்தில் முன்போலில்லாது குறைவுபட்டிருக்கின்றன வென்பதே.

சண்டையில்லாத காலங்களில், ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலுமுள்ள ஜனங்களில் பெரும்பாலரும், வாலிபர்களும் ஸரி, கிழவர்களும் ஸரி வேண்டிய பண்டங்களை உற்பத்திசெய்வதில் அமர்ந்துவருகிறார்கள். அவர்களில் சிலர் சாப்பாட்டுக்குவேண்டிய தானியங்களை உற்பத்திசெய்கிறார்கள். இதர ஜனங்கள், கலப்பைகள், வண்டிகள், துணிகள், தையல் இயந்திரங்கள் முதலிய ஸாமான்களை செய்கிறார்கள். ஆனால் யுத்தம் நடந்தபோது வாலிபர்கள், சண்டை செய்யவும், வயதானவர்கள், துப்பாக்கி, பீரங்கி குண்டுகள், வெடிமருந்து முதலியவைகளை செய்யவும் போய்விட்டார்கள். ஆகையால் அமைதியுடனிருக்கும் காலத்தில் இருப்பதுபோல இவர்களுக்கு நிலத்தை சாகுபடி செய்யவும் இதர முக்கியமான பண்டங்களைச் செய்யவும் ஒழியவில்லை. அதோடு சைனியங்கள் அநேக இடங்களில் ரயில்பாதைகளையும், ரயில் இன்ஜின்களையும், ரயில் வண்டிகளையும் அழித்து இவைகளும் இவைகளைப்போன்ற மற்றும் இதர முக்கியமான பண்டங்களும் செய்யப்படும் தொழில் சாலைகளையும் பாழாக்கின. சண்டை முடிந்தும்கூட இப்பொழுது ருஷியாதேசத்தில், ஜனங்கள் தங்களுக்கும் பிறருக்கும் உபயோகப்படக்கூடிய கோதுமையை சாகுபடி செய்யாமல் ஒருவரோடு ஒருவர் அடித்துக்கொண்டு, ஊர்களில் நெருப்புவைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

8. ஆகவே இப்பொழுது பூமியில், பிரயோசனமான பண்டங்கள் குறைந்து, வெள்ளி தங்க நாணயங்களும் நோட்டுகளும் பெருத்துவிட்டன. ஆகையினால் ரூபாய்க்கும் நோட்டுக்கும், முன்னிருந்த மதிப்பு குறைந்து அவைகளை அதிகமாய் கொடுத்து பண்டங்கள் வாங்கவேண்டியிருக்கிறது. ஏற்கனவே சொன்ன திருஷ்டாந்தத்தில் கண்ட ஒரு தீவிலகப்பட்டுக்கொண்ட மனிதர்களுக்கு லக்ஷம் ரூபாய் மட்டுமிருந்து ஆகாரம் இல்லாவிட்டால், ஒருவேளை யாகாரத்துக்கு லக்ஷம் ரூபாய்களையும், கொடுக்கமாட்டார்களா?

9. ஆனால் சிலர் கேழ்க்கலாம்:—'ஐரோப்பாவில் விலையேற்றத்திற்கு இது தக்க காரணமென்பதில் சந்தேகமில்லை. அங்கே மேற்சொன்ன மாதிரிதான் யுத்தம் உண்டு, பண்டங்கள் அழிந்தன; தொழிற்சாலைகள் நாசமாயின; ஜனங்கள் சாகுபடி செய்வதை விட்டுவிட்டு சண்டைக்குப் போனார்கள்; இராஜாங்கத்தார்களும் யுத்த தளவாடங்கள் வாங்க நோட்டுகளையடித்தார்கள். ஆகையால் ஐரோப்பாவில் விலைவாசிகள் ஏறியிருப்பதின் காரணம் நாம் அறிவோம். ஆனால் இந்தியாவில் யாதொரு சண்டையுமில்லை, பண்டங்களும் அழிக்கப்படவில்லை, குடியானவர்களும் எப்போதும்போல நிலங்களை சாகுபடி செய்துகொண்டிருந்தார்கள். போன



வருஷம் விளைவில்லாததால் அரிசி விலை ஏறியதும் சரி. ஆனால் இந்த வருஷம்தான் விளைவு நன்றாயிருக்கிறதே. ஏன் சாப்பாட்டுத் தானிய முதலான, இந்தியாவிலேயே விளையும் அல்லது செய்யப்படும் பண்டங்களினுடைய விலை ஏத்தமாயே இருக்கவேண்டும்?

10. இதற்கு ஒரு காரணம் இந்த நாட்டில் முன்னிருந்ததைக் காட்டிலும், அதிக பணமிருப்பதேயாகும். இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் சணல், மணிலாக்கொட்டை, பஞ்சு, முதலியவைகளுக்கு அதிக விலை கொடுத்து ஐரோப்பிய வியாபாரிகள் வாங்கியிருக்கிறார்கள். இந்தப் பண்டங்களுக்கு பதிலாக அவர்கள் எப்பொழுதும் அனுப்பிவரும் பருத்தி வஸ்திரங்களையும் இதர சாமான்களையும் முன் அனுப்பிக்கொண்டிருந்த அளவு அனுப்பமுடியவில்லை. ஆகையினால் அவர்கள் வாங்கிய சணல், மணிலாக்கொட்டை, பஞ்சு இவைகளுக்கு பதிலாக, பணமாகக் கொடுக்கவேண்டியதாயிற்று இந்த காரணத்தினால் இந்தியாவிற்கு, ஏராளமாய் வெள்ளியனுப்பப்பட்டு ரூபாய் அடிக்கப்பட்டது. பணம் அதிகமாய்விட்டபடியால், பண்டங்களின் விலைவாசிகளும் இயற்கையாகவே அதிகமாயின. மேலும், இதர தேசங்களில் விலைவாசிகள் மிகவும் அதிகமாயிருந்தால் இந்தியாவிலிருக்கும் வியாபாரிகள், இந்தியாவிலிருந்து பண்டங்களை அந்த தேசங்களுக்கு, ஏற்றுமதிசெய்து லாபம் சம்பாதிக்க முயலுவார்கள். ஆகையினால், ஏற்றுமதிசெய்வதைத் தடுத்தாலன்றி, வெளிவிலையும், உள்நாட்டு விலையும் ஒன்றாகும் வரையில், வியாபாரிகள் விலை கொடுத்து வாங்கி பண்டங்களை யேற்றிக்கொண்டுதான் இருப்பார்கள். இந்திய சாமான்கள், ஏற்றுமதியைத் தடுத்தபோதிலும்கூட, பின் ஒரு காலத்தில், ஏற்றுமதிசெய்ய சர்க்கார் உத்தரவு கொடுக்கக்கூடும். அப்பொழுது நல்ல லாபமடையலாம் என்ற ஒரு ஆசையினால் தூண்டப்பட்டு, அநேக வியாபாரிகள் விலைகொடுத்துப் பண்டங்களை வாங்கி, கட்டிவைத்துக்கொண்டுதான் இருப்பார்கள்.

11. இந்த காரணங்களைப் பற்றியே, இந்த வருஷத்தறுவடையில், நல்ல மாசூல் தேறினபோதிலும், சாப்பாட்டு தானியங்கள் விலை மலிவது சந்தேகமாயிருக்கிறது.

12. பணத்திற்கு கூலிவேலைசெய்து பிழைப்பவர்களுக்கு, அவர்களுடைய கூலி அதிகமாகாமலிருந்தால், இந்த தூக்கான விலைவாசிகளால், அவர்கள் கஷ்டத்தை யடைவார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. இந்த விலைவாசிகள், குறைந்த சம்பளத்திற்கு வேலைசெய்யும் குமாஸ்தாக்களுக்கும், அவரைப்போன்ற இதரர்களுக்கும் அதிக கஷ்டத்தையுண்டுபண்ணுவதும் உண்மையே. இந்த கஷ்டத்தை மட்டுப்படுத்த இந்தியாவிலிருந்து, சாப்பாட்டு தானியங்களின்

ஏற்றுமதியை இந்திய இராஜாங்கத்தார் இந்த வருஷம் கட்டுப்பாடு செய்து கைவசம் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த நாட்டிற்கு போதுமான தானியங்கள் இங்கே யிருக்கவும், அயல்நாடுகளில் ஏறியிருப்பதுபோல இந்தியாவிலும் சாப்பாட்டு தானியங்களினுடைய விலை ஏறுமலிருக்கவும் தக்க ஏற்பாடுகளும் செய்யப்படும்.

13. போனவருஷம், ஸரியான விளைவில்லாதபடியால் இந்த தேசத்தில் போதுமான அளவு உணவுப்பொருள்களில்லை. ஆகவே குடியானவர்களில்கூட அநேகர் தங்களுடைய பயிர் சாவியாய் விட்டபடியினால் சாப்பாட்டுக்கு தானியங்கள் பணம் கொடுத்துவாங்க நேரிட்டு, மிகவும் கஷ்டப்பட்டார்கள். ஆனால் இந்த வருஷம் பயிர் நன்றாயிருக்கிறது. ஆகையினால் இப்பொழுதிருக்கும் விலையேற்றம் விவசாயிகளுக்கு நல்லதே. அவர்களுடைய தானியங்களுக்கு நல்ல விலை கிடைக்கும். அவர்களிடம் வேலைசெய்யும் கூலிகளுக்கு நல்ல கூலி கொடுக்கமுடியும். தங்களுடைய குறைந்த சம்பள வேலைக்காரர்களுக்கு, சம்பளத்தை எவ்வளவு உயர்த்தவேண்டுமென்பதைப்பற்றி ஆலோசனை சொல்ல ஒரு கமிடியை சர்க்கார் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அம்மாதிரியே விவசாயிகளும் தங்களுடைய கூலியாட்களுக்கு, கூலியை உயர்த்தவேண்டுவதைப்பற்றி ஆலோசிக்கவேண்டும். அவர்கள் இம்மாதிரி செய்தால் கூலிக்காரர்களுக்கு விலை யதிகமாயிருந்தாலும், உணவுபதார்த்தங்களை வாங்குவது ஸாத்தியமாயிருக்கும்.

14. போனவருஷத்தில் விளைவில்லாததால் இந்த தேசத்தில் போதுமான உணவு பதார்த்தங்களில்லாமல் போயின; அதினால், விலைகொடுத்துவாங்க பணம் இருந்தபோதிலும், அரிசி கிடைக்காது போய்விடுமோ என்ற ஒரு பயமும் இருந்தது. இந்த வருஷம் நல்ல விளைவாதலால் அறுவடையானவுடன் உணவு பதார்த்தங்கள் இந்த தேசத்தில் நிரம்பியிருக்கும். அதோடு பர்மா தேசத்திலும் இப்பொழுது அறுவடையாய்க்கொண்டிருக்கிறது. ஆகையால் தேவையிருந்தால் இனி பர்மாவிலிருந்தும் அரிசியைக் கொண்டுவர முடியும்.

Publicity Bureau.

## (CHILDREN'S PAGE)
## TWO CHILDREN
## இரு பிள்ளைகள்

மகா வல்லமையும் சிறந்த லக்ஷணங்களுமுள்ள இராஜா ஒருவர் செங்கோல் செலுத்திய இராஜ்யமொன்றில், யாருமற்ற அநாத பிள்ளைகள் இருவர் வசித்துவந்தனர். தங்களுக்குச் சொந்தமானது



என்று சொல்லக் கூடியதான ஏதொன்றும் அப்பிள்ளைகளுக்கு இல்லை. இதைக்கண்ட இராஜா அப்பிள்ளைகளுக்கு ஆகாரம், வஸ்திரம் முதலியவைகளைக் கொடுத்து ஆதரித்து, எந்தெந்த விதமாய் அவர்களைச் சந்தோஷிப்பிக்கக்கூடுமோ, அவையெல்லாம் செய்துவந்தார். ஆனால் இப்பிள்ளைகள் தங்களுக்கு இவ்வளவு செய்துவந்த அந்த இராஜாவைச் சிநேகிக்கவேயில்லை; நேசிக்கவேண்டுமென்று பிரயத்தனப்படவுமில்லை. சீக்கிரத்தில் இந்தப் பிள்ளைகள் இந்த இராஜ்யத்தைவிட்டு இன்னொரு இராஜ்யத்திற்குப் போக எண்ணினார்கள். ஆனால் இவர்களுக்கு இராஜாவால் கொடுக்கப்பட்டிருந்த உடுப்புகளும் இன்னும் மற்ற வஸ்துக்களும் அந்த இராஜ்யத்தில் அவர்களுக்குப் பிரயோஜனப்படவேமாட்டா. ஆகையால் இராஜா அவர்களின் அறிவீனத்தைக் கண்டு அவர்களை எவ்விதத்திலும் காப்பாற்ற எண்ணங்கொண்டு, அவர்கள் வேறொரு இராஜ்யத்திற்குப் போய் சஞ்சலத்தை அநுபவிக்காதபடி பின்வரும் கடிதத்தை அவர்களுக்கு அனுப்பினார்:

'பிரிய பிள்ளைகளே! நீங்கள் என்னை நேசிக்காவிட்டாலும் நான் உங்களை நேசித்து, நான் உங்களுக்குச் செய்துவரும் நன்மைகளுக்கு எந்தவிதத்திலும் நீங்கள் பாத்திரவான்களாயிராவிடினும், நான் உங்களை நேசித்த நேசத்தாலேயே இந்த நன்மைகளையெல்லாம் உங்களுக்குச் செய்துவந்தேன். நீங்கள் இப்பொழுது போகக் கருதிய தேசத்திலே இதுவரையிலும் நீங்கள் உபயோகித்துவந்த பொருட்களைவிட அதிக விலையுயர்ந்ததும் அவசியமுமான வேறே பொருட்கள் தேவை. அப்பொருட்கள் அவ்வளவு விலையுள்ளவையாதலாலும், ஒருவனும் அவைகளை வாங்க முடியாதாதலாலும் என் அருமை மகன் மாத்திரமே அக்கிரயத்தைக் கொடுத்து அவ்விலையேறப்பெற்ற பொருட்களைப் பெற்றுக்கொண்டான். அப்படி வாங்கப்பட்ட பொருட்கள் எக்குறைவையும் நிறைவேற்றக் கூடியவை. நீங்கள் அவைகளை விலை கொடுத்து வாங்கக்கூடாத நிர்ப்பந்த நிலைமையிலிருக்கிறபடியாலும், கீழ்ப்படியாத நன்றிகெட்டவர்களாயிருந்து அவைகளைப் பெற அபாத்திரராயிருக்கிறபடியாலும், என் குமாரன் அவைகளை உங்களுக்கு விலையுமின்றி, கிரயமுமின்றி நான் கொடுக்க விரும்புகிறார். நீங்கள் இங்கே இருக்கையிலேயே அவைகளை அநுபவிக்கலாம். மேலும் இன்னொரு ஊருக்குப் போனாலும், நீங்கள் பரிபூரணமாய் அவைகளை அநுபவிக்கலாம்' என்பதே.

இச்சமாச்சாரத்தையும், இராஜாவினால் அனுப்பப்பட்டிருந்த ஈவுகளையும் கண்ட பிள்ளைகளில் ஒருவன், 'அடடா! இவைகள்தானே

நான் விரும்பின பொருட்கள். எனக்கு இவைகளெல்லாம் வேண்டுமே. என்றாலும், நான் அவைகளைப்பெற பாத்திரமான எதாவது செய்தாலாவது, அல்லது அவைகளை வாங்கக்கூடிய பணத்தை சம்பாதித்தாலாவது ஒழிய இராஜா அவைகளை எனக்குக் கொடுப்பாரென்று நான் நம்பவேமாட்டேன். ஆதலால் நான் இதை வாங்கக்கூடும்படியான பணம் சம்பாதிக்குமட்டும் வைத்துவைத்திருக்கும்படியே இராஜாவுக்கே திருப்பி அனுப்பிவிடுவேன். இந்த ஊரைவிட்டுப் போகுமுன் வேண்டிய பணம் சம்பாதித்துப்போடுவேனென்பதற்குச் சந்தேகம் சிறிதேனுமில்லை' என்று சொல்லி இராஜாவுக்கே ஈவுகளைத் திருப்பி அனுப்பிவிட்டான். வேண்டிய பணம் சம்பாதிக்குமுன், திடீரென ஒருநாள் வேறொரு தேசத்திற்கு அனுப்பப்பட்டான். அங்கே அப்பிள்ளைக்கு நேரிட்ட சஞ்சலத்திற்கும், வருத்தத்திற்கும் முடிவு உண்டோ!

இன்னொரு பிள்ளையோ இராஜா அனுப்பிய சமாச்சாரத்தையும், ஈவுகளையும் சந்தோஷமாய் வாங்கிக்கொண்டு சொன்னதாவது:

'இராஜாவும் அவர் குமாரனும் இனிது வாழ்க! நான் அதிக நன்றியுள்ளவனாயிருக்கிறேன். இராஜாவும் அவர் குமாரனும் என்மேல் கூர்ந்த அன்பினாலேயல்லாமல் வேறெதினாலும் இவைகளை எனக்கு அனுப்பவில்லை. நானும் அவர்களை நேசிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இராஜாவின் விருப்பம் என்னவென்றும் நான் அவருக்கு என்ன செய்ய விரும்புகிறார் என்றும் நான் கேட்டனுப்புவேன். இராஜா அனுப்பிய ஈவுகளுக்குத் தகுந்த விலையை நான் கொடுத்து மாளாது. என்றாலும் என் நன்றியறிதலைக் காட்ட நான் அவர் விரும்பியபடி செய்யப் பிரயாசப்படுவேன்' என்றான்.

இப்பிள்ளையின் விண்ணப்பத்தைக் கேட்ட அரசனும் மகனும், தங்களுடைய விருப்பங்களைத் தெரிவித்தும், அநேக ஆசீர்வாதங்களை வாக்குத்தத்தம் பண்ணியும் ஓர் பெரிய கடிதம் எழுதி அனுப்பினார்கள். அக்கடிதத்தை அப்பிள்ளை தினந்தினம் கொஞ்சங்கொஞ்சமாக வாசித்தான்.

பிரியமானவர்களே! இவ்விரண்டு பிள்ளைகளில் எந்த பிள்ளையை நீங்கள் ஒத்திருக்கிறீர்கள்? பரமபிதாவுக்குச் சொந்தமான ஊரில் நாமெல்லாம் வசிக்கிறோம். அவர் நமது இராஜா. நாம் ஏழைப் பிராணிகள். நாம் அனுபவிக்கிற ஒவ்வொரு நன்மையும் அவரிடமிருந்து வருகிறதே. நாம் எந்த நன்மைக்கும் பாத்திரவான்களல்ல. ஏனென்றால் நாம் அவரை நேசிக்கவேண்டிய விதமாக நேசித்து, கீழ்ப்படியவில்லை. நாம் எக்காலமும் இவ்வுலகில் வசிக்கப்போகிறதில்லை. மரித்து இன்னொரு ஊருக்குப் போவோம். அப்பொழுது



நமது தோழர், வீடுவாசல், தோட்டம் துறவு, அணிமணி, முதலியவையெல்லாம் விட்டுப் போகவேண்டியதே. கடவுள் நம்மை நேசித்து, நமது பாக்கியத்தையே விரும்பி, நமக்குப் பாவமன்னிப்பு, நித்திய ஜீவன் முதலான பற்பல பாக்கியங்களை அளிக்கிறார். நாம் இத்தனை பெரிய நன்மைகளுக்குப் பாத்திரராயிராவிடினும், அருமை இரட்சகராகிய கிறிஸ்து இயேசு தமது திரு இரத்தத்தினால் சம்பாதித்ததினாலேயே அவைகளை நமக்குக் கொடுக்கிறார். இப்பாக்கியங்களை நாம் பெற்றுக்கொண்டால் அவைகள் என்றும் நம்முடையவைகளே. முந்தி நம்மைச் சிநேகித்தவரை நாம் நேசித்து, அவருடைய கடிதமாகிய வேதவசனத்தை தினந்தோறும் வாசித்து, அதில் கற்பிக்கப்பட்டவைகளைக் கவனித்து, அதின்படி நடந்து, வாக்குத்தத்தங்களை நம்புவோமேயாகில், நமக்கு ஒன்றும் குறைவுபடாது என்பதற்கு ஐயமொன்றுமில்லை.

## SPARKS OF WIT

## யுக்தி விவேக சம்பவங்கள்

ஓர் மனுஷனுடைய வீட்டிலிருந்த ஆட்டுத்தொடையொன்றை ஓர் நாய் திருடிக்கொண்டு ஓடிவிட்டது. கொள்ளை கொடுத்த மனுஷன் வக்கீல் ஒருவரிடத்திலே போய், சங்கதியைத் தெரிவித்து, இதற்கு என்னசெய்யலாமென்று கேட்டபோது, அந்த நாயின் சொந்தக்காரரிடத்திலே அதன் கிரயத்தை வாங்கவேண்டுமென்று சொல்ல, அவன் அதற்கு, 'தங்களுடைய நாய்தான் அப்படிச் செய்தது' என்று சொன்னான். வக்கீல் அதன் கிரயமாகிய அரை ரூபாயைக் கொடுத்துவிட்டார். அவன் வீடுவந்து சேருமுன் வக்கீலிடமிருந்து ஒரு பில் வந்தது. நாய் திருடின விஷயத்தைப்பற்றி வக்கீலிடத்தில் ஆலோசனைகேட்டதற்காக 1 ரூபாய் 8 அணா கொடுக்கவேண்டுமென்று எழுதினார்.

வீதியில் நடந்துபோன ஒருவன் அவ்வழியே நடந்துபோன ஒரு வக்கீலிடம் ஓடி, 'ஐயா, இந்த ரூபாயைப் பாருங்கள்! இது செல்லுமா, செல்லாதாவென்று சொல்லுங்கள்' என்று கேட்க, அவர் அதைப் பார்த்து 'செல்லும் ரூபாய்தான்' என்று சொல்லி, அதைத் தம்முடைய பையில் போட்டுக்கொண்டு, 'உன் பையனை வீட்டிற்கு அனுப்பு; என்னைக் கேட்டதற்காக கால் ரூபாய் தள்ளிக்கொண்டு, முக்கால் ரூபாய் அனுப்புகிறேன்' என்றார்.

ஒரு சாஸ்திரியாருக்குப் பயித்தியக்காரனைப்போன்ற ஒரு பையன் இருந்தான். அவர் அவனை அழைத்துக்கொண்டுபோய் ஓர் உபாத்

தியாயரிடம் ஒப்புவித்து, 'உம்முடைய உத்தரவின்றி அவன் வெளியே போகாமலிருக்கப் பார்த்துக்கொள்ளும்' என்றார். சாஸ்திரியார் வெளியே போனபின், 'நான் வெளியே போகட்டுமா?' என்று பையன் கேட்டான். உபாத்தியாயர் 'இல்லை' என்றார். பையன் சிறிது நேரங்கழித்து மறுபடியும் கேட்க 'இல்லை' என்றார். இதைக்கேட்ட பையன் தொப்பியை எடுத்து மெதுவாகப் போகப்புறப்பட்டான். இதைக்கண்ட உபாத்தியாயர் அவனை நிறுத்தி, 'இல்லை என்றதின் அர்த்தம் உனக்குத் தெரியுமா?' என்று வினவ, பையன் 'இல்லை என்பது எதிர்மறைக்குறிப்பு. ஆனால் இரண்டு எதிர்மறை 'இல்லை, இல்லை' அடுத்துவரும்போது அது உறுதிக்கு அடையாளமல்லவா' என்று சொல்லவே உபாத்தியாயர் அவன் யுக்தியினிமித்தம் அவனை வெளியே அனுப்பினார்.

ஒருவன் தினந்தோறும் வழக்கமாக ஆறு ரொட்டிகளை விலைக்கு வாங்கிக்கொண்டு வருகையில், அதைக்கண்ட ஒரு சிநேகிதன், 'நீ ஆறு ரொட்டிகளையும் என்ன செய்வாய்?' என்று கேட்க, அவன் 'ஒரு ரொட்டியை எனக்கு வைத்துக்கொள்வேன், மற்றொன்றை எறிந்துவிடுவேன், இரண்டு ரொட்டியை வாங்கின கடனுக்குக் கொடுப்பேன், மற்ற இரண்டு ரொட்டிகளைக் கொடுத்துவைப்பேன்' என்றான். சிநேகிதன் 'கருத்து விளங்கவில்லை, தெளிவாகச் சொல், என்றதன்பேரில், இவன் 'எனக்கு வைத்துக்கொள்வேனென்ற ரொட்டி நான் சாப்பிடுவது, எறிந்துபோடுவேனென்றது என் மாமிக்குக் கொடுப்பது, கடனுக்குக் கொடுக்கும் இரண்டு ரொட்டிகள் என் தாய் தந்தையருக்குக் கொடுப்பது, கடன் கொடுத்து வைப்பேன் என்ற இரண்டு ரொட்டிகளும் என் குமாரருக்குக் கொடுப்பது' என்றான்.

Lydia Vedanayagam.

## THE GUIDING HAND

## உனது வழிகாட்டி யெது?

(முற்றொடர்பு)

ரூவி அனாதசாமி தனது ஜீவிய விருத்தாந்தத்தை அவர்கள் கேள்விப்படியே விஸ்தரிக்கத் தொடங்கினள். சேர் திக்செட்டீதி பதியின் மரணத்தின்பின் அவரது சொத்து முழுவதற்கும் நானே சுதந்தரவாளியாயிருப்பதாய்ச் சொன்னார். இவள் தன் யௌவன பருவத்தில் விசாரிப்பாரின்றித் தன் மனம்போன போக்காய் நடக்



தின். சுகஹீனப்பட்டபடியால் தானிருந்த இடத்தை விட்டு பாத் (Bath) என்ற விடத்திற்குச் சுகம்நோக்கிச் செல்வாளாயினள். அவ்விடத்திற் சிறிது தேற்றமடையுந் தருணம், ஒரு நாள் இவளைப் பார்த்து வந்த ஓர் சிநேக டாக்டர் இவளை நோக்கி: 'அம்மா! உமக்கின்னும் நோயைக் கொடுத்துக்கொண்டிருப்பது என்ன?' என்று ஓர் ஆச்சரியமான கேள்வியை வினவினார். அதற்கு அவள்: 'நோய் யாதுமில்லை, ஆனால் என்னை வருத்தப் படுத்துவது எனது ஆறுதலற்ற உள்ளமே' என்றனள். 'ஆம், நீர் சொல்வது சரி. நானும் உம்மைப்போலவே சிறிதுகாலம், ஓர் புஸ்தகத்திலிருந்து மருந்தைக் கண்டுபிடிக்கும்வரை, தீரா நோயுற்றிருந்தேன்' என்று டாக்டர் கூறினார்.

'ஓர் புஸ்தகமா உம்மைக் குணமாக்கிற்று! என் இளம்பிராய முதல் எத்தனை எத்தனையோ புஸ்தகங்களை வாசித்து முடித்துவிட்டேனே! அவற்றில் யாதாயினும் என்னைக் குணமாக்கவில்லையே' என்றாள். 'அப்படி யிருக்கலாம். ஆனால் என்னைக் குணமாக்கிய புஸ்தகமோ மிக அருமைவாய்ந்ததும், விஸ்தரிப்புடங்காததுமானது. அதனுள் எப்போதும் சந்தேகத்தைக் கண்டு களிப்பதேயன்றி அதை வாசிப்பதால் நான் ஓர்போதுஞ் சோர்வடைவதேயில்லை' என்று பகர்ந்தார். 'அப்படியானால், அப்புஸ்தகத்தின் பெயர் என்ன? அதை நான் காணக்கூடாதா? தயவுசெய்து அதை என் கையிற் கொடுப்பீரா?' என்று வெகு ஆவலுடன் டாக்டரிடம் கேட்டாள்.

'நீர் எனக்கு ஓர் வாக்களிப்பதன்பேரில் அதை உமக்குக் கொடுப்பேன். நீர் அதைக் கவனமாய் வாசிப்பதாயும், வாசித்த பகுதியை இரண்டாம் முறை வாசிப்பதாயும் வாக்களிக்கவேண்டும்' என்று டாக்டர் சொன்னவுடனே அவற்றிற்கு வாக்களிக்கப்பட்டது.

சிறிது நேரத்தில் டாக்டர் ஓர் அழகிய புதியேற்பாட்டுப் பிரதியை தன் அங்கியுறையுள் வைத்துக் கொணர்ந்தார். ஆவலாய் எதிர்நோக்கியிருந்த இப்பெண்ணின் கையிற் கொடுத்தவுடன், அவள் பரிகாசத்துடன் அவரைப் பார்த்து: 'இதுதானா! இதுதானா உமக்கு அருமைவாய்ந்தது!! இப்படியாக எத்தனையோ பிரதிகளை நானுமக்கு வாங்கிக்கொடுப்பேனே!!!' என்று அசட்டையாய்ச் சொன்னாள். ஆனாலும் டாக்டர் அவள் செய்துகொண்ட வாக்குத்தத்தத்தை நினைப்பூட்டி அதை அவள் வாசிக்கச் செய்தனர்.

ஆனால் அவள் அதை வாசிக்க வாசிக்க அவளிடமிருந்த மனவேதனை அதிகமாயிற்று. திரும்பவும் லண்டன் நகரத்திற்குப் போவதாற் சிறிது சுகம்பெறலாமெனக் கருதி அங்கு சென்றனள். அங்கே வசித்துவருகையில் ஓர் சனிக்கிழமை இரவு ஓர் சொற்பனங் கண்

டாள். தான் ஓர் ஆலயத்திலிருப்பதாயும் அங்கே போதகரொருவர்
குறிக்கப்பட்ட ஓர் வாக்கியத்தின் பேரில் பிரசங்கஞ்செய்யவுங்
கண்டு விழித்தாள். இது அவள் மனதிற் பதிந்திருந்தபடியால் கர்த்த
ருடைய நாளாகிய மறுநாட் காலை குறிக்கப்பட்ட அந்த ஆலயத்
தில் பிரசங்கங் கேட்பதற்காக இன்னோர் சிநேகிதியுடன் புறப்பட்ட
னம், லண்டனின் ஒரு கோணந் தொடங்கி மறுகோணம் வரைக்கும்
பிரயாணஞ்செய்து பல ஆலயங்களைக் கண்டும், முந்திய இரவிற்
கண்ட ஆலயம் தென்படாதிருந்தது. சாயந்திரம் 2-மணி வரையில்
ஓரிடத்திலிளைப்பாறிப் பின்புமதைத் தேடிப் புறப்பட்டுப்போகையில்
ஓர் கட்டிடத்திற்குள் ஜனங்கள் புகுவதைக் கண்டு, அது தேவாலயமா
யிருப்பதாய் அறிந்தபடியால் அதனுட் சென்றனர். இந்த ஆலயந்தான்
அவள் மனதிற்குத் தான் கண்ட சொற்பனத்திற்குச் சமமாயிருந்தது.
ஆசனபீடமும், பிரசங்கமேடையும் அங்குள்ள மற்றுங் காட்சிகளும்
இதற்கு ஒப்பாயிருந்தன. சிறிதுநேரத்தில் அங்கு பிரவேசித்த கனம்
Shower பாதிரியாரைக் கண்டவுடன் இவள் மனதில் ஆனந்தமுண்
டாகி 'இவரே அந்த வாக்கியத்தின்பேரில் பிரசங்கஞ் செய்தவர்'
என்று சொல்லிக்கொண்டு உட்கார்ந்தாள். பாதிரியார் 115-ம் சங்.
9-ம் வசனத்தின் பேரில் பிரசங்கித்தார். இவ்வசனமே முந்திய இரா
வில் அறிவிக்கப்பட்டது. பிரசங்கத்தின் பின் ஜெபம் ஆரம்பித்தது.
இவளுடைய இருதயமுந் திறவுண்டது. ஜெபத்தின் ஒவ்வொரு
வார்த்தையும் அவள் மனதுட் சென்றது. தனது கடந்தகால கிரியை
களை நினைத்துத் தேம்பினாள். தனது இருதயத்தைத் திறந்தாள்.
'மகளே! உன் இருதயத்தை தா' என்னும் ஆண்டவரின் தொனி
யைக் கேட்டாள். முற்றாய்த் தன்னை இயேசுரட்சகருக்கு ஒப்பித்தாள்.

ஆண்டவர் அவளிடத்தில் பேசியவுடனே அவர் இரட்சகருக்
குச் செவிகொடுத்தாள். பாவம் மன்னிக்கப்பெற்றாள். மன்னிப்
பின் சந்தோஷத்தை யடைந்தாள். நம்மில் எத்தனையோ பெயர்க
ளுடைய இருதய கபாடத்தை அவர் தட்டியும் நாமோ இன்னும்
அவர் சத்தத்தை அசட்டைசெய்கிறவர்களாய் இருக்கிறோம். சிலர்
தம் இருதயத்தை அவருக்குத் திறந்தும் பின்வாங்கினோராய், விறைப்
புள்ளவர்களாய்த் தூங்குகிறார்கள். இன்னும் சிலர் மன்னிப்பின்
சந்தோஷம் இல்லாதவர்களாய்த் திகைக்கிறார்கள்.

நம் இருதயம் ஆண்டவருக்கு உண்மையாகவே திறக்கப்பெற்ற
தாயின் பாவமன்னிப்பைப் பெற்றோமோ? அப்படியாயின் பரி
சுத்த ஜீவியஞ் செய்யத்தக்கதாக பாவமன்னிப்பின் சந்தோஷம் என்
மனதில் நிறைந்திருக்கிறதா? 'நான் உனக்குப் போதித்து, நீ நடக்க
வேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்.' சங். 32: 8.

Isaiah Paul.

C. L. S. PRESS. MADRAS—1920


# மாதர் போதினி

No. 268 | மே 1920 | No. 5


## THE RISEN CHRIST

## உயிர்த்தெழுந்த கிறிஸ்து

'மெய்யாகவே கர்த்தர் உயிர்த்தெழுந்தார்'; 'என் மீட்பர் உயி
ரோடிருக்கிறார்'. இது உனக்குத் தெரியுமா? உயிர்த்தெழுந்த கர்த்
தர் உனக்குக் காட்சி கொடுத்தாரா? காத்திருந்தவர்களுக்குத் தரிசன
மானார். உனக்கு அவர் தரிசனம் இன்னுங் கிடைக்கவில்லையானால்
நீ காத்திருக்கவில்லை யென்பது தெளிவாகிறது.

நான் பாவியென்று அஞ்சுகிறாயோ? உண்மையாய் மனந்
திரும்பின பாவிகளுக்கு விசேஷ தரிசனமருளினார். மரியாள்,
பேதுருவைக் கவனி.

காத்திருப்பதென்றால் என்னவென்று தெரியாமல் திகைக்
கிறாயோ? ஆண்டவரைப் பார்க்க உனக்கு ஆசையுண்டானால்,
தனித்து உன் பாவங்களுக்காக வெட்கி, மனங்கசந்து அழுது,
அவர் பாதத்தில் மரியாள் கண்ணீர்விட்ட மாதிரியாயும் பேதுரு
மனங் கசந்து அழுத மாதிரியாயும் பாவத்துக்காக உத்தம மன
ஸ்தாபப்பட்டுக் கண்ணீர் சிந்து. என் ஆண்டவர் எங்கே?
அவரை நான் காணவேண்டுமென்று மனதில் தேட்டங்கொள்.
உன் உள்ளத்தில் உருக்கமான தேட்டம் உண்டானால் அவரைக்
காண்பாய். அவர் கர்த்தர், உன் ஆண்டவர் என்று காண்பாய். ஆம்,
அப்போது அவர் உன்னை ஆட்கொள்வார். ஆண்டவரே உம்மையே
நேசிக்கிறேன். நீர் அதை அறிவீர் என்று உண்மையாய்ச் சொல்
லக்கூடுமானால் அவர் மந்தையின் ஆடுகளை மேய்க்கும் ஊழியங்
கொடுப்பார்.

நீ செய்யும் ஊழியத்தை மனுஷரிடத்தில் பெற்றாயா, தேவனி
டத்தில் பெற்றாயா? இக்கேள்வி விபரீதமாய்த் தோன்றுகிறதோ?

VOL. XXXV.

நான் மனுஷரிடம் சம்பளம்பெற்று அவர்கள் எனக்கிட்ட வேலையைச் செய்துவருகிறேனே. தேவனிடம் என் ஊழியத்தை எப்படிப் பெறுவேன் என்கிறாயோ? மனுஷர் உன்னை ஊழியத்துக்கு அமர்த்தினது சரிதான். அவ்வூழியத்தை மனுஷருக்காகச் செய்கிறாயா, கர்த்தருக்காகச் செய்கிறாயா? நீ உபாத்தியாயராயிருந்தால் பாடங் கற்பிக்கும் ஊழியமும், வைத்தியராயிருந்தால் பிணியாளிகளைச் சோதித்துப்பார்த்து மருந்துகொடுக்கும் ஊழியமும், போதகர், உபதேசியார், வேதாகம ஸ்திரீயாயிருந்தால், வேதத்தை உபதேசிக்கும் ஊழியமும், தாயாராயிருந்தால் பிள்ளைகளைப் போஷித்து உடுத்தி வளர்க்கும் ஊழியமும் உனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது யாவரும் செய்யும் ஊழியம்.

நீ ஆண்டவரிடத்தில் உன் ஊழியத்தைப் பெற்றதுண்டானால் உன்னிடங் கற்கும் மாணவருடைய ஆத்தும விஷயத்தைக்குறித்து சிரத்தையெடுத்து குறிக்கப்பட்ட பாடங் கற்பிப்பதோடு, அவர்களை நீ அறிந்திருக்கும் ஆண்டவரிடம் வழிநடத்தவேண்டிய அதிகாரத்தை எப்போதும் கையாடுவாய். ஜனங்களுக்கு வேதோபதேசம் செய்வது மாத்திரமன்றி, ஆத்துமதாகங்கொண்டு, உன் சபையிலுள்ள ஒவ்வொரு தனி ஆத்துமாவின் நிலைமையைக் கண்டறிந்து, அவர்கள் தங்களை முழுதுமாய் ஆண்டவருக்குத் தத்தஞ்செய்து நடக்கும்படி தனித்தனியாய் வீடுகளிலும் தெருக்களிலும் சந்தித்து, அவரவர் மனநிலைமைக்கு ஏற்றபடி போதித்து அவர்களோடு ஜெபித்து உன்னிலிருக்கிற வல்லமை அவர்களுக்கும் உண்டாகச் செய்வாய். உன் சபை ஆண்டவர் விரும்பும் சபையாகும். உன் சபைக்காக உன் ஜீவனும் பெலனும் நேரமும் பூரணமாய்ச் செலவிடப்படும். போதனை செய்வதோடு திருப்தியாயிருக்கமாட்டாய். உன் பிள்ளைகளுக்கு ஆகாரம், வஸ்திரம் கொடுத்துப் பாதுகாப்பதன்றி, பிள்ளைகளின் ஆத்தும நிலைமையைக் கண்டறிந்து அவர்களுக்குக் கிறிஸ்துவைக் காட்டிப் போதித்து ஜெபித்து, போதனையாலும், சாதனையாலும், தனி ஜெபத்தாலும் அவர்களைக் கிறிஸ்துவின் சொந்தமாக்குவாய். உன் பிள்ளைகளுக்காக உன்னையே பரிசுத்தமாக்குவாய். உன் சொந்தப் பிள்ளைகளல்லாதவரை வளர்க்கும் ஊழியம் ஏற்பட்டபோதிலும் இவ்வண்ணமே நடந்துகொள்வாய்.

இப்போது கிறிஸ்துவிடமிருந்து உன் ஊழியத்தைப் பெற்றிருக்கிறாயாவென்று ஆராய்ந்து பார். நீ உயிர்த்தெழுந்த கிறிஸ்துவைக் கண்டதுண்டானால், உன் ஊழியமும் ஜீவியமும் வல்லமையுள்ளதாகும். உயிர்த்தெழுந்த கிறிஸ்துவைக் கண்டபின் சீஷருடைய ஜீவிய மாறுதலைப் பார்.



உயிர்த்தெழுந்த ஆண்டவரைக் கண்ட ஜீவியத்திலுண்டாகும் முதல் மாறுதல் ஒரே மனமாய் பூரண கீழ்ப்படிதல். எதிர்பேசுதல் இராது. சீஷரெல்லாம் ஒரே மனமாய்க் கீழ்ப்படிதலுள்ளவராய்க் கூடியிருந்தார்கள். விடாத ஜெபசிந்தை யுண்டாகும். ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள். இதற்கு பலன் என்ன? பரிசுத்தாவியை நிறைவாய்ப் பெற்றார்கள். இதின் நிலையான அடையாளமென்ன? கிறிஸ்துவுக்காக வைராக்கியமாய் வல்லமையாய்ச் சாட்சி கொடுத்தார்கள். ஆத்துமாக்கள் கிறிஸ்துவண்டை வந்தார்கள்.

உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் காட்சியும் ஆசீர்வாதமும் உனக்கு வேண்டுமா? உயிர்த்தெழுந்த கர்த்தர், 'வாழ்க! சமாதானமுண்டாவதாக!' என்று தமக்குக் காத்திருந்தவர்களை வாழ்த்தினார். அவர்கள் ஜீவனார்த்தத்திற்கென்று செய்த வேலையில் விருத்தியும் ஆசீர்வாதமும் கொடுத்தார். 153 மீன் அகப்பட்டதைக் கவனி. ஆத்தும ஆதாயஞ்செய்ய மந்தை மேய்க்கவும் சாட்சிகளாயிருக்கவும் கட்டளையிட்டார். கீழ்ப்படிந்து ஒரே மனமாய் ஜெபத்தில் தரித்திருந்தவருக்கு ஊழியத்தில் வல்லமையுண்டாக பரிசுத்தாவியினால் நிரப்பினார்.

உயிர்த்தெழுந்த கர்த்தர் உன்னையும் சந்தித்து இவ்வித சீஷர் பெற்ற ஆசீர்வாதங்களைத் தரக் காத்திருக்கிறார். ஆவியினால் நம்மோடு எப்போதும் வாசஞ்செய்ய விரும்புகிறார். உனக்கு இவ்வித உன்னத ஜீவியம் விருப்பமானால், பாவத்துக்காக உத்தம மனஸ்தாபத்தோடு உன் ஆண்டவருக்காகத் தேட்டங்கொண்டு அவரைக் கண்டுபிடி. பின் அவர் காட்டுகிறதெல்லாம் செய்யக் கீழ்ப்படிதலுள்ள இருதயத்தோடு ஒரே மனமாய் ஜெபத்தில் தரித்திரு. பரிசுத்தாவியின் வல்லமைபெற்று, பலமான சாட்சியாயிருப்பாய்.

## LAST DAYS

### 'கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வரும்'

2 தீமோ. 3 ; 1

மனிதர் 'நன்மையைக் காணும்படி, ஜீவனை விரும்பி, நீடித்த நாட்களை அபேட்சிக்கிறார்கள்'. கடைசி நாளும் கொடிய காலமும் அவர்களுக்குப் பிரியமேயில்லை. ஆயினும், திருச்சபைக்கு இது கடைசிக்காலமும் கொடிய நாட்களுமாய் இருக்கிறதென்பதைக் கர்த்தருடைய வசனத்தால் அறியலாம். பரிசுத்த பவுல், பேதுரு,

யோவான் ஆகிய பிரதான அப்போஸ்தலர் மூவரும் இந்த நாட்களின் அடையாளங்களைத் திட்டமாய் எழுதிவைத்திருக்கிறார்கள். அறுப்புக்காலத்தில் தூங்குகிறவன் இலச்சையை உண்டாக்குகிற மகனாயிருப்பானாகில், இந்தக் கடைசி நாட்களின் கொடிய காலத்தில் பாவநித்திரை செய்கிறவனே, உன்னைப்போல மதியீனன் உண்டோ? நீ இலச்சையடைவது எவ்வளவு நிச்சயம்! 'பிள்ளைகளே, இது கடைசிக்காலமாய் இருக்கிறது.'

முதலாவது: கடைசிக்காலத்தில் மனிதர் தற்பிரியராயிருப்பார்கள். (2 தீமோ. 3: 2.) தன்னை நேசித்தல் உன் பார்வையில் இயற்கையாயும் நியாயமாயும் தோன்றலாம். கர்த்தாவுடைய பார்வையில் இது மகா கொடிய பாவம். தன்னை வெறுத்தலே சகல ஜெயத்திற்கும் காரணம். தற்பிரியமே சகல தோல்விக்கும் காரணம். ஒரு இராஜ்யத்தார் தங்களை வெறுத்தவர்களாயிருக்கையில் ஜெயம்பெற்று விர்த்தியடைந்தார்கள். ஆனால் தற்பிரியரான நாளில் நாசமடைந்தார்கள். கர்த்தராகிய இயேசு தம்மை வெறுத்ததால் உலகம் மீட்கப்பட்டது. மற்ற தேசத்து தேவனுடைய பிள்ளைகள் தங்களை வெறுத்ததால் நாம் கிறிஸ்தவர்களானோம். தமிழ்நாட்டுச் சபையோ தற்பிரியரால் நிறைந்திருக்கிறது. தாங்கள் பெற்ற மேன்மை, அறிவு, ஆஸ்தி யாவையும் கிறிஸ்துவுக்குப் பிரதிஷ்டை செய்தவர்கள் உண்டோ? இதிலிருந்து வீரர்கள் எழும்பினதுண்டோ? ஒரு காலத்திலாகிலும் இதில் பக்திவைராக்கியம் உண்டாகவில்லையே! திரளாக ஆவியானவர் இதின்பேரில் ஊற்றப்படவில்லையே! குணப்படாதவர்களுக்காக ஊக்கமாய் ஜெபிக்கிறவர்கள் இந்த நாட்டில் உண்டா? இந்தியாவில் 30 கோடி புறமதஸ்தர் நித்திய நாசத்திற்கு விரைந்து செல்லுகிறார்களே! பேர்பெற்ற திருநெல்வேலி ஜில்லாவிலும்கூட நூற்றில் 95 பேர் இன்னமும் அஞ்ஞானிகளாயிருக்கிறார்களே! இவர்களுக்காகப் பரிதபிக்கிறவர்கள் உண்டோ? ஐயோ! 'தா, தா' என்று இன்னமும் கேட்டு, போதும் என்று சொல்லாதிருக்கிற தமிழ்நாட்டுச் சபையே, எக்காலும் பெற்றும் ஒரு பிரயோசனமுமற்ற சவக்கடலைப்போல நீயும் நாற்றமெடுக்கிறாயே! உன்னில் பிரிவினைகள் எத்தனை! உன்னில் பேயை நோக்குதல் எத்தனை! உன்னிலிருந்து ஆண்டவருக்கு நித்தம் எழும்புகிற பாவக்கூக்குரல் எத்தனை! உனக்கு இது கொடிய காலம் என்பதற்குச் சந்தேகமும் உண்டோ?

இரண்டாவது: கடைசிக்காலத்தில் மனிதர் பாவத்தை அற்பமாய் நினைப்பார்கள். கடைசி நாட்களின் கொடிய காலத்துப்



பாவங்களைக் கேள்: தற்பிரியம், பணப்பிரியம், வீம்பு, அகந்தை, தூஷணம், கீழ்ப்படியாமை, நன்றியில்லாமை, பரிசுத்தமில்லாமை, சுபாவ அன்பில்லாமை, இணங்காமை, அவதூறுசெய்தல், இச்சையடக்கமில்லாமை, கொடுமை, நல்லோர்மேல் பகை, துரோகம், துணிகரம், இறுமாப்பு, சுகபோகப் பிரியம், தேவப்பிரியமில்லாமை, தேவபக்தியின் வேஷம் ஆகிய இவைகளே. (2 தீமோ. 3: 2–5.) இவைகளை சற்று கவனித்து வாசி. தற்காலத்தோடு ஒப்பிட்டுப்பார். கொலை, களவு, விபசாரம் முதலிய மனிதருடைய பார்வையில் பெரிதாய்த் தோன்றுகிறவைகள் இதில் இல்லை. ஆனால் மேலே சொல்லிய சகல பாவமும் இக்காலத்து தமிழ்ச்சபையில் பலமாய்க் குடிகொண்டிருப்பதைக் காணலாம். ஆ, பயங்கரம்! இதுவே கடைசி நாட்களின் கொடிய காலம்! பாவத்தை அற்பமாய் எண்ணுகிற சபையும் கிறிஸ்தவனும் வாழ்வடைவார்களோ? 'நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே.'

மூன்றாவது: கடைசி நாட்களின் கொடிய காலத்தில் சத்தியத்தை அறிகிற அறிவுண்டு, கீழ்ப்படிதலோ இராது. இக்காலத்து கிறிஸ்தவர்களும் 'எப்போதும் கற்றாலும் ஒருபோதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்களாயிருக்கிறார்கள்.' (2 தீமோ. 3 : 7.) தேவனை அறியாத ஜாதி உலகத்தில் ஒன்றுமில்லை, கர்த்தர் தம்மை வெளிப்படுத்தாத மனுஷனும் உலகத்தில் இல்லை. ஒரு காலத்திலாகிலும் கர்த்தர் உனக்கு அறிவைத் தந்து உன்னில் நல்விருப்பத்தை உண்டாக்கினதில்லையா? அந்த விருப்பம் நற்கிரியையாய் மாறினதுண்டா? அறிந்த சத்தியத்துக்குக் கீழ்ப்படியாதபோது நேரிடுகிறதென்ன? 'அவர்கள் தேவனை அறிந்தும் அவரை தேவனென்று மகிமைப்படுத்தாமலும் ஸ்தோத்திரியாமலுமிருந்து தங்கள் சிந்தனைகளிலே வீணரானார்கள்; உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது' (ரோ. 1. 21). அறிந்தும் கீழ்ப்படியாவிட்டால், உணர்ச்சியற்றுப்போம்; இருதயத்தை இருள் மூடிக்கொள்ளும். இந்த கிறிஸ்தவநாடு தான் இப்போது இருக்கிற மரணநிலைமையையும் வாந்திபண்ணப்படத்தக்க வெது வெதுப்பான நிலைமையையும் உணருகிறதா? தான் அனுபவிக்கக்கூடியதும், இப்போது இழந்துவிட்டிருக்கிறதுமான ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் என்னவென்று தெரியுமா? ஐயோ! இந்தச் சிறிய கிறிஸ்தவக் கூட்டத்தை ஆவிக்குரிய இருள் மூடிக்கொண்டது. கொடிய காலங்கள் வந்துவிட்டது. இதை உணர்ந்தவன் உண்டோ? தேவனையும் அவர் இரட்சிப்பையும் தேட உற்சாகங்கொண்டவன் உண்டோ? கர்த்தாவே, உணர்வற்ற எங்களைத் திரும்ப உயிர்ப்பிக்கமாட்டீரோ?

நான்காவது: கடைசி நாட்களில் கிறிஸ்தவர்கள் தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பலனை மறுதலிக்கிறவர்களாயிருப்பார்கள். (2 தீமோ. 3 : 5, 8.) இந்த நாட்டில் கிறிஸ்து மார்க்கத்தையல்ல, அதின் வேஷத்தையே அதிகமாய்ப் பார்க்கிறோம். இயற்கையின் சாடையே வேஷம். பாவ மன்னிப்பும் தேவ பக்தியுமே கிறிஸ்துமார்க்கம். மன்னிப்பைப் பெற்றவர்கள் இந்நாட்டில் திரளாயிருக்கிறார்களா? அல்லது மன்னிப்பைப் பெறாதவர்கள் ஏராளமா? ஐயோ, 'விசுவாச விஷயத்தில் பரீட்சைக்கு நில்லாதவர்கள்' (வா. 8), அதாவது குணப்படாதவர்கள், சபைகளில் பெருகிப்போயிருக்கிறார்களே! ஆராதனையும் ஆசாரங்களும் மாத்திரம் கிறிஸ்து மார்க்கமாகுமோ? தேவபக்தி எக்காலத்திலாகிலும் இந்நாட்டில் சிறந்து விளங்கினதுண்டோ? ஆரம்பமுதல் இதுவரையும் பரிசுத்தத்துக்குப் பேரெடுத்த ஒரு சபை உண்டா? தேவபக்தியின் வேஷம் காணப்படலாம். ஆனால் அதின் பலன் உண்டோ? பாவத்தின் பேரில் ஜெயமல்லவோ அதின் பலன். பரிசுத்த இயேசுவுடன் சஞ்சரிப்பதல்லவோ அதின் பலன். பாவத்தின்பேரில் ஜெயத்தையும் பரிசுத்தருடன் உலாவுவதையும் அறியாதவனே, நீயே மறுதலிக்கிறவன். பேதுரு 'அறியேன்' என்றதல்லவோ, மறுதலித்தலாயிற்று. கிறிஸ்துமார்க்க சத்தியத்திற்கு இருக்கிற கொடிய எதிரிடை வெளிவேஷமே! கிறிஸ்தவனாயிருந்தும், பாவமன்னிப்பைப் பெறாமலும் பரிசுத்தமாய் ஜீவியாமலும் இருப்பவனே, கிறிஸ்துமார்க்கத்திற்குக் கொடிய சத்துரு. இப்படிப்பட்டவர்கள் சபையில் திரளாய் இருப்பதினாலேயே, இது கொடிய காலமாயிருக்கிறது.

ஐந்தாவது: கடைசி நாட்களில் பரியாசக்காரர் எழும்பி தங்கள் சுய இச்சைகளின்படியே நடப்பார்கள். (2 பேதுரு 3: 3, 4.) பூர்வகாலத்தில் பிதாக்கள் இழந்த காணியைப் பிள்ளைகள் சுதந்தரித்தார்கள். இந்த நாட்டிற்கு அந்த நம்பிக்கைக்கும்கூட இடமில்லை. என்ன பரிதாபம்! தற்காலத்து வாலிபக்கூட்டத்தார் பரியாசக்காரராய்க் காணப்படுகிறார்களே! சுய இஷ்டப்படி நடக்கிறார்களே! கர்த்தரிலும் அவர் ரட்சிப்பிலும் மகிழுகிறவர்களைக் காண்பது அரிதாயிருக்கிறதே! உலக உல்லாசம் எத்தனை! பிசாசின் நாடக வேஷம் எத்தனை! கர்த்தருடைய ஆலயத்தில் பேசிச் சிரிக்கிற பாதகர் எத்தனை! கர்த்தாவே, தேவரீர் உம்மைப் பரியாசம் பண்ணவொட்டீரே! உமக்காக வைராக்கியம் பாராட்டுகிற வாலிபரைக் காணோமே! விளையும் பாவஜீவியம் முளையில் தெரிகிறதே! ஐயோ, இக்கபோத் ஆகிவிட்ட நாடே, உனக்கு வருங்காலத்திற்கும் நம்பிக்கையைக்



காணோமே! கர்த்தாவே, இரங்கும்! கர்த்தாவே, இரங்கும்!! எங்கள் முழு நம்பிக்கை உம்மில்தான் இருக்கிறது.

ஆறாவது: கடைசிக்காலத்தில் அநேக அந்திக்கிறிஸ்துகள் இருப்பார்கள். (1 யோ. 2: 18, 19.) அந்திக்கிறிஸ்து யார்? 'பிதாவையும் குமாரனையும் மறுதலிக்கிறவனே அந்திக்கிறிஸ்து.' (22 வா.) இதைக்கொண்டு அந்திக்கிறிஸ்து யார் என்று பரீட்சித்துப்பார். முன்னே சொல்லியபடி, பேதுருவைப்போல் 'அறியேன்' என்று சொல்லுவதே மறுதலித்தல் என்பதை நினைத்துக்கொள். பிதாவையும் குமாரனையும் நீ அறிவாயா? அதை அறிவது உன் ஜீவியத்தின் முக்கிய நோக்கமா? பாவமன்னிப்பை ஈந்தவராக இயேசுவை அறிவாயா? இருதயத்தில் வாசஞ்செய்கிறவராக அவரை அறிவாயா? பாவத்தின்மேல் ஜெயங்கொடுக்கிறவராக அவரை அறிவாயா? பிதாவிலும் குமாரனிலுமிருந்து புறப்பட்டு, பிதாவையும் குமாரனையும் வெளிப்படுத்துகிற தேவாவியானவரை அறிவாயா? அறியாதவனே அந்திக்கிறிஸ்து. 'தேவன் யார்' என்று பார்வோன் கேட்டான். இனி வரப்போகிற கடைசி அந்திக்கிறிஸ்துவும், 'தேவன் யார்? நான்தான்' என்பான். கிறிஸ்தவனாயிருந்தும், கிறிஸ்துவை அறிவதில் முதல் படியாகிய 'பாவ மன்னிப்பாகிய ரட்சிப்பைப்' பெறாதவனே, நீயும் அந்திக்கிறிஸ்துவும் ஒன்றாயிருக்கிறீர்கள். குணப்படாத யாவரும் அந்திக்கிறிஸ்துகளே! இவர்கள் மிகுந்த சபையை கிறிஸ்து சபை என்றழைக்கத் தகுமோ? கிறிஸ்து சபையில் குணப்படாத அந்திக்கிறிஸ்துகள் திரளாய் இருக்கிற இக்காலம் கொடிய காலமில்லையா? சிநேகிதனே, இது கடைசிக் காலமென்றும் கொடிய காலமென்றும் நம்புகிறாயா? இக்காலத்தில் என்ன நிலைமையில் இருக்கிறாய்? இக்காலத்தை எப்படிச் செலவிடுகிறாய்? இந்தக் கேள்விகளை தேவ சன்னிதியிலிருந்து பயபக்தியுடன் தியானிப்பாயாக!

## WATCHFULNESS

## விழிப்பு

'ஜாமக்காரரைக் கட்டளையிடுகிறேன்'

ஏசா. 62: 6.

ஆமென், கர்த்தராகிய தேவனே, உமது வாக்குப்படி இப்போதே கட்டளையிட்டருளுவீராக! ஒவ்வொரு சபையிலும் கட்டளையிடுவீராக! நீர் சொல்ல ஆகும். நீர் கட்டளையிட நடக்கும். இந்த

நாட்டின் பெரிய அவசியம் இதுவே. தேவனுடைய பிள்ளைகளே; கர்த்தர் ஜாமக்காரரைக் கட்டளையிடுமளவும் நாம் அமர்ந்திராதிருப்போமாக! அவரை அமர்ந்திருக்க விடாதிருப்போமாக! ஜாமக்காரராலேயே நாடு ஸ்திரப்படும். பூமியில் அது புகழ்ச்சியாகும் என்று கர்த்தர் தீர்மானித்திருக்கிறார். (7 வா.) இதுவே அவர் சித்தம். ஆகையால் தைரியமாய் நாம் ஜெபிப்போமாக.

**முதலாவது:** ஜாமக்காரன் மற்ற ஜனங்களுக்கு மேலாக அதி உன்னதத்தில் நிற்கவேண்டும். கானான் தேசப்பட்டணத்து கோட்டையின்மேல் கோபுரம் கட்டப்பட்டிருக்கும். அதின் உச்சியில் ஜாமக்காரன் நிற்பான். ஆவிக்குரிய ஜாமக்காரன் யார்? சாதாரண ஜனங்களுக்குள் காணப்படாத பரிசுத்தமும் தாழ்மையுமுள்ளவனே ஜாமக்காரனாவான். அதி உன்னதத்தில் நிற்கிறவனுக்கு பூமியிலுள்ளவைகள் மகா சிறிதாகத் தோன்றும். ஆவிக்குரிய ஜாமக்காரனும் உலக மேன்மையையும் உலகப்பொருட்களையும் மகா அற்பமாய் எண்ணுகிறவனாயிருக்கவேண்டும். ஜாமக்காரன் தனித்து நிற்கவேண்டும். ஆவிக்குரிய ஜாமக்காரனும் உலகத்தை விட்டுப்பிரிந்து, தேவனோடு தனித்து ஜீவிக்கப்பழகி, கர்த்தருக்காக ஒண்டியாய் நின்று வைராக்கியம் பாராட்டக்கூடியவனாயிருக்கவேண்டும். ஜாமக்காரன் தீராத அவசரமானால்மட்டும் கீழே இறங்கிவிட்டு, அதிசீக்கிரத்தில் தன் ஸ்தானத்திற்குப் போய்விடவேண்டும். ஆவிக்குரிய ஜாமக்காரனும் ஒருநாள் அனலாயும் இன்னொருநாள் குளிராயுமல்ல, எந்நாளும் ஒன்றுபோல அனலாய் ஜீவிக்கவேண்டும். மனிதருடன் அதிகமாய் சம்பந்தப்படுவதை அவன் நிறுத்தி, ஆண்டவருடன் அதிகமதிகமாய் தனித்து ஜீவிக்கப் பழகவேண்டும். இவ்வித லட்சணங்களின்பேரில் வாஞ்சையுள்ள சகோதரனே! கர்த்தர் உன்னை இந்த நாட்டிற்கும் உன் ஊருக்கும் ஜாமக்காரனாக அபிஷேகம் செய்ய விரும்புகிறார். உன் எஜமானுடன் ஐக்கியமாகி இந்த ஊழியத்தை ஆரம்பி.

**இரண்டாவது:** மற்றவர்கள் தூங்குகையில் இவன் விழித்திருக்கவேண்டும். விழித்திருப்பதே அவனுடைய வேலை, ஜாமக்காரன் ஜாமம் காக்கவேண்டும். பகலிலும் இரவிலும் அவன் நித்திரை செய்யக்கூடாது. 'நான் பகல்முழுதும் என் காவலிலே நின்று, இராமுழுதும் நான் என் காவலிடத்திலே தரித்திருக்கிறேன்' என்று அவன் சொல்லக்கூடியவனாய் இருக்கவேண்டும். (ஏசா. 21 : 8.) இரவு எவ்வளவு சென்றது என்பது அவனுக்குத்தான் தெரியும். (11 வா.) விடிவெள்ளியையும் அருணோதயத்தையும் அவனே முதலில் காண்பான். கிறிஸ்தவ ஜாமக்காரனே, நீயும்



இரவும் பகலும் விழித்திருந்து உன் காவலில் தரித்திருக்கவேண்டும். உன்னை ஜாமக்காரனாக ஏற்படுத்துகிற எஜமான் 'நீ இங்கே தங்கி, என்னோடேகூட விழித்திரு' என்கிறார். (மத். 26 : 28.) உன் ஆண்டவர் உன்னை கெத்செமனேயில் தங்கி விழித்திருக்கும்படி சொல்லுகிறார். இயேசுவைப் பிடித்து பாடுகளுக்குட்படுத்துவது யூதருக்கு ஒரு நாடகம்போலிருந்தது. ஆகையால் அவர்கள் இராமுழுவதும் விழித்திருந்தார்கள். இயேசுவின் சீஷரோ மரணத்துக்கேதுவான துக்கங்கொண்ட அருமை எஜமானுடன் ஒரு மணி நேரம் விழித்திருக்கவில்லை. இந்நாளிலும் நாடகம் என்றால் கிறிஸ்தவர்களும் இராமுழுதும் விழித்திருப்பார்கள். ஆனால் நித்திய நாசத்துக்கு விரைந்துசெல்லுகிற கோடாகோடிப்பேரை நினைத்து, கண்ணீர்விட்டு, இயேசுவிடத்தில் தனித்துப்போய் போராடுகிறவர்கள் இந்த நாட்டில் உண்டா? வருஷத்தில் ஒரு மணிநேரம் முதலாய் இவ்விதமாய்ச் செலவிடாத ஏராளமான தேவ ஊழியர் உண்டே! சிநேகிதரே, கர்த்தர் உங்களை ஜாமக்காரராயிராதபடி தள்ளிப்போட்டார். கிரீடத்தை வாஞ்சிக்கிறவர்கள் அநேகர். கெத்செமனேயை வாஞ்சிக்கிறவர்களோ சிலர். இந்தத் தமிழ்நாடு உயிர்ப்பிக்கப்படாததற்குக் காரணம் இதுதான். ஒவ்வொரு சபையில் ஒவ்வொரு ஜாமக்காரனும் கூட இல்லையே! நாடுமுழுவதையும் எடுத்துப்பார்த்தால், இந்த நாட்டு ஜனங்களில் பத்து ஜாமக்காரர் காணப்படுவார்களோ? கர்த்தாவே, உமக்கே தெரியும்! ஆனால் தமிழ்நாட்டுச் சபையும், சீயோனுக்கு வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறபடி, பிரசவவேதனைப்படத் துவக்கினவுடன் பிள்ளைகளைப்பெறும் என்பது சத்தியம். கர்ப்பவேதனையின்றி பிள்ளை பிறக்கக்கூடுமோ? வேதனை ஆரம்பித்தவுடன் 'பெறப்பண்ணுகிறவராகிய நான் பெறச்செய்யாமல் இருப்பேனோ என்று கர்த்தர் சொல்லுகிறார்! பிரசவிக்கப்பண்ணுகிறவராகிய நான் பிரசவத்தைத் தடுப்பேனோ என்று (தமிழ்நாட்டுச் சபையே,) உன் தேவன் சொல்லுகிறார்.' (ஏசா. 66 : 6–9.) தமிழ் கிறிஸ்தவசபை ஏன் இன்னமும் உயிர்ப்பிக்கப்படவில்லை? அதில் பிரசவவேதனைப்படுகிற ஜாமக்காரர் எழும்பவில்லை. பிரசவவேதனைப்படுவதே விழித்திருப்பதாம். ஆத்துமாக்களுக்காக அந்தரங்கத்தில் கண்ணீருடன் ஆண்டவரிடத்தில் போராட்டமாய் ஜெபிப்பதே பிரசவவேதனை. இதுவே ஜாமக்காரனின் ஊழியம். கர்த்தாவே, இவ்வித ஜாமக்காரரை, தமிழ்நாட்டிலும் உமது வாக்குப்படி இப்போதே எழுப்பும் என்று ஜெபிப்போமாக.

**மூன்றாவது:** ஜாமக்காரனே இரத்தப்பழிக்கு உத்தரவாதி. பட்டணத்து ஜனங்களின் உயிர் அவன் கையில் இருக்கிறது.

அவன் பகல்முழுதும் இராமுழுதும் ஒருக்காலும் மவுனமாயிருக்கக் கூடாது. (ஏசா. 62 : 6.) 'காண்பதைத் தெரிவிக்கும்படி' ஜாமக்காரன் வைக்கப்பட்டிருக்கிறான். 'இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தரால் நான் கேள்விப்பட்டதை உங்களுக்கு அறிவித்தேன்' என்று ஒவ்வொரு ஜாமக்காரனும் சொல்லக்கூடியவனாயிருக்கவேண்டும். (ஏசா. 21 : 6, 16.) பரிசுத்தமும் பயங்கரமுமான கிறிஸ்தவ ஊழியத்தைத் தமிழ்நாட்டில் பெற்றிருக்கிற தேவ ஊழியர்களே, முதலாவது உங்களிடத்தில் இந்த நாட்டின் இரத்தப்பழி கேட்கப்படும். நீங்கள் உத்தம ஜாமக்காரராய் பரிசுத்த அலங்காரத்துடன் தேவனோடு சஞ்சரித்து ஜெபத்தில் போராடியிருந்திருப்பீர்களாகில் கர்த்தர் மெய்யாய் உங்களுக்குக் காட்சி அருளியிருப்பார். உங்கள் வாயில் வார்த்தையைக் கொடுத்து, உங்கள் மூலமாய் இந்த நாட்டை உயிர்ப்பித்திருப்பார். கர்த்தாவின் நாளில் உங்கள் உத்தரவாதம் மகா பெரிதாயும் பயங்கரமாயும் இருக்கும். இரண்டாவதாக, தமிழ் நாட்டில் மீட்பைப் பெற்றவர்களாயிருக்கிற தேவனுடைய பிள்ளைகளே, இந்த நாடு உங்களால் மாத்திரம் உயிர்ப்பிக்கப்படக்கூடும். நீங்களும் ஜாமக்காரரின் இலட்சணங்களை அணிந்துகொள்ளாமல், இந்த ஊழியத்தை அசட்டை செய்வீர்களாகில், இரத்தப்பழி உங்கள்மேல் சுமரும். நீங்கள்தான் இந்த நாட்டுக்கு உத்தரவாதிகள். உத்தம ஜாமக்காரரே, நீங்கள் பாக்கியவான்கள். இயேசுவுடன் விழித்திருக்கும் உங்கள் ஊழியம் அதில் பழகின உங்களுக்கு மகா அருமையாய்த் தோன்றுகிறதல்லவா! தளர்ந்துபோகவேண்டாம். பெருமழையின் இரைச்சல் கேட்கிறது. 'இனி காலம் செல்லாது.' இந்த நாடு சீக்கிரம் உயிர்ப்பிக்கப்படும். அறுப்பில் மகிழுகிறதுபோல நாம் நமது எஜமானுடன் மகிழுவோம். அருணோதயத்தில் நாமே நமது ஆண்டவரை முதலில் காண்போம். நித்திய நித்திய காலமாக நாமே மற்றவர்களைவிட நமது நாயகருடன் மகா நெருங்கிய இன்ப ஐக்கியத்தில் இணைக்கப்பட்டிருப்போம்.



## A MODEL LESSON FOR THE BIBLE WOMEN'S WORK

## எப்படி இந்துப் பெண்களுக்கு வேதோபதேசம் செய்வித்தல்

### மலைப்பிரசங்கம் தொடர்ச்சி. மத். 6 : 24–34

| விஷயம் | போதனா முறை |
|---|---|
| 6-ம் பாடம்.<br>I. இருவித ஊழியம். வச. 24.<br>(1) தேவன் = தேவராஜ்யம்.<br>(2) பிசாசு = உலகப்பொருள் பகைத்தல், சிநேகித்தல்.<br>உலகப்பொருள்.<br>மண்ணாசை.<br>பொன்னாசை.<br>பெண்ணாசை.<br>இது மானிட ஆத்துமா கட்டப்பட்டிருக்கும் முப்புரி கயிறு. | உலக இயற்கை: எஜமான், வேலைக்காரன், சேவகன், அதிகாரி, தண்டல்காரன், முனுசிப், வேலையாள், சமுசாரி, இவர்களுக்கு எப்படி அடங்கி நடக்கிறார்கள் என்பதை விசாரித்துச் சொல்லவும். ஒன்றைப்பிடி, நன்றைப்பிடி, கெட்டியாய்ப்பிடி என்றபடி ஆண்டவரையே நம்பி அவரிடம் அன்பு வைக்கவும், உலகமோ நன்மை தாராது. லோத்தின் மனைவியின் கதையை விளக்கமாய் சொல்லி 336-. கீர்த்தனம் 'திரும்பிப்பாராதே சோதோமை' படிக்கவும். மனுஷ ஜீவனுக்கு ஆதாரம் எது என்று விசாரித்து, சாப்பாடு, உடுப்பு, குடிப்பு, இவைகளால் சரீரம், போஷிக்கப்படுகிறதென்று சொல்ல. |
| II. உலகக் கவலை. வச. 25.<br>உணவு = ஜீவன்.<br>பானம் = இச்சை.<br>உடுப்பு = சரீரம். | ஜெபம், வேதம்படித்தல், தியானம், இவைகளால் ஆத்துமா போஷிக்கப்படுகிறது. இதற்காகவே தேவன் கவலைப்படுகிறார். |
| தேவனுடைய வேலை. வச. 26.<br>பட்சிகள், விதைப்பு, அறுப்பு, களஞ்சியம், காட்டு புஷ்பம், ராஜாவின் திரண்ட செல்வத்திற்கு சரி.<br>தேவன், புஷ்பங்கள், பறவைகள் இவைகளைவிட அதிகமாய் மனிதர்பேரில் கவலைப்படுகிறார். | ராஜா சாலொமோனின் ஆஸ்தியையும் தினச்செலவையும் சரித்திரமாய் சொல்லவும். 2 நாளா. 9-ம் அதி. பார்க்க. நமது தேசத்தின் ஏழைகள் யார் என்று கேட்கவும். ஒட்டர்களுக்கு காடு களஞ்சியம் இல்லை. பரதேசிகள், சன்னியாசிகள், பிச்சைக்காரர் இவர்களுக்கு படுக்கப் பாயும், குடியிருக்க |

| விஷயம் | போதனை முறை |
|---|---|
| | வீடுமில்லை, ஆனாலும் சந்தோஷமாயிருக்கிறார்கள். |
| III. தேவனுடைய கவலை 29<br>தேவனே உடுத்துவிக்கிறார். வச. 26.<br>தேவனே பிழைப்பூட்டுகிறார். வச. 26.<br>தேவனே தேவையை அறிகிறார். வச. 32.<br>மெய் விசுவாசிகள் தேடவேண்டியது:<br>தேவராஜ்யம்.<br>தேவநீதி.<br>தேவனே பிதா.<br>போதனை வசனம் 33. இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்.<br>பழமொழி: கடவுளைத் தேடுவோர் கைவிடப்படார். | மனுஷருக்கும் தேவனுக்கும் உள்ள சம்பந்தம்: காற்று, வெயில், பனி, மழை முதலியவற்றால் நம்மேல் வைத்திருக்கும் அன்பை விளக்கிக் காட்டவும். மனுஷர் தேவராஜ்யமாகிய மோட்சத்தையும், அதன் பிரமாணமாகிய வேதத்தையும், அதன் பிரஜைகளாகிய விசுவாசிகளின் கூட்டுறவையும் தேடவேண்டும். மற்ற உலகப் பொருள்களை இலவசமாய் நமக்குக் கொடுக்கிறார். லாசரு, ஐசுவரியவான், சரித்திரத்தில் தேவனைத் தேடாத ஐசுவரியவான் எல்லாவற்றையும் இழந்து வெறுமையாக நரகத்தை அடைந்தான் என்று விவரமாய் சொல்லி, 33-ம் வசனம படித்துக்கொடுக்க.<br>'விண்ணுலகம் தன்னிலே—<br>பொக்கிஷம்<br>விரும்பியே சேர்த்திடுவோர்<br>மண்ணிலும் விண்ணிலும்<br>வாழ்வது திண்ணமே<br>மாயப்பிரபஞ்சத்தின் வாழ்<br>வெல்லாம் குப்பையே.'<br>இப்பாட்டைப் பாடவும். |
| 7-ம் பாடம். 7 : 1-12.<br>(1) மற்றவர்களைக் குற்றவாளிகளாகத் தீர்த்தல். 1-5.<br>உத்திரம் = பெரியபாவம், சான்<br>துரும்பு = சிறுதவறுதல், பிறன்<br>பழமொழி: தன் குற்றம் விட்டு பிறர் குற்றம் பார்ப்பார்.<br>மாயக்காரன், தன்னை மறைக்கிறவன்.<br>தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையான். | இந்துக்களுடைய வீட்டில், புருஷன், மனைவி, அக்காள், தங்கை, தாய், மகன், மாமி, மருமகள் கூடிவாழுகிறார்கள். இவர்களில் அடிக்கடி குற்றம் சாட்டப்படும் ஆள், வீட்டுக்கு வந்த மருமகள்தான். வீட்டில் நடக்கும் அற்ப தவறுதல்களையும் மருமகள் பேரிலேயே சாட்டுகிறார்கள் என்பதை விசாரித்து விளக்க வேண்டும். 'மாமியார் உடைத்தால் மண் சட்டி, |



| விஷயம் | போதனை முறை |
|---|---|
| | மருமகள் உடைத்தால் பொன் சட்டி' என்ற முதுமொழியை விளக்கிக் காட்டி, எல்லாரும் குற்றவாளிகள், பாவிகள், ரோமர் 3 : 10 வாசித்து, தன் குற்றத்தைக் கண்டுபிடிப்பதே கிறிஸ்துவின் பிரதான உபதேசம் என்பதை ஆயக்காரன், பரிசேயன் என்ற பிரசங்க திருஷ்டாந்தம் சொல்லி, ஆயக்காரன் தன் பாவத்தை உணர்ந்த விதம், தேவனே நான் பாவி, விளக்கவும். 185-ம் கீர்த்தனம், 'எத்தனை சூதுகள் வாதுகள்' என்ற பாட்டைப் பாடிக் காட்டவும். |
| (2) ஜெபபோதனை. வச. 6-8.<br>பிதாமகன் சம்பந்தம்.<br>தூண்டுகோல் வார்த்தைகள்:<br>கேளுங்கள், தேடுங்கள், தட்டுங்கள் — 7-ம் வச.<br>விசுவாச வார்த்தைகள்:<br>கொடுக்கப்படல், கண்டடைதல், திறக்கப்படல் — 7-ம் வச.<br>7-ம் வசனம் மனப்பாடமாய் சொல்லிக்கொடுக்கவும். | இந்துமார்க்கத்தில், கனி, காய், கற்பூரம் வைத்து கையைக் குவித்து நமஸ்கரித்தல் ஜெபமல்ல. சடங்கு, புத்திர சலாக்கியமாய் பிதாவிடம் மூன்றுவிதமாய் தேடலாம் என்பது கிறிஸ்துவின் உபதேசம். கேட்டல், தேடல், தட்டல் என்பது செய்கையுடன் சம்பந்தப்பட்ட ஜெபம். பிள்ளைவரம் கேட்டல், தேவ ஸ்தலங்களைத் தரிசித்தல், ஆலயபிரதக்ஷணம் என்ற வெறும் கருத்தையல்ல, அவசியமானதைக் கேட்டு, தேடி, தட்டிப் பிரவேசித்து, தனக்கு வேண்டியதைப் பெற்றுக்கொள்ளுவதே ஜெபத்தின் முக்கிய கருத்து. தனக்கு வேண்டியதைப் பெற்றுக் கொள்ள விரும்புகிறவன் கதவைத்தட்டிப்பிரவேசித்து, ஆளைக் கண்டு தன் ஆசையை நிறைவேற்றுகிறதை பாதி ராத்திரியில் வீட்டுக்கு வந்த சிநேகிதன் உவமையால் எப்படி மோட்சம் அடையலாம் என்று விளக்கிக்காட்டவும். |

## பிரசங்க தொடர்ச்சி. மத். 6 : 24–34

| விஷயம் | போதனா முறை |
|---|---|
| (3) ஜெபபோதனை விளக்கம்.<br>பிதாமகன் உருவகப்போதனை.<br>தேவன் = மனுஷன்.<br>அப்பம் = கல்.<br>மீன் = பாம்பு.<br>நல்ல தகப்பன் = பரமபிதா.<br>பொல்லாததகப்பன்-பூலோகபிதா.<br><br>11-ம் வசனம் விளக்கம்.<br>பொல்லாத தகப்பன் கெட்ட பிள்ளைகளுக்கு நன்மை செய்ய ஆசைப்பட்டால் நல்ல தகப்பன் (பரமபிதா) நல்லவர்களுக்கு (வேண்டிக்கொள்பவர்) நன்மை செய்வார் என்பது அதிக உறுதிப்படுத்தக்கூடிய காரியமே. | முந்தியநாள் போதனையை மறுபடியும் நினைப்பூட்டி, நமது ஜெபம் பிதாமகன் சம்பந்தத்திற்குள் அமைந்தது என்றும், இந்த மார்க்கத்தில் இவ்வித சம்பந்தத்திற்குள் பிரவேசித்து தனக்கு அவசியமானதை திட்டவட்டமாய் கைமேல் பலனாகப் பெற்றுக்கொள்ளுகிறதில்லை என்றும் சொல்ல. எனது பின்வரும் விளக்கம் பார்க்க:<br>பூலோக பிதாக்கள் பிள்ளைகளுக்குவேண்டிய நகை, உடுப்பு, சாப்பாடு, பலகாரம் முதலியவற்றை தாங்களே முன் அறிந்து கொடுக்கும் மனமுடையவர்களானால், பரமபிதா அதற்கு மேலாக அவ்வளவு அன்புடையவராயிருக்கிறார். முதல் மனுஷன் சிருஷ்டிப்பும் அவனுக்கு அவசியமான ஏதேன் தோட்டத்தையும் விவரமாகக் கதைரூபமாய்போதிக்கவும்.<br>23-ம் சங். 'ஆடும் மேய்ப்பனும்' என்ற கதை சொல்லி, 245-ம் கீர்த்தனம் 'தேவபிதா' என்ற பாட்டில் 1, 2 கவி பாடி, அதை விளக்கி, பாட்டு கற்றுக் கொடுக்கவும்.<br><br>கிறிஸ்தியான் டாசன்,<br>கவிசேஷகர்.<br><br>(இன்னும் வரும்.) |

## HEAVEN

## மோட்சம்

இராகம், நாசாவந்தி. ஆதிதாளம்.

('இம்மட்டும் ஜீவன் தந்த' என்றபடி பாடலாம்.)

### பல்லவி

என்ன இன்பம் பொங்குது ஏகுவோம் பொன்னகர்க்குப்
பின்னாலே ஓடிவாவேன்.

### அனுபல்லவி

பொன்னும் பளிங்கும் மின்னும் பன்னிரு கற்கள்வாசல்
பேரொளி வீசியே அம்மாநகர் முழுவதும்.

1. அலங்காரமாம் நல்ல அப்பெரும் பட்டணத்தின்
அதிசயங்களைப் பாரும் அன்பர்களே
ஆதிகாலந் தொடங்கி ஆயத்தஞ்செய்த யேசு
அதிபனாக நிற்பார் யாரும் பார்க்க
அல்லைதொல்லை யற்று அங்ஙனம் சோபங்கொண்டு
அனவரதமுஞ் சுரரோடு சுகிக்கலாம்
அதிதனை அனுதினம் பார்த்து மகிழலாம்— என்ன

2. என்றும் நிற்கும்படியாய் ஈசன் அந்நகரை
நன்று அமைத்தார் பண்டு
ரத்தினக் கற்களினால் அஸ்திபாரம் முழுதும்
சித்திரமாகப் போட்டார் பத்திராஜன்
எத்திசை யோர்கள் இவரது அருளினால்
இத்தரை மீதினில் சுத்தராய் நடந்தவர்
கர்த்தரைத் தரிசிப்பார் எட்டி நடந்துவா— என்ன

3. பன்னிரு பிதாக்கள் நாமம் பாரும் வாசல் பனிரண்டில்
பன்னிரு சீஷர் நாமம் பதிந்தன அஸ்திபாரம்
பின்னும் போதாதென்று பிதாவின் நாமம் அணிந்தோர்
விண்ணவர் கூடிநின் றாரவாரிப்பார்
எண்ணிலாக் கூட்டத்தார் ஏகோபித் தாராதிப்பார்
எண்டிசை யோர்களும் எதிர்பாராக் காட்சியை
விண்டுரைக்க எம்மால் ஏலாது ஓடிவா— என்ன

4. ஆட்டுக்குட்டி யேசு ஆசனம் வீற்றிருப்பார்
அல்பா ஓமேகா பாடும்கூட்டம் நிற்பார்
கறையில்லாப் பாலர்கூட்டம் காதலன் பக்கம் நிற்பார்

கற்பில் சிறந்தோர் வேறோர் கூட்டமாவார்
கர்த்தருக்காக ரத்தச்சாட்சிகளாய் மரித்த
பக்தர்கள் பலகோடி நித்தமும் தரிசிப்பார்
பார்க்க வுனக்குநல்ல நோக்க மிருக்குங்கால்— என்ன

5. பளிங்கு நதியொன்று பாயுது மத்தியில்
பன்னிரு கனிதரு நிற்குது பக்கத்தில்
ஒளிதரும் சுடர்களும் ஒயுது எக்காளும்
அல்லும் பகலு மங்கே இல்லை
இலங்கும் இமையவர் எங்கும் பிரகாசிப்பார்
அலங்கிர்தமாம் இந்த ஆனந்தக் காட்சிபார்
துலங்குது தூரம்பார் மயங்காதே ஓடிவா— என்ன

6. பல்லாயிரங் கோடி பரிசுத்த தூதர்கள்
பளபளப்பாக மின்னுவர்
பரம்பரம் நின்றொலிக்கும் சுடரொளிச் சேராபீன்
கேராபீனும் வல்ல செட்டை விரிப்பார்
காந்தவர் கணம்தோன்றி கானம் ஓசன்ன நன்று
காபிரியேல் அதிசய மிகாவேல் கூடி
கருத்துடன் அவர் கிருபாசனத்தைத் தேடி— என்ன

7. வீணை சுரமண்டலம் வீசுங் குருத்தோலை
காணக் கையிலேந்திக் களிகூருவார்
வெண்ணங்கி பொன்முடி விண்ணுடை பூண்டவர்
வித்தகன் புண்ணியம் விளம்பிடுவார்
துக்கம் துன்பம் துயரம் தீதான காரியங்கள்
பங்கப்படுத்தும் பலமான வுபாதைகள்
அங்கெங்கு மில்லாமல் அர்த்தகார்த்தம் செய்தார்— என்ன

8. இரட்சணிய சரிதை விஸ்தரிக்க வல்லோர்
இச்சபையி லுண்டோவென் றுரைப்பார்
அச்சமயத்தில் மோசே முக்ய ஆபிரகாமோடே
மெச்சிய இருடியர் தாவீதோடும்
வித்தக சீஷருடன் வேலை செய்தவரெல்லாம்
சுத்தமாய்ச் செப்பினபின் பின்வரு பொழிவுரை
விண்டுரை வேத நாயக னென்பார்— என்ன

V. D. K.

C. L. S. PRESS, MADRAS—1920


# மாதர் போதினி

No. 269 ஜூன் 1920 No. 6


## FRUIT BY DEATH

### 'செத்ததேயாகில் மிகுந்த பலன்'

'மெய்யாகவே, மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும்' (யோ. 12 : 24).

கிறிஸ்தவனே, 'நீ விதைக்கிற விதை செத்தாலொழிய உயிர்க்க மாட்டாதே.' இது யாவரும் அறிந்த சாதாரண சத்தியம். ஆயினும் இதினால் குறிக்கப்படுகிற ஆவிக்குரிய சத்தியமோ மகா முக்கியம். 'மெய்யாகவே, மெய்யாகவே' என்று சொல்லி, கர்த்தராகிய இயேசு இதின் முக்கியத்தை உணர்த்துகிறார். இந்த சத்தியத்தைக் கைக்கொண்டு நடவாதவன் தன் ஜீவனை இழந்துபோவான்; இதற்குக் கீழ்ப்படிகிறவனோ தன் ஜீவனை 'நித்திய ஜீவகாலமாய்க் காத்துக் கொள்வான்.' (25 வா.) எஜமான் சென்ற இந்த மரணபாதையில் அவரைப் பின்செல்லுகிறவனே அவருடைய ஊழியனென்னப்பட பாத்திரன். அவனே பிதாவானவரால் கனம் பண்ணப்படுவான். (26 வா.) இம்மரண பாதையை தன் அனுபவத்தில் அறியாதவன் அவ்வூழியத்திற்கு அபாத்திரனாகி கடைசிநாளில் வெட்கத்துக்குட்படுவான். ஆத்தும ஜீவனுக்கும் கிறிஸ்தவ ஊழியத்திற்கும் ஆதாரமாயிருக்கிற இந்த சத்தியத்தைக் குறித்து, கிறிஸ்தவனே, நீ கவலையற்றிருக்கலாமா?

**கோதுமை மணி தனித்திருக்கும் ஜீவியம்.**—'சாகாவிட்டால் தனித்திருக்கும்.' எகிப்தில் ஈராயிரம் வருஷங்களுக்கு முன் கட்டப்பட்டிருந்த கோரி ஒன்றை அங்கிலேயர் திறந்து சோதித்தார்கள்.

அங்கே அவர்கள் கொஞ்சம் தானியம் கண்டெடுத்தார்கள். அதை அவர்கள் நிலத்தில் போடவே, அந்தத் தானியங்கள் முளைத்தன. ஆயிரம் வருஷங்களாக முளைத்து பலன் கொடுக்கும் சக்தியை அவைகள் உடையவைகளாயிருந்தும், நிலத்தில் விழுந்து சாகாததால் அவைகள் தனித்திருந்தன; செத்தபோதோ முளைத்து வளர்ந்து கனி கொடுத்தன. கிறிஸ்தவனே, நீயே கோதுமை மணி, அதைப்போல நீயும் மகா விசித்திர விநோதமாய்ச் செய்யப்பட்டிருக்கிறாய். முளைத்து கனி கொடுக்கும் சக்தி அதினுள் அமைக்கப்பட்டிருக்கிறதுபோல, மிகுந்த பலனைக் கொடுக்கத்தக்க சத்துவங்கள் உன்னில் மறைத்து வைக்கப்பட்டிருக்கின்றன. நிலத்தில் விழுந்து தோல் அழுகி விதை சாகாவிட்டால், யாதொரு பலனும் இல்லாதிருப்பதுபோல, உன் சத்துவங்களை ஆண்டு மூடிக்கொண்டிருக்கிற மாம்ச அகங்காரம் உன்னில் செத்து, நீ உலகத்தின் வழிபாடுகளுக்கு சிலுவையில் அறையுண்ணப்படாவிட்டால் நீ பரிசுத்தமாய் ஜீவிக்கவும் முடியாது, உத்தம ஊழியஞ் செய்யவும் ஏலாது.

**மிகுந்த பலனைக் கொடுக்கும் ஜீவியம்.**—'செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும்.' நல்ல நிலத்தில் விழுந்தவிதைகள் 'சிலது நூறாகவும், சிலது அறுபதாகவும், சிலது முப்பதாகவும் பலன் தந்தது' என்று இரட்சகர் தாமே சொன்னார். ஆனால் மரணமே இவ்விதமாய் பரிபூரண பலனைக் கொடுக்கும் ஜீவியத்திற்கு வாசலாக தேவனால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவுடன் மரிக்குமுன் கிறிஸ்தவனே, நீ உனக்காக மாத்திரம் ஜீவிக்கிறாய். உன் திறமைகளை நீ உனக்கென்றே பிரயோகிக்கிறாய். உன் நன்மைகளை நீயே அநுபவிக்கிறாய். உன் அறிவை நீ விர்த்திசெய்யலாம், உன் நன்மைகளைப் பெருகச்செய்யலாம். ஆயினும் அவைகளால் உன் சுய சந்தோஷத்தையும் வாழ்வையுமே அதிகரிக்கச் செய்கிறாய். உன் நன்மைகள் உன் கூட்டைவிட்டு வெளியேறி மற்றவர்களுக்குச் செல்லுகிறதில்லை. ஆனால் கிறிஸ்துவுடன் நீ மரண ஐக்கியத்தில் இணைக்கப்படுவாயாகில், நீ 'நான்' என்ற நோக்கத்தால் ஆளப்படாமல் அன்பினால் ஆளப்படுவாய். பெற்ற நன்மை யாவையும் அன்பின் பலிபீடத்தில் பிரதிஷ்டை செய்வாய். கிடைத்தவைகளைக்கொண்டு உன் நிலைமையை அளக்காமல் கொடுத்தவைகளைக்கொண்டு அளப்பாய். நிலத்தில் சாகாத கோதுமை மணி தனித்திருக்கும். செத்த மணியோ, ஆகாயத்திலிருந்தும், தரையிலிருந்தும், தண்ணீரிலிருந்தும் மென்மேலும் சாரத்தைப்பெற்று விர்த்தியாகிறது. மென்மேலும் நன்மைகளைப் பெறுவதற்கு மரணமே வாசல். மரணமே ஆகாயத்தோடும் தரையோடும் வித்தை ஜீவனின் ஐக்கியத்தில்



இணைத்துவிடுகிறது. அதுபோல, மரண ஐக்கியமே உன்னை உன் எஜமானோடு புதிதான ஜீவனின் சம்பந்தத்தில் இணைக்கிறது. நிமிஷந்தோறும் அவரிலிருந்து அன்பு, பொறுமை, சாந்தம், தாழ்மை, வல்லமை முதலிய கிருபையின் ஈவுகள் உனக்குள் பாய்ந்துகொண்டேயிருக்கும். அதிகமாய்ப் பெறுகிற நீ அதிகமாய் மற்றவர்களுக்குக் கொடுப்பாய். அதிகமாய்க் கொடுக்கிற நீ அதிகமாய்ப் பெறுவாய். உள்ளே பெற்று வெளியே கொடுப்பாய். இவ்விதமாய் வாரி இறைத்தும், விர்த்தியடைவாய். கிறிஸ்துவின் அளவற்ற ஐசுவரியமே உன் வற்றாத ஊற்று. ஆ, நீ செத்தாயாகில் எவ்வளவு நலமாயிருக்கும்!

'கீழே வேர், மேலே கனி.' (ஏசா. 37 : 21.) வேரின்றி கனி இல்லை. சாகாவிட்டால் வேர் இல்லை. விதை நிலத்தில் விழுந்து சாகவே துளிர் மேலே எழும்புகிறது, வேர் கீழே போகிறது. கீழே போகிற காணப்படக்கூடாத வேர்தான் வெளியே காணப்படுகிற ஜீவனுக்கு ஆதாரம். வெளியே செடி ஆகாயத்தோடு ஐக்கியப்பட்டு அலங்காரமாய் நிற்கிறது. உள்ளே விதைமரித்த இடத்தில் வேர் அதிக ஆழமாய்க் கீழ்நோக்கிச் செல்லுகிறது.

## A COLD BATH

## குளிர்ந்த நீர் ஸ்நானம்

இவ்விஷயத்தில் நாம் ஒரு பிழை செய்வதாகத் தேர்ந்த வைத்தியர் கூறுகிறார்கள். சோதித்துப் பார்க்கையில் அவர்கள் சொல்வது சரியென்று தெரியவருகிறது. நாம் ஸ்நானம் செய்கையில் தலையை முதலாவதாக நனைத்துத் தலையிலிருந்தே தண்ணீர் விடுகிறோம். அது சரியான முறையல்லவாம். நாய், ஆடு, மாடுகளைக் கவனித்தால் அவைகள் தண்ணீரில் இறங்கிச் சிறிதுநேரம் காலை நனைத்துக்கொண்டு அதன்பின் முழுகுகின்றன. இதனுடைய லாபம் என்னவெனில், இடைவிடாமல் அதிகமாய்த் தலைக்கே ஓடிக்கொண்டிருக்கிற இரத்தமானது [illegible] வந்து தேக [illegible] சமப்படுத்துகிறது. இதற்கு மாறாக நாம் முதல் முதல் தலையில் தண்ணீர் விடுகிறது, எவ்வளவோ [illegible] என்று சொல்ல வருகிறார்கள். அது வாஸ்தவமாகக் காணப்பட்டாலும் அது [illegible] சாந்தியே தவிர மற்றப்படி நிலையானதல்ல. கொஞ்ச

கோத்தில் அது மாறிப்போம். முதலில் பாதங்களையும் காலையும் நனைத்து, பிற்பாடு தலைக்கு ஊற்றுவதே நிலையான ஆரோக்கியத்தைத் தரும். வைத்தியர் சொன்னதைவிட்டு மாத்திரமல்ல, பரீட்சித்துப் பார்த்தும் எழுதியிருக்கிறது. ஆகையால் மற்றவர்களும் இதன் உண்மையைப் பரீட்சித்துப் பார்த்து அதன்மேல் பின்பற்றக் கடவர்கள்.

Grace Paul,
'Rob Roy'.

## 'UPON THIS ROCK I WILL BUILD MY CHURCH'

## 'இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்'

கிறிஸ்தவர்களாகிய நம்மிலநேகர் பலமுறைகளில் இவ்வசனத்தின்பேரிலிடறுகிறோம். 'யோனாவின் மகனாகிய சீமோனே . . . நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன். பாதாள வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை. பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை நானுனக்குத் தருவேன்.' நமதாண்டவர் முதன்முதல் பேதுருவைச் சந்தித்தபோது மலையப்பர் அல்லது கல் எனப் பொருள்படும் கேபா (பேதுரு) என்னும் நாமத்தால் தம்மிடம் அழைத்தார். இப்பெயர் பேதுருவின் இயல்பான தைரியத்திற்கு ஏற்றதாய்க் காணப்பட்டது. ஆண்டவரைவிட்டு உத்தம அறிக்கை செய்ததற்காகவே ஆண்டவர் (மத். 16: 17-19) அதிகம் வியந்துகொண்டு அவரை ஆசீர்வதித்தார். இவ்வாக்குத்தத்தம்,

(i) பெந்தெகொஸ்தே நாளில் (அப். 2 : 41) பேதுருவின் பிரசங்கத்தால் 3000 பேர்கள் குணப்பட்டதாலும்,

(ii) பின்னும் 5000 பேர்கள் அப். 4 : 4 வசனத்தின்படி ஏற்றுக் கொள்ளப்பட்டதாலும்,

(iii) கொர்நேலியுவின் ஞானஸ்நானத்தின் மூலமாய் பேதுரு (அப். 10) புறஜாதிகளிடத்தில் சபைக்கு ஓர் வழியைத் திறந்தபடியாலும், நிறைவேறிற்று.

அப்போஸ்தலரெல்லாருள்ளும் பேதுரு முதன்மையான அதிகாரமுடையவரென்றாவது, அல்லது பேதுருவுக்குப் பின்தொடர்ந்து



வருபவர்களும் அவருடைய அதிகாரத்தை யுடையவர்களென்றாவது, ரோமான் கத்தோலிக்க கொள்கைபோல, துணிந்து கூறுவது மிகத் தவறு. பேதுருவின் விசுவாசத்திற்குரிய உத்தம அறிக்கைக்காக அவரது நாம அர்த்தமடங்கத்தக்கதாய் அருளப்பட்ட ஆண்டவருடைய இந்த ஆசீர்வாதமான வாக்குத்தத்தம், பேதுருவுக்கு மாத்திரமல்ல, அப்போஸ்தல ஊழியஞ்செய்த, செய்கிற எவர்க்கும் ஏற்றது.

மூலைக்கல்லாகிய கிறிஸ்துவுக்கு அடுத்த கிறிஸ்துவின் சபையானது அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் எனப்படுவோரின் அஸ்திபாரத்தின்மேலேயே கட்டப்பட்டிருக்கிறதென்பதை எபே. 2 : 20ல் தெளிவாய்க் காணலாம். அப்போஸ்தலர் சபையின் அஸ்திபாரத்திற்கு ஏற்ற கற்களாயிருந்தார்கள். நகரத்தின் மதிலுக்கு 12 அஸ்திபாரக் கற்கள் இருந்தன. அவைகளில் ஆட்டுக்குட்டியானவருடைய பன்னிரு ('யூதாஸ்காரியோத்துக்குப் பதிலாக மத்தியா என்பவன் தெரிந்துகொள்ளப்பட்டான்' அப். 1 : 26) அப்போஸ்தலரின் பன்னிரு நாமங்களும் பதிந்திருந்தன. வெளி. 21: 14.

வயதில் முதிர்ந்த பிஷப் இக்னேஷியஸ் அவர்கள் இரத்தச்சாட்சியாய்க் காட்டுமிருகங்களுக்கிரையாக எறியப்படும்படி கொண்டுபோகப்பட்டபொழுது, 'கிறிஸ்துவுக்குள் இப்பொழுது நானுமொரு அப்போஸ்தலனாகிறேன்' என்றார். ஆனதால் அப்போஸ்தலர்க்குள் பேதுருவுக்கு நாம் முதன்மையான இடத்தைக் கொடுப்பது ரோமையின் பாத்தியதைக்குத்தானு மொவ்வாது. 'பரி. பேதுருவைப்போல வல்லமையிலும் கண்ணியத்திலும் மற்ற அப்போஸ்தலரும் சமமாகவேயிருந்தார்கள்.'

'பாதாளவாசல்கள்' மரணத்தை அல்லது அழிவைக் குறிக்கும். கிறிஸ்துவின் சபையை இவை மேற்கொள்ளமாட்டா. மரணத்திற்கு அதிகாரியாகிய பிசாசானவன் (எபி. 2 : 14) தானும் தன் பிரயாசத்தை வீணானதாகவே காண்பான். பூலோகத்தில் தாம் ஸ்தாபித்த சபையையே ஆண்டவர் இக்கோத்தில் பரலோக ராஜ்யமெனச் சொன்னார். அப்படியிருக்குமானால் அதன் திறவுகோல்கள் எவை? அவை கிறிஸ்து சபையின் அதிகார சின்னங்களேயாம். அப்போ திறக்கப்படும் வாசல்களெவை? அவை பரலோக ராஜ்யமும் அதன் ஆசீர்வாத சம்பூரணங்களுமே. பெந்தெகொஸ்தே நாளில் 3000 யூதர் குணப்படுத்தப்பட்டதாலும், புறஜாதிகளுள் முதற்கனியாக கொர்நேலியுவும் குடும்பமும் ஞானஸ்நானம் பெற்றதாலும், பேதுரு உண்மையாகவே பரலோக ராஜ்யத்தின் வாசல்களைத் திறந்தார் அல்லவா? இதற்குச் சமானமாய் ஸ்தம்பனவித்தைக்காரனாயிருந்த பெரிய எத்தனாகிய சீமோன் (அப். 8) விஷயமாய் பேதுரு அக்கதவு

களை அடைத்தாரல்லவா? அபிஷேகம்பண்ணப்பெற்ற கிறிஸ்துவின் உத்தம பக்தர்கள் பேதுருவுக்குச் சமமாகத் திறவுகோல்களை யுடையவர்களாகவும், ஞானதானமாகிய நற்கருணையையும் சுவிசேஷ சத்தியத்தையும் அதன் ஆசீர்வாத பொக்கிஷத்தையும் பகிர்ந்துகொடுக்கிறவர்களாகவும் இருக்கிறார்கள் என்பதை மறுப்போமா?

இராஜ்யத்தின் பொக்கிஷக்காரனாய் எலியாக்கீம் தேவனால் அழைக்கப்பட்ட சம்பவமாய், 'தாவீதினுடைய வீட்டின் திறவுகோலை அவன் தோளின்மேல் வைப்பேன்; ஒருவரும் பூட்டக்கூடாதபடிக்கு அவன் திறப்பான், ஒருவரும் திறக்கக்கூடாதபடிக்கு அவன் பூட்டுவான்' (ஏசா. 22 : 22) என்னும் வசனம் நமக்குப் போதிப்பதென்ன? ஆண்டவர் தம்மையே குறித்து திறவுகோல் விஷயமாய் வெளிப்படுத்தியிருப்பது, 'தாவீதின் திறவுகோலை உடையவரும், ஒருவரும் பூட்டக்கூடாதபடிக்குத் திறக்கிறவரும், ஒருவரும் திறக்கக்கூடாதபடிக்குப் பூட்டுகிறவருமாய் இருக்கிறவர்' வெளி. 3 : 7 இலும் அடுத்துவரும் வசனத்திலும் காணலாம்.

ஆகவே, இவ்வாக்கியங்களை (மத். 16: 17–19) ஆண்டவர் பிரயோகித்து பேதுருவின் உண்மையான விசுவாச அறிக்கைக்காக அவரை ஆசீர்வதித்தார்.

பேதுரு கிறிஸ்த சபைக்குத் தலையென்றாவது, பேதுருவைத் தொடர்வோர் அவரைப்போல்வாரென்றாவது தப்பிதமான எண்ணங் கொள்ளாமல், நித்திய கன்மலையும் போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமுமாகிய (1 கொரி. 2: 11) இயேசுகிறிஸ்துவையே நோக்கி, மரியாளின் தெரிவையே நமதாக்கிக்கொண்டு ஜீவிப்போமாக.

## MICHAEL

## மைக்கல்

கடும் குளிர் நிறைந்த ருஷியா தேசத்தில் மிகவும் பஞ்சமாயிருந்த காலத்தில் சீமோன் என்னும் நாமமுடைய சப்பாத்து தைக்கிறவன் ஒருவன் வசித்திருந்தான். மனைவி, தன் கணவனிடம் கொஞ்சம் பணம் கொடுத்து தோல் வாங்கிவரும்படி வெளியே அனுப்பினாள். அவன் வெளியே போனபிறகு, இவள், 'ஐயோ! காலமோ பஞ்சமாயிருக்கிறது. ரொட்டி கொஞ்சம்தான் இருக்கிறது. என்ன செய்வது! குளிர் ஒருபக்கம் வதைக்கிறது' என்று பலவாறாக தன் வருத்தங்களைச் சொல்லி அங்கலாய்த்தாள். இவள் தன் சட்டையையும் கழற்றித் தன் கணவனுக்குப் போட்டு அனுப்பிவிட்டாள்.



வெளியேபோன சீமோனைச் சற்று கவனிப்போம். சீமோன் போகும் வழியில், குளிரால் நடுங்கிக்கொண்டு போர்வையில்லாமல் முகங்குறாவி உட்கார்ந்திருந்த ஒரு மனிதனைக் கண்டு, கிட்டே நெருங்கி, அம்மனிதனுக்குத் தன் மனைவியின் சட்டையைக் கழற்றிக் கொடுத்து, அவனையும் கூட்டிக்கொண்டு இரவில் வீடுவந்து சேர்ந்தான். சற்று அந்த அன்னியனை நோக்குவோமானால், அவன் சாப்பிட்டு ஒரு யுகம் ஆகிறதுபோலும். குளிரால் உதறுகிறான். 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்றதுபோல், அவன் மனசஞ்சலம் திட்டமுந் தெளிவுமாய் பட்டப்பகல்போல் முகத்தில் தெரிகிறது. மனத்துயரத்திற்கு அறிகுறியாக அவன் வாய் திறவாமலிருந்தான்.

இருவரும் வீடுவந்து சேரவே, சீமோன் பெண்சாதியின் நிலைமையைச் சொல்லவேண்டியதில்லை. பெண்களுக்குத்தானே வீட்டுக் கஷ்டம் நன்றாய்த் தெரியும். தன் கணவனைக் கண்டதும், அவள் 'தோல் எங்கே?' என்று கடுப்பாய்க் கேட்டாள். சீமோன் வெகு அமரிக்கையாய் பணத்தை எடுத்துக் கொடுத்துவிட்டான். வெகு உக்கிரத்துடன் மனையாள், 'என் சட்டை எங்கே? என் சட்டையை அவனுக்குக் கொடுத்ததுமல்லாமல், அவனையும் இழுத்துக்கொண்டு வந்தாயோ' என்று பலவாறான ஆங்கார வார்த்தைகளைப் பேசினாள். சீமோன், இவைகளைக் கேட்டும் பொறுமையுடனே, 'சாப்பாடு கொண்டுவா' என்றான். 'சாப்பாடுமில்லை, ஒன்றுமில்லை. எல்லாம் பல்லைக் கடித்துக்கொண்டு படுக்கைக்குப் போங்கள்' என்று கத்தினாள். இவள் கத்த கத்த, சீமோனின் பொறுமை அதிகரித்தது. அவன் அவளைக் கூப்பிட்டு, 'தேவனின் அன்பு நம்மிடம் இருக்கவேண்டாமா? அவர் எவ்வளவாய் நம்மை நேசிக்கிறார்' எனவே, பெண்ணின் முகம் வேறுபட்டது. வெட்கத்தோடு தலைகுனிந்து நின்று, உடனே, அந்த ஏழைக்கும் தன் கணவனுக்கும் ஆகாரம் கொடுத்து, தானும் புசித்தாள். இதுவரையில் வாய் திறவாமல் முகங்குறாவி இருந்த அந்த ஏழை, சாப்பாட்டில் உட்கார்ந்தவுடனே ஸ்திரீயைப் பார்த்து புன்னகைகொண்டான்.

எல்லாரும் படுக்கைக்குப் போனார்கள். பெண்ணுக்கோ தூக்கம் பிடிக்கவேயில்லை. மறுநாளைக்கு சாப்பாட்டிற்கு என்னசெய்வது என்னும் கலக்கமே மேலிட்டிருந்தது. சீமோனிடம் இதைப் பற்றிச் சொல்லவே, அவன் தன் வழக்கப்படியே, 'சரீரத்தைப் படைத்த ஆண்டவர் அதற்காகக் கவலைப்படமாட்டாரோ? அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும். நாளையத்தினம் தன்னுடையதுகளுக்காகக் கவலைப்படும். நீ அயர்ந்து நித்திரைசெய்' என்றான்.

பொழுது விடிந்தது. அந்த ஏழைக்குப் போக்கு எங்குமில்லையென்று கண்ட சீமோனின் மனைவி, தன் புருஷனுடன் கலந்து பேசி, இருவருமாக அவனிடம் சென்று, அவன் வரலாற்றை வினவ, அவன் அதைக்குறித்து யாதொன்றும் கேட்கவேண்டாமென்று சொல்லி, தன் பெயர் மாத்திரம், 'மைக்கல்' என்று அவர்களுக்கு வெளியிட்டான். அப்பொழுது சீமோன், 'வேலை செய்தால் தானே அப்பா, இக்காலத்தில் வயிற்றுப் பிழைப்புக்கு ஏதாகிலும் சம்பாதிக்கலாம். உனக்கு என்ன தொழில் தெரியும்?' என்று கேட்க, மைக்கல், தனக்கு யாதொரு வேலையும் தெரியாது என்று கூறி, சப்பாத்து செய்யும் வேலை கற்றுக்கொள்வதாக ஒப்புக்கொண்டான்.

மைக்கல் வெகு சீக்கிரமாக வேலை கற்றுக்கொண்டான். செய்த வேலையும் வெகு சுத்தமாயும் நேர்த்தியாயும் இருந்தது. தன் வேலையிலேயே கண்ணுங் கருத்துமாக இருப்பது அவன் வழக்கம். வேலைசெய்யும் நேரமாவது, வேலை ஒழிந்த நேரமாவது பராக்கு பார்ப்பதுமில்லை, வீண்பேச்சு பரிகாசம் பேசுவதுமில்லை. தன் வேலை உண்டு, சாப்பாடு உண்டு என்று இருந்தான். வேறு விஷயங்களில் தலையிடுவதில்லை. மைக்கல் வேலைசெய்யத் தொடங்கின நாள் முதற்கொண்டு, சப்பாத்துக்கு கிராக்கி அதிகம் வந்தது. வியாபாரம் பலத்துப்போயிற்று.

இப்படியிருக்கையில், பிரபு ஒருவர் குதிரை வண்டியில் ஏறி தடபுடலாக வந்து இறங்கினார். வேலைக்காரன் ஒரு மூட்டை தோல் தூக்கிக்கொண்டு வந்தான். பிரபு, சீமோனுடனே, 'இந்தத் தோல் ஜெர்மனியிலிருந்து வந்தது, விலையுயர்ந்த தோல், இந்த பக்கம் இது கிடைப்பது அரிது. ஒரு வருஷத்திற்கு பழுதாகாமலிருக்கக் கூடிய உயர்ந்த குதிகாலுடைய சப்பாத்து (High-heeled shoes) உன்னால் செய்யக்கூடுமா? கூடுமானால் வேலையை ஒப்புக்கொள், இல்லாவிட்டால் வீணாய் தோலை நாசப்படுத்தாதே. ஒரு வருஷத்திற்கு தாங்கவேண்டும். இது கண்டிப்பு!' என்று வெகு நிர்மானமாய்ப் பேசினார். சீமோன் மைக்கலுக்குச் சைகை காட்டி, வேலையை எடுக்கலாமா என்று கேட்டு, மைக்கல் சம்மதிக்கவே, வேலையை எடுத்துக்கொண்டான். மைக்கல் பிரபுவின் காலுக்கு அளவு எடுக்கும்போது, துரை நின்றுகொண்டிருந்த கதவின் மூலையை நோக்கி சிரித்தான். இதுதான் மைக்கல் இரண்டாம் முறையாக நகைத்தது. பெரிய துரைக்கு அளவு எடுக்கையில், இவ்வளவு கவலையீனமாக பராக்குபார்த்துக்கொண்டு, மைக்கல் அநாவசியமாக நகைப்பதைக் கண்ட சீமோனுக்கு இருந்த ஆச்சரியம் அதிகம். துரை வெகு



கண்டிப்பாக உத்தாரம் கொடுத்து வெளியேறுகையில், சிறிது தலை குனியாமையால், வாசல் நிலை அவர் தலையில் இடித்து, தலையைத் தடவிக்கொண்டே வண்டியில் ஏறினார்.

துரைக்குச் சப்பாத்து செய்ய மைக்கல் உட்கார்ந்தான். சீமோனின் மனைவி, இவன் வேலையைக் கண்டு, இவன் இரட்டைத் தோலுள்ள உயர்ந்த குதிகாலுள்ள சப்பாத்து (High-heeled shoes) செய்வதற்குப் பதிலாக, ஒற்றைத்தோலுள்ள சப்பாத்து (Slippers) செய்வதாக அறிந்தும், தான் குறுக்கே ஒன்றும் பேச மனமற்றவளானாள். வேலையும் முடிந்தது. துரையின் உத்தரவுக்கு மாறாக ஒற்றைத்தோலுள்ள சப்பாத்தைச் செய்து மைக்கல் முடித்தான். இதைக் கண்டதும் சீமோனுக்கு உண்டான கோபத்திற்கும் ஆச்சரியத்திற்கும் அளவில்லை. இதுவரையில், மைக்கல் தப்பிதம் ஒன்றும் செய்ததேயில்லை. இதைக்குறித்து ஆச்சரியமும், துரைக்கு வேறே தோல் வாங்கிக் கொடுக்க முடியாத நிலைமையில் இருக்கிறதைக் குறித்து வருத்தமுமுடையவனாகி, சீமோன் மைக்கலை ஏன் அவன் அப்படித் தவறினான் என்று கேட்டுக்கொண்டிருக்கையில், கதவு தட்டப்பட்ட சத்தம் கேட்டது. பிரபுவின் வேலைக்காரனே கதவைத் தட்டினவன். அவன் இறைக்க இறைக்க ஓடிவந்து, சீமோனோடு, 'ஐயா, துரை இறந்துபோனார். அவர் கொடுத்த தோலில் பிணத்துக்குப் போட்டுவைக்க, ஒற்றைத்தோல் சப்பாத்து (Slippers) செய்யும்படி துரைசானி சொல்லி அனுப்பினார்கள்' என்று சொல்லவே, சீமோன் பிரமிப்பினால் நிறைந்தவனாகி, செய்து வைத்திருந்த சப்பாத்தை வேலைக்காரனிடம் கொடுத்து அனுப்பினான்.

ஒரு வருஷத்திற்கு தாங்கக்கூடிய சப்பாத்துக்கு அளவு கொடுத்த பிரபு அதே தினம் இறந்து அந்த சப்பாத்தே அதே நாளில் அவனோடு மண்ணுக்கு இரையாகப் போடப்பட நேர்ந்தது என்ன பரிதாபம்! பரிதாபம்! வாசல் நிலை தலையில்பட்ட இடியே மரண இடி. என்ன விந்தை இது! சீமோன் மைக்கலிடம் அப்புறம் அந்த சப்பாத்தைக் குறித்து பேசத்துணியவில்லை. தான் கோபப்பட்டதற்காகத் தன்னையே கடிந்துகொண்டு, மைக்கல் சாதாரண மனிதனல்ல என்று மாத்திரம் அறிந்துகொண்டான்.

மறுதினம், ஒரு கிழவி அம்மான், இரண்டு சிறு பெண்பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு சப்பாத்துக்கு அளவு கொடுக்க சீமோனிடம் வந்தான். அப்பெண்களைப் பார்த்தால் இரட்டைப்பிள்ளைகள் என்று அறியாதோர் இல்லை. ஒரு பிள்ளைக்கு ஒரு கால் கொஞ்சம் முடமாயிருந்தது. முடமான பிள்ளையின் காலுக்கு மைக்கல் அளவு எடுத்தான். இரண்டு பெண்கள் கூடினால்தான் பேச்சுக்கு

குறைச்சலில்லையே. கிழவியம்மாளைக் கண்ட சீமோனின் மனைவி வந்து அந்த அம்மாளின் குடும்ப சங்கதியை விசாரித்தாள். அந்த அம்மாள் இப்பிள்ளைகள் தாயுந் தகப்பனுமற்ற அநாத பிள்ளைகள் என்றும், எப்படி அவர்கள் தகப்பன் ஒரே நாளில் மரம் விழுந்து செத்தும், தாயும் மறுநாளில் இறந்தும், ஆண்டவரே இப்பிள்ளைகளைக் காப்பாற்றுகிறார் என்றும் சொல்லவே, கதையைக் கேட்டுக் கொண்டிருந்த மைக்கல் சிரித்தான்.

அவன் முகம் பிரகாசித்தது. அவன் இருந்த இடமெல்லாம் ஒளியால் நிரம்பிற்று. சீமோனுடனே, 'நான் இனி இங்கே நிற்க முடியாது. உமது வேலையை ஒப்புக்கொள்ளும்' என, சீமோன், 'நீர் சாதாரண மனிதனல்ல என்று உமது நடபடிக்கையால் அறிந்தோம். ஆதலால் உம்மைப்பற்றி எதுவும் கேட்க நாங்கள் துணியோம். ஒன்று மாத்திரம் நீர் எங்களுக்குச் சொல்லவேண்டும்' என்று கேட்க, மைக்கல் அது என்னவென்று வினவ, சீமோன், மைக்கல் தன்னோடிருந்த காலத்தில் மூன்று முறை சிரித்த நோக்கத்தின் விபரம் என்னவென்று கேட்டான். மைக்கல், தான் அம்மூன்று தரமும் மூன்று சத்தியங்களைப் படித்துக்கொண்டதாகச் சொல்லவே, தாங்களும் அவைகளைப் படித்துக்கொள்ள, அம்மூன்று சத்தியங்களும் என்னவென்று வகை விவரமாய்ச் சொல்லக் கேட்டதின்பேரில் மைக்கல் பின்வருமாறு சொன்னான்:—

'நான் தேவனிடமிருக்கும் மைக்கல் என்னும் தேவதூதன். தண்டனையாகத் தேவன் என்னை இவ்வுலகிற்கு அனுப்பினார். ஒரு தரம் ஒரு ஸ்திரீ இரட்டைப்பிள்ளைகளைப் பெற்ற அன்றையத் தினமே, ஆண்டவர் என்னை அவளுடைய ஆத்துமாவை எடுத்துவர அனுப்பினார். இப்பொழுது வந்த பெண்களின் தாயே அவள். நான் அவள் ஆத்துமாவை எடுக்கப்போகையில், அந்த அம்மாள் பிள்ளைகள்மேலிரங்கித் தனக்கு இன்னங் கொஞ்சகாலம் உயிரைக் கொடுத்துவைக்க வேண்டினாள். நான் அவள் வேண்டுகோளுக்கு இரங்கி ஆண்டவரிடம் மேலே போனேன். என் கீழ்ப்படியாமையினிமித்தம் ஆண்டவர் என்மேல் உக்கிர கோபமாகி, என்னை உலகிற்கு அனுப்பி மூன்று சத்தியங்களைக் கற்கச் சொன்னார். நான் உலகிற்கு வந்ததும், என் செட்டைகளெல்லாம் பறந்து போயின. ஒளி மங்கிப்போய் முகங்குறுவி சீமோன் என்னைக் கண்ட இடத்தில் உட்கார்ந்தேன்.

முதலாவதாக, எனக்கு சாப்பாடு கிடைத்தபோது நான் நகைத்தேன். மனுஷருக்கு என்ன உண்டு என்னும் முதலாஞ் சத்தியத்தை



அப்போது அறிந்தேன். மனிதருக்கு உள்ளது அன்பே. அன்பினாலல்லோ நான் போஷிக்கப்பட்டேன்.

பிரபு வந்தபோது இரண்டாம் முறை சிரித்தேன். ஏனெனில், நான் அவன் காலுக்கு அளவு எடுக்கையில் யமதூதன் மூலையில் நின்றுகொண்டு அவன் உயிரை எடுக்கக் காத்திருந்தான். என் கண்களுக்கு மாத்திரம் அவன் தோன்றலாயினான். ஒரே நாளில் உயிர்போகப்போகிறது தெரியாமல், அப்பிரபு ஒரு வருஷத்திற்கு தாங்கக்கூடிய சப்பாத்திற்கு அளவு கொடுத்தான். இரண்டாஞ் சத்தியமாக, மனுஷருக்குத் தெரியாதது இன்னதென அறிந்துகொண்டேன். நாளைக்கு நடக்கப்போகிறது இன்னதென்று மனிதர் அறியார்கள்.

மூன்றாவதாக, இந்த கிழவி அம்மாள் சொன்ன சரித்திரத்தைக் கேட்டு நகைத்தேன். அச்சமயம் மனிதருக்குத் தெரியவேண்டியது என்ன என்ற சத்தியத்தை அறிந்தேன். தாய் பிள்ளைகளுக்காகக் கவலைப்பட்டாள் என்று நான் அவள் ஆத்துமாவை வாங்கவில்லை. தாய் இறந்தும் ஆண்டவர் அப்பிள்ளைகளுக்காகக் கவலைப்படுகிறார் என்று இன்று அந்த அம்மாள் சொன்னாள். நானும் அதை மறந்து போனேன். பரமபிதாவே தமது பிள்ளைகளுக்காகக் கவலைப்படுகிறார் என்று மனிதர் அறியவேண்டியது.

இதைச் சொல்லி முடியவே, செட்டைகளை உடையவனாகி, மைக்கல், சீமோனின் குடும்பத்தை ஆசீர்வதித்துக்கொண்டே மேலே சென்றான்.

ஆம், பிரியமானவர்களே! கடவுள் நமக்குக் கொடுத்திருக்கும் அன்பு என்னும் நற்குணத்தை விர்த்திபண்ணுகிறோமா? மறு நிமிஷம் நடக்கப்போகிறது இன்னது என்பதை அறியக்கூடாமலிருக்கிறவர்களாகிய நாம் ஒவ்வொரு நிமிஷமும் தேவனுக்குப் பயந்து நடக்கிறோமா? நாம் பலவீனர் என்பதை உணர்ந்து கடவுளிடமே நமது கவலையை எல்லாம் எறிந்துவிடுகிறோமா?

இம்மூன்று கேள்விகளையும் நாம் தினந்தினம் நம்மைக் கேட்கிறவர்களாயிருக்கக்கடவோம்.

Translated by Miss Lydia Vedanayagam.

## A MODEL LESSON FOR THE BIBLE WOMEN'S WORK

# எப்படி இந்துப் பெண்களுக்கு வேதோபதேசம் செய்வித்தல்

மலைப்பிரசங்கம் தொடர்ச்சி.

| விஷயம் | போதனை முறை |
|---|---|
| 8-ம் பாடம். மத். 7 : 13-21.<br>**இருவித போதனைகள்.**<br>(1) இருவித வழிகள். வச. 14.<br>இடுக்கமான வழி.<br>விசாலமான வழி.<br>(2) இருவித இடம். வச. 14.<br>மோட்சம், நரகம்.<br>(3) இரு வகுப்பார். வச. 14.<br>ஏராளமானவர்கள், சிலர்.<br>(4) இருவித செடி. வச. 16.<br>திராட்சசெடி, முட்செடி.<br>(5) இருவித மரம். வச. 17.<br>நல்லமரம், கெட்டமரம்.<br>(6) இருவிதப் பழம். வச. 16.<br>திராட்சப் பழம், அத்திப் பழம்.<br>(7) இருவித பலன். வச. 17.<br>நன்மை, தீமை.<br>(8) இருவித தீர்ப்பு. வச. 18.<br>கனிகொடுத்தல், வெட்டப்படல்.<br>(9) இருவித நிலைமை. வச. 19.<br>பரலோக ராஜ்யம், நரகம். வச. 21. | முந்திய பாடத்தின் சுருக்க போதனைகள். மனுஷருடைய போதனைக்கும் கிறிஸ்துவின் போதனைக்கும் உள்ள வித்தியாசம் அறிந்து விளக்கிக் காட்டவும். இதில் வரும் குறிப்பு வார்த்தைகள், வாசல், இடம், மனுஷர், செடி, பழம், மரம் முதலியவைகள் யாரைக் குறிக்கும் என்று பல கேள்விகளால் விளக்கிக் காட்டவும். திருஷ்டாந்தம் : ரோட்டு, ரெயில், கப்பல், வாகனங்கள், முதலியவற்றால் பிரயாணம் செய்யும் வகைகளையும், இதில் மனுஷருக்குப் பிரயாணத்திற்கு லேசாக சர்க்கார் ஏற்படுத்தியிருப்பது எது என்றும், அப்படியே ஆத்துமா உடலைவிட்டு பிரிந்து பிரயாணம் செய்யும் வழியையும் சொல்லவும். சன்னியாசிகள், யோகிகள், ஜீவனைக் காப்பாற்றும்படியாக உலகத்தை வெறுத்து, வீடற்று, வஸ்திரமற்று, ஒருநேரம் அருந்தி, அல்லது அற்ப போஜனம், பால், பழம், தாபரவர்க்கம் முதலியவற்றைப் புசித்து, சரீரங்களை இம்சித்து வருவது இடுக்கமான ஜீவியம். அப்படிப்பட்டவர்கள் நோக்கம், மோட்சம் அடைய. இப்படியே 9 காரியங்களை விளக்கிக் காட்டவும். தினை விதைத்தால் தினை, வினை விதைத்தால் வினை விளையும். 136-ம் கீர்த்தனம், 'நற் |



| விஷயம் | போதனை முறை |
|---|---|
| | கனி தேடிவரும்' என்ற கவிபாடவும். 14-ம் வசனம் மனனம். |
| 9-ம் பாடம். மத். 7 : 21-29.<br>**பிரசங்கத்தின் திருஷ்டாந்த விளக்கம்.**<br>(1) இருவித பக்தர். வச. 22.<br>தேவ கட்டளைப்படி நடக்கிறவர்கள்.<br>தேவநாமத்தை உச்சரிக்கிறவர்கள்.<br>(2) இருவித வேலை. வச. 23.<br>நிலையுள்ள நல்ல வேலை.<br>அழிந்துபோகும் போலி வேலை.<br>(3) இருவித வீடு.<br>கன்மலையின் கழிப்புள்ள வீடு.<br>மணல்தரையின் மாய்கையின் வீடு.<br>(4) இருவித மனுஷர். வச. 24.<br>புத்தியுள்ள பக்தன்.<br>புத்தியில்லாத அவபக்தன்.<br>(5) இருவித அஸ்திபாரம். வச. 26.<br>கன்மலையின் கனமான வேலை.<br>ஆற்றுக்குள் தோண்டும் அழிவுள்ள வேலை.<br>(6) இருவித பலன்.<br>நிலைத்திருத்தல்.<br>அழிந்துபோகுதல். | மேற்காட்டிய பிரசங்கத்தைக் கேட்ட மனுஷனின் விசுவாசத்தையும், கேட்காதவனின் நிர்ப்பந்த நிலைமையை காட்டும் உவமானம், மலை, வீடு, மணல் அஸ்திபாரம் முதலிய வார்த்தைகளையும், அவைகள் அடங்கிய இருகாரியங்களையும் விளக்கிக் காட்டவும். கிறிஸ்துவின் உபதேசங்கள் அழியாத கன்மலை வீடு, மற்ற மனுஷ உபதேசமோ அழியும் ஆற்றின் வீடு. இந்துக்கள் வழங்கிவரும் விதவையிருப்பு, சிசுவிவாகம், இழவு, சடங்கு, சகுனம், குறி, கோடாங்கி, சாஸ்திரம் இவை தப்பறையான உபதேசத்தின்பேரில் கட்டப்பட்ட மணல் வீடு. சீக்கிரம் அழியும். மனித மனச்சாட்சிக்குப் பொருந்தாதபடியால், அநேகர் இதை ஒப்புக்கொள்ளுகிறதுமில்லை, கைக்கொள்ளுகிறதுமில்லை. 148-ம் கீர்த்தனம் பாடவும். 29-ம் வசனம் மனனம். |
| 10-ம் பாடம். மத். 8 : 1-13.<br>**கிறிஸ்துவின் பிரசித்த ஊழியம்.**<br>வைத்தியரும் பிணியாளியும்.<br>(1). குஷ்டரோகியின் கூப்பா, இயேசுவின் பாசமும். | இந்தப் பாடத்தை வாசித்து, சொந்தப் பாஷையில் வியாதியின் தன்மை, வியாதிக்காரர் படும் கஷ்டம் இவைகளை சொல்லவும். வீட்டில் வியாதியஸ்தர் உண்டா? அல்லது ஊரில் நடமாடும் வியாதிகளையும்\ அவைகளுக்கு ஏற்பட்டிருக் |

| விஷயம் | போதனை முறை |
|---|---|
| தேவனைத் தேடல் :<br>'ஆண்டவரே உமக்குச் சித்தமானால் என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும்.'<br>பழமொழி : மனமுண்டானால் இடமுண்டு.<br>கட்டளை வார்த்தைகள்.<br>சித்தமுண்டு = மனம் உருகுதல்.<br>சுத்தமாகு = செய்கை.<br>ஒருவருக்கும் சொல்லாதே = அமைதி.<br>ஆசாரியனுக்குக் காட்டு = எச்சரிப்பு.<br>காணிக்கை செலுத்து = நன்றி.<br>அகதிக்கு ஆண்டவரே தஞ்சம். | கும் வைத்தியர்கள், மருந்துசாலைகள் முதலியவற்றைப்பற்றிய பேச்சு. பாடத்தில் வருகிறவன் குஷ்டம் பிடித்தவன், ஊராரால் தள்ளப்பட்டவன், வெறுக்கப்பட்டவன், நோவு பெருத்தவன், சந்தோஷமற்றவன், அகதி, சஞ்சலமானவன். வெண்குஷ்டம், கருங்குஷ்டம், சொறிகுஷ்டம். லேவி. 13 : 44, 45 பார்க்க. 14 : 1-10 வசனம். தேவன். குஷ்டரோகிகள், குருடர், முடவர், ஊமையர் முதலியவர்களைப் பற்றிய அன்பு இதில் விளங்குகிறது. அவருடைய வார்த்தைகளின் அர்த்தம் விளக்கிக் காட்டவும். மருந்தே கிடையாத வியாதிகள் தெய்வத்தால் தீரும் என்று வியாதியுடைய பெண்களுடன் ஜெபிக்கவேண்டும். ஏழைகளுக்கு மருந்து கொண்டுபோய்க் கொடுக்கவும். நாகமான் சரிதை சொல்லவும். |
| 2. ஆண்டவரின் ஆச்சரியமும் அதிபதியின் விசுவாசமும்.<br>பாடத்தில் வரும் ஆட்கள் :<br>(1) கிறிஸ்து = ரட்சிக்கிறவர்.<br>(2) நூற்றுக்கு அதிபதி = மத்தியஸ்தன்.<br>(3) திமிர்வாதக்காரன் = பாவி.<br>விண்ணப்ப வார்த்தைகள் :<br>ஆண்டவரே. வச. 6.<br>பாத்திரனல்ல. வச. 8.<br>ஒரு வார்த்தை சொல்லும் 8.<br>சொஸ்தமாவான். வச. 8.<br>கட்டளை வார்த்தைகள்.<br>நான் வந்து சுகப்படுத்துவேன்.'<br>நீ போகலாம்.<br>உனக்கு ஆகக்கடவது. | முந்தின பாடத்துடன் சம்பந்தப்படுத்தவும். வியாதிக்காரன் ஒருவன், விசுவாசித்தவன் ஒருவன், பிணியாளியைப் பாராமல் (மருந்து) சுகம் கொடுத்தவர் தெய்வம். நமது காரியங்களை நடத்தும் ஒரு நடுவர் வேண்டும். அவர் நமக்காகப் பிரயாசப்படுகிறவர், அவர் நம்மைவிட மேலான வல்லமையுடையவரா யிருக்கவேண்டும். திமிர்வாதம், கொடிய வியாதி, நடக்கவுமிருக்க உட்காரமுடியாத பெரிய வியாதி. இப்படியே, பாவத்தில் பிடிபட்ட பெண், ஒன்றும் செய்ய சக்தியற்றவளாய்க் கட்டில் கிடையாயிருக்கிறாள். அப்படிப்பட்டவள் |



| விஷயம் | போதனை முறை |
|---|---|
| இஸ்ரவேலருக்குக் கிடையாத விசுவாசத்தை புறஜாதியான் பெற்றான்.<br>இஸ்ரவேலருக்குக் கிடைக்க வேண்டிய ஆசீர்வாதத்தைப் பெற்றான். | களை ஆண்டவர் தேடுகிறார். யேசுவின் அன்பை விவரி. நாம் மற்றவர்களுக்காகவும் ஆண்டவரிடம் கேட்கவேண்டும். பாதிராத்திரியில் அப்பம் கேட்ட சிநேகிதன் உவமை சொல்லவும். 367-ம் கீர்த்தனம் 'தீராத குஷ்டத்தை' பாடு. 2-ம் வசனம் மனனம்.<br>கிறிஸ்தியான் டாசன்.<br>(இன்னும் வரும்.) |

## A WONDERFUL DELIVERANCE

## ஓர் அதிசய மீட்பு

இங்கிலாந்தின் தென்பாகத்தில் ஒரு தனி வீட்டில் துரைசானி ஒருத்தி வசித்தனள். இவளுக்குதவியாக அவ்வீட்டில் இரு வேலைக்காரிகள் மாத்திரமிருந்தபோதிலும் தேவகரத்தின்கீழ் சமாதானமாயும் க்ஷேமமாயும் வாழ்ந்தாள். ஒவ்வொரு நாளும் படுக்கைக்குப் போகுமுன் தன் இரு வேலைக்காரிகளுடன் வீட்டைச்சுற்றி நடந்து ஜன்னற் கபாடங்களை அடைத்துவருவது அவள் வழக்கம். இவ்வழக்கப்படி ஓர்நாளிரவு வீட்டைச் சுற்றிவந்து வேலைக்காரிகளை அவரவர் அறைகளுக்கனுப்பிவிட்டு இத்துரைசானி தன் அறையுட் பிரவேசித்தாள். அந்த அறையின் கதவுகளைத் திறக்கையில், ஓர் வாலிபனின் கால்களைத் தன் கட்டிலின்கீழ்க் கண்டாள். உடனே அவளுக்குண்டான திகிலை யார் மதிக்கக்கூடும்? அந்த இரண்டு பெண்களைத்தானும் உதவிக்காகக் கூப்பிடமுடியாதிருந்தது. கூப்பிடினும் அவர்களின் வருகைக்குமுன் இவளது ஜீவன் கொள்ளையாக்கப்பட்டிருக்கும். அப்படியாக அவர்கள் வந்தாலும் இம்மூன்று உதவியற்ற பெண்களும், கவசமணிந்திருந்த கொள்ளைக்காரனாகிய அப்பாதகன்முன் எதிர்நிற்க முடியாதே. திகில் அவளைச் சுற்றிலுமிருந்தது. பயங்கரத்தால் முழுவதுமே சூழப்பட்டாள். ஐயோ பரிதாபம்! உலக உதவியை அந்நேரம் பெற்றுக்கொள்ள அவளால் முடியவில்லை. அப்போது என்ன செய்தாள்? கர்த்தரை மாத்திரம் தன்

தஞ்சமாக்கினாள். தமக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளையமிறங்கும், விசுவாசமுள்ள தமது பிள்ளைகளை நேசிக்கும் பரமபிதாவாகிய சர்வகாரண கர்த்தாவையே நம்பினாள். யாதும் சந்தடிசெய்யாமல் தான் இன்னும் அப்பாதகனைக் காணாதவள்போல நடித்துக்கொண்டு, அறைக்குட்சென்று மெல்லக் கதவைப் பின்புறம் சாத்திப் பூட்டி விட்டாள். பின்பு வழக்கம்போலத் தன் உடுப்புகளை மாற்றிக் கொண்டு யாதும் சந்தேகமில்லாதவள்போலக் காணப்பட்டாள். சிறிதும் அவதிப்படாமல் தன் வேத புஸ்தகத்தைத் திறந்து ஜீவனும் வல்லமையுமுள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும் கணுக்களையும் மூன்றையும் பிரிக்கத்தக்கதாக உருவக்குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயுமிருக்கிற தேவ வசனத்தை வழக்கம்போல வாசித்தாள். கர்த்தருடைய ஏவுதலின்படி இவள் வேதத்தைத் திறக்கையில் அத்தருணத்துக்கேற்றதாகவும், தேவன் தமது பிள்ளைகளை இரவு பகலாய்த் தற்காக்கும் வகையை வெளிப்படுத்துகிறதாயுமுள்ள 91-ம் சங்கீதம் அவளுக்குத் தென்பட்டது. வல்லமையுள்ள கர்த்தரிடத்திற் கொண்ட விசுவாசத்துடன், தான் அவரிற்கொண்டிருக்கும் நம்பிக்கையை அப்பாதகன் உணரத்தக்கதாக உறுதியாய் வாசித்தாள். வசனங்களொவ்வொன்றும் அவளுக்குப் பலனைக் கொடுத்தது. அதன்பின் முழங்காலூன்றி ஆண்டவரை நோக்கி ஜெபித்தாள். அக்கட்டிடத்தில் தனியே படுக்கைக்குப் போகும் தனக்காகவும் மற்றிரு பெண்களுக்காகவும் உறங்காதவரும் தூங்காதவருமான நேச பிதாவினிடத்தில் ஊக்கமாய் ஜெபித்தாள். வீணான மற்றுமுதவிகளைப் பார்க்கிலும் நம்பிக்கையின் தேவனாகிய கர்த்தரிடத்தில் தன் வேண்டுதலை ஏறெடுத்தாள். கடைசியாக அவள் ஜெபத்தினின்றெழுந்து எரிந்துகொண்டிருந்த தீபத்தையுமணைத்துவிட்டுக் கட்டிலின்மீது சாய்ந்தனள். நித்திரைக்குப் பதிலாக பயங்கர மிகுதியும், அதனிலுமதிகமாகக் கர்த்தரிடத்தில் ஒரே விசுவாசமும் அவளை ஆட்கொண்டன.

இந்நேரத்தில் அத்துரோகியின் பாடென்ன? அவன் துணிகரமான அழிவின் மகனாய் இருந்ததுமாத்திரமல்ல, வேண்டிய சமயத்தில் உதவக்கூடியதாய், சற்றுத் தூரத்தில் இன்னுஞ் சில பாதகரை நிறுத்திவைத்திருந்தான். ஆனால் இத்துரைசானி வாசித்த திவ்விய வாக்குகளும் விசுவாசத்துடன் அவள் ஏறெடுத்த உத்தம ஜெபமும் கள்வன் மனதை உருவக் குத்தினது!!

(இன்னும் வரும்.)

C. L. S. PRESS, MADRAS—1920


# மாதர் போதினி

No. 270 ஜூலை 1920 No. 7


13 JUL 1920

## THE VICTORIOUS LIFE

## ஜெய ஜீவியம்

'நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.' 'நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே.'

ஜெயம் என்றால் கெலிப்பு, இரட்சிப்பு, மீட்பு என்று சொல்லலாம். நமது ஜீவியம் ஒரு போராட்டம். இதில் ஜெயங்கிடைக்க வேண்டுமானால், ஜெயங்கொடுக்கிற ஒருவராலேயே அது ஆகும். நாம் எவ்வளவாய்ப் பிரயாசப்பட்டாலும் தோல்வியே. இந்தப் போராட்டம் பாவத்துக்கு விரோதமான போராட்டம். இதினின்று இரட்சிப்பு அல்லது மீட்பு கிடைக்கவேண்டும்.

இதோ, ஒரு சந்தோஷசெய்தி அறிவிக்கப்படுகிறது. அதுதான் சுவிசேஷம். சுவிசேஷம் இரட்சிப்பின் செய்தியைக் கூறுகிறது. இந்த இரட்சிப்பை ஒருவர் உலகத்தார் யாவருக்காகவும் நிறைவேற்றியிருக்கிறார். இந்த இரட்சிப்பு முடிவான நிறைவான சகலருக்குமுரிய இலவசமான இரட்சிப்பு.

கடவுள் உலகத்தை உண்டாக்குமுன் இது ஆதிதீர்மானமான இரட்சிப்பு. மனுஷன் பாவதன்மையுள்ளவன் என்பது கடவுளுக்கு முன்னமே தெரியும். பாவத்தைத் தண்டியாமல் விட கடவுளுக்கு முடியாது. பாவம் அவருக்கு அருவருப்பானது. அவர் பாவத்தைப் பார்க்கமாட்டாத சுத்தக் கண்ணன். பரிசுத்தமும் நீதியுமுள்ள கடவுள் பாவத்தைப் பகைக்கிறார். ஆனால் மகா இரக்கமுள்ள கடவுள் பாவியை நேசித்து பாவத்தின் தண்டனையைத் தாமே சுமந்து தீர்த்து பாவியை மீட்க சித்தங்கொண்டார். இந்த ஆதி தீர்மானத்தை நிறைவேற்றி முடித்தார். சிலுவையில் உயிர்விடும்போது 'முடிந்தது' என்று இயேசுவானவர் சொன்னார்.

'பாவத்தின் சம்பளம் மரணம்.' ஆதலால் பாவஞ்செய்தவுடன் மரணம் நேரிடுகிறது. கொள்ளிவாய்ச் சர்ப்பத்தால் கடிபட்ட யாவரும் மரணத்துக்குள்ளானதுபோல், சிறிய பாவமானாலும், பெரிய பாவமானாலும், எந்தப் பாவத்தையும் செய்தவுடனே மரணத்துக்குள்ளாகிறோம். பாவத்தால் மரித்த பாவி, மரணத்தினின்று நீங்க முடியாது. பாவ வல்லமை மகா கொடிது. எந்தப் பிரயத்தனமும், தானதர்மமும், சரீர ஒடுக்கமும், சந்நியாசமும், யாத்திரையும், எதுவானாலும் பாவத்தைப் போக்காது. உன் பாவத்தை நீக்க ஒரு பலி செலுத்தப்பட்டாயிற்று. இயேசுவானவர் உன் பாவங்களுக்காகத் தன் உயிரைக் கொடுத்து உன்னை மீட்டுவிட்டார். இதை நம்பினவுடன் பாவம் நீங்கிவிடும். நீ ஒன்றும் செய்யவேண்டியதில்லை, நம்பவேண்டியதுதான். இந்த சுப செய்தியை நம்பினவர்கள் இரட்சிக்கப்பட்டவர்கள். விசுவாசித்தவுடனே இரட்சிப்பு. யாதொரு சந்தேகமும் இருக்கக்கூடாது. மேய்ப்பர் இயேசுவின் பிறப்பைப் பற்றிக் கேள்விப்பட்டு, சந்தேகியாமல் புறப்பட்டுப்போய்க் கண்டு களிகூர்ந்தார்கள்.

உன் பாவத்தை நீக்க இயேசு மரித்து உயிர்த்தார். நீ இதை நம்பினவுடனே உன் பாவம் நீங்கிவிடும். இரட்சிப்பின் ஆனந்தம் உன்னை நிரப்பும். நீ ஸ்தோத்திரஞ்செலுத்திக்கொண்டே யிருக்க வேண்டியதுதான். இதுவே ஜெய ஜீவியம். உன் பழைய மன்னிக்கப்பட்ட பாவங்களைப்பற்றி நினைக்க அவசியமில்லை. ஏனென்றால் அவைகள் கொலைக்கப்பட்டாயிற்று, தீர்ந்துபோயிற்று. இனி மகிழ்ச்சியும் வெற்றியும் தான்.

உன் பாவத்தை மன்னித்த இயேசு உன்னில் வாசம்பண்ணி பாவத்தின்மேல் ஜெயங்கொள்ளச் செய்வார். உனக்காக அவரே தமது ஜீவியத்தை உன்னிலிருந்து ஜீவிப்பார். இது எவ்வளவோ சந்தோஷம்! பாவமற்ற பரிசுத்த ஜீவியம் உன்னில் வளர்ந்தேறும்.

## THE VANITY OF THE WORLD

## அநித்தியமான உலக வாழ்வு

1. கானகம் போன்ற இம்மாநிலந் தன்னிலே
வாழ்கின்ற மானிடரின் வளமை கேள்
பொய்யான மேதினியில் மெய்யான வாழ்வில்லை
போகும் வழிகாணு தொழியுமே காண்
வானக னின்று வந்தபா னிவை
வகையறியாத மனுக்கோடியின்
பரிதாப நிலைமையில் அநுதாபங் கொண்டுயான்
பாங்காகப் பகரும் வசனம்
ஆனையிட மோடியே யாவலுடன் தேடின
அரும்பொருள் யாவு முதவேல்
ஆசையாய்ச் சேர்த்தியில் செல்வங்கள் தனமெல்லாம்
ஆடும் பம்பரம் போலாம்
கானலைக் காட்டியே கலைகின்ற வண்ணமே
தேடிய பெருஞ்செல்வஞ் சிதைந்துபோம்
கூடங்கள் கோபுரம் தார்வேந்தர் மகிமைகள்
தரையோடு தரையாகிப்போம்.

2. ஜெகத்தினிலே யெடுத்த ஜென்மத்தின் மாய்கையைச்
சரியாக யோசிக்கையில்
சஞ்சலந்தா னென்று சற்குருவையே பற்றி
சாஷ்டாங்கஞ் செய்து தொழுவாய்
சகடத்தின் சக்கரஞ் சுற்றிடும் போலவே
சகலமும் அவனியில் நில்லா
சாஸ்வதமான மேல்வாழ்வுதனைப் பற்றியே
சற்குருவா மேசுவைப் பிடிப்பாய்
தேகத்தின் வலிமையும் திகழ்கின்ற முகவசியம்
திரிபுகொண் டேயழியும்
தீனர்கள் வாய்மதமும் சிறுமைசெய் நாவும்
தேடுவா ரில்லாமற் சிதையும்
சாகவரும் நேர மாரினின் றழுதாலும்
அரை நிமிஷம் மேதினியில் நில்லார்
எம்மருந் தீயினும் எவரெவர் பார்க்கினும்
ஈசன் செயலை எவனறுப்பான்.

3. மண்ணிலே யெடுத்த மட்கூண்டுப் பாண்டம்
மண்ணிலே யுடையும் வகை கேளாய்
தன்னிலே சமர்த்துமிகப் பேசினும் போம்வேளை
தன்மதி கெட்டுமே போகும்
திண்ணையிலோ தெருவிலோ தெம்மாகத்
துயிற்கொள்ளும் திட்டமில்லாத் தருணத்திலோ
தாவுக ளோரிகள் குட்டைகள் தடாகங்களில்
துள்ளி ஸ்நானங் கொள்ளையிலோ

தண்ணீர் பருகும் தகாத நேரத்தில்
தடுமாறி விழுதலாலோ
வீக்கமோ எக்கமோ விதம்வித மானபல
ரோகங்க ளடர்ந்ததாலோ
எண்ணிமுடி யாதஇக் காயத்தின் விபத்துகளைச்
சொல்லிமுடி யாதல்லோ
ஏமாற்றும் இவ்வுலகின் வீணான வாழ்வினால்
எச்சரிப் படைந்து கொள்வீர்.

4. பேதியிலோ பிளேக்கிலோ பெலன்போக்கும் மார்ச்சளி
இன்புளியன் சாவிலோ
ஈரலைத் தின்றுவிடும் சயரோக மென்றநோய்
சடுதியாய்க் கண்டலாலோ
அதிசீக்கிர முடிக்கும் அரிபிளவையோ மாய
ஆகாத கட்டியிலோ புண்ணிலோ
ஆசையாய்ச் சாப்பிட்டு அருமகிழ் கொள்ளும்
அகால நேரத்திலோ
வீதியிலோ வெளியிலோ வேலைக்குப் போகும்
நடுவழியி லுண்டான வியாதியாலோ
வெள்ளப் பெருக்கிலோ வெடித்த பூகம்பம்
சல்லிபாவி அடர்தலாலோ
அதிசய சாஸ்திரம் அருங்கல்வி ஞானங்கள்
அடியோடு விழுந்து போகும்
அந்தஸ்து வுத்தியோகம் அழகான பட்டங்கள்
ஆற்றின் குழிக் கொப்பாம்.

5. போர்முகத்தில் பட்ட படுகாயத்தி னாலேயோ
பீரங்கிக் குண்டு ரவையாலோ
கப்பல் யாத்திரையிலோ கால்நடையாய்ப் போகும்
கடுநடையில் நேர்ந்த அபாயத்தாலோ
பேர்பெற்ற வேலையினால் ஆகாய மண்டலம்
பெருமையா யேறும்போதோ
காடிகள் சிங்கங்கள் காட்டு மிருகங்களின்
கடியினும் பீறுண்டலாலோ
வேரழிந்த விருட்சஞ் சார்பொன்று மில்லாமற்
சல்தியிற் விழுந்ததாலோ
வானத்திலோ பூமியிலோ பற்பல பூதியம்
பங்கமா யழிந்ததாலோ



பாரினிலே யுதித்துப் பண்பாக மானிடரின்
பாவமெலாம் போக்க வந்த பராபரனை
கானிலந் தன்னி நலமாகப் பிடிக்கினில்
வினையெலா நீங்கும் நிர்ணயிப்பாய்

6. காலையிலோ மாலையிலோ கங்குலாகும் வேளை
கடு அரவந் தீண்டலாலோ
காற்றிலோ மழையிலோ காரிருள் மந்தாரம்
கடும்இடி விழுந்ததாலோ
தலைவலி காய்ச்சல் சன்னிகள் வாய்வுகள்
தலையெடுக்காத இருகிருப்போ
தக்க ஆயுதப் பிரயோகமோ மாயமோ
தத்தளிப்பான மூன்மூச்சோ
அலையிலோ தீயிலோ அநியாயப் பேயிலோ
அகப்பட்டுக் கொண்டதாலோ
பட்சியோ மச்சமோ பற்பல பூச்சியோ
பழிகொண்டு கடித்ததாலோ
அலைகின்ற என்மனம் நிலையாக உன்னிலே
உறையும் வகை காட்டி வைப்பாய்
உலைக்கின்ற கவலைகளை உன்மேலே வைத்துக்
கலங்காமற் நிற்கவழி வைப்பாய்.

V. D. K.

162017

## THE LIFE OF THE REV. V. T. THOMAS

## டேனிஷ்மிஷன் திருக்கோயிலூர் போதகராகிய கனம் வி. டி. தாமஸ் ஐயரவர்களின் ஜீவியம்

காலம்சென்ற கனம் வி. டி. தாமஸ் ஐயரவர்கள் திருநெல்வேலி நாட்டிற் பிறந்து மதுரைப் பசுமலைக் கலாசாலையிற் கல்விகற்று சில வருஷங்கள் சர்க்கார் உத்தியோகஞ்செய்தவர்கள். அவர்கள் வாலிபப் பிராயத்தில் இயேசுவின் அன்பையுணர்ந்தவர்கள். கவர்ன்மெண்டு உத்தியோகம் வகித்துக்கொண்டிருந்த போதிலும் கர்த்தருக்காக உழைக்கவேண்டுமென்கிற பேராவல் நிறைந்தவர்களாய் அக்காலத்தி லிருந்த பேர்போன கனம் டாக்டர் வாஸ்பர்ண் ஐயரவர்களிடம் பேசினதுமன்றி மற்ற மிஷனெரிமார்களிடத்திலும் தனக்கு மிஷன் வேலை பார்த்து தேவனுக்கு ஊழியம்செய்யப் பிரியமிருப்பதாய்

வெளியிட்டதின்பேரில் தென்னாற்காடு ஜில்லாவில் டேனிஷ் மிஷன் சங்கத்தார் அவர்களைத் தருவித்துக்கொண்டார்கள். சுமார் பன்னிரண்டு வருஷங்களாய் பற்பல கிராமங்களிலும் சென்று தேவநாமத்தை யறிவித்து அநேகரை நீதிக்குட்படுத்தினதின்பேரில் அவருக்குப் பட்டாபிஷேகம்செய்தார்கள். ஏறக்குறைய பதினைந்து வருஷங்களாய் திருக்கோயிலூர் என்ற ஊரில் போதகராயிருந்து தேவ ஊழியத்தை வெகு உற்சாகத்தோடு நடப்பித்துவந்தார்கள். 1920-ம் வருஷம் மேய் மாதம் 30-ம் தேதி பகல் பன்னிரண்டு மணிக்கு கர்த்தருக்குள் நித்திரையடைந்து தமது பிதாவின் மகிமைக்குள் பிரவேசித்தார்கள். அவர்கள் தங்கள் ஜீவகால ஓட்டத்தை 53-ம் வருஷத்தில் முடித்தார்கள். கனம் தாமஸ் ஐயாவர்களின் ஜீவியம் குருமாருக்கும், சபையாருக்கும், தேவ ஊழியர்களுக்கும், வாலிபருக்கும், வயோதிபருக்கும் ஒரு பெரும் பொருட்பாடமாய் இருக்கின்றது. அவர்களது அருங்குணாதிசயங்களைப்பற்றிக் கனம் அண்டர்சன் ஐயாவர்கள் பிரசங்கத்தில் வெகு திட்டமாய் எடுத்துரைத்ததும் தவிர அவர்களைப்போல் இன்னொரு போதகர் கிடைப்பது அரிதென்றுரைபகர்ந்தார்கள். அவர்களில் காணப்பட்ட ஊக்கம், விடாமுயற்சி, சுறுசுறுப்பு, அன்பு, தாழ்மை, பொறுமை, அணைத்தல், ஆரவணைப்பு, இரக்கம், ஈகை என்னப்பட்ட குணங்கள் யாவரும் வியந்துகொள்ளப்படத்தக்கதாய் இருந்தன. தன் சபையில் வியாதியாயிருந்தவர்களுக்கு நல்ல ஆலோசனை சொல்லி இரவு பகல் இருந்து உதவிசெய்யத் தவறாதவர்கள். அன்பென்னும் அலங்காரகுணம் அவர்களில் எப்போதும் ஜொலித்தமையால் தங்களைத் தூஷித்தவர்களுக்கும் நன்மைசெய்வதே அவர்களில் விளங்கிய முதற்குணமாயிருந்தது. ஏழைகளுக்கு உதவிசெய்வதில் அதிக விருப்பமுள்ளவர்கள். அவர்கள் மரித்தபோது அவர்களுக்காக அங்கலாய்க்காதவர்கள் கிடையாது. அவர்கள் மரித்தும் அவர்களது ஊழியம் இன்றும் நின்று பேசுகிறது. குறைவுபட்டவர்களுக்கு உதவிசெய்வதிலும் எடுத்துக்கொண்ட நற்காரியங்களை முடிக்க முயல்வதிலும் அவர்கள் கால்கள் மகா சுறுசுறுப்புள்ளவைகளாயிருந்தன. நடைக்கு அஞ்சுகிறதே கிடையாது. சுயநயமென்னும் குணம் கிஞ்சித்தேனும் காணப்படவில்லையென்று அவர்களின் பரோபகார சிந்தனையினால் அறிந்துகொள்ளலாம். தேவ ஊழியத்தைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் கிறிஸ்துவின் ராஜ்ய மகிமைக்கென்றே உழைத்தபடியால் கிறிஸ்தவர்கள், இந்துக்கள், மகம்மதியர் மத்தியிலும் அவர்களுக்கு மரியாதையும் கனமும் கிடைத்தது. அவர்கள் தம்மை ஆட்கொண்ட யேசுராஜாவின் சந்தோஷத்திற்குள் பிரவேசித்திருக்



கிறார்கள். நாமும் அவர்கள் வைத்துப்போயிருக்கிற நன்மாதிரியைப் பின்பற்றி நடப்போமாக. தேவன் அவர்களது குடும்பத்துக்கும் அருமை மனைவி மக்களுக்கும் ஆறுதலையும் சமாதானத்தையும் சகாயத்தையும் கட்டளையிடுவாராக.

V. D. K.

## A WONDERFUL DELIVERANCE

## ஓர் அதிசய மீட்பு

(தொடர்ச்சி)

இந்த ஸ்திரீ படுக்கையிற் சரிந்து சற்றுநேரத்தில் தன் பக்கமாய் அக்கள்வன் நிற்பதாயவதானித்தாள். அவ்வாலிபன் தன் இயல்பான குரலைமாற்றி மெல்லிய தொனியுடன் தனது சமுகத்தினால் பயப்பட வேண்டாமென்று அவளுக்குரைத்துப் பின்னும் அவளை நோக்கி, 'நான் இவ்வீட்டைக் கொள்ளையிடவும், விரும்பினால் உம்மைக் கொல்லத்தானும் எண்ணமுற்றே வந்தேன். எனக்குதவியாக இன்னுஞ் சிலர் சற்றப்பால் நிற்கிறார்கள். ஆனால் நீர் வாசித்த திவ்விய வசனங்களும், உமது உறுதியான விசுவாசமுள்ள ஜெபமும் உண்மையாகவே என் எத்தனத்தை முற்றுமே மாற்றிவிட்டன. நீர் இதற்கிடையில் குரவையிட்டிருந்தால் உமதுயிரை இழந்திருப்பீர். தேவன் உம்மைக் காப்பாற்றினார். இதுவரை நீர் அமைதியாயிருந்தது போல இன்னும் இருப்பீராக. நான் என் கூட்டாளிகளை அனுப்பிவிடுகிறேன்' எனச்சொல்லி, ஏதோ சிறு சைகை செய்தான். பின்பு அத்துரைசானியை நோக்கி, 'அம்மா, நான் போகிறேன். உமது விசுவாசமுள்ள வேண்டுதல் உம்மைக் காப்பாற்றியதுமாத்திரமல்ல, அது என்னையுங் குணமாக்கிற்று! அந்தப் புஸ்தகத்தை நானும் வாசிக்க விரும்புகிறேன்' என்றான். துரைசானியோ யாதும் எதிர்கூறாது ஆண்டவருக்கு மிகுந்த நன்றியுடன் தன் வேதப்புஸ்தகத்தை அவனுக்கீந்தனள். அவன் கபாடத்தைத் திறந்துகொண்டு தன் வழி சென்றான்.

இதன்பின் யாவும் ஆறுதலாயிருந்தது. வேண்டுதலுக்கு மறுமொழியை உடனே பெற்றுக்கொண்ட அந்தப் பெண்ணும் அமைதியாய் நித்திரையானாள். இரவின் பயங்கரத்திற்கு விலக்கிக் காக்கும் அருமைப் பிதாவின் திவ்விய செட்டைகளாற் காக்கப்பட்டதற்காக மறுநாள் அதிகாலையில் அவருக்குள் தோத்திரத்துடன் நன்றியான துதி செலுத்தினாள்.

ஆனால் கள்வனுடைய சங்கதி என்ன? அவன் திரவியங்களை அபகரிக்கவந்தான். பொன், வெள்ளி இவற்றைத் தேடினான். இவற்றிலும் பதினாயிரம் மடங்கு விலையேறப்பெற்றதான மேலான ஓர் பொக்கிஷத்தை எடுத்தான். இந்த ஸ்திரீயாவது, அன்றேல் வேறு யாராவது, அந்நேரத்தில் அப்பாதகனின் இலக்கைப் பிறழச்செய்யவில்லை. கர்த்தர் அவனை ஆட்கொண்டார். தேவாவியானவர் அவன் சிந்தனைகளை மாற்றினார்.

இக்கதையை 1867-ம் வருஷம் எப்ரல் மாதத்தில் வயது சென்ற Mrs. Hannah கிழவியிடம் கேட்டறிந்தேனென இதை எழுதியவர் கூறுகிறார். இந்தக் கிழவி தன் வாலிப நாட்களில் ஓர் தினம் யோக்ஷயரில் நடைபெற்ற வேதாகம சங்கக் கூட்டத்திற் சமுகமாயிருந்தாள். அவ்வேளை பற்பல பிரசங்கங்கள் நடைபெற்ற பின், ஓர் மனிதன் எழுந்து நின்று அந்த இரவு நடந்த 'அதிசய மீட்பை' உதாரணமாய்க் கொண்டு வேதவாசிப்பின் மாட்சிமையைப்பற்றி உபந்நியாசித்தான். இக்கதையைச் சொல்லி முடிவில் பிரமையுற்றவன்போல் திகைத்துநின்று பின்பு, 'நானே அவன்' என்றான். அந்தக்ஷணமே இன்னொரு மூலையிலிருந்து வயதில் முதிர்ந்த ஓர் மனுஷி எழும்பி நின்று, 'நீர் சொன்னது முழுவதும் உண்மை. அந்தப் பெண் நானே' என்று அதிசயமான-விதமாய்ப் பகர்ந்தாள்.

இராத்திரி சம்பவமான இந்த 'அதிசய மீட்பு' நடந்து அநேக வருஷங்கள் கழிந்தன. துரைசானி அம்மனிதனைப் பிந்திய இக்கூட்டநாளின் முன் காணவேயில்லை. ஆனால் கர்த்தர் அவனை நடத்தினார். அவருடைய பெரிதான இரக்கத்தை வெளியரங்கமாய் அறிக்கையிட அவனை ஏவினார்.

இச்சம்பவம் நமக்குப் போதிப்பதென்ன? சர்வ வல்லமையுள்ள கர்த்தர் கொடுத்த திருவசனத்தையும் அவரின் அற்புத செயல்களையும் விசுவாசித்து, நாம் கேட்டதைப் பெற்றுக்கொள்வோமென்ற முழுமனதான நம்பிக்கையுடன் காத்திருப்போமானால், கேட்பதற்கு முன்னரே தமது அளவற்ற கிருபையைக் கடாட்சிக்கக் கர்த்தர் மிகுந்த தயவுள்ளவராயிருக்கிறார். எவ்வித சோதனைகளும் நேரிடும்போது, 'விசுவாசமுள்ள வேண்டுதல் பலனுள்ளது' என்ற நம்பிக்கையுடன் சர்வ காரணராகிய தேவனிடத்தில் தரித்திருப்போமாக.

Isaiah Paul.



## CARE OF BABIES

## பிறந்த குழந்தைகளைப் பாதுகாக்கும் முறை

வருஷாவருஷம் ஆயிரக்கணக்கான குழந்தைகள், கவனிப்பவர்களின் கவனக்குறைவால், பிறந்த சிலநாள்களுக்குள்ளாகவே இறந்து போகின்றதை யோசிக்கும் காலத்து பிறந்த குழந்தைகளைப் பாதுகாக்கவேண்டிய முறையைப்பற்றிய சில விஷயங்களை இங்கு குறிப்பது உபயோகமாயிருக்குமென்று தோன்றுகிறது.

### செய்யவேண்டிய காரியங்கள்

(1) பிறந்த குழந்தையை, ஸ்நானம் செய்விக்க ஏற்பாடுகள் தயாராகும் வரையில், ஒரு உலர்ந்த சுத்தமான துணியில் சுற்றி வைக்கவேண்டும். குழந்தை பிறப்பதற்குமுன் தாய்வயிற்றில் எவ்விதம் குளிர்படாது உஷ்ணம் காக்கப்பட்டு வந்ததோ, அப்படியே பிறந்த பிறகும் குளிர்ந்தகாற்றுப் படாமலும் தேகச்சூடு குறையாமலும் வைக்கப்படவேண்டும். குழந்தையைப் பிறந்தவுடனே, தரையில் ஒரு கந்தலின்மேல் போத்தாமல் போட்டுவிடுவது ஸகஜம்; பிறந்த சில நாள்களுக்குள்ளாக அநேகம் குழந்தைகள் சாகிறதற்கு இதுவே காரணமாகிறது. குழந்தை குளிர்ந்தகாற்றுப்படாமல் மூடிவைத்திருக்கப்பட்டால் குளிப்பாட்ட ஒரு அவசரமுமில்லை. பிறந்தவிடத்தினுடைய சீதோஷ்ணஸ்திதி முதலானவைகள் குழந்தைக்கு கொஞ்சங்கொஞ்சமாய் ஒத்துக்கொள்ளும்படி செய்யவேண்டும்.

(2) பிறந்த குழந்தையைச் சுத்தப்படுத்த எண்ணெயைத் தடவி ஸ்நானம் செய்துவைக்கவேண்டும். சுத்தம் செய்யவேண்டுமென்று பலமாய்த் தேய்த்து அதிக ஜலத்தைவிட்டு ஸ்நானம் செய்துவைப்பதைக் காட்டிலும் இது உத்தமம். குழந்தைகளின் அழுக்கை எடுப்பதற்காக, உள்சதை தெரியும்படியாக சொறிந்து தேய்ப்பதை நான் பார்த்திருக்கிறேன். அம்மாதிரி செய்தாலுங்கூட சிசு முற்றும் சுத்தமாவதில்லை. கொஞ்சம் எண்ணெயை உபயோகித்தால் சுலபமாய் ஒரு நிமிஷத்தில் அசுத்தமெல்லாம் அதில் கரைந்து வந்துவிடும். குழந்தையைக் குளிப்பாட்டுவதற்கு அதிக ஜலம் உபயோகிக்கக்கூடாது. அந்த ஜலம் அதிகச் சூடாயாவது, அல்லது சில்லென்றாவது இருக்கக்கூடாது.

(8) கொதிக்கவைத்து ஆறிய சுத்த ஜலத்தைக்கொண்டு, பிறந்த குழந்தையினுடைய கண்களையும் வாயையும் அலம்பவேண்டும். பிறக்கும் எல்லாக் குழந்தைகள் விஷயத்திலும் அவைகளின் கண்கள்

பிறந்தவுடனே சரியாய் கவனிக்கப்பட்டிருந்தால், இப்பொழுது பூலோகத்தில் இருக்கும் குருடர்களில் பாதி குறைந்திருக்குமென்று சொல்லப்பட்டிருக்கிறது. வேறு எது எப்படியிருந்தாலும் ஸரி, மருத்துவிச்சியை குழந்தையின் கண்களை சரியாய் அலம்பச்சொல்ல வேண்டியதவசியம்; பக்கத்தில் வைத்தியனிருந்தால் தேவையான சிகிச்சையும் செய்யச் சொல்லவேண்டும். அமெரிக்காவில், மருத்துவிச்சிகளும் வைத்தியர்களும் அவர்கள் கவனிக்குமிடங்களில் பிறக்கும் குழந்தைகளுக்குக் கண்நோய்களைத் தடுக்கும்பொருட்டு அவைகளின் கண்களில் நூற்றுக்கு இரண்டு பங்குவீதம் கலந்த ஸில்வர் நைட்ரேட் (Silver nitrate) திராவகமாவது, அல்லது நூற்றுக்கு பன்னிரண்டரை பங்கு கலந்த ஆர்க்கயரால் (Argyrol) என்னும் திராவகத்தையாவது, ஒரு துளி விடவேண்டுமென்று ஒரு ஸர்க்கார் உத்தரவு இருக்கிறது. இந்த சிகிச்சையானது, பிறக்கும் குழந்தைகளில் 100-க்கு 99 பெயர்களுக்கு அனாவசியமாகவே யிருக்கலாம்; ஆயினும் மீதி ஒரு குழந்தை ஸம்பந்தப்பட்டவரையில் இதினால் ஆயுள் பூராவும் குருடாயிருப்பதிலிருந்து காப்பாற்றப்பட்டால் இந்த சிகிச்சையைக் கைக்கொள்ளவேண்டியது அவசியமென்றாகவில்லையா?

(4) பிறந்தவுடன் மேற்சொன்னபிரகாரம் செய்யத்தவறினாலும், பின்னால் சிசுவின் கண்களில் சிவப்போ அல்லது வீக்கமோ கண்டால் தாமதிக்காமல் ஒரு வைத்தியனைக்கொண்டு பார்க்கவேண்டும். கவனியாது இரண்டொரு நாள் விட்டுவிட்டாலும் மோசம் வந்துவிடும். பிறகு வெகு சாமர்த்தியமான வைத்தியனுக்கும் சாத்தியமில்லாமற்போய்விடும். இந்த விஷயத்தை முக்கியமாய் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். தங்களுடைய குழந்தைகளின் கண்களைக் காப்பாற்ற ஆயிர ரூபாய் செலவழிக்க தயாராயும், இரவும் பகலும் ஓயாது அதற்காக முயற்சிசெய்யும் பெற்றோர்கள் கூட ஆரம்பத்தில் இரண்டொருநாள் தாமதம் செய்தகாரணத்தினால், தங்கள் குழந்தைகள் பார்வை இழந்ததற்குத் தாங்களே காரணமாகிறார்கள். ஆரம்பத்தில் ஏதோ ஒன்றுமில்லாததுபோல் கண்ணில் தோன்றும் வீக்கமும் சிவந்த நிறமும் கவனியாதுவிட்டால் கண்ணை அடியோடு அழித்துவிடும். ஆரம்பத்திலேயே வைத்தியனைக்கொண்டு சாதாரண சிகிச்சைசெய்தாலும் கெடுதல் முழுவதும் நிவிர்த்தியாய்விடும். பம்பாய் இராஜதானியில், ஜில்லா அதிகாரியாயிருக்கும் மிஸ்டர் ஜி. ஜி. ஹெண்டர்ஸன் துரையவர்களால் 'குருடுக்கு உதவிபுரியும் சங்கம்' என்ற ஒரு சங்கமேற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த சங்கத்தார் அந்தப் பட்டணத்தில், குழந்தைகள் பிறந்தவுடன், வீடுகளுக்குச் சென்று குழந்தைகளினுடைய கண்களைத் தெரிந்தவர்களைக்கொண்டு சரியாய்ப் பார்வையிட்டு, அதற்குத் தகுந்த வைத்தியம் செய்ய முயலுகிறார்கள்.

(5) **ஆகாரம் போடுவதைப்பற்றி.**—பிறந்த குழந்தைக்குத் தன்னுடைய தாயின் பாலைக் குடிக்க ஆரம்பிப்பதற்கு முன்பாக, யாதொரு ஆகாரமும் மருந்தும் தேவையில்லை. சாதாரணமாக சிசு முதலில் பாலில்லாமலே தன் சுயபலத்தைக்கொண்டே தாங்கிக்கொள்ளும். பிறந்த ஆறுமணி சாவகாசத்தின் பிறகு காலாகாலத்தில் தாய்ப்பால் கொடுத்துவரவேண்டும். விளக்கெண்ணெயைக்காட்டிலும், தாயின் சீயம்பால் மலத்தைக்கழிக்க மிகவும் நல்லது. குழந்தை தாயினிடத்து சீயம்பாலைக்குடித்தால் நல்லபால் பிறகு சீக்கிரம் சுரக்கும், மூன்றுநாள் வரையிலும் சீயம்பாலைக் குடித்து குழந்தை திருப்தியடையாமலிருந்தாலும் நஷ்டமொன்றுமில்லை; அப்பாலினால் மலம் கழிந்து வயிறு சுத்தமாய்விடும். ஆகவே கொடுத்த பாலை ஜெரித்துக் கொள்ள சக்தியுண்டாகும். முதலிரண்டு நாள்களில், பசும்பாலையும் விளக்கெண்ணெயையும் கொடுத்துக் குழந்தையின் வயிற்றைக் கெடுப்பதைக்காட்டிலும், முதலில் கொஞ்சம் பசியுடன் தாய்ப்பால் அகப்பட்டால் போதுமென்ற அவாவுடன் விட்டுவிடுவது எத்தனையோ மடங்கு நலம். வேறொரு உணவும் மருந்தும் கொடாமல் தாய்ப்பாலான சிசுவுக்கு ஏற்பட்ட இயற்கை உணவோடு மாத்திரம் சிசுவை விட்டுவிடுவது மிகவும் நல்லது. பிறந்து மூன்றுநாள் வரையில் இம்மாதிரி செய்தால், குழந்தை எதையும் ஜீரணம் செய்துகொள்ளுகிறது. முதலிரண்டு நாள்களில், விளக்கெண்ணெயில்லாமல் தாய்ப்பாலைக் குடிப்பதினாலேயே கறுப்பு மலங்களைக் கழித்துக்கொள்ளுகிறது.

(6) தேக சௌக்கியமுள்ள சிசு 24 மணிநேரத்தில் 22 மணி நேரம் தூங்கவேண்டும், பகலில் இரண்டுமணிக் கொருதடவையும், இரவில் மூன்றுமணிக் கொருதடவையும் பால் குடிக்கவேண்டும்; முதல், 10 நாள்களில் நாளொன்றுக்கு இரண்டல்லது மூன்றுதடவை மலத்தைக் கழிக்கவேண்டும்.

## செய்யக்கூடாதவைகள்

(1) காற்றடிக்கும் இடத்திலாவது, மூடாமலாவது குழந்தையை வைத்திருக்கக்கூடாது.

(2) குளிப்பாட்டுகையில் வெந்நீரை அதிகமாயாவது மூச்சு திணறும்படியாயாவது விடக்கூடாது.

(3) குழந்தையின் தொப்பிள் கொடிமேல், மண் முதலானவைகள் தடவக்கூடாது.

(4) குழந்தையின் கண்களை கவனியாமல் அஜாக்கிரதையாய் விட்டுவிடக்கூடாது.

(5) பிறந்த சிசுவுக்கு பசும்பாலும் விளக்கெண்ணெயும் கொடுக்க வேண்டாம்; தாய்க்கு பால் சுரக்கும் வரையில் தாமதிக்கலாம்.

(6) அழுகிறபோதெல்லாம் பால் கொடுக்கக்கூடாது. மணிக் கணக்காய் ஒரே ரீதியாய் பால் கொடுக்கவேண்டும்.

Publicity Bureau.

## HOW TO PRESERVE MANURE IN SOUTH INDIA

## தென்னிந்தியாவில், எருவைப் பத்திரப்படுத்திப் போடும் விதம்

விறகு அகப்படாத சில இடங்களிலும் பட்டணங்களுக்குச் சமீபங்களிலும் மாட்டுச் சாணியின் பெரும் பாகத்தை அடையாகத் தட்டி அடுப்பெரிக்கிறார்கள். அதினால் எருவுக்குபயோகப்படக் கூடியதாய் சிறிது சாம்பல்தான் மிச்சப்படுகிறது. குடியானவன் தானே தன் மாட்டின் சாணியை அடுப்பெரித்தால், சாம்பலைச் சாதாரணமாய் ஒரு வெளியிடத்தில் போட்டுவைக்கிறான். அங்கே, அதிலுள்ள நல்ல சத்துக்களெல்லாம் போய்விடுகிறது. மாட்டுச் சாணியை எரித்துவிடுகிற வழக்கம் பெரிய நஷ்டத்திற்குக் காரணமென்று யாவருக்குக் தெரியும். மாட்டுச் சாணியை அடுப்பெரிப்பதால், குடியானவனுக்குக் கொஞ்சந்தான் செலவு மிச்சப்படுகிறது. ஆனால் கோயம்புத்தூர், சேலம் முதலிய இடங்களில் செய்யப்படுவதுபோல, தன் வயல்களைச் சுற்றி வேலிகள் வளர்த்தாலும், அல்லது தன் வயலில் ஒரு சிறு பாகத்தில் விறகிற்காக மரங்களை வளர்த்தாலும், அவனுக்குவேண்டிய அளவு விறகு சுலபமாய்க் கிடைக்கும். இவ்வித உபாயங்களால் மாட்டுச்சாணியை அடுப்பெரித்துச் சேதமுண்டாக்கும் வழக்கம் போய்விடும். மேலும் பெரிய பட்டணங்களுக்குச் சமீபத்தில், விறகின் விலை அதிகமாய் இருப்பதால், விறகிற்காக மரங்களைப் பயிராக்கல், சாதாரணமாய் அதிக இலாபம் கொடுக்கக்கூடியதாயிருக்கிறது.

குடியானவர்கள் சாதாரணமாய் மாட்டுச்சாணியை வெளியில் காற்று அடிக்குமிடத்தில் குவியலாய்ச் சேர்த்துவைப்பது வழக்கம், அவ்விடத்தில அவைகள் கெட்டியாய் உலர்ந்துபோய் மழைபெய்யும் போது கரைந்துபோகிறது. பலவிதமாய் அதினால் சத்துக் குறைகிறது. கடைசியில் பிரயோஜனமற்ற சத்து இல்லாத ஒரு சிறு



குவியல்தான் வயலுக்கு எருவாகக் கொண்டுபோகப்படுகிறது. அந்தச் சாணியோடு கொஞ்சம் வைக்கோலும் தழைகளும் இருக்கும். ஒவ்வொரு வஸ்துவும் தனித்தனியே நிற்கிறது. சாணியில் சத்துக் குறைந்துவிடுகிறது. வைக்கோல் தான்கள் கெட்டிப்பட்டு உலர்ந்து போகின்றன. இந்தியாவில் மாடுகளுக்குப் படுக்கைப் போடுவதில்லை. ஆகவே ஆயிரத்தில் ஒருதரங்கூட மாடுகளின் நீரை சேர்த்துவைக்க முயற்சிசெய்வதில்லை. இது நஷ்டத்தை உண்டாக்குகிறது. ஏனெனில், மேலே சொல்லப்பட்டதுபோல, எரு கெட்டிப்பட்டு உலர்ந்துவிடுகிறது. மேலும் நீரை கவனியாததால் அதிக நஷ்டத்தையும் கெடுதியையும் உண்டாக்கக்கூடியதாயிருக்கிறது. ஏனெனில், நீர்பாகமாக இருக்கிற எருவைச் சேர்த்து வைக்காமல் இருப்பதோடு கூட பூமியிலும் முக்கியமாய் மாடுகளின் காலடிப் பள்ளங்களிலும் அது தேங்கி மண்ணோடு கலந்து நாற்றமெடுத்து வீட்டிலாவது கொட்டிலிலாவது உள்ள காற்றுக் கெட்டுப்போய் அசுத்தமாய் இருக்கிறது. கொட்டில்களில் காலை வேளைகளில் இந்த நாற்றம் வீசுவதை ஒவ்வொருவரும் கவனித்து இருக்கிறார்கள். இது பூமியில் விழுகிற மூத்திரத்தில் உள்ள நல்ல சத்துள்ள வஸ்துக்கள் ஆவியாய் போய்விடுவதனால் ஏற்படும் நாற்றமே.

குடியானவனுக்கு மாட்டு மூத்திரத்தின் உபயோகம், ஒருவாறாய்த் தெரிந்திருந்தபோதிலும், அதை அவன் முற்றும் உணரவில்லையென்றே நினைக்கவேண்டியதாயிருக்கிறது. உண்மையில், மாட்டின் மூத்திரத்தில் சாணியைப் பார்க்கிலும், நிலத்தைச் செழிப்பிக்கும் வஸ்துக்கள் அதிகமாயிருக்கின்றன. ஆகையால், மாட்டின் நீரை உபயோகிக்காமல் வீணாக்குவதினால் பெரும் நஷ்டமுண்டாகிறது. இவ்விதமாய் நஷ்டம் உண்டாகாதிருக்கவேண்டுமானால், மாட்டிற்கு வைக்கோற்படுக்கை போட்டுவைத்தால், நீரில் அது ஊறி இதைச் சேதப்படுத்தாமல் காக்கும், அல்லது கொஞ்சம் காய்ந்த மண்ணைக் கொட்டிலில் தூவிவைக்கலாம். மண் தூவிவைத்தால், நீரின் பெரும்பாகம் சேதப்படாமல் சேர்க்கலாம். அந்த மண்ணை எருவாக உபயோகப்படுத்தும்வரையில் கொட்டிலிலேயே வைத்திருக்கலாம், அல்லது அடியில் விவரித்திருக்கும் எருக்குழியில் போடலாம். வயல்களில் ஆடுமாடுகளைக் கட்டியிருந்தால் நீர் வீண்போகாது.

ஏன் மாடுகளுக்கு படுக்கை போடுவதில்லையென்று குடியானவனைக் கேட்டால், மாட்டிற்குப் போதுமான தீனியே அவனிடத்தில் இல்லையென்றும், படுக்கைக்கு வைக்கோல் தேட எங்கேபோவதென்றும் சொல்லுவான். எருக்குவியல்களில், ஏராளமான கழிந்த வைக்கோல் இருப்பதே இது தகுந்த காரணமல்லவென்பதற்குப் போது

மான சாட்சி; இந்தக் கழிவு வைக்கோலும், பெரும் புல்லும், களை யெடுத்த செடிகளும், தழைகளும் பல தினுசு செத்தைகளும், படுக்கைக்கு உபயோகப்படுத்தலாம். மேலும் தரையில் உலர்ந்த மண் தெளிப்பதாயிருந்தால், இவைகள் அதிகமாயும் தேவையில்லை.

முன் சொன்னதுபோல், வயலுக்குப் போடும் எருவில் முக்கியமான பாகம் மாட்டு நீர்தான். எருவைச் சரியானபடி சேர்த்தால் அதில் சாணி முழுது மிருப்பதோடுகூட மாட்டிற்குப் போடும் வைக்கோற் செத்தையும் சேர்ந்திருக்கும். நிலத்தில் உண்டாகும் தீனியைத் தின்னும் மாடுகளின் சாணியும் மூத்திரமும், படுக்கைச் செத்தையும் நிலத்தை வளப்படுத்தப் போதுமான எருவாகும். நல்ல எரு சேர்க்கவேண்டுமானால், இவ்வஸ்துக்களை யெல்லாம் நன்றாய் ஒன்றாகலந்து, பத்திரப்படுத்தி வைக்கவேண்டும். அப்படிச்செய்தால், அது புளிப்பேறி, அடியோடு அழுகி மக்கிப் பக்குவமாகும். வயலுக்குப் போடும் எருவின் மேன்மை அதிலுள்ள செழிப்புண்டாக்கும் வஸ்துக்களைப் பொருத்ததல்லாது, நிலத்தை உடைத்துப் பண்படுத்தும் சக்தியையும் உடைத்தாயிருக்கிறது. பின் சொல்லப்பட்ட குணம், எரு மக்கியிருக்கும் நிலைமையைப் பொருத்திருக்கிறது.

குடியானவன் நிலைமைக்குத் தக்கபடி, எரு சேர்க்கும் ஒரு மேன்மையான வசதி அடியில் விவரிக்கப்பட்டிருக்கிறது. இந்த மாதிரி சேர்ப்பதில், சாணியும் நீரும் கொட்டிலிலிருந்து அடிக்கடி எடுக்கப்படுவதில்லை. எரு தேவையாயிருக்கும்பொழுதுதான், பல மாதங்களுக்கொருமுறை எடுக்கப்படும். போடப்படும் படுக்கை, மூத்திரத்தை இழுத்துக்கொள்ளுகிறது.

மாட்டுக் கொட்டிலின் கீழ்மட்டம், சுற்றியிருக்கும் பூமிக்கு 2 அல்லது 3 அடி பள்ளமாயிருக்கவேண்டும். அப்பள்ளத்தின் தரையும் பக்கங்களும், களிமண்ணால் பூசப்பட்டிருக்கவேண்டும். தரைமட்டத்தில், ஆரம்பத்தில் சாஸ்வதமாய் கொஞ்சம் சாம்பலை அடிப்படையாய்த் தெளிக்கவேண்டும்; ஒவ்வொரு நாளும், தரையின்மேல் படுக்கைக்காக, தழை முதலியவைகளைப் படைப்படையாய் போடவேண்டும். இதற்காக, தழைகளையும், கோரைப்புற்களையும், இன்னும் மற்றுமுள்ள கந்தமூல சாக்குகளையும், குடியானவனும் அவனுடைய மாடுகளும் வேலையில்லாமலிருக்கும்பொழுது சுலபமாய் கிடைக்கக்கூடிய காலத்தில் சேர்த்து பத்திரப்படுத்தி வைத்திருக்கவேண்டும. கழிந்த வைக்கோலையும், நெல் அடித்து எடுத்த பின் கதிர்முனையைப்போல பயிரின் தள்ளப்பட்ட பாகங்களையும், படுக்கையாக உபயோகிக்கலாம். ஒரு சோடி மாட்டிற்குக் கொட்டில் 10 அடி நீளம், 6 அடி அகலம் இருக்கலாம். கொட்டிலில்



மாடுகளைக் கட்டாமல் விட்டுவைப்பது நல்லது. ஏனென்றால், மாடுகள் எருவின் ஒவ்வொரு பாகத்தையும் நன்றாய் மிதித்து, அமுக்கும். எரு நன்றாய் மிதிக்கப்படாவிட்டால், சீக்கிரம் அழுக ஆரம்பித்து, அதிகமாய் உஷ்ணப்பட்டு, கெட்ட நாற்றம் வீசி மாடுகளுக்கு வியாதியை யுண்டாக்கும். தினசரி காலையில், முன்னிரவுபோட்ட சாணியை மட்டமாய்ப் பரப்பி, அதின்மேல் படுக்கைக்குச் சில தழை கொஞ்சம் பரப்பவேண்டும். இந்த விதமாய், அந்தக் குழி நிரம்பும்வரையில் எருச்சேர்க்கலாம். இது சுமார் மூன்று மாதம் பிடிக்கும்.

படுக்கை அதிகமாய்ப் போடக்கூடாது; அதிகமாய்ப் போட்டால் எரு அதிகமாய்க் காய்ந்துபோகும், மெதுவாயும் மக்காது, மேலும் அதிலுள்ள சத்தும் போய்விடும். குழியில் உள்ள எரு, அதின் எல்லாபாகத்திலும் ஈரமாகவே இருக்கவேண்டும். எரு எந்த பாகத்திலாவது சாம்பல்வர்ணமாய்த் தோற்றினால் அது சரியாய் மக்கவில்லை என்பதற்கு அடையாளம். அந்த நிறம் அதிக உஷ்ணத்தைக் குறிக்கிறது. அது மிகவும் வறண்டுபோனதினால் ஏற்பட்டது. படுக்கைக்குப் போடுகிற வைக்கோல் முதலானவைகள் நீளமாகவும் கெட்டியாகவும் இருந்தால் எரு சரியாய் அழுகாது. அவ்விதமான படுக்கை வஸ்துக்களை நறுக்கிப்போடவேண்டும். எரு நன்றாய் அழுகி இருந்தாலொழிய அது பயிருக்குப் பயன்படாது. ஏனெனில், அது சீக்கிரம் வேலைசெய்யாது. அல்லாமலும் அது நிலத்தை அதிகமாய் வெடிப்புண்டாகும்படி செய்கிறபடியால் அதிலுள்ள பயிர்கள் வறட்சியானால் அதிகமாய் வருந்தும். சரியாய்ப் பக்குவப் படுத்தப்பட்ட எரு கறுப்பு நிறமாயும் பக்குவமாயும் இருக்கும். அது முற்றும் நன்றாய் மக்கிப்போயிருப்பதால் அதை ஒரு கத்தியினால் அறுக்கும்படியான பக்குவத்தோடிருக்கும். குழியிலிருந்து எருவை எடுக்கும்பொழுது அதன்மேலே யிருக்கும் அழுகாத பாகத்தை ஒரு பக்கம் ஒதுக்கிவைத்துப் பின்பு நன்றாய் மக்கிய பாகத்தை எல்லாம் எடுத்துக்கொண்டு, அழுகாத பாகத்தை மறுபடியும் குழியின் அடியில் போட்டு முன்போலவே எருவைச் சேர்க்கலாம்.

இப்படி எரு பக்குவப்படுத்துவதனால் நாம் வைத்திருக்கும் மாடு ஒன்றுக்கு, வருஷந்தோறும் ஐந்து முதல் ஏழு டன் வரையில் நல்ல எரு எடுக்கலாம். இப்படியல்லாமல் சாணியை வெட்டவெளியில் குவியலாய்ப் போட்டுவைத்தால் வருஷம் ஒன்றுக்கு $\frac{1}{3}$ டன் உபயோகமில்லாத எருதான் கிடைக்கும். இவ்வாறு செய்வதற்கு உள்ள ஆட்சேபனைகளாவன :

1. கொட்டிலில் அடைக்கப்பட்ட மாடுகளுக்கு இந்த முறை வியாதியை உண்டாக்கும் என்ற எண்ணம்.

2. அதற்குப் போடுவதற்குப் படுக்கை அதிகமாய் வேண்டியதாயிருக்கிறது.

பின் சொல்லப்பட்ட விஷய ஸம்பந்தப்பட்ட வரையில் நாம் சொல்லவேண்டியதென்னவென்றால், தென்கன்னடத்தில் சில பாகங்களில் குடியானவர்கள் தழைகளையும் புற்களையும், அதிகப் பிரயாசைப்பட்டுச் சேர்த்து மாடுகளுக்குப் படுக்கையாய்ப் போடுகிறார்கள். ஆனால் அவர்கள் சில தினங்களுக்கொருதரம் எருவை எடுத்துப் பள்ளமாய் உள்ள விடங்களில் போட்டுவைக்கிறார்கள். அங்கே போக்குவரத்தாயிருக்கும் கட்டைவண்டிகள் அதன்மேல் போவதினால் அது நன்றாய் அழுத்தப்படுகிறது. முதலாவது ஆட்சேபனையைக் கவனிக்குமிடத்து, அனுபவத்தில் அப்படிச் சொல்லுவதற்குத் தகுந்த காரணமில்லையென்று தெரிகிறது.

(இன்னும் வரும்.)

LESSONS FOR FAMILY WORSHIP

# வேத வாசிப்பு ஒழுங்கு

1920-ஆம் ஜுலைமீ

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | வி. | ஆதி. | 32. | 1—16 | 11 | ஞா. | ஆதி. | 41. | 17—36 | 21 | பு. | ஆதி. | 45. | 16—28 |
| 2 | வெ. | ,, | 32. | 17—32 | 12 | தி. | ,, | 41. | 37—57 | 22 | வி. | | 46. | 1-7, 26—34 |
| 3 | ச. | ,, | 33. | 1—16 | 13 | செ. | ,, | 42. | 1—17 | 23 | வெ. | ஆதி. | 47. | 1—14 |
| 4 | ஞா. | ,, | 35. | 1—15 | 14 | பு. | ,, | 42. | 18—28 | 24 | ச. | ,, | 47. | 15—31 |
| 5 | தி. | ,, | 37. | 1—18 | 15 | வி. | ,, | 42. | 29—38 | 25 | ஞா. | ,, | 48. | 1—11 |
| 6 | செ. | ,, | 37. | 19—36 | 16* | வெ. | ,, | 43. | 1—17 | 26 | தி. | ,, | 48. | 12—22 |
| 7 | பு. | | 39. | 1-9, 19—23 | 17 | ச. | ,, | 43. | 18—34 | 27 | செ. | ,, | 50. | 1—13 |
| 8 | வி. | ஆதி. | 40. | 1—11 | 18 | ஞா. | ,, | 44. | 1—17 | 28 | பு. | ,, | 50. | 14—26 |
| 9 | வெ. | ,, | 40. | 12—23 | 19 | தி. | ,, | 44. | 18—34 | 29 | வி. | மத். | 1. | 18-25 |
| | | | | | | | | | | | | | 2. | 1-12 |
| 10 | ச. | ,, | 41. | 1—16 | 20 | செ. | ,, | 45. | 1—15 | 30 | வெ. | ,, | 2. | 13—23 |
| | | | | | | | | | | 31 | ச. | ,, | 3. | 1—17 |

C. L. S. PRESS, MADRAS—1920


# மாதர் போதினி

No. 271 ஆகஸ்டு 1920 No. 8


## CERTAINTY OF SALVATION

## இரக்ஷிப்பின் நிச்சயம்

MADRAS

கேள்வி. 'நீ இரட்சிக்கப்பட்டிருக்கிறாயா?' என்று சரியா? இப்போது அது எப்படித் தெரியும்? மறு உலகத்தில்தானே அதையெல்லாம் அறியலாம்.

உத்தரவு. இரட்சிப்புக்கு இரண்டு அந்தங்கள் உண்டு. ஒரு அந்தம் சிலுவை. அதில் இயேசுவானவர் பாவத்தின் தண்டனையிலிருந்து மனுஷரெல்லாரையும் இரட்சித்தார். அவர் இரட்சிப்பை எல்லாருக்கும் சம்பாதித்துவிட்டார் என்றாலும், விசுவாசத்தினால் நான் அதை எனக்கென்று ஏற்றுக்கொள்ளும்போதே எனக்கு அது செல்லுகிறது. என்னுடைய பாவத்தை நான் உணர்ந்து, அவைகளுக்கு வரவேண்டிய தண்டனையிலிருந்து இரட்சிக்கப்படும்படி நான் என்ன செய்யவேண்டும் என்று ஓலமிடும்போது, கிறிஸ்து சிலுவையில் மரித்த சமயத்தில் என் பாவத்தின் தண்டனையும் அதிலே தீர்க்கப்பட்டாயிற்று என்பதை விசுவாசித்து, ஸ்தோத்திரத்தோடு அவரை எனக்கு இரட்சகராக ஏற்றுக்கொள்வேனானால் பாவத்தின் தண்டனையிலிருந்து இரட்சிக்கப்பட்டவன் ஆகிறேன். 'பாவமன்னிப்பாகிய இரட்சிப்பை' பெறுகிறேன். இதைப்பற்றித்தான் பவுல் அப்போஸ்தலன் எபே. 2: 8-ல் 'கிருபையினால் விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்' என்று தேவகிருபையினால் கிறிஸ்துவை விசுவாசித்து பாவத்தின் தண்டனையிலிருந்து இரட்சிக்கப்பட்டிருந்த எபேசு சபையாரைப் பார்த்துச் சொல்லுகிறார். வழக்கமாய் 'இரட்சிக்கப்பட்டிருக்கிறாயா?' என்று கேட்கிறவர்கள் இந்தக் கருத்தாகத்தான் கேட்கிறார்கள். 'பாவத்தின் தண்டனையிலிருந்து நீ இரட்சிக்கப்பட்டவன் ஆகிவிட்டாயா?' என்பதுதான் அவர்கள் கருத்து. இவ்வுலகத்திலேயே நாம் இந்தக் கேள்விக்கு உத்தரவு சொல்லக்கூடியவர்களாயிருக்கவேண்டும்.

VOL. XXXV.

இரட்சிப்பின் இன்னொரு அந்தம் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை. பாவத்தின் தண்டனையிலிருந்து இரட்சிக்கப்பட்டவர்கள் அனைவரும் இயேசுவானவர் வரும்பொழுது மகிமையுள்ள சரீரமுள்ளவர்களாய் எழுந்து, ஆகாயத்தில் அவரைச் சந்திக்கப் போவார்கள். (1 தெச. 4: 16, 17; 1 கொரி. 15: 51, 52 பார்க்கவும்.) நம்முடைய சரீரம் அப்பொழுது மீட்கப்படும். ரோமர் 8: 23-ல் இதை 'சரீரமீட்பாகிய புத்திரசுவிகாரம்' என்று சொல்லியிருக்கிறது. இதைக் குறித்துத்தான் எபிரேயர் 9: 28-ல் 'கிறிஸ்துவும் தமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி பாவமில்லாமல் தரிசனமாவார்' என்று சொல்லியிருக்கிறது.

இவ்விரண்டு அந்தங்களுக்கும் இடையில் இன்னோர் இரட்சிப்பு நடந்தேறிக்கொண்டிருக்கிறது. விசுவாசத்தினால் பாவத்தின் தண்டனையிலிருந்து இரட்சிக்கப்பட்டவர்கள், சரீரமீட்பாகிய இரட்சிப்பைப்பெற்றுக்கொள்ளுமுன், உலகத்திலிருக்கும் நாளெல்லாம் பாவத்தின் வல்லமையிலிருந்து இரட்சிக்கப்படவேண்டும். 'அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்!' பாவமன்னிப்புப் பெற்றதினால் அவருடைய ஜனங்களானவர்களுடைய பாவங்களை அவர் நீக்கி, இவ்விதமாய் பாவங்களின் வல்லமையிலிருந்து அவர்களை இரட்சிப்பார். 1 கொரி. 1: 18-ல் 'சிலுவையைப்பற்றிய உபதேசம் இரட்சிக்கப்படுகிற நமக்கோ தேவபெலனாயிருக்கிறது' என்று அப்போஸ்தலன் சொல்லுகிறதின் அர்த்தம் இதுதான். அதாவது, நாடோறும் பாவத்திலிருந்து இரட்சிக்கப்படுகிற நமக்கு சிலுவையின் உபதேசம் வல்லமை கொடுக்கிறதாயிருக்கிறது என்கிறார். என்னைப்பார்த்து ஒருவர்: 'நீ இரட்சிக்கப்பட்டிருக்கிறாயா?' என்று கேட்டால், அதற்கு நான் மூன்று உத்தரவு கொடுக்கலாம். கிறிஸ்துவை என் இரட்சகராக ஏற்றுக்கொண்டு நான் தேவனிடத்தில் திரும்பின நாளில் இரட்சிக்கப்பட்டேன்; என் இரட்சகர் திரும்பவரும் நாளில் நான் இரட்சிக்கப்படுவேன்; இப்போது தேவவல்லமையால் பாவத்தினின்று இரட்சிக்கப்படுகிறேன் என்று சொல்லுவேன்.

**கேள்வி.** இரட்சிக்கப்படுகிறது, பாவமன்னிப்பைப் பெறுகிறது, தேவனுடைய பிள்ளையாகிறது, மறுபடியும் பிறக்கிறது, குணப்படுகிறது, நீதிமானாக்கப்படுகிறது—என்னும் பதங்களுக்குள் உள்ள வித்தியாசம் என்ன?

**உத்தரவு.** இப்பதங்கள் எல்லாம் ஏறக்குறைய ஒரே காரியத்தைத்தான் குறிக்கிறது. ஒரு பாவி தன் நிலைமையை உணர்ந்து, கிறிஸ்துவின் பாடுகளால் உண்டான மன்னிப்பைப்பெற்று, அவரை



ஏற்றுக்கொள்ளும் முதல் கிரியையையே இப்பதங்கள் யாவும் கருதுகின்றன. தேவனுடைய பிள்ளை என்பது மனந்திரும்பி கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவனுக்குக் கொடுக்கப்படும் புதுப்பேர். (யோவா. 1: 12.) முன்னால் இவன் தேவகோபாக்கினையின் பிள்ளை; இப்போது தேவன்புக்குச் சுதந்தரவாளியான தேவனுடைய பிள்ளை.

மறுபடியும் பிறக்கிறது—குணப்படுகிறது—ஒருவன் பாவத்தை விட்டு கிறிஸ்துவினிடத்தில் திரும்பினவுடனே பரலோகத்திலுள்ளவர்கள்: 'இவன் மறுபடியும் பிறந்துவிட்டான்; நமது ராஜ்யத்திற்கு உரியவனாகிவிட்டான்' என்பார்கள். அவனோடு இருக்கும் ஜனங்கள் அவன் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டபின் அவனுடைய குணத்தில் காணப்படும் மாறுதலைக் கவனித்து: 'இவன் குணப்பட்டிருக்கிறான்' என்பார்கள். நடக்கிற மாறுதல் ஒன்றே.

பாவ உணர்ச்சியும், கிறிஸ்துவின்மேல் உயிருள்ள விசுவாசமும் ஆவியானவருடைய கிரியையினால் உண்டாகின்றதாகையால் இந்த மாறுதலடைகிறவன் ஆவியினால் பிறந்திருக்கிறவன் என்றும் அழைக்கப்படுவான். (யோவா. 3: 3, 5.)

நீதிமானாக்கப்படுதல்—இந்தப் பதம் தேவனுக்கு முன்பாக இவன் இப்போது இருக்கும் புது நிலையைக் குறிப்பிடுகிறது. முன் தேவனால் 'பாவி' என்று எண்ணப்பட்டான்; இப்போதோ 'நீதிமான்' என்று எண்ணப்படுகிறான்.

மூடி துரை சொல்லியிருக்கிறபடி:—'நீதிமானாக்கப்படுதல்' என்பது தேவனுக்கு முன்பாக இருக்கும் புது நிலையைக் காண்பிக்கிறது 'மனந்திரும்புதல்' என்பது கிறிஸ்துவைப்பற்றி உண்டாயிருக்கும் புது மனதைக் குறிப்பிடுகிறது. 'மறுபடியும் பிறக்குதல்' என்பது ஆவியானவரால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கும் புது இருதயத்தைக் காட்டுகிறது. 'குணப்படுதல்' என்பது மனுஷருக்கு முன்பாக புது ஜீவியத்தைக் குறிப்பிடுகிறது. 'தேவனுக்குப் பிள்ளையாகுதல்' என்பது தேவனோடு அவனுக்குண்டாகும் புது பாந்தத்தைக் காண்பிக்கிறது.' இந்த மாறுதல் அடைந்தவனை தேவனுடைய பிள்ளை, விசுவாசி, நீதிமானாக்கப்பட்டவன் என்பதாய் வேதத்தில் பேசியிருக்கிறது.

**கேள்வி.** 'நான் இரட்சிக்கப்பட்டிருக்கிறேன்' என்று ஒருவன் சொல்லக்கூடுமா? அது துணிகரம் இல்லையா?

**உத்தரவு.** கிறிஸ்துவானவர் சம்பாதித்த இரட்சிப்பைத் தனக்கு உரித்தாக்கிக்கொண்டவன் இப்படிச் சொல்லக்கூடியவனாயிருக்க வேண்டும்; அது துணிகரமல்ல. என்னுடைய [illegible] னார் [illegible] னாருடைய குமாரன் என்று எனக்குத் [illegible] துணிகரமா? இல்லையே. பரி. யோவான்

தமது நிருபம் 3 : 2-ல் 'இப்போது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம்' என்றும், 3 : 14-ல் 'மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோம் என்று அறிந்திருக்கிறோம்' என்றும் சொல்லுகிறார். பரி. பவுல் ரோமர் 8 : 16-ல் 'நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம் என்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூட சாட்சிகொடுக்கிறார்' என்றும்; 2 தீமோ. 1 : 9-ல் 'அவர் நம்மை இரட்சித்து பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார்' என்றும் சொல்லுகிறார். 'உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று நீங்கள் அறிய இவைகளை எழுதியிருக்கிறேன்' என்று பரி. யோவான் தமது முதலாம் நிருபம் 5 : 13-ல் சொல்லுகிறார். இந்த அறிவு, இந்த நிச்சயம் இல்லாதவன் பரிசுத்த ஜீவியம் ஜீவிப்பது கூடாதகாரியம். இவன் செய்யும் தேவ ஊழியத்திலும் பலனைக் காண்பதரிது.

**கேள்வி.** நான் எப்படி இரட்சிக்கப்படலாம்?

**உத்தரவு.** கர்த்தராகிய இயேசுவை விசுவாசி, அப்பொழுது இரட்சிக்கப்படுவாய். நீ இருக்கிற நிலைமையிலேயே போய் தனிமையாய் முழங்கால்படியிடு. உன் இரட்சகர் உன் பாவங்கள் அனைத்தையும் கல்வாரியில் தொலைத்துவிட்டார் என்பதை நம்பி அவருக்கு ஸ்தோத்திரஞ்செலுத்து. ஏசாயா. 53 : 4-6யும் முழங்காலில் நின்று, 'நாம்' 'நம்முடைய' என்று வருகிற இடங்களில் 'நான்' 'என்னுடைய' என்று வைத்து வாசி. உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டாயிற்று என்று நம்பு. 'நான் தேவனுடைய பிள்ளையாகிவிட்டதுபோல எனக்கு உணர்ச்சியில்லையே' என்கிறாயாக்கும், பரவாயில்லை. நீ உன் மனதில் அதை உணர்ந்தாலும் சரி, உணராவிட்டாலும் சரி, 'நான் தேவனுடைய பிள்ளை' என்று உறுதியாகச் சொல். உன் சகல உறுதியும் நம்பிக்கையும் யோவான் 1 : 12; 6 : 47; ஏசா. 53 : 4-6 இவைகளின்மேலேயே நிற்கக்கடவது. உன் உணர்ச்சியினிமித்தம் நீ இரட்சிக்கப்படாமல், கிறிஸ்துவினிமித்தமே இரட்சிக்கப்படுகிறாய். அவர் மனம் மாற ஒரு மனுஷனல்ல, யோவான் 5 : 24 ஐச் சொன்னவர் மாறுவாரா? மாறமாட்டார். இவ்வசனங்களும் தேவனுடைய உண்மையுமே உன்னுடைய உறுதி. சில பாவங்களை விட்டுவிட்டு, சில நல்ல தீர்மானங்களைப் பண்ணிக்கொண்டு வரவேண்டும் என்று நினையாதே. நீ வியாதிக்காரன்; வியாதியோடு வைத்தியரண்டை வா. என்னிடத்தில் வருகிறவனை [illegible] தள்ளமாட்டேன் என்கிறார். ஆகையால் வா! வா! இன்று அவருடைய [illegible] ...ில் கடினப்படுத்தாதே. இதுவே இரட்சண்ணிய நாள்.

---



## THE LONGING OF THE SPIRIT OF GOD

## தேவ ஆவியானவரின் வாஞ்சை

'நம்மில் வாசமாயிருக்கிற ஆவியானவர் நம்மிடத்தில் வைராக்கிய வாஞ்சையாயிருக்கிறார்' (யாக். 4 : 5).

தேவன் அன்பாகவே இருக்கிறார் என்பதை நாம் நம்புகிறோம். இயேசுவானவரும் நம்மிடத்தில் அன்புகூர்ந்து தமது ஜீவனை நமக்காகக் கொடுத்தார் என்றும் அறிவோம். ஆனால் திரித்துவத்தில் மூன்றாம் ஆளாகிய ஆவியானவரும் நமதுமேல் அன்புள்ளவராயிருக்கிறார் என்று மெய்யாய் நம்புகிறோமா? ஆவியானவர் கண்டித்து உணர்த்துகிறவர் என்று அதிகமாய் யோசிக்கிறதினால், அவரும் அன்புள்ளவராயிருக்கிறார் என்கிற சத்தியத்தை அடிக்கடி மறந்துபோகிறோம்.

மேலே எழுதியிருக்கும் வாக்கியத்தில் நம்மில் வாசமாயிருக்கும் ஆவியானவர் நம்மிடத்தில் வைராக்கிய வாஞ்சையாயிருக்கிறார் என்று சொல்லியிருக்கிறது. ஒவ்வொரு விசுவாசியின் இருதயத்திலும் ஆவியானவர் வாசம்பண்ணுகிறார் என்று பார்க்கிறோம். இப்போது, அவ்விதமாய் விசுவாசியின் இருதயத்தில் வாசம்பண்ணுகிற அவர் (1) எதற்காக வாஞ்சையாயிருக்கிறார் என்றும், (2) எவ்வித வாஞ்சையுள்ளவராயிருக்கிறார் என்றும், (3) அந்த வாஞ்சையை எப்படிக் காட்டுகிறார் என்றும், (4) நாம் செய்யவேண்டியதென்னவென்றும் பார்ப்போமாக.

### I. ஆவியானவர் எதற்காக வாஞ்சையாயிருக்கிறார்?

ஆதிகாலந்துவக்கி ஆவியானவரின் வாஞ்சை ஒன்றே ஒன்றுதான்—அதாவது: பரிசுத்தமுள்ள மனுஷனை உண்டாக்கி, அவனை தேவனுடைய சமுகத்தில் நிறுத்துவதே. சகலமும் ஒழுங்கற்றதும், வெறுமையுமாயிருந்தபோது அவைகளில் ஒளியையும், ஒழுங்கையும் உண்டுபண்ணுவதற்காக இந்த ஆவியானவர் ஆழத்தின்மேலிருந்த இருள் நிறைந்த தண்ணீர்கள் மேலே அசைவாடிக்கொண்டிருந்தார் என்று வாசிக்கிறோம். அதற்குப் பின்புதான் உலகத்திலும் வானங்களிலும் காணப்படுகிற சகல அலங்காரங்களும் உண்டாயின. இப்போதும் அப்படித்தான். எந்த இருதயத்தில் ஒழுங்கின்மையும் வெறுமையுமிருக்கிறதோ, எந்த இருதயத்தின் ஆழத்தில் இருள் இருக்கிறதோ, அங்கே சமாதானத்தையும், நிறைவையும், வெளிச்சத்தையும் பிறப்பிக்கும்படி, அவர் அசைவாடிக்கொண்டிருக்கிறார்.

இருளும் குழப்பமுமாய்க் கிடந்த ஆழத்தை அலங்கரித்து, பூமி தமது கரத்தின் கிரியையினால் திருப்தியாகும்படிசெய்த ஆவியானவர், பாவமும் சந்தேகமும் குழப்பமும் நிறைந்து அலசடிப்பட்டுக்கிடக்கிற எந்த இருதயத்தையும் சந்தோஷிப்பித்து பரிசுத்த அலங்காரமுள்ள தாக்குவார் என்று நம்புவோமாக. பூர்வகாலங்களில் வெளியே நின்று போராடி, தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பாவத்தைக்கூறி மனுஷரை தேவனிடம் திருப்பும்படி கிரியைசெய்தவர், இப்பொழுது குணப்படாதவனுடைய இருதயத்திற்குள் பிரவேசிக்கும்படி கிரியை செய்கிறார்; பின்பு குணப்பட்ட விசுவாசிக்குள்ளே இருந்து வைராக்கிய வாஞ்சையோடு அவனைப் பரிசுத்தப்படுத்த கிரியை நடப்பிக்கிறார்.

நோவாவின் புறா ஒலிவ இலையை வாயில் வைத்துக்கொண்டு பேழையில் ரக்ஷிக்கப்பட்டவர்கள் மேலே பறந்துவந்து சேர்ந்தது என்று வாசிக்கிறோம். அதேபிரகாரமாக இயேசுவாகிய பேழையின் மூலமாய் ரக்ஷிக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு ஆத்துமாவின்மேலும் ஆவியாகிய புறாவானவர் நின்று ஒலிவ இலைக்கு அடையாளமாகிய சமாதானத்தையும் சந்தோஷத்தையும் காட்டி மகா வாஞ்சையோடு அசைவாடுகிறார். நம்மொவ்வொருவரையும் பரிசுத்த அலங்காரத்தினால் அலங்கரித்து நமது மணவாளராகிய நேச இயேசுவண்டை நம்மைக்கொண்டு நிறுத்துவதே அவர் வாஞ்சை. இது தவிர வேறே அவருக்கு என்ன வேலை?

விசுவாசிகளே, தைரியப்படுவோமாக! பசாசோடும், உலகத்தோடும், மாம்சத்தோடும் நமக்காகப் போராடி மேற்கொள்ள ஒருவர் இருக்கிறார். பரிசுத்தராக நாம் ஜீவிக்கவேண்டும் என்று நமக்கிருக்கும் வாஞ்சை அடிக்கடி சுயபெருமைக்காகவே உண்டாகலாம். ஆனால் தேவன் மாத்திரம் மகிமைப்படவேண்டும் என்ற நோக்கத்தோடு நம்மைத் தத்தஞ்செய்யவும், வல்லமையினால் நிரப்பவும், பரிசுத்த லக்ஷணங்களால் அலங்கரிக்கவும் ஆவியானவர் மகா அன்போடும் வாஞ்சையோடும் கிரியைசெய்கிறார். இதை நம்புகிறோமா? இவரைக் கனப்படுத்துகிறோமா? தமது வேலையை அவர் செய்யும்படி இடங்கொடுத்திருக்கிறோமா?

## II. ஆவியானவர் எவ்வித வாஞ்சையுள்ளவராயிருக்கிறார்?

வாக்கியத்தில் 'வைராக்கிய வாஞ்சை' என்று சொல்லியிருக்கிறது. அந்த வார்த்தைக்கு பரிசுத்த 'எரிச்சலுள்ள வாஞ்சை' என்றும் சொல்லலாம். அந்த வாஞ்சை எரிச்சலோடுள்ள பொறாமையையுடைய வாஞ்சை என்று இங்கிலீஷ் வேதாகமத்தில் காணலாம்.



அதின் கருத்தென்ன? ஒரு அன்புள்ள தகப்பன், தான் நேசிக்கிற மகன் தன்னை மாத்திரம் தகப்பனாக கனம்பண்ணி, நேசித்து, ஆதரிக்க வேண்டும் என்று எப்படி ஆசைப்படுவானோ; ஒரு பாசமுள்ள கணவன் தன் மனைவி தன்னை மாத்திரம் முழு மனதோடும் நேசித்து தனக்கே உண்மையாயிருக்கவேண்டும் என்று எப்படி நினைப்பானோ; ஒரு நல்ல எஜமான் தன் வேலைக்காரன் அல்லது அடிமை தன்னையே சேவித்து தனக்கே கீழ்ப்படியவேண்டுமென்று எப்படி விரும்புவானோ—அதேபிரகாரமாக, தேவனுடைய பிள்ளையாகிய நாம், கிறிஸ்துவின் மனையாட்டியாகிய நாம், அவருக்கு அடிமைகளுமாகிய நாம் அவருடைய ஆவியானவரால் மாத்திரம் முழுவதும் நடத்தப்படவேண்டும் என்றும், அவருக்கு மாத்திரம் கீழ்ப்படிய வேண்டும் என்றும் மிகுந்த வாஞ்சைகொள்ளுகிறார். ஒரு தகப்பன், ஒரு புருஷன், ஒரு எஜமான்—தங்களுக்குச் செல்லவேண்டிய கனமும், அன்பும், கீழ்ப்படிதலும் வேறே யாருக்காவது செலுத்தப்படுகிறதாகக் கண்டால், எவ்வளவு மனவருத்தத்தோடும், துயரத்தோடும், கவலையோடும், எரிச்சலோடும் அதைக்குறித்து நினைத்து, அது நீங்கவேண்டும் என்று தங்கள் முழு வைராக்கியத்தோடும் பிரயாசப்படுவார்களோ, அதேபிரகாரமாக ஆவியானவரும் பரிசுத்த எரிச்சலுள்ள வைராக்கியத்தோடு வாஞ்சைகொண்டு தவித்து நின்று நமது அன்பு வேறெங்கும் செல்லக்கூடாதென்று பிரயாசப்படுகிறார். 4-ம் வசனத்தில் இது தெரிகிறது. 'விபசாரரே, விபசாரிகளே—உங்களை மணம்புரிந்த நேசருக்குத் துரோகம்பண்ணுகிறவர்களே—உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை என்று அறியீர்களா?' என்று சொல்லுகிறார். ஆவியானவருடைய வாஞ்சையைக் கெடுக்கின்ற எல்லாவற்றையும் குறித்து அவருக்கு எரிச்சல் உண்டாகிறது. உலக சிநேகம், அசுத்தம், பணம் முதலியவை நமது அன்பை இழுத்துவிடுகிறதானால், ஆவியானவர் உடனே வைராக்கியங்கொள்ளுகிறார் என்று பார்க்கிறோம்.

## III. இந்த வாஞ்சையை எப்படிக் காட்டுகிறார்?

நம்முடைய ஜீவியத்தில் நடக்கிற எந்த அற்ப சம்பவத்தையும் அவரே தமது நோக்கத்தை நிறைவேற்றும்படி அனுப்புகிறார். நிமிஷந்தோறும் ஓயாமல், மகா உற்சாகத்தோடும், ஊக்கத்தோடும் அவர் கிரியை நடப்பிக்கிறார். சாத்தான் மனுஷரைத் துன்மார்க்கத்திலும் பாவத்திலும் விழப்பண்ணும்படி எவ்வளவு விழிப்போடும் ஜாக்கிரதையோடும் வேலைசெய்கிறான் பாருங்கள். அதிகாலை முதல் நடுராத்திரி வரையும் கள்ளுக்கடைகளையும், சாராயக்கடைகளையும் திறந்து

வைக்கிறான். எங்கே போனாலும் லௌகிகம், அசுத்தம், இவைகளில் விழும்படி சமயங்களைக் கொண்டுவந்து விடுகிறான். கோவிலுக்கு அல்லது ஒரு நல்ல கூட்டத்திற்குப் போகத் தடைகளை உண்டுபண்ணுகிறான். இவனே இவ்வளவு வாஞ்சையோடு வேலைசெய்கிறான் என்றால், ஆவியானவர் நம்மைப் பரிசுத்தப்படுத்தும் ஒரே வேலையாய் நமக்குள் வாசம்பண்ணும்போது அதைவிட ஓயாமலும், விடாமுயற்சியாயும் கிரியைசெய்யமாட்டாரா? செய்வார்; செய்கிறார். அவருடைய கிரியையை நாம் கண்டுகொள்ளும்படி தேவன் நமது கண்களைத் திறந்தருளுவாராக!

ஒரு சந்தோஷமான காகிதம் வருகிறது, நம்முடைய வீட்டில் ஒரு சந்தோஷம் உண்டாகிறது, நிலத்தின் பலன் வீடுவந்து சேருகிறது, நமது பிள்ளைகளுக்கு ஒரு சோதனை ஒப்பேறுகிறது, நமக்கு ஒரு வேலை கிடைக்கிறது, ஒரு போதகர் நம்மோடு சந்தோஷமாய்ப் பேசுகிறார், நமது எஜமான் நமதுபேரில் தயவுகாட்டுகிறார், வீட்டில் சுகமுண்டாகிறது, நமக்குச் சம்பளம் கூட்டப்படுகிறது—இவையெல்லாம் ஆவியானவர் நம்மை இயேசுவினிடம் இழுக்கிறதற்கு உபயோகிக்கிற கருவிகள்.

ஒரு பிரசங்கத்தைக் கேட்கிறோம், நல்ல தீர்மானம் பண்ணுகிறோம், ஒரு புஸ்தகத்தை வாசித்து உண்டான எழுப்புதலினால் போய் ஜெபிக்கிறோம், செய்யத்தகாத ஒரு காரியத்தைச் செய்கிறோம், பேசத்தகாத ஒரு பேச்சைப் பேசுகிறோம், தகாத ஆளோடு சிநேகம்பண்ணுகிறோம், உடனே சந்தேகம் உண்டாகிறது, இது சரியோ தப்பிதமோ என்று கேட்கிறோம்—இவையெல்லாம் ஆவியானவர் செய்கிற வேலை. உடனே கீழ்ப்படிந்து இயேசுவின் பாதத்தைச் சேர்ந்தால் ஜெயம், வளர்ச்சி; மற்றப்படி அபஜெயம், குளிர்ச்சி.

ஒரு நல்ல புஸ்தகம் கிடைக்கிறது, ஒரு ஆவிக்குரிய சிநேகிதனோடு சில நிமிஷம் பேசும் சலாக்கியம் கிடைக்கிறது, நமது வீட்டில் ஒரு பக்திமான் வந்து ஜெபம்பண்ணுகிறார், ஒரு சிநேகிதன் தேவனைக்குறித்து நம்மோடு பேசுகிறார், பரிசுத்த ஜீவியத்தைக் குறித்து ஒரு பிரசங்கம் கேட்கும்படி செய்கிறார், நமது ஊரில் சில நல்ல கூட்டங்கள் நடக்கும்படி செய்கிறார், நம்மை அதற்கு அழைக்கும்படி ஆட்களையும் வைத்திருக்கிறார், நம்மை ஒரு கூட்டத்தில் ஜெபிக்கும்படி சொல்லுகிறார்கள், ஒரு பிரசங்கம் பண்ணும்படி கேட்கிறார்கள்—இவைகளெல்லாம் நமதுமேல் வைராக்கிய வாஞ்சையுள்ள ஆவியானவர் பின்னே மறைவாய் நின்று நடத்தின காரியங்கள்.



நமக்கு ஒரு கோபமான செய்தி வருகிறது, ஒரு சிநேகிதன் இன்று கோபமாய்ப் பேசுகிறான், வீட்டிலே சந்தோஷம் இல்லை, ஒரு துக்ககடிதம் வருகிறது, பிள்ளைகளில் ஒன்றுக்கு வியாதி, நமக்கு ஜலதோஷம் உண்டாகிறது, ஒரு கல் தட்டி காயம் உண்டாகிறது, சில நாட்களாய்க் கட்டிலில் கிடக்கிறோம், நமது பிள்ளைகளில் ஒன்று மரித்துப்போகிறது, நமது மனைவியை அல்லது நமது புருஷனை தம்மிடம் கர்த்தர் சேர்த்துக்கொள்ளுகிறார், நமக்கு ஆதரவாயிருக்கிறவர்கள் இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கிறார்கள்—ஏன்? நாம் வருத்தப்படுகிறது தேவனுக்குச் சந்தோஷமா? அல்ல, அல்ல. நமதுபேரில் வாஞ்சையாயிருக்கும் ஆவியானவர் நாம் தேவனிடம் நெருங்கி ஜீவிப்பதற்கு இவ்வளவும் அவசியம் என்று கண்டு, தமது அன்பினால் இது வரும்படி இடங்கொடுத்தார்.

ரோமர் 8: 26-ல் ஒரு அருமையான வசனம் வருகிறது. 18-ம் வாக்கியத்தில் இக்காலத்துப் பாடுகள், துன்பங்களைக் குறித்துப் பேசுகிறார். பிற்பாடு, அந்தப்படியே ஆவியானவரும்—அதாவது நமக்குள் வாசமாயிருக்கிற ஆவியானவரும்—நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார். ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக—அதாவது விசுவாசிகளுக்காக—வேண்டுதல் செய்கிறபடியால் இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறவர் அங்கே இருக்கிற நம்முடைய சிந்தை விருப்பம் இன்னதென்பதைக் கவனியாமல், அங்கே வாசமாயிருக்கிற ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார். இதின் கருத்து இதுதான்:—நமது மேலான ஆத்தும பிரயோஜனத்திற்கு எது நல்லதென்று நமக்குத் தெரியாது. இது நமது மாம்ச பெலவீனம். சிலவேளைகளில் தேவனைவிட்டு நம்மை இழுக்கிறவைகளை விரும்பி, அவைகளுக்காக ஜெபிப்போம் இன்று சிலவேளைகளில் நம்மைப் பரிசுத்தம் செய்யக்கூடிய ஒரு சங்கடத்தை, ஒரு முள்ளை, ஆண்டவர் நீக்கிவிடும்படி கேட்போம்; அன்பு நிறைந்த தேவனோ நமது விருப்பத்திற்கிசைவாக நமக்குச் செய்துவிடாமல், நமக்குள்ளே இருந்து, நமது உதடுகளின் மூலமாயல்ல, தமது பெருமூச்சுகளால் வேண்டிக்கொள்ளும் ஆவியானவருடைய விண்ணப்பத்தின்படி நமக்குச் செய்கிறார். பவுல் காரியம் அப்படித்தானிருந்தது என்று 2 கொரி. 12: 7–10ல் பார்க்கலாம். நமக்குப் பிரியமில்லாமல் நமக்கு நேரிடுகிற துன்பங்கள், சத்துருவினாலோ சிநேகிதனாலோ வருகிற தொல்லைகள் எல்லாம் ஆவியானவருடைய பரிசுத்த

நோக்கத்தை நிறைவேற்றும்படி அவருடைய ஜெபத்திற்கு மறுமொழியாய் வருகிறபடியால் (28 வா.) 'சகலமும்"—ஆம்! சகலமும்—நன்மைக்கேதுவாய் நடக்கிறது. சகலமும் நன்மைக்கேதுவாய் நடக்கிறதென்றால், எல்லாவற்றிலும் ஸ்தோத்திரஞ் செலுத்தத் தடையென்ன? (எபே. 5 : 20.)

## IV. நமது கடமை என்ன?

1. ஆவியானவர் எந்தச் சிறு சம்பவத்தின் மூலமாகப் பேசினாலும், அதை அவமதிக்காமல் உடனே அவருடைய மெல்லிய சத்தத்திற்குக் கீழ்ப்படிவோமாக. எந்த ஆளின் மூலமாகவும், எந்தச் சம்பவத்தின் மூலமாகவும் அவர் பேசினாலும் அவர் சத்தம் என்று அறிந்துகொள்ளும்படி தேவன் நமது கண்களைத் திறந்தருளும்படி கெஞ்சுவோமாக.

2. நமது ஜீவியத்தில் நேரிடுகிற சகலமும் ஆவியானவரின் நடத்துதல்படி வருகிறபடியால் அவர் அதின்மூலமாகத் தமது சித்தத்தை நிறைவேற்றும்படி இடங்கொடுத்து, எல்லாவற்றிலும் தேவனை ஸ்தோத்திரிப்போமாக.

3. ஆவியைத் துக்கப்படுத்தாதிருப்போமாக. நமது சிநேகிதரையும், ஒவ்வொரு மணிநேரத்தையும், நமது குடும்ப ஜீவியத்தையும்—சகலத்தையும் தேவசமுகத்தில் நிறுத்தி, நம்மிடத்தில் வாஞ்சையாயிருந்து தவிக்கிற ஆவியானவரைத் துக்கப்படுத்தும் காரியம் இவைகளில் உண்டோ என்று அவர் காட்டும்படி கேட்போமாக.

4 அவர் கிரியைசெய்கிறார் என்று நம்புவோமாக. அன்புள்ள ஆவியானவர் தாம் துவக்கின வேலையை முடிக்கவே முடிப்பார்.

ஆவியானவர் தமது ஆத்தும வாஞ்சையின் பலனைக்கண்டு உன்னில் திருப்தியடைகிறாரா? தமது வைராக்கிய வாஞ்சையின் கனியைக் காண்கிறாரா? மோசம்போக்கிவிடாதிருப்போமாக. சகலத்தையும் அவர் நடத்துவார், நீமாத்திரம் முற்றிலும் ஒப்புக்கொடு. அப்போது முற்றிலும் உன்னை நடத்துவார். முற்றிலும் உன்னைக் காக்கிறார் என்று அறிந்துகொள்வாய்.

## METHODS OF SOCIAL SERVICE

## பொதுஜன ஊழிய முறைகள்

தற்காலத்தில், எவ்வகையாகவேனும் பொதுஜன நன்மைக்கென்று உழைக்கவேண்டுமென்ற எண்ணங்கொண்ட இந்திய வாலி



பர்கள் அநேகரிருக்கிறார்கள். பொதுஜன ஊழியச் சங்கங்கள் பலவும் செய்துவருகிற நன்மையைக் கவனிப்பதாலும், தம்மவர் பலர் படும் கஷ்டங்களைக் கண்ணாரக் கவனிப்பதாலும் இவ்வெண்ணம் பிறந்ததென்று கூறலாம். அவ்வாறு கஷ்டப்படும் துர்திர்ஷ்டக்காரர்களாகிய தம்மவர்களிடத்தில், உண்மையாக மனம் இரங்குபவர்கள்தான் அதிக உதவிசெய்வார்கள்; அநுதாபமும், பிறருக்கு உதவவேண்டுமென்ற பேராவுந்தான், பொதுஜன ஊழியனொருவனுக்கு அவ்வேலையில் குறுக்கிடும் இடையூறுகளை மேற்கொண்டு, இறுதியில் ஜெயமடையும்படியான ஊக்கத்தைக் கொடுக்கும்.

பிறருக்குதவவேண்டுமென்ற எண்ணம், ஒரு பொதுஜன ஊழியனுக்கு இன்றியமையாதவைகளில் முதன்மையானதாயினும், அவ்வேலையைப்பற்றிய சில முறைகளையும் அவன் கற்கவேண்டும். கீழ்க்குறிக்கப்பட்டவையெல்லாம், பொதுஜன ஊழியச் சங்கமொன்று இல்லாமலும், அவ்வூழியத்தில் திறமைவாய்ந்தவர்களைக் காண்பதரிதாயுமுள்ள ஊர்களில் வசிக்கும் இளைஞர்களுக்கே.

1. உங்கள் தேசத்தாரில், எளிமையுற்று, போந்தகல்வி யில்லாதவர்களில் சிலரின் நன்மைக்காகப் பாடுபட உங்களுக்கு விருப்பமிருப்பதாக வைத்துக்கொள்வோம்; அவ்விருப்பங் காரணமாக அவர்களுக்கு உதவிசெய்ய உங்களுக்குப் பிரியமிருந்தால், அவ்வேலையைச் செய்துவர நீங்கள் ஒரு காலத்தைக் குறிப்பிட்டுக்கொண்டு அக்காலத்தில் இடைவிடாமலும் தவறாமலும அவ்வேலையைச் செய்துவரவேண்டும்.

ஒவ்வொரு வாரத்திலும், ஒருநாள் காலைப்பொழுதையேனும் மாலைப்பொழுதையேனும் குறிப்பிட்டு அவ்வேலையைச் செய்துவந்தால் ஒன்றிரண்டு வருஷத்தில், நீங்கள் பேருதவி புரியமுடியும்.

2. உங்களுக்கு துணைபுரிய ஒன்றிரண்டு நண்பர்களை நீங்கள் தேடிக்கொண்டால்தான், நீங்கள் ஏதாவது ஒரு காரணத்தால் நின்றுவிடவேண்டி வந்தபொழுது அவர்கள் அவ்வேலையைச் செய்வார்கள்.

3. பின்னும், உங்களுதவியை நாடும் சிலரைக் கண்டுகொள்ள வேண்டும். ஒருவேளை உங்கள் வீட்டிற்கு சற்றுதூரத்தில் ஒரு பறைச்சேரி யிருக்கக்கூடும்; அங்கேயுள்ளவர்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கலாம், அல்லது அச்சேரி சுகாதாரங் குறைந்திருக்கக்கூடும். அவ்விதமான ஓரிடத்தை நீங்கள் தெரிந்துகொண்டவுடன், நீங்களும் உங்கள் துணைவர்களும் அச்சிறு கிராம வாழ்க்கையைப் பற்றியவைகளை ஆராய்ந்தறியவேண்டும். அவ்விதமான ஆராய்ச்சியைப்பற்றிய சில குறிப்புகள் தனியாக காட்டப்படும்.

4. அநேகமாய் ஜனங்கள் மிகவும் எளிமையுள்ளவர்களாயிருந்தால்; அவர்கள் எளிமைக்குக் காரணம் என்னவென்று பார்த்தால் வட்டிக்கு பணம் கொடுப்பவனிடம் கடன்பட்டிருப்பதே அவ்வெளிமைக்குக் காரணம் என்று பார்க்கலாம்; அவர்கள் எவ்விதம் கடனிலிருந்து மீள்வார்கள் என்று நீங்கள் ஆச்சரியப்படக்கூடும். கூட்டுறவுச் சங்கமே அதற்குத்தக்க உபாயம். தென்னிந்தியாவிலுள்ள ஏழைகளில் நூற்றுக்கணக்கானவர்கள் கூட்டுறவுச் சங்கத்தின் உதவியால் கடனினின்று மீட்கப்பட்டிருக்கிறார்கள். கூட்டுறவுச் சங்கம் ஒன்று ஏற்படுத்துவதற்கான முறையை, இங்கு இடமின்மையால், தனியாகக் குறிப்பிடுவோம்.

5. மற்றொரு விஷயமும் உங்கள் கண்ணுக்குத் தெளிவாகப் புலப்படும். அது அந்த கிராமத்தின் சுகாதாரக்குறைவே. நீங்கள் அந்த வசிப்பவர்களோடு சிநேகஞ் செய்துகொண்டபிறகு அவர்களுக்கு கிராமத்தைச் சுத்தமாய் வைத்திருக்கும்படிப் போதிக்க வேண்டும். அக்கிராமம ஒரு முனிஸிபாலிடிக்குட்பட்டதாயின், அக்கிராமவாசிகளுக்குக் குப்பைத்தொட்டிகள் வாங்கிக் கொடுக்க வேண்டும். அவ்வாறு முனிஸிபாலிடிக்குட்படாதிருந்தால், குப்பைகளைக் குழிகள் வெட்டி அவைகளில் கொட்டுமாறு கற்பிக்கவேண்டும். முதலில் இவையெல்லாங் கஷ்டமாகத்தானிருக்கும். அச்சனங்களும் நீங்கள் கூறுவதற்கு எளிதில் இசையார்கள். ஆனால் வரவர சுத்தமிகுதியால் சுகமுண்டு என்று அவர்கள் கண்டுகொள்வார்களாதலால் பிறகு உங்கள் வேலை சுலபமாயிருக்கும்.

6. சாயங்காலவேளைகளில் அக்கிராமத்திற்குச் சென்றால் அக்கிராமவாசிகளில் அநேகர் குடிமயக்கத்திலிருப்பதைக் காணலாம். அவர்களுக்கு நீங்கள் குடிப்பது கெடுதல் என்று கூறப்போனால், அவர்கள், குடியில்லாமல் முடியாதென்றும், குடிக்காவிட்டால் கடின வேலைகள் செய்யமுடியாதென்றும், குடிப்பதொன்றேதான் அவர்களுக்கு ஆனந்தமென்றும் மறுத்துக்கூறுவார்கள். குடியினின்றும் அவர்களை விலகச்செய்வது கஷ்டமாகத் தோன்றும். ஆனாலும் குடிப்பதை நிறுத்துவது கூடியகாரியமென்பது நாமறிந்ததே. பற்பல விடங்களில் குடிப்பதை நிறுத்தி ஜனங்கள் முன்னேற்றமடைந்திருக்கிறார்கள்.

7. மூன்றாவதாக, அக்கிராமத்தார் கல்வியறிவு அற்றிருப்பது நிச்சயமாக உங்களுக்குப் புலப்படும். உடனே, அருகில் ஒரு பள்ளிக்கூடம் இருந்தால், அங்கு சிறு பிள்ளைகளை யனுப்பிப் படித்துவருமாறு நீங்கள் போதிக்கவேண்டும். அப்பள்ளிக்கூடத் தலைமை உபாத்தியாயரிடத்தில் கேட்டு யார் யார் பள்ளிக்கூடத்திற்கு வர



வில்லை யென்றறிந்து, அச்சிறுவர்களின் பெற்றோரைக்கண்டு, பிள்ளைகளைச் சரிவர அனுப்பிவரும்படி நீங்கள் சொல்லவேண்டும். நீங்களும் உங்கள் துணைவர்களும் ஒரு இராப்பள்ளிக்கூடம் ஏற்படுத்தலாம்; ஆனால் வேறு பலவழிகளில் உங்கள் கவனத்தைச் செலுத்த வேண்டியிருக்குமாதலால், நீங்கள் அவ்வளவு சீக்கிரத்தில் அவ்வாறு தொடங்க வேண்டுவதில்லை.

இம்முறைகளைக் கடைப்பிடித்து வேலைசெய்ய உங்களுக்குப் பிரியமிருந்தால், இன்னும் உங்களுக்குவேண்டிய விஷயங்களைப் பற்றி மதராஸ் எக்மோரில் விக்டோரியா கட்டிடத்திலிருக்கும் தென்னிந்தியா சுகாதார சங்கம் சேர்மென் அவர்களுக்கு எழுதிக் கேட்டுக் கொள்ளலாம்.

### ஆராய்ச்சி முறை

பொதுஜன ஊழியத்தைப்பற்றிய சில குறிப்புகள் வாலிபருக்குப் பயன்படுமாறு, முன்பு பிரசுரிக்கப்பட்டன. அவ்வூழியத்தை நிச்சயமாக மேற்கொள்வதாகவும், ஒருவாரத்திற்கொருமுறை சாயந்திரத்திலேனும் காலையிலேனும் அவ்வேலை செய்துவருவதாகவும் நிச்சயித்திருக்கிறவர்களுக்குப் பின்வருங் குறிப்புகள் காட்டப்பட்டிருக்கின்றன. அக்குறிப்புகளில் காட்டிய முழு விபரங்களையுமறியச் சிறிது காலதாமதமாகும்; ஆதலால் ஒரு கைப்புத்தகம் தயாரித்து அதில், அக்கிராமத்தைப் போய்ப்பார்க்கும் ஒவ்வொரு தடவையிலும் கண்ட விஷயங்களைப் பதிந்துகொள்ளவேண்டும். பலமாதங்கள் இவ்வாறு ஒருவர் செய்துவந்தால், கடைசியில் அவருக்குக் கிடைத்த மிகுதியான விபரங்கள் அவருக்கே ஆச்சரியத்தைக் கொடுக்கும்; இன்னும் முன்பு அக்கிராமவாசிகளைப்பற்றி ஒன்றுந் தெரியாதிருந்த அவருக்கு, அக்கிராமவாசிகளின் வாழ்க்கையைப்பற்றி எவ்வளவோ சமாச்சாரந் தெரியும்.

1. ஆராய்ச்சி செய்வோரின் பெயரும் விலாசமும்.

2. கிராமத்தின் பெயர். அதன் அருகிலுள்ள பெரியபட்டணம்.

3. பொது விபரம் (மலையின்மீதிருக்கிறதா? சமவெளியிலிருக்கிறதா? மதில் சூழ்ந்ததா? ஆற்றுக்கருகிலா? முதலியன). வீடுகளைப் பற்றிய விபரம் (மண்வீடுகளா? கற்கட்டடமா? செங்கற் கட்டடமா? ஒருமாடியுடைய வீடுகளா? அதற்கு மேற்பட்டதா? ஓடு போட்ட வீடுகளா?). மொத்த வீடுகள். வசிக்கும் ஜனங்களின் எண்ணிக்கை.

4. முக்கியமான ஜாதி மதங்களின் பெயர். ஒவ்வொன்றிலுமுள்ள ஜனத்தொகை. (ஐரோப்பியர்களையும்சேர்த்துக்கொள்ளலாம்.)

5. முக்கிய வியாபாரமும் கைத்தொழிலும்.

6. தண்ணீர் எவ்விடமிருந்து வருகிறது? இராக்காலங்களில் தெருக்களில் விளக்குகள் தவருமல் போடப்படுகின்றனவா? குப்பைத்தொட்டிகளாவது, குப்பைக்குழிகளாவது உண்டா? கக்கூசுகள் இருக்கின்றனவா?

7. வைத்திய உதவி.—இங்கிலீஷ் வைத்தியருண்டா? ஆஸ்பத்திரியுண்டா? மருந்து விற்கும் மருந்துஷாப்புகளுண்டா? மருத்துவச்சியுண்டா? நாவித ஸ்திரீகளுண்டா? அக்கிராமவாசிகள் நோயுற்ருல் என்ன செய்வது வழக்கம்? பிரசவமுறைகளைப்பற்றி முக்கியமாகக் கவனிக்கவும்.

8. சுகாதாரம்.—அக்கிராமத்தில் எந்த நோய் சாதாரணமாக அடிக்கடி பரவுகிறது? சிசுமரணங்கள் எத்தனை? (அதாவது, ஆயிரங்குழந்தைகள் பிறந்தால் அவற்றில் எத்தனை குழந்தைகள் ஒரு வயதுக்குமுன் இறக்கின்றன? இது ஜனனமரண ரெஜிஸ்ட்ராரிடந்தான் உங்களால் தெரிந்துகொள்ளமுடியும்.)

9. சுமார் எவ்வளவு ஜனங்கள் கடன்காரர்களாயிருக்கிருர்கள்? கடன் வாங்கியிருக்கும் ரூபாய்கள் எவ்வளவு? யாரிடம் கடன்பட்டிருக்கிருர்கள்? என்ன அடகுவைத்து வாங்கியிருக்கிருர்கள்? என்ன வட்டி கொடுக்கிருர்கள்?

10. கூட்டுறவுச்சங்கங்கள் அக்கிராமத்தில் இருக்கின்றனவா? அவைகள் சரிவரநடந்து பயனளித்து வருகின்றனவா?

11. அக்கிராமத்தின் கல்வி.—பள்ளிக்கூடங்கள் இருக்கின்றனவா? எவ்வளவு ஜனங்களுக்கு வாசிக்கத் தெரியும்?

12. மதுபானக்கடை அக்கிராமத்திலிருக்கிறதா? அக்கிராமவாசிகள் அதிகமாகக் குடிக்கிருர்களா?

13. கிராம நடவடிக்கைகள் எவ்விதம் நடத்தப்படுகின்றன? வழக்குகளைத் தீர்க்க கிராமபஞ்சாயத்து இருக்கிறதா? இதை ஒரு வயதுமுதிர்ந்தவரிடம் கேட்டு, பஞ்சாயத்து இல்லாதிருந்தால் ஒரு பஞ்சாயத்து சபை ஏற்படுத்தி, அதைக்கொண்டு:

(a) கூட்டுறவுச்சங்கங்கள் ஏற்படுத்தவும்,
(b) கிராமத்தின் சுகாதாரத்தை விருத்திசெய்யவும்,
(c) மதுபானத்தை விலக்கச்செய்யவும்,
(d) வேண்டும்போது பிரைமரி பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தி அவைகளைச் சரிவரநடத்தவும்,

முடியுமாவென்று கேட்டறியுங்கள்.



14. அக்கிராமப் பொதுஜன வாழ்க்கை திருப்திகரமாய்த் தோன்றுகிறதா? இல்லாவிட்டால், என்ன குறைகளிருக்கின்றன? அவைகளை நீக்கத் தகுதியான வழிகள் உங்களால் கூறமுடியுமா?

குறிப்பு.—மேற்கூறிய ஆராய்ச்சி முறையைப்பற்றி நீங்கள் இன்னும் ஏதாவது தெரிந்துகொள்ள விரும்பினுல் நீங்கள் மதராஸ் பட்டணம், எக்மோர், விக்டோரியா கட்டிடத்திலிருக்கும் தென்னிந்தியா சுகாதாரசங்கத்தின் சேர்மென் அவர்களுக்கு எழுதலாம்.

Madras Publicity Board.

## HOW TO PRESERVE MANURE IN SOUTH INDIA

## தென்னிந்தியாவில், எருவைப் பத்திரப்படுத்திப் போடும் விதம்

(தொடர்ச்சி)

எந்தக் காரணத்தைக்கொண்டாவது மேற்சொல்லியவிதம் எருவைச் சேர்ப்பது குடியானவனுக்கு அசௌகரியமாக இருப்பின், அடியில்கண்ட மாதிரி அவன் எருச் சேர்க்கலாம்:

மாட்டுக் கொட்டிலின் அடித்தளத்தைச் சமப்படுத்திக் கெட்டியாக்கிக்கொண்டு பின்பக்கம் வாட்டமாக இருக்கும்படிச் செய்ய வேண்டும். அதிலிருந்து ஒரு சிறு கால்வாய் தோண்டி அக்கால்வாய் வழியாய் தரையில் விழும் மாட்டுநீரெல்லாம் ஓடி கொட்டிலுக்கு வெளியில் ஒரு மூலையில் வைத்திருக்கும் ஒரு பானையில் விழும்படி செய்யவேண்டும். சாணியைத் தினந்தோறும் எடுத்து அந்தக் குழியின் பக்கமும் அடியும் களிமண்ணால் நன்ருய்ப் பூசியிருக்கும் ஒரு குழியில் போடவேண்டும். அதன்பேரில் ஒரு கூரைப்பந்தல் போட்டிருக்கவேண்டும். பண்ணையில் கிடைக்கும் எந்த கந்தமூல குப்பைகளையும் அந்தக் குழியில் போட்டுவைக்கலாம். தினம் பானையில் சேரும் நீரை அந்தக் குழியில் ஊற்ற வேண்டும். சாணி, நீர், தழை முதலிய குப்பைகள் எல்லாம் சேர்ந்து ஒன்ருய்க் கலக்கும்படிச் செய்து நன்ருய் மிதித்துக் கீழே அழுத்திவைக்கவேண்டும். அப்படிச் செய்தால் அது ஒத்தாப்போலும் மெதுவாகவும் மக்கும்.

மேலே சொன்ன எருக்குழி கொட்டகைப்போட முடியாவிட்டால், மண்ணைப்போட்டு மூடலாம். மண்போட்டு எருக்குவியலை

மூடிவைப்பது மிகவும் நல்லது என்று அனுபவத்தில் தெரிகிறது. ஏனெனில், இதினால் நல்ல செழிப்புண்டாக்கக்கூடிய வஸ்துக்கள் எதுவும் காற்றோடு சேர்ந்துபோகாமல் தடுக்கப்படுகின்றன. இந்த முறை திருநெல்வேலியைப் போன்ற சிலவிடங்களில் கையாடி வரப்படுகிறது. அதனால் அதிக லாபமும் உண்டாகிறது. எருவின் மேல்பாகம் காய்ந்துபோனால் அதைப் புரட்டிவிட்டு காய்ந்த பாகமும் ஈரபாகமும் சேர்ந்துபோகும்படி செய்யவேண்டும். அந்தக் குவியலின் முழுப்பாகமும் காய்ந்ததாய்த் தெரிந்தால் கொஞ்சம் ஜலம்விட்டு ஈரமாக்குதல் நலம். எருவை மண்ணைப்போட்டு மூடுவது அதிகமாய் உலர்ந்துபோவதைத் தடுக்கிறது. எருக்குவியலை ஈரமாய் வைத்திருக்கும் கருத்து என்னவெனில், எரு முழுவதும் மெதுவாக மக்கும்படியும் அதினால் எருவிலுள்ள வளம் உண்டாக்கும் வஸ்துக்கள் காப்பாற்றப்பட்டு, உடனே பயிர்களுக்குப் பயன்படத்தக்கவாறு செய்யவேண்டும் என்பதுதான்.

[குறிப்பு.—மாட்டுக்கொட்டில்கள் எப்பொழுதும் கிராமங்களுக்கு வெளிப்புறத்திலும் கூடுமானால் குடியானவர்கள் வயலிலேயோ இருப்பது நலம். கொட்டில்களில் நல்ல காற்று தாராளமாய் உலாவக்கூடியதாய் போதுமான காற்றோட்டம் இருக்கும்படி கட்டவும் வேண்டும்.]

## LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

### 1920-ஆம் ஆகஸ்டுமீ

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஞா. | மத். | 4. 1—11 | 11 | பு. | ,, | 8. 18—34 | 21 | ச. | ,, | 12. 33—50 |
| 2 | தி. | ,, | 4. 12—25 | 12 | வி. | ,, | 9. 1—19 | 22 | ஞா. | ,, | 13. 1—17 |
| 3 | செ. | ,, | 5. 1—16 | 13 | வெ. | ,, | 9. 20—38 | 23 | தி. | ,, | 13. 18—30 |
| 4 | பு. | ,, | 5. 17—32 | 14 | ச. | ,, | 10. 1—15 | 24 | செ. | ,, | 13. 31—43 |
| 5 | வி. | ,, | 5. 33—48 | 15 | ஞா. | ,, | 10. 16—31 | 25 | பு. | ,, | 13. 44—58 |
| 6 | வெ. | ,, | 6. 1—18 | 16 | தி. | ,, | 10. 32—42 | 26 | வி. | ,, | 14. 1—18 |
| 7 | ச. | ,, | 6 19—34 | 17 | செ. | ,, | 11. 1—15 | 27 | வெ. | ,, | 14. 19—36 |
| 8 | ஞா. | ,, | 7. 1—14 | 18 | பு. | ,, | 11. 16—30 | 28 | ச. | ,, | 15. 1—14 |
| 9 | தி. | ,, | 7. 15—29 | 19 | வி. | ,, | 12. 1—13 | 29 | ஞா. | ,, | 15. 15—28 |
| 10 | செ. | ,, | 8 1—17 | 20 | வெ. | ,, | 12. 14—32 | 30 | தி. | ,, | 15. 29—39 |
| | | | | | | | | 31 | செ. | ,, | 16. 1—12 |

C. L. S. PRESS, MADRAS—1920


# மாதர் போதினி

No. 272 செப்டம்பர் 1920 No. 9


## A SERMON BY SADHU SUNDAR SINGH

## சாது சுந்தர்சிங் செய்த ஓர் பிரசங்கம்

'ஆகையால் இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்குமுன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள் என்றார்' (லூக். 21 : 36). மனுஷகுமாரனை சந்திக்கும்படி ஆயத்தப்படுவதற்கு ஜெபம் அவசியம். தேவ பிரசன்னத்தையும் தேவ ஐக்கியத்தையும், தேவ சமாதானத்தையும் ஜீவியத்தில் உணருகிறவர்கள், அவர்கள் கண்ணுக்குத் தோன்றும்பொழுது அவர்முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு விழித்திருக்கவேண்டும். நாம் ஒருவரோடு சிநேகமாயிருந்தால், அவருடைய குணமும், அவருடைய பழக்கமும், அவருடைய பேச்சும் நம்மிடத்தில் படிந்துபோகிறதுபோல, நாம் ஜெபத்தினால் தேவனோடு ஐக்கியப்படும்பொழுது, அவருடைய குணங்களும் அவருடைய லக்ஷணங்களும் நமக்குக் கிடைக்கிறது. அவரோடு சகவாசம் செய்துவிட்டாலோ, அதன்பின் பயமிராது, மென்மேலும் சந்தோஷம் உண்டாகும். அவரோடு சகவாசம் செய்யாதவர்கள் அவர் வரும்போது அலறுவார்கள். ஜெபத்தினால் நாம் தேவனோடு ஐக்கியப்படுகிறோம். அந்த ஐக்கியத்தால் இங்கேயும் சந்தோஷம் அங்கேயும் (மறுமையிலும்) சந்தோஷம். ஜெபத்தால் இவ்வுலகத்திலும் காக்கப்படுகிறோம், மறு உலகத்துக்கும் ஆயத்தப்படுகிறோம். கிறிஸ்தவர்களுக்கோ ஜெபத்தின் அருமையே தெரியாது, ஏதாவது ஒரு அவசர உதவிக்காகவும், ஒரு மோசத்திலிருந்து காப்பாற்றப்படுகிறதற்காகவும் ஜெபிப்பார்கள். அது பிச்சைகேட்பதேயொழிய, ஜெபமல்ல. இந்தக் கிறிஸ்தவர்கள் ஆத்திரத்திலும் அவசரத்திலும் ஜெபித்துவிட்டு, ஆத்திரம், அவசரம் முடிந்தவுடன் தேவனை மறந்துவிடுகிறார்கள். இவர்களைப் பிச்சைக்காரக் கிறிஸ்தவர்கள் என்று அழைப்பதே தகுதி.

ஜெபமென்பது தேவனோடு ஐக்கியமாயிருந்து பரிசுத்தமாக்கப்படுவதே ஜெபம். அதாவது, ஜெபத்தினால் ஐக்கியமும், ஐக்கியத்தினால் பரிசுத்தமாக்கப்படுதலுமே ஜெபம்.

திருஷ்டாந்தமாக:—1. ஒரு பெரிய குடிகாரனிருந்தான். தன் ஆஸ்தியையெல்லாம் குடியில் அழித்தான். சாப்பிடுகிறதற்குக் கையில் காசில்லை. அந்த ஊரில் ஒரு நல்ல மனுஷனுமிருந்தான். அவனிடத்தில் உதவிபெறும்படியாக இந்தக் குடிகாரன் அவனிடத்தில் சென்று தனக்கு உதவிசெய்யும்படியாக வேண்டினான். இப்படியாக, அவனுக்கு ஒரு உத்தியோகமும் கிடைத்தது. ஆனால், தினந்தோறும் அரைமணி நேரம் மாத்திரம் சம்பாஷித்துவிட்டுப் போகவேணுமென்று அவனுக்குக் கட்டளையிட்டான். ஆகையால், அந்தக் குடிகாரன் தன் எஜமானிடத்தில் தினந்தோறும் அரைமணிநேரம் சம்பாஷித்துவந்தான். நடந்ததென்ன? 'பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெற்றது' என்பதுபோல, நாள்செல்ல நாள்செல்ல அந்த எஜமானுடைய நற்குணங்கள் கொஞ்சங்கொஞ்சமாக அந்தக் குடிகாரனிடத்தில் படிந்தது. அந்த அரைமணிநேர சம்பாஷணையால் குடிகாரனுடைய ஜீவியமும் மாறினது. கடைசியில் உத்தம கிறிஸ்தவனானான். குடியை ஜென்மப்பகையாய்ப் பகைத்தான். அவனுக்குக் குடியினால் கிடைத்த சந்தோஷத்தைப்பார்க்கிலும் குடியைவிட்டதினால், பதின் மடங்கு சந்தோஷமுண்டானது. மனிதரோடு சம்பாஷிப்பதினால் இப்பேர்ப்பட்ட பெரிய மாறுதல் உண்டாகுமானால், தேவனோடு சஞ்சரித்தால் இதிலும் பெரிய மாறுதல் உண்டாகாதோ? அவரோடு புழங்கினால் அவருடைய மகிமை நம்மில் காணப்படாதோ?

'பின்னையேன் நாம் ஜெபத்தில் கேட்பதைப் பெற்றுக் கொள்ளுகிறதில்லை?'

1. நன்றிகெட்டுப்போகிறபடியால்தான் பெற்றுக்கொள்ளுகிறதில்லை. அவசர சமயத்தில் ஜெபிக்கிறோம். நன்மையைப் பெற்றுக் கொண்ட பிறகு தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்தக்கூட மறந்து போகிறோம். நாம் ஜெபிக்க ஆரம்பிக்கும்போதே புது ஜீவனுக்காக ஜெபிக்கவேண்டும். ஜெபமில்லாத கிறிஸ்தவன் செத்தபிணம்! ஒரு மார்க்கத்தைவிட்டு, இன்னொரு மார்க்கத்துக்குப் போய்விட்டான், அல்லது கிறிஸ்தவனாயிருந்து அஞ்ஞானியாய்ப் போய்விட்டான் என்று நான் கேள்விப்படுகிறபோது ஆச்சரியப்படவேயில்லை. ஏனென்றால், நான் அதை அனுபவத்தில் கண்டேன். புதிய ஜீவனடைந்த ஒரு கிறிஸ்தவன் தன் ஜீவன்போனாலும் தன் மார்க்கத்தை விடமாட்டான். நான் எனதருமை ரக்ஷகரை என் அனுபவத்திலும் கண்டேன், என் அனுபவமாக்கியுங் கொண்டேன். அவர் எனக்



குத் தரிசனமாகி தேவசமாதானத்தை அளித்தார். இது ஒரு மனோபாவனையல்ல. இது ஒரு தரிசனை. இந்த ரக்ஷகரினிமித்தமாக துக்கத்திலும், துன்பத்திலும், வருத்தத்திலும் சந்தோஷத்தை அடைந்தேன். திபேத்து நாட்டில் என்னை ஒரு பாழுங்கிணற்றில் போட்டபொழுது, அவ்விடத்தில் நானடைந்த சந்தோஷத்தை என் வீட்டிலுமடைந்ததில்லை. நான் கிறிஸ்தவனாகுமுன் யோகாப்பியாசத்தால் சந்தோஷத்தை அடைந்துகொள்ளலாமென்று யோசித்தேன். அதிலும், கிடைக்கவில்லை. ஆனால் என் ரக்ஷகரண்டை சென்று ஜெபிக்கும்பொழுதோ மோக்ஷம்போலிருக்கிறது. மெய் விசுவாசத்தால் ஜெபம்செய். உன் உள்ளமே மோக்ஷமாகிறது. இயேசுவானவர் நம்மால் உயிரோடிருக்கிறார். நாம் சுதந்தரவாளிகளாகிறோம். ஜெபமில்லாததால்தான் வேதாகமத்தைத் தர்க்கிக்க ஆரம்பிக்கிறார்கள். அனுபவமில்லாதவர்கள் வேதாகமத்தை ஒரு கதைப்புஸ்தகமென்று நினைக்கிறார்கள்.

உதாரணமாக:—2. கல்லாத ஒருவனை அழைத்து ஒரு இந்தியப்படத்தை (Map) காண்பித்து, இதுதான் இந்தியா என்றும், இதோ வரிவரியாயிருப்பது மலைகளென்றும், அந்த மலைகள் அதிக உயரமாயிருக்குமென்றும், அதிலிருந்து ஆறுகள் ஓடிவரும் என்றும் சொன்னேன். அவனோ: 'என்ன ஐயா, இரண்டும் ஒரே சமமாகத்தானே யிருக்கிறது, அது எப்படி உயரமாகும், எப்படி அதிலிருந்து தண்ணீர் ஓடும்' என்றான். ஆனால், அனுபவத்தில் மலையைப்போய்ப் பார்த்தால் அது உயரமென்பதும், அதிலிருந்து ஆறுகள் ஓடிவருமென்பதும் தெளிவாகத் தெரியும். இதேவிதமாகத்தான் நன்மைகளும் ஆசீர்வாதங்களும் மேலிருந்துவருமென்று சொல்லும்பொழுது ஆச்சரியமாகத் தோன்றும். 'என்ன ஐயா, தலைகீழாய்ப் பேசுகிறீர்களே' என்றும் சொல்லலாம். ஆனால், அனுபவத்தில் நன்மைகளையும் ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்ளும்போதுதான் அவைகள் மேலிருந்து வருகின்றனவென்று தெரியும். பின்னும் சூரியனிடத்தில் நெருங்க நெருங்க குளிர்ச்சியாயிருக்குமென்றும் சொன்னேன். தண்ணீர்மேல் தண்ணீர்ப்பாலத்தின்மேல் ஏறி அக்கரைக்குப் போனேன் என்றும் சொன்னேன். அதற்கவன்: 'என்ன ஐயா, நீங்கள் பேசுகிறதெல்லாம் நீதிக்கு விரோதமாயிருக்கிறதே' என்றான். இவைகள் இயற்கைக்கு விரோதமென்றும் சொல்லலாம். ஆனால், சாஸ்திரத்தின்படி சூரியனிடத்தில் நெருங்க நெருங்க உஷ்ணமிராது. அல்லாமலும் குளிர்ச்சியான தேசங்களில் குளங்களும் ஆறுகளும் உறைந்து பனிக்கட்டியாயிருக்கும். அடியில் தண்ணீரும் அதற்குமேல் தண்ணீரால் உண்டான பனிக்கட்டிகள் பாலமாகவும் நிற்கும். அதில் ஏறி

அக்கரைக்குப்போனேன். இவைகளை அனுபவத்தில் காணும்பொழுது தான் தெளிவாகும். இதேவிதமாக நாம் தேவனிடத்தில் நெருங்கும் பொழுதுதான் ஜீவ ஊற்றுகளைக் காணலாம். அப்பொழுது அது நமக்கு ஆச்சரியமாயிராது. ஜெபபர்வதத்தில் ஏறினவர்களுக்கு இவைகளெல்லாம் ஒரு ஆச்சரியத்தையும் கொடுக்காது. ஏனென்றால், இவைகளை அவர்கள் அனுபவத்தில் கண்டு சாதாரணமாகிவிடுகிறது. ஏறாதவர்களுக்குத்தான் ஆச்சரியமும் அதிசயமுமாயிருக்கும். ஜெபபர்வதத்தில் ஏறிவிட்டாலோ தேவமகிமையையும் வெளிப்படையாகக் காண்கிறோம். மேன்மையானபொருட்களையும் அளிப்பார்.

Beluchistan பொக்கிஷமிருக்கிறதென்று ஒருவன் தரையைத் தோண்டச்சொன்னான். தோண்டத்தோண்ட ஒன்றுமில்லை. தாகமோ அதிகரித்தது. குடிக்கவும் தண்ணீரில்லை. மேன்மேலும், தோண்டச்சொன்னான். தோண்டினபொழுதோ திடீரென்று ஒரு ஊற்றுக்கண் திறந்தது. அதிலிருந்து வந்த தண்ணீரால் தாகமுந் தீர்ந்தது. தோண்டச்சொன்னது தண்ணீருக்காகத்தான், பொக்கிஷத்துக்காகவல்ல என்பதாகக் கடைசியில் சொல்லிமுடித்தான். இந்தச் செய்கையால் இரண்டு பிரயோஜனத்தைக் காண்கிறோம்: முதலாவது தேக அப்பியாசமும், இரண்டாவது தண்ணீர் ஊற்று தோண்டினதினாலே தேகமும் பலப்பட்டது. அதுமாத்திரமல்ல. அதிலிருந்தே தண்ணீரும் கிடைத்திராதிருந்தால் மரித்திருப்பான். இவ்விதமாகத்தான் ஆத்தும விஷயமும். ஜெபம் செய்யச்செய்ய, நமது ஆத்துமம் பலப்படுகிறது. ஆத்துமா பலப்படுகிறதால், நாம் எந்தச் சோதனையையும் ஜெயிக்க வல்லவர்களாகிறோம். அதுமாத்திரமல்ல, தேவசமாதானத்தையும் தேவ சந்தோஷத்தையும் அடைகிறோம். சத்தியவேதத்திலுள்ளவைகள் யாவையும் அனுபவத்தில் அறிகிறோம்.

உதாரணமாக: (மாற்கு 16: 18) . . . . . . சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது . . . இதை நான் என் அனுபவத்தில் கண்டேன். நான் கிறிஸ்தவனான போது என் இனத்தார் எனக்கு விஷம்கொடுத்துவிட்டார்கள். நான் பிரயாணமாய்ப்போய் ஒரு கிறிஸ்தவ சாலையில் சேர்ந்தபொழுது அந்த விஷம் சரீரத்தில் பரம்பினபடியால் மயக்கமுண்டானது. வைத்தியருக்கு ஆள் அனுப்பினார்கள். அவர் வந்து பார்த்துவிட்டு, 'ஒன்றும் செய்யமுடியாது; யாரோ விஷம் கொடுத்திருக்கிறார்கள்; இன்னும் கொஞ்சநேரத்தில் இரத்தம்கக்கி இறந்துபோக நேரிடும்' என்று அறிவித்தார். அப்பொழுது, எனக்குச் சிநேகிதனாயிருந்த ஒரு ஹிந்து என்னை வந்து பார்த்துவிட்டு, 'வைராக்கியமுள்ள ஒரு ஹிந்து, கிறிஸ்துவை விசுவாசிப்பதனால் இதுதான் முடிவு. முதலாவது



மார்க்கமும் போனது, ஜாதியும் போனது, இனமும் போனது, இப்பொழுது உயிரும் போகப்போகிறது' என்று இகழ்ந்தான். வைத்தியர் சொன்னபடியே இரத்தமும் வந்தது, இரத்தத்தோடு விஷமும் வெளியேறினது. அப்பொழுது, 'நான் உம்முடைய ஊழியத்தைச் செய்ய உமக்குச் சித்தமானால் எனக்கு உயிர்கொடும்' என்று ஜெபித்தேன். அதிசீக்கிரத்தில் பூரண சுகம் கிடைத்தது. நான் செத்துப்போயிருப்பேனென்று என்னைப் பார்க்கவந்த என் ஹிந்து சிநேகிதன் நான் உயிரோடிருப்பதைக் கண்டவுடன், ஒன்றும் பேசாதபடி வெட்கத்தோடு திரும்பிவிட்டான். இவரும் கிறிஸ்துவுக்குப் பெரிய விரோதியாயிருந்தார். இப்பொழுது பர்மாவில் இருக்கிறார். அவரிடத்திலிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் 'சந்தோஷ செய்தி. வேதவாக்கியம் நிறைவேறினது. உன் ஜெபத்தால்தான் நீ பிழைத்தாய். அன்றையத்தினத்திலிருந்து நான் வேதம் படித்துவருகிறேன். நானும் நீ அடைந்த சந்தோஷத்தைப் பெற்றேன். பரிசுத்த ஆவியானவரையும் பெற்றேன்' என்று எழுதியிருந்தார். ஆம், அன்று என் ஜெபத்தை தேவன் கேட்காமலிருந்திருப்பாரானால் இங்கே இப்பொழுது உங்களோடு நான் பேசமுடியாது, அல்லது கிணற்றில் நாறுவேன். அவசியம் என்று காணும்பொழுது ஜெபத்தைக் கேட்கிற தேவன் உதவிசெய்யாமலிருக்கமாட்டார்.

ஒரு குருடனுக்கு மருந்துகொடுத்தார்கள். அவன் அதைச் சாப்பிட்டால் பார்வையடைவான். ஆனாலோ, அந்த மருந்தைக் கண்ணால் பார்க்குமுன் வாயில் போடமாட்டேனென்றால், பார்வையடைய முடியாது. பார்வையடைந்தால்தான், மருந்தை லேசாகப் பார்க்கலாம். சிலர் கிறிஸ்து உயிரோடிருந்தால், அவரைக் காண்பியுங்கள் என்கிறார்கள். நாம் அவரைக் கண்ணால் பார்க்கமுடியாது. ஆனால், நமது இருதயத்தில் வசிக்க இடங்கொடுப்போமானால், ஒருகாலத்தில் நாம் அவரைத் தரிசிக்கலாம். ஜெபத்தால் புதிய வல்லமையும் புதிய ஜீவனும் கிடைக்கிறது. ஒரு ரத்தச்சாட்சியைப் பிடித்து கிறிஸ்துவை மறுதலிக்கச் சொன்னார்கள். அவர்களோ புத்தமார்க்கத்தார்கள். அந்த மார்க்கத்தில் எதையுங் கொல்லக்கூடாது. ஆனாலோ, இந்த ரத்தச்சாட்சியின் உடுப்பைக் கழற்றி இரத்தம்வடிய அடித்து மிளகாய்த்தூளை உடம்பில் செலுத்தினார்கள். அதன்பின்பு அவருடைய தோலை உரிக்கையில் தன் ஜீவன் பிரியும் வரைக்கும் தன் சுயபுத்தி மாறாமலிருக்கும்படி ஜெபித்துவிட்டு, 'இந்தப் பழையசட்டையாகிய சரீரத்தை எடுத்துப்போடுங்கள், புதிய உடுப்பை நான் அணிந்துகொள்ளட்டும்' என்று அவர்களை வேண்டி

னார். கடைசியில் அக்கினியில் போட்டார்கள். அதிக சந்தோஷத்தோடு மரித்தார். இந்த சந்தோஷமும் தைரியமும் எங்கிருந்து வந்தது? இவைகள் தேவ ஐக்கியத்தால் கிடைத்ததல்லவா? கிறிஸ்து வல்லவோ கொடுத்தார். ஆம், அவரே வல்லமை கொடுக்கிறார். அவர் தமது மகிமையோடு வரும்போது, இந்த ரத்தச்சாக்ஷிகளுக்கு என்ன சந்தோஷம்! தாங்கள் சாட்சிகொடுத்த அந்த ரக்ஷகரையே காண்கிறோம் என்பார்கள். நமது நிலைமையென்ன? ஐந்து நிமிஷத்து ஜெபத்தில் களைத்துப்போனால், அங்கே எப்படி நிலைநிற்பான்? இங்கேயும் வெட்கம், அங்கேயும் வெட்கந்தான். ஜெபத்தால் வல்லமைபெற்றுக்கொள்ளுகிறோம். பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொண்டால் சாட்சிகொடாமலிருக்கமுடியாது. இம்மையில் அவரோடு ஜெபத்தில் ஜீவிப்பவர்களே அங்கேயும் ஜீவன் பெறுவார்கள். வேதத்தை வாசியாமலும் ஜெபம்செய்யாமலும் இருப்பவர்கள் செத்தவர்களே. நாம் ஜெபஜீவிகளாய் இருக்க தேவன் கிருபை செய்வாராக.

S. R. Doss.

## SURETY FOR THE CHILD

## பிள்ளைக்காக உத்தரவாதி

‘பிள்ளையாண்டானை என்னோடே அனுப்பும், அவனுக்காக நான் உத்தரவாதம்பண்ணுவேன்; அவனை என்னிடத்திலே கேளும், நான் அவனை உம்மிடத்தில் கொண்டுவந்து நிறுத்தாமற்போனால் எந்நாளும் அந்தக் குற்றம் என்மேல் இருப்பதாக’ (ஆதி. 43 : 8, 9).

பென்யமீனைக்குறித்து யூதா யாக்கோபிடத்தில் இவ்வார்த்தைகளைச் சொன்னான். இவ்வித நிபந்தனையை வாங்கிக்கொண்டுதான் தேவன் பெற்றாரிடத்தில் பிள்ளைகளை ஒப்புவிக்கிறார் என்று சொல்லலாம். யூதாவின் இந்த வார்த்தைகளிலிருந்து பெற்றார் சில அருமையான போதனைகளைக் கற்றுக்கொள்ளலாம்.

1. **பெற்றாரின் உத்தரவாதம்.** ஞானஸ்நான சமயத்தில் நாம் பண்ணும் பிரதிக்கினைகளின் கருத்து இதுதானல்லவா? தேவனுடைய ராஜ்யத்திற்கு சுதந்தரவாளியாகிய இதை இந்தப் பாவம் நிறைந்த உலகத்தில் விடுவதெப்படி? நீங்கள் கொடுத்த உத்தரவின் பொருள் இதுதானல்லவா:—‘என்னோடு இருக்கட்டும், நான் உத்தரவாதம் பண்ணுவேன்.’ பாவம் அறியுமுன் அடிக்கடி வியாதிகள் வரும்போது தேவன் இதை இப்போதே எடுத்துக்கொள்வாரோ



என்ற பயம் உண்டானபோது நீங்கள் பண்ணின ஜெபங்களின் அர்த்தம் இப்படிப்பட்டதல்லவா:—‘இந்தப் பாவமுள்ள உலகத்தில் விட்டுவையும். அவனை என்னிடத்தில் கேளும், நான் உத்தரவாதம் பண்ணுவேன்.’ ஆம்! எவ்வளவு பயங்கரமான காரியம்! எங்கும் பஞ்சம் இருக்கும்போது பையனைத் தகப்பன் வீட்டில் கொண்டுபோய்ச்சேர்க்கும் உத்தரவாதத்தை யூதா தன்மேல் ஏற்றுக்கொண்டது போலவே, நானும் பிதாவைப் பார்த்து: நான் உம்மிடத்தில் கொண்டுவந்து நிறுத்தாமல்போனால் எந்நாளும் அந்தக் குற்றம் என்மேலிருப்பதாக என்று சொல்லியிருக்கிறேன்.

2. **பெற்றாரின் கடமை.** யூதா விளையாட்டிற்காக இப்படிச் சொல்லவில்லை. பென்யமீனுக்கு வருத்தம் நேரிட்டபோது யோசேப்பைப்பார்த்து: அவனுக்காக நான் என் தகப்பனுக்கு உத்தரவாதி; நான் அடிமையாயிருக்கிறேன் என்று சொன்னான். பையனை இரட்சிக்கிறதற்கு தான் எவ்வளவு சிறுமை எடுத்துக்கொண்டாலும் நியாயந்தான் என்று உணர்ந்தான். கிறிஸ்தவபெற்றார் அப்படி உணர்ந்தால் எவ்வளவு நேர்த்தி! உலகம், மாம்சம் ஆகிய சத்துருக்கள் பிள்ளைகளுடைய ஆத்துமாக்களை வசப்படுத்தும்படி பார்க்கும்போது, அதை அறிந்து, அவர்களுக்கு உதவிசெய்து, அவர்களை ரட்சிக்கவேண்டியது தங்கள் கடமை என்று உணரும் பெற்றார் எவ்வளவு சொற்பம்! சற்று வருத்தம் எடுத்துக்கொண்டாலும், கெட்ட தோழரை தங்கள் பிள்ளைகளிலிருந்து பிரித்து, அவர்கள் ஆத்துமாக்களுக்காக நேரம் செலவழிக்கும் பெற்றார் எத்தனைபேர்! படிப்புக்காக, சரீரசுகத்துக்காக என்ன கடன்படவேண்டியதானாலும், எவ்வளவு செலவழிக்கவேண்டுமானாலும் ஆயத்தமாயிருக்கிறோம்; ஆத்துமாவுக்காக எடுத்துக்கொண்ட பிரயாசம் எவ்வளவு? எத்தனை ரூபாய் செலவு? கல்லறைசேரும் சரீரத்திற்காக உத்தரவாதத்தைப்பார்க்கிலும், தேவ சமுகம் சேரும் ஆத்துமாவுக்கல்லவா அதிக உத்தரவாதம் உண்டு! பிள்ளைகளுடைய ஆத்துமாவிற்கு இடையூறாயிருக்குமானால் படிப்பு, உத்தியோகம், பணம்—ஒன்றும் வேண்டாம் என்று சொல்லும் பெற்றோர் எத்தனைபேர்? நம்முடைய உத்தரவாதத்தினால் நமது பேரில் விழுந்தகடமை என்பதை மறந்துபோகவேண்டாம்.

3. **பெற்றாருக்கு தைரியம்.** ‘இளையவனைவிட்டு எப்படி நான் தகப்பனிடத்தில் போவேன்?’ என்று சொல்லவே பையன் விடுதலை பெற்றான். நமது விஷயத்திலும் இது உண்மையே. நமது பிள்ளைகளுடைய ஆத்துமாக்களுக்கு நாம் உத்தரவாதிகள் என்பதை உணர்ந்து, அவர்கள் குணப்படாதவர்களாகவும், உலகத்தாராகவும், உல்லாசப்பிரியராகவும் வளருகிறதைக் கவனித்து தேவனிடத்தி

போய்: 'நான் என் பிள்ளைக்காக உத்தரவாதி, இவனில்லாமல் எப்படி என் பிதாவின் சமுகத்தில் நிற்பேன்?' என்று சொல்லி கண்ணீரோடே போராடுவோமானால் நமது ராஜாவும் நமக்கு இரங்குவார். தான் மன்றாடின ராஜா தனக்கும் பென்யமீனுக்கும் சகோதரன்தான் என்று கண்டுகொண்டதுபோல நமது ரட்சகரும் நமக்கும் நமது பிள்ளைகளுக்கும் சகோதரர் என்று கண்டுகொள்வோம். நம்முடைய இடைவிடாத சுயநயமற்ற மன்றாட்டைக் கேட்டு நமது பிள்ளைகளைக் குணப்படுத்துவார் என்பது சத்தியம். யூதாவுக்கும் யோசேப்பு தன்னை வெளிப்படுத்தி முத்தம்கொடுத்தான். நமது பிள்ளைகளுக்காக நாம் உத்தரவாதிகள் என்பதை உணர்ந்து, அவர்கள் நிமித்தம் தேவனுடைய பாதத்தைப் பிடிக்கும்போது, நம்முடைய ஜீவியமும் தேவனுக்குச் சமீபமாக இருக்கும். கானானிய ஸ்திரீயையும், யவீரையும்போல, நமது பிள்ளைகளுக்காக மன்றாடவே நாமும் ஆசீர்வதிக்கப்படுவோம். 'என் பிள்ளைகள் ஒவ்வொன்றுமில்லாமல் எப்படி என் தகப்பனிடத்தில் போவேன்?' என்பது நமது இருதயங்களில் தொனிப்பதாக!

## SUMMER SCHOOL

## 1920-ம் வருஷம் ஜூன்மாதம் 24-29 வரை பண்ணைவிளையில் நடத்தப்பட்ட முதல் தாய்மார் ஞானோதய வித்ய சங்கம்

இக்கூட்டம் முதன்முதல் பண்ணைவிளை சர்க்கிளில் ஆரம்பிக்க தேவன் அநுக்கிரகம் செய்தது அந்த சர்க்கிளார்க்குக் கிடைத்த ஓர் பெரும் சிலாக்கியமே. இக்கூட்டம் சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்னமே அநேக தேவனுடைய பிள்ளைகளால் ஜெபத்துடன் ஆயத்தப்படுத்தப்பட்டிருந்தது; முடிவும் ஜெயமாகவே இருந்தது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம். இதற்கு வந்திருந்த ஐரோப்பியர் மூவர்: Miss Grover, Miss Morris, Miss Herring முதலானவர்களே. மற்றவர்கள் பண்ணைவிளை சர்க்கிளைச் சேர்ந்தவர்களும், சாயர்புரம், நாசரேத், தூத்துக்குடி, மெய்ஞ்ஞானபுரம், இவ்விடங்களிலுள்ள C.E.Z.M., S.P.G. பைபிள் ஊமன்களும், தாய்மார் சங்க மெம்பர்களும், சபைகளில் வரக்கூடிய சில தாய்மாருமே. மொத்தப் பெண்களின் தொகை சுமார் 80.

இப்பள்ளிக்கூடம் ஓர் வியாழக்கிழமை துவக்கி ஐந்து நாட்களாய் நடைபெற்று அடுத்த திங்கட்கிழமை முடிந்தது. ஒவ்வொருநாளும்



நான்கு கூட்டங்கள் நடத்தப்பட்டன. ஒவ்வொரு கூட்டமும் ஒரு மணி நேரத்துக் கதிகமில்லை. கூட்டங்கள் வெகு திட்டமாய் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தன. பிள்ளைகளின் தொந்தரவு கிடையாது.

**கூட்டங்களின் ஒழுங்கு.**—புதன் இரவு 'அருள் ஏராளமாய்ப் பெய்யும்' என்னும் கீதம் பாடப்பட்டு ஆயத்த ஜெபம் செய்யப்பட்டது.

வியாழன் முதல் ஒவ்வொருநாளும் காலை 8½ மணி முதல் 9½ வரையும் வேதபாடம் வெகு சிறந்த முறையாய்ப் படிப்பிக்கப்பட்டது. எப்படியென்றால் கூட்டத்துக்கு வந்திருந்த தாய்மாரை ஐந்து வகுப்புகளாய்ப் பிரித்து அப்போஸ்தலர் நடபடி 1–17 அதிகாரங்களிலிருந்து 1-ம் நாள் விசுவாசம், 2-ம் நாள் ஜெபம், 3-ம் நாள் உயிர்த்தெழுதல், 4-ம் நாள் பரிசுத்தாவி, 5-ம் நாள் பிரசங்கமும் சாட்சியுமாகிய ஐந்து பொருள்களின்பேரில் Miss Grover, Miss Morris, Miss Herring, Mrs. Albert, Mrs. Athisayam ஆகிய ஐந்து உபாத்தியாயினிகளால் ஐந்து நாள் படிப்பிக்கப்பட்டது. இப்பாடங்களைத் தாய்மாரும் ஏற்கனவே ஆயத்தப்படுத்திக் கொண்டுவரும்படி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது ஸ்திரீகளுக்கு மிகவும் பிரயோஜனமாயிருந்தது. 70 வயதுள்ள தாய்மாரையும், பாட்டிமாரையும் இப்பாடசாலையில் கண்ட கண்கள் மெய்யாகவே பாக்கியமுள்ளவைகள்.

இன்னும் நான் சொல்லவேண்டிய ஓர் விசேஷ காரியமென்னவென்றால் Miss Grover அம்மாளுடைய ஐந்து நாள் பாட ஒழுங்கும் ஓர் கிறிஸ்தவ ஜீவியத்தின் மகிமையைக் காட்டுகிற ஓர் படம்போல் இருக்கிறது. ஓர் கிறிஸ்தவனுடைய ஜீவியம் விசுவாசத்தில் ஆரம்பித்து, ஜெப சங்கிலியால் கிறிஸ்துவோடிணைக்கப்பட்டு, உயிர்த்தெழுதலின் காட்சியால் உயிர்த்தெழுந்து, பரிசுத்தாவியால் நிரப்பப்பட்டு, பிறருக்கு சாட்சி சொல்வதில் முடிவதுபோல், ஒவ்வொரு கிறிஸ்தவப் பிரயாணியும் விசுவாசக் கப்பலில் ஏறி, அது உடைந்து சேதப்பட்டுப் போகாதபடி ஜெப, தியான, இருதயப் பெருமூச்சுகளோடு தேவ சஞ்சாரஞ்செய்து, உயிர்த்தெழுந்த கிறிஸ்துவைத் தரிசித்து, அவரோடு தானும் மறுஜனன முழுக்கடைந்து அக்கினி அபிஷேகத்தால் கிறிஸ்துவுக்கு சாட்சி கூறி, போராட்டம் முடித்து, பரலோக துறைமுகப்பட்டணம் சேர்வதற்கு ஒப்பனையாக இருக்கிறது. கூட்டங்களின் மத்தியில் கிறிஸ்துவின் ஐக்கிய விருந்தில் அவரோடு போஜனம்பண்ணினது, புது பெலன் அடைவதற்கேதுவாயிருந்தது என்கிற சந்தோஷத்தையும் இங்கே சொல்லாமல் விட முடியாது.

அப்பால் மத்தியானம் 11-மணிக் கூட்டங்களிலும், 3-மணிக் கூட்டங்களிலும், முதலாவது, கிறிஸ்தவ கூட்டங்களை நடத்துவதிலிருக்கும் கஷ்டங்களை எப்படி நீக்கிக்கொள்ளலாமென்றும், இரண்டாவது, பேர்க்கிறிஸ்தவர்களுக்குள் தனித்தாள் சம்பாஷணையின் மூலமாய் அவர்களை எப்படி மெய்க்கிறிஸ்தவர்களாக்கலாம் என்பதைப்பற்றியும், மூன்றாவது, பிள்ளைகளின் சுகத்தைத் தாய்மார் எவ்வளவு விசேஷமாய்க் கவனித்து நடக்கவேண்டுமென்கிற முறைகளைப்பற்றியும் Miss Grover அம்மாள் நல்ல ஆலோசனைகள் சொன்னதன்பின், Mrs. மதுரம் அம்மாளின் சில ஆலோசனைகளும் ஒப்புக்கொள்ளப்பட்டன.

மேலும் அந்த மத்தியானக் கூட்டங்களில், முதலாவது, தாய்மார் பிள்ளைகளை வளர்க்கவேண்டிய விஷயத்தில் எவ்வளவு பொறுப்புள்ளவர்களென்றும், இரண்டாவது, ஓய்வுநாள் பள்ளிக்கூடங்களால் உண்டாகும் பிரயோஜனங்களைப்பற்றியும், மூன்றாவது, அஞ்ஞானிகளைத் தனித்தனியாய்க் கண்டு பேசி, அவர்களைக் கிறிஸ்துவிடம் இழுத்து, எப்படி அவருக்குச் சிநேகிதராக்கலாமென்றும் தெளிவாய்ப் போதிக்கப்பட்டது. இந்த முறைகளை இதற்குமுன் கையாடிப் பழக்கப்படாதவர்கள், இனி இந்த முறைகளைக் கையாடி எப்படியும் ஜெயம் பெறலாமென்னும் விசுவாசத்தோடு போயிருக்கிறார்கள். அவர்களைக் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக.

3-மணிக் கூட்டத்தில் ஓர் பொதுவான ஜெபக்கூட்டம் நடத்தப்பட்டது. வந்திருந்தவர்களின் விருப்பத்தின்படி தீர்மானம்:

1. கிறிஸ்துமார்க்கத்திலிருந்து விலகி, இந்துமார்க்கத்துக்குப் போயிருக்கும் சொர்ணம் என்கிற பிள்ளையின் இருதயத்தைக் கர்த்தர் திருப்பவேண்டுமென்று.

2. இடிக்கப்பட்டிருக்கும் நாசரேத் ஆலயம் சீக்கிரம் கட்டப்பட, கர்த்தர் அநேகருடைய இருதயங்களை ஏவி எழுப்பவேண்டுமென்று.

3. சாயர்புரத்தில் நான்கு வருஷமாய் வியாதிப்படுக்கையிலிருக்கும் பாக்கியநாதன் உபாத்தியாயர் மனந்திரும்பி இயேசுவுக்குப் பிள்ளையாகக் கிருபைசெய்யவேண்டுமென்று.

இந்த முறையாய்க் கேட்கப்பட்டிருந்த 44 விண்ணப்பங்களை ஜெபலிற்றனிபோல் ஒழுங்காய் ஒருவர் வாசிக்க எல்லாரும் ஏகமாய் 'நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே' என்று கூப்பிடுகையில், தாய்மாருடைய உள்ளங்கள் பரவசமடைந்தன.



ஜெபலிற்றனிபோலவே ஸ்தோத்திரலிற்றனியும் வைக்கப்பட்டது. Miss Herring அம்மாள் ஆலோசனையின்படி ஓர் ஸ்தோத்திரப் பாட்டுப் பாடி, 145-ம் சங்கீதத்திலிருந்து Mrs. Knight அம்மாள் சில போதனைகள் சொல்ல, ஒவ்வொருவருடைய ஸ்தோத்திர பலிகளும் பின்வருமாறு கர்த்தருக்கு ஏறெடுக்கப்பட்டன.

1. சுகவீனமாயிருந்த பைபிள் ஊமன்கள் சுகமடைந்ததற்காக.

2. பாக்கியம் தான் இழந்துபோன இரக்ஷண்ய சந்தோஷத்தைத் திரும்பப் பெற்றுக்கொண்டதற்காக.

3. ஜெபவாஞ்சையற்றிருந்த சகோதரிக்கு, ஜெபவாஞ்சை கிடைத்திருப்பதற்காக.

4. ஓய்வுநாளில் சில ஹிந்துப் பிள்ளைகளுக்கு வேதபாடம் சொல்லிக்கொடுக்க ஓர் அம்மாள் நிர்ணயம் செய்திருப்பதற்காக.

இந்த முறையாய்க் கேட்கப்பட்ட ஸ்தோத்திர பலிகளைச் செலுத்தும்போது, எல்லாரும் முழங்காலில் நின்று ஏகமாய் 'உம்மைத் துதிக்கிறோம்' என்று மறுமொழி கொடுக்க, எல்லாருடைய இருதயங்களும் ஸ்தோத்திர ஆவியால் நிறைந்தன. அப்பால் பொதுவான ஸ்தோத்திர ஜெபத்தில் எல்லாரும் பங்குபெற்று, பின்னால் எல்லாரும் எழுந்து நின்று 'தேவனே, உம்மைத் துதிக்கிறோம்' என்னும் கீதம் பாடி ஸ்தோத்திர ஆராதனை முடிந்தது.

சாயந்தரம் 6-மணிக் கூட்டங்கள் ஆவிக்குரிய கூட்டங்களாக Miss Grover அம்மாளால் நடத்தப்பட்டன. அவர்களின் போதனை எதுவென்றால், (1 கொரி. 1: 31) 'இயேசுகிறிஸ்து தேவனால் நமக்கு ஞானமும், நீதியும், பரிசுத்தமும், மீட்புமானார். இதை விளக்குவிக்க சகரியா தீர்க்கதரிசனத்திலிருந்து 'சாத்தான் கடிந்து கொள்ளப்படல்', அக்கினியினின்று தப்புவிக்கப்பட்ட கொள்ளி, பிரதான ஆசாரியன், யோசுவாவின் அழுக்குவஸ்திரம் களையப்பட்டு சுத்தமான பாகை தரிப்பித்தல், கல், குத்துவிளக்கு, ஏழு அகல்கள், ஒலிவமரம், எண்ணெய், கிளை, திறக்கப்பட்ட ஊற்று, இவைகளைக்கொண்டு 'இயேசுகிறிஸ்து எப்படி நமக்கு ஞானமும், நீதியும், பரிசுத்தமும், மீட்புமானார்' என்கிற சத்தியம விளக்கிக் காட்டப்பட்டதில் அநேகருடைய இருதயங்களில் பாவ உணர்வு உண்டாகி, பாவம் நீங்கும் வழி, ஆளுகை செய்கிற ராஜா, மீட்பர் இன்னார், கர்த்தருடைய ஆவியின் வல்லமை, இவைகளைக் கண்டு கொள்ளும் பிரகாசமான மனக்கண்கள் கொடுக்கப்பட்டபடியால், மங்கின தங்களை மறுபடியும் புதுப்பிரதிஷ்டை செய்ய ஏவப்பட்டு, கிறிஸ்தவ ஜீவியத்தைப் பிரகாசமாக்கிக்கொள்ள ஏதுவாயிற்று.

ஆத்துமபோஜனம் திருப்தியாய்க் கொடுக்கப்பட்டது போலவே சரீர போஜன காரியங்களும் Miss Morris அம்மாள் ஏற்பாட்டின்படி Rev. and Mrs. Dare அவர்களால் வெகு கவலையெடுத்துச் செய்யப்பட்டு, யாதொரு தொந்தரவில்லாமல் நடந்ததற்காக இருவருக்கும் நன்றியறிதல் சொல்லி இவ்விதமாய் இக்கூட்டங்கள் மிகவும் சந்தோஷமாய் முடிய தேவன் கிருபைசெய்தார். அவருக்கே துதி.

கூட்டத்துக்கு வந்த சகோதரிகள் கிறிஸ்துவுக்காக அநேக நல்ல தீர்மானங்களோடு போயிருக்கிறார்கள். கர்த்தர் அவர்களின் நல்ல தீர்மானங்களை நிறைவேற்றப் பெலன் அளிப்பாராக.

இன்னும் ஒரு காரியத்தைச் சொல்லாமல் முடிப்பது நன்றாயிராது. கூட்டத்துக்கு வந்த சகோதரிகளிடம் மிகுந்த ஐக்கியமிருந்தது.

இதற்குக் காரணமென்னவென்று யோசிக்குமிடத்து, ஒவ்வொரு கூட்டங்களினிடையிலும் சகோதரிகள் யாவரும் சிறு கூட்டங்களாய்க்கூடி வேதபாட வகுப்பில் படித்த பாடங்களை ஒருவருக்கொருவர் வினவிக்கொள்ளுதலிலும், அடுத்த நாள் வேதபாடங்களை ஆராய்ந்துபடிப்பதிலும், தனிஜெபம் செய்வதிலும், ஒருமனமாய்ப் பாடுவதிலும் ஏக ஐக்கியமாயிருப்பதைக் கவனித்த சாத்தான், இக்கூட்டத்துக்குவாராமல் தூரமாய் நின்று கிறிஸ்துவை எல்லாரும் ஏகமனமாய்ப் போற்றுவதால் இனி 'நமக்கு இக்கூட்டத்தில் பங்கில்லை, எல்லாரும் சுறுசுறுப்பாயிருக்கிறார்கள்' என்று எண்ணி, வெருண்டு ஓடிவிட்டதே இவ்வைக்கியத்திற்குக் காரணம் என்பதைத் தாய்மாரே மறந்துவிடாதிருங்கள் என்று பகிரங்கமாய்ச் சொல்லுகிறேன். இவைகளை வாசிக்கும் சகோதரிகளே, சாத்தான் உங்களை வஞ்சியாதபடிக்கு நீங்கள் செய்யவேண்டியதாவது :

1 'சோம்பலுக்கு இடங்கொடாதிருங்கள்.'
2. 'விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்.'
3. 'ஆவியினால் நிறைந்திருங்கள்.'

எல்லா கனமும் துதியும் நமக்கல்ல, நல்ல, பெரிய, பிரதான மேய்ப்பரான அவருக்கே உரியது. தாய்மாரே, 'எழும்பிப் பிரகாசியுங்கள்.'

உங்கள் வேளை வந்தது. தூங்குகிற நீங்கள் விழியுங்கள்.
கர்த்தர் உங்களைப் பிரகாசிப்பிப்பார்.

இப்படிக்குக் கிறிஸ்துவுக்குள்
உங்கள் அன்பான உடன்சகோதரிகள்



## GOLD SOVEREIGNS
## தங்க ஸவரன்கள்

சில நாட்களுக்கு முன் இந்தியா கவர்ன்மெண்டார்கள் தங்க ஸவரன்கள் விஷயமாய் செய்த நடவடிக்கைகளைக் குறித்து பொது ஜனங்கள் சந்தேகமும் துரபிப்பிராயமும் அடைந்திருக்கிறார்களெனத் தெரிகிறது. அதுகாரணம்பற்றி தற்சமயம் ஸவரன் விலை ஏன் மிகவும் அதிகமாயிருக்கிறது என்பதைக் குறித்து விளம்பர ஸபையார் விவரித்துக் காரணம் தெரிவிக்கவேண்டுமென அநேகர் கேட்டுக்கொள்ள ஷை சபையாரால் பின் வருவன வெளியிடப்படுகின்றன. அவ்விஷயங்கள் யாவும் சென்னை அக்கௌண்டெண்ட் ஜனரல் (Accountant-General) அவர்களாலும் இந்திய செல்வ விருத்தி சாஸ்திர போதகாசிரியர் (Professor of Indian Economics) அவர்களாலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

சென்ற ஜூன் மாதத்தில் இந்தியா கவர்ன்மெண்டார்கள் ஸவரன் சம்பந்தமாய் வெளியிட்ட அறிக்கை யாவருக்கும் ஞாபகமிருக்கலாம். அவ்வறிக்கையினால் கவர்ன்மெண்டார் தெரிவித்த விஷயங்கள் ஐந்து. அவையாவன :—

(1) இனி ஸவரன் ரூபாய் 15 மதிப்புள்ளதாக அங்கீகரிக்கப்படமாட்டாது. அதாவது ஒரு ஸவரனைக் கொடுத்தால் அதற்குப் பதிலாக ரூ. 15 கிடைக்கமாட்டாது.

(2) ஸவரன் ரூபாய் 10 மதிப்புள்ளதாகவே கருதப்படவேண்டுமென நிர்ணயிக்கும்பொருட்டு சீக்கிரத்தில் கவர்னர் ஜெனரல் சட்டசபையில் ஓர் மசோதா பிரேரேபிக்கப்படும். அதாவது இம்மசோதா சட்டமானால் ஒரு ஸவரனைக் கொடுத்தால் அதற்குப் பதிலாக ரூபாய் பத்தே கிடைக்கும். அதிகம் கிடைக்காது.

(3) வெளி தேசங்களில் வாங்கி தங்கக் கட்டியை இத்தேசத்திற்கு கொண்டுவரக் கூடாதென்ற நிபந்தனை நீக்கப்பட்டது.

(4) ஜூலைமீ 12-ம் தேதிக்குப் பிறகு தங்க ஸவரன்களையும் தாராளமாய் இத்தேசத்தில் இறக்குமதி செய்யலாம்.

(5) ஜூலைமீ 12-ம் தேதி வரையில் பேபர் கரன்ஸி (Paper Currency) ஆபீசுகளுக்கு யார் ஸவரன்களை மாற்றவந்தாலும் அவர்களுக்கு ஸவரனுக்கு ரூபாய் 15 வீதம் பணம் கொடுக்கப்படும்.

இவ்வாறு ஜூலை௴ 12-ம் தேதி வரையில் ஸவரனுக்கு ரூபாய் 15 வீதம் கொடுப்போம் என கவர்ன்மெண்டார் சொல்லியதற்குக் காரணம் ஸவரன்களை வாங்கி அமெரிக்கா தேசத்திற்கு அனுப்புவதற்காகவே என அநேகர் புரட்டாகச் சொல்லிவருகிறார்கள். இது முற்றிலும் பிசகு என்பது கவர்ன்மெண்டார் செய்திருக்கிற வேறு காரியங்களால் தெரியவரும். 14 நாட்களுக்கு ஒரு தரம் கவர்ன்மெண்டாரே ஸவரனுக்கு ரூபாய் 13 முதல் 14 விதமாக ஏராளமான தங்கத்தை டெண்டர் மூலமாய் விற்றுவருகிறார்கள். இவ்வாறு தங்கத்தை ஸவரன் ஒன்றுக்கு ரூபாய் 14-க்குக் குறைவாகவே பெற்றுக்கொண்டு விற்று, அமெரிக்கா தேசத்துக்கு அனுப்புவதற்காக ரூபாய் 15 வீதம் ஸவரன்களை கவர்ன்மெண்டார்கள் வாங்குகிறார்கள் என்று சொல்லுதல் எவ்வாறு பொருந்தும்? பொருந்தவே பொருந்தாது. உண்மையான காரணமென்னவெனில், ஸவரன்களைக் கையில் வைத்துள்ளவர்களுக்கு யாதொரு விதமான நஷ்டத்தையும் உண்டுபண்ணக்கூடாதென்பதே. இதுவரையில் ஸவரன் ரூபாய் 15 மதிப்புள்ளதென நிபந்தனை யிருந்ததால் ஸவரன் வைத்துள்ளோர் பெரும்பான்மையோரும் ஸவரன் ஒன்றுக்கு ரூபாய் 15 வீதமே விலைகொடுத்திருப்பார்கள். அவர்களுக்கு புது நிபந்தனையால் யாதொருவித நஷ்டமும் வராமலிருக்கும்பொருட்டே கவர்ன்மெண்டார் ஸவரனுக்கு ரூ. 15 வீதம் கொடுப்பதாய் ஒப்புக்கொண்டார்கள்.

ஸவரன் ரூ. 15 மதிப்புள்ளது என்ற நிபந்தனையை ஏன் கவர்ன்மெண்டார் நீக்கவேண்டும் எனக் கேள்வி பிறக்கலாம். இதற்கு சமாதானங்கள் மூன்று. அவையாவன:

(1) இதர தேசங்களில் ஸவரன் ரூபாய் 14-க்குக் குறைவாகவே விற்கப்படுகிறது.

(2) டெண்டர் பிரகாரம் கவர்ன்மெண்டார் விற்று வரும் தங்கத்திற்கும் ஸவரன் ஒன்றுக்கு ரூபாய் 14-க்குக் குறைவாகவே விலை கிடைத்துவருகிறது. அதிக விலை கொடுத்து வாங்குவோரில்லை.

(3) இந்தியாவில் தங்கம் இறக்குமதியாகப்படாது என்ற நிபந்தனையை இப்போது கவர்ன்மெண்டார் நீக்கிவிட்டார்கள்.

ஆகவே இக்காரணங்களால் தங்கஸவரன் விலைகுறையும்! ஆயினும் ஸவரன்களை கையில் வைத்துள்ளவர்களுக்கு நஷ்டம் உண்டாகக்கூடாது என்றே கவர்ன்மெண்டார்கள் ஜூலை மாதம் 12-ம் தேதிவரையில் ஸவரனுக்கு ரூபாய் 15 வீதம் பணம் கொடுத்து வந்தார்கள்.



ஸவரன் விலை குறையுமென எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அனுபவத்தில் தற்சமயத்தில் ஸவரன் விலை மிகவும் அதிகமாயிருக்கிறதே அதற்குக் காரணம் என்ன எனக் கேட்கலாம். தற்காலம் சில ஜனங்கள் செய்துவரும் புரட்டுகளே காரணங்கள் என்று சொல்ல வேண்டியிருக்கிறது. அவையாவன:

(1) அமெரிக்கா தேசத்துக்கனுப்புவதற்காக தங்கத்தை கவர்ன்மெண்டார் வாங்குகிறார்கள் என்பதும்.

(2) இனி கவர்ன்மெண்டார் வெளியிடப்போகிற ஸவரன் நாணயம் இப்போதுள்ள நாணயத்தை விட எடையிலும் மாற்றிலும் குறைவாகவேயிருக்கும் என்பதுமாம். இவையிரண்டும் கொஞ்சமேனும் உண்மையல்ல. புதிதாய் வெளியிடப்படும் ஸவரன்களும் பழைய ஸவரன்கள்போலவே யிருக்கும். ஆயினும் அநேக ஜனங்கள் அவை உண்மையென நம்புவதால் அதிக விலையாகிலும் ஸவரன்களை வாங்கத்தான் வேண்டுமென வாங்குகிறார்கள்.

(இன்னும் வரும்.)

## A SIMPLIFIED ALPHABET FOR INDIAN LANGUAGES

## இந்திய சுதேச பாஷைகளுக்கேற்ப சுலபமான எழுத்துக்கள்

நமது இந்திய தேசத்தில் வாசிக்கத் தெரியாத ஏராளமானபேரிருக்கிறார்கள். சுதேச பாஷை எழுத்துக்கள் கற்கக் கடினமாயிருப்பதால், சகலரும் விசேஷமாய் அறிவீனரும் சுலபமாய்க் கற்றுக்கொள்ளத்தக்க எழுத்துக்களைத் தெரிந்து பாஷை எழுத்துக்களாக்கினால் யாவரும் கஷ்டமின்றி சீக்கிரத்தில் வாசிக்கக் கற்றுக்கொள்ளலாம். இந்த எழுத்துக்கள் சமஸ்கிருத பாஷை சப்தத்தை அனுசரித்திருந்தால் சகல இந்திய பாஷைகளுக்கும் பொதுவாய் உபயோகிக்கலாம். இந்த எழுத்துக்கள் சுலபத்தில் அறிந்துகொள்ளக்கூடியவைகளும் இலேசாய் எழுத அல்லது அச்சிடக்கூடியவைகளுமா யிருக்க வேண்டும்.

இவ்வித பாஷை எழுத்துக்களை யோசித்து எழுதுகிறவர்களுக்கு மூன்று வெகுமதி (Prizes) உண்டு. அவை முறையே 100 ரூ., 75 ரூ., 50 ரூ. பெறுமானவை. இவ்வித எழுத்துக்களை எழுதுவோர் இவ்விஷயத்தில் விசேஷித்த முயற்சி எடுத்துவரும் சென்னை ராயபுரம் 40 மேய்ன் ரோட்டிலிருக்கும் கனம் ஜே. ஸ்டுவர்ட் துரையவர்களுக்கு (Rev. J. Stewart, M.A., 40 Main Road, Rayapuram) மேல்விலாசம் போட்டு, நவம்பர் மாதம் 30-ம் தேதிக்குள் அனுப்பவேண்டியது. பழைய எழுத்துக்களையும் உபயோகிக்கலாம் அல்லது முற்றும் புதிய எழுதுக்கள் கண்டுபிடிக்கலாம்.

## LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

### 1920-ஞு செப்டெம்பர்மீ

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | பு. | மத். | 16. | 13—28 | 11 | ச. | மத். | 21. | 33—46 | 21 | செ. | மத். | 25. | 14—30 |
| 2 | வி. | ,, | 17. | 1—13 | 12 | ஞா. | ,, | 22. | 1—14 | 22 | பு. | ,, | 25. | 31—46 |
| 3 | வெ. | ,, | 17. | 14—27 | 13 | தி. | ,, | 22. | 15—33 | 23 | வி. | ,, | 26. | 1—13 |
| 4 | ச. | ,, | 18. | 1—18 | 14 | செ. | ,, | 22. | 34—46 | 24 | வெ. | ,, | 26. | 14—30 |
| 5 | ஞா. | ,, | 18. | 19—35 | 15 | பு. | ,, | 23. | 1—14 | 25 | ச. | ,, | 26. | 31—46 |
| 6 | தி. | ,, | 19. | 1—30 | 16 | வி. | ,, | 23. | 23—39 | 26 | ஞா. | ,, | 26. | 47—58 |
| 7 | செ. | ,, | 20. | 1—16 | 17 | வெ. | ,, | 24. | 1—14 | 27 | தி. | ,, | 26. | 59—75 |
| 8 | பு. | ,, | 20. | 17—34 | 18 | ச. | ,, | 24. | 15—33 | 28 | செ. | ,, | 27. | 1—14 |
| 9 | வி. | ,, | 21. | 1—17 | 19 | ஞா. | ,, | 24. | 34—51 | 29 | பு. | ,, | 27. | 15—26 |
| 10 | வெ. | ,, | 21. | 18—32 | 20 | தி. | ,, | 25. | 1—13 | 30 | வி. | ,, | 27. | 27—38 |

C. L. S. PRESS, MADRAS—1920

# மாதர் போதினி

No. 273 அக்டோபர் 1920 No. 10

## 'THE SOUL THAT SINNETH, IT SHALL DIE'

## 'பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும்'

எசேக். 18 : 20

பாவம் செய்கிற ஆத்துமாதான் சாகவேண்டும். பாவமானது காலரா, பிளேக், வைசூரியைப்போலொத்த ஒட்டுவாரொட்டி அல்லது தொற்று வியாதி. ஒருவனிடத்திலிருந்து புறப்படுகிற இந்த ஒட்டுவாரொட்டி வியாதியானது அவனையும், அவன் வீட்டாரையும், அவனிடத்தில் நெருங்குகிற யாவரையும் பற்றிக்கொண்டு, அநேகரை மரணத்துக்குள்ளாக்குகிறது போலவே, பாவமானது பாவஞ்செய்கிறவனையும், அவன் வீட்டாரையும், அவனோடு சம்பந்தப் பட்டவர்களையும் சாபத்துக்குள்ளாக்கி மரணத்தைப் பிறப்பிக்கிறது. உதாரணமாக: ஆதாமை எடுத்துக்கொள்ளுங்கள். அவன் செய்த பாவத்தால், உலகம் சாபத்துக்குள்ளானது. ஆனாலும், அவர்களில் ஒருவன் நல்லவனாயிருந்து கடவுளுக்குப் பயந்து, அவருடைய கட்டளைகளைக் கைகொள்வானேயாகில், அவன் சாவதில்லை. 'பாவஞ் செய்கிற ஆத்துமாவே சாகும்.' அவன் செய்த பாவமே அவனைக் கொல்லும், தேவன் ஒருவரையும் கொல்லுகிறவரல்ல. உதாரணமாக: யூதாசை எடுத்துக்கொள்ளுங்கள். அவன் பாவஞ்செய்தான். ஜனங்களும் அவனைக் கொல்லவில்லை. காட்டிக்கொடுக்கப்பட்ட இயேசுவானவரும் அவனைக் கொல்லவில்லை. அவன் செய்த பாவமே அவனை நான்றுகொண்டு சாகப்பண்ணினது.

பாவம். பாவம் முதலில் இன்பமானது. பாவம் செய்யும் போது மனச்சாக்ஷி கண்டிக்கிறது. ஆனாலும், சொற்ப நேரத்து இன்பத்தை விட்டுவிட மனம் வருகிறதில்லை. அற்பமாய்க் காணப்படும் பாவமானது அதிகரித்து, மரணத்தைப் பிறப்பிக்கிறது. பாவத்தின் கேடு அநுபவத்தில்தான் தெரியவருகிறது. உதாரணமாக: நான் இமயமலையிலிருக்கையில், ஒருவனைக் கண்டேன். அவன் உஷ்ண தேசத்தில் சஞ்சரித்த தென்னாட்டான். அவன் இதற்குமுன் சீன

இடங்களுக்கு வராததினாலே, பனிக்கட்டிகளைக் கண்டு அதிசயித்து அவைகளைக் கையிலெடுத்து விளையாடிக்கொண்டிருந்தான். அதைக் கையில் எடுத்தால் கை வெந்துபோகுமென்று நான் சொன்னேன். அதற்கவன்: 'நெருப்பைக் கையிலெடுத்தாலல்லவோ கை வேகும், குளிர்ச்சியான பதார்த்தத்தைக் கையில் எடுத்தால் கை வேகுமோ' என்று சொல்லி மென்மேலும் விளையாடிக்கொண்டிருந்தான். கொஞ்சநேரத்திற்குள்ளாக கை வெந்து கையிலுள்ள சதை மெழுகு உருகுவதுபோல உருகி வடிந்தது. அப்பொழுதுதான் உணர்ந்தான். அதுபோலவே, பாவஞ்செய்கிற ஒருவனிடத்தில், பாவத்தின் கேடுகளைப்பற்றிச் சொன்னால், அவன் கேள்விகள் கேட்கவும், கேலி பண்ணவும் ஆரம்பிப்பான். ஆனால், அந்தப் பாவத்தினால் கேடு வரும்பொழுதுதான் உணருவான். பாவத்தைச் செய்யச் செய்ய, பாவத்தின் கேடு மும்முரமாகிறது. உதாரணமாக: ஒரு சிறுவனுக்கு சொறி சிரங்கு வந்திருந்தது. அவன் அடிக்கடி அதை சொறிந்துகொண்டேயிருப்பான். அப்படிச் செய்தால் பெரிய புண் உண்டாகுமென்று யாராவது சொன்னால், அவன் கவனிக்கிறதில்லை. ஏனென்றால், சொறிகிறதினால் உண்டாகிற சொற்ப நேரத்து சுகத்தை விட்டுவிட அவனுக்கு மனம் வரவில்லை. இப்படியாக, நாளுக்குநாள் புண் பெரிதாகி எலும்புக்குள் தாவினது. வைத்தியரிடத்தில் காண்பித்ததில், கையை வெட்டினாலொழிய அவனுடைய ஜீவனுக்குக் கேடு உண்டாகுமென்று சொன்னார். முதலில் அற்பமாகக்கண்ட அந்த சொறிசிரங்கு உயிருக்கு மோசத்தைக் கொண்டு வந்தது. சொற்ப நேரத்து சுகத்தை நாடி அவன் அடிக்கடி சொறிந்ததே அதற்குக் காரணம். அதுபோலவே கொஞ்சநேரத்து இன்பத்தை நாடி பாவஞ் செய்யச் செய்ய பாவத்தின் கேடு அதிகரித்து மரணத்தைப் பிறப்பிக்கிறது. தேவன் பாவியை அழிக்கிறதில்லை பாவமே அவனை அழிக்கிறது. பாவம் மரணத்தைப் பிறப்பிக்கும் முன்னமே ரக்ஷிப்படையவேண்டும்.

இரக்ஷிப்பு.—பாவமன்னிப்படைதல் ரக்ஷிப்பல்ல. பாவ சுபாவம் மாறுவதே ரக்ஷிப்பு. பாவம் செய்வதே மனுஷசுபாவம். அந்த பாவசுபாவம் மாறாவிட்டால், அதுவே மரணத்தைக் கொண்டுவருகிறது. 'பாவிகளை ரக்ஷிக்க கிறிஸ்து இயேசு உலகத்திற்கு வந்தார்' என்கிறபொழுது, பாவங்களை மன்னிப்பதற்காக மாத்திரம் அவர் வராமல், பாவ சுபாவத்தை மாற்றுவதற்குமே வந்தார். உதாரணமாக: ஒரு மனிதன் திடீரென்று தன் சிநேகிதனைக் குத்தி கொன்று போட்டான். ஆகையால், அவனைச் சிறைச்சாலையி லடைத்து, மரணத்தீர்ப்பு கொடுக்கப்பட்டது. இவன் தன் சுயசித்தத்தினால்



அந்தக் கொலை செய்யவில்லை. இவனுக்கு ஒரு வியாதியிருந்தது, அந்த வியாதியின் குணத்தினால் தன்னை யறியாமலே திடீரென்று கொலைசெய்தான். அதை அறிந்த ஜனங்களும் அவனுடைய இனத்தாரும், ராஜாவுக்கு மனுக்கொடுத்து, இவன் செய்த கொலை தன் சுயசித்தத்தினால் செய்யவில்லையென்றும், அவனுக்குண்டாயிருந்த வியாதியின் தன்மையினால் அப்படிச் செய்தானென்றும் மன்னிப்புக்காக விண்ணப்பம் பண்ணினார்கள். ஆகையால், ராஜா அவனுடைய குற்றத்தை மன்னித்து அவனை விடுதலைபண்ண கட்டளையிட்டார். இதைக்கேட்ட ஜனங்களும் இனத்தாரும் அதிக சந்தோஷத்தோடு திரும்புகையில், முந்தின இரவிலேயே அந்தக் குற்றவாளி மரித்துப்போனான் என்று வெளியானது. அவன் செய்த குற்றத்தை ராஜா மன்னித்தபோதிலும், அவனுக்குண்டாயிருந்த வியாதி அவனைக் கொன்றது. அந்த வியாதி நீங்கும்படி மருந்துகொடுத்திருந்தால், அவன் பிழைத்திருக்கலாம்! ஆனால், வியாதியைப்பற்றி ஒருவரும் கவனிக்கவில்லை. அதுபோலவே, நம்மிடத்தில் உண்டாகிற பாவமெல்லாம், பாவசுபாவத்தினால் உண்டாகிறது. பாவசுபாவம் நீங்கினால் பாவமிராது. பாவங்கள் மன்னிக்கப்பட்டபோதிலும், பாவத்தை உண்டாக்குகிற பாவசுபாவமாகிய வியாதி நீங்காவிட்டால் மரணத்தைப் பிறப்பிக்கும்.

அநேகர் தேவாலயத்தில் சென்று, தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு வந்துவிட்டால், தாங்கள் ரக்ஷிக்கப்பட்டவர்கள் என்று எண்ணி தங்களை வஞ்சித்துக்கொள்ளுகிறார்கள். மெய்யாய் ரக்ஷிக்கப்பட்டவன், இனி நாம் எதிர்பார்க்கும் மோக்ஷத்தை இவ்வுலகத்திலேயே அநுபவிக்கிறான். இதுவே மெய்யான ரக்ஷிப்பு. இவ்வுலகத்தில் மோக்ஷத்தை அநுபவியாதவன், இனி அவன் எதிர்பார்க்கும் மோக்ஷத்தைப்பற்றி கனவிலும் நினையாமலிருப்பதே நலம். பாவம் செய்கிற ஒருவனும் அவன் ஜனங்களும் சாபத்துக்குள்ளாகிறதுபோல, நீதிமான் ஒருவனாலே அவனும் அவன் ஜனங்களும் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். உதாரணமாக: தாவீது ராஜாவினால், அவரும் அவருடைய ஜனங்களும் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். ஆனாலும், அவர்களில் துன்மார்க்கமாய் ஜீவித்தவர்கள் மாண்டார்கள். நமதருமை ரட்சகருடைய புண்ணியத்தால் அநேகர் ரட்சிக்கப்படுகிறார்கள். அவர் மரித்ததால், அவருடைய ஜீவன் நமக்குள் சென்று பாவத்தில் மரித்தவர்களாகிய நமக்கு புதிய ஜீவனைக் கொடுக்கிறது. உதாரணமாக: ஒருவன் ஒரு நல்ல மாமரத்தை வெட்டிக்கொண்டிருந்தான். ஏனென்று கேட்டதற்கு, இதை மற்றொரு மாமரத்தோடு ஒட்டவைப்பதற்கு என்று சொன்னான். நான் மிகவும் அதிசயித்து, 'அப்பா,

புளித்த மாமரத்தை வெட்டியல்லவோ நல்ல மாமரத்தோடு ஒட்டவைப்பார்கள், நீ செய்கிறது இயற்கைக்கு விரோதமாயிருக்கிறதே, நல்ல மரத்தை வெட்டுகிறாயே' என்றேன். அதற்கவன், 'இல்லை, இல்லை, நல்ல மரத்தை புளித்த மரத்தோடு ஒட்டினால், புளித்த மாமரம் முழுவதும் நல்ல கனி கொடுக்கும்' என்றான். அதுபோலவே, நல்ல மாமரமாகிய கிறிஸ்து, புளித்த கனிகளைக் கொடுக்கும் மரங்களாகிய நமக்காக ஒரே தரம் வெட்டப்பட்டார். நம்மில் யார் யார் அவரோடு ஒட்டவைக்கப்படுகிறோமோ, அவரவர்களுடைய பாவ சுபாவமும் பாவ கிரியைகளும் மாறி, கிறிஸ்துவின் சுபாவமும், கிறிஸ்துவின் கிரியையும் உண்டாகிறது. ஆனால், 2000 வருஷங்களுக்கு முன் அல்லவோ கிறிஸ்துவானவர் உலகத்திற்கு வந்தார். அப்பொழுது நாம் பிறந்திருக்கவில்லையே. அவர் வெட்டப்பட்டதினால் நமக்குண்டாகும் பலன் என்ன என்று நினைப்பதற்கு இடமுண்டு.

'அன்றியும், மெல்கிசேதேக்கு ஆபிரகாமுக்கு எதிர்கொண்டு போனபோது, லேவியானவன் தன் தகப்பனுடைய அரையிலிருந்தபடியால், தசமபாகம் வாங்குகிற அவனும் ஆபிரகாமின் மூலமாய்த் தசமபாகம் கொடுத்தான் என்று சொல்லலாம்' (எபி. 7 : 9–10). இந்த சம்பவகாலத்தில் லேவியானவன் பிறந்திருக்கவில்லை. ஆனால், தகப்பனோடிருந்து தசமபாகம் கொடுத்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதமாகவே, இயேசுவானவர் இவ்வுலகத்திற்கு வந்து, பாடுபட்டதினாலே, பிந்திப் பிறந்த நமக்காகவும் பாடுபட்டார் என்று அர்த்தப்படுகிறது. நாம் அவரோடு ஒட்டவைக்கப்படுகிறபொழுது நமது துர்க்கிரியைகள் மாறி, அவருடைய பரிசுத்த கிரியைகள் நம்மில் உண்டாகிறது. அவர் மரித்ததினாலே பாவத்தினால் மரித்தவர்களாகிய நாம் ஜீவனடைந்தோம். ஒருவருடைய மரணத்தினாலே அநேகர் ஜீவனடைகிறார்கள் என்று நான் புத்தான் தேசத்தில் பிரசங்கித்தபொழுது ஒருவன் என்னிடம் வந்து: 'ஐயா, இது எனக்கு முன்னமே தெரியும், என் அனுபவத்தில் நான் அதைக் கண்டிருக்கிறேன், ஒருவன் சாகிறதினால் வேறொருவன் பிழைக்கக்கூடும்' என்றான். இப்படிச் சொல்லுகிறவன், கிறிஸ்தவனாயிருக்க வேண்டுமென்று நினைத்து, அவனை கிறிஸ்தவனா என்று கேட்டதற்கு, அவன், இல்லை, இல்லை, நான் சிறுவனாயிருந்த காலத்தில் ஒரு நாள் மலையில் ஏறும்போது கால் தவறி கீழேவிழுந்துவிட்டேன். அதினால் பெரும் காயமுண்டாகி என் தேகத்திலுள்ள இரத்தமெல்லாம் தரையில் ஓடினது. உயிருக்கு இரத்தமே ஆதாரமானதாலும், இரத்தமெல்லாம் கீழேபோய்விட்டபடியாலும் நான் பிழைக்கமாட்டேனென்று வைத்



தியர்கள் சொன்னார்கள். அவர்களிலொரு வைத்தியன்: "இவனிடத்திலிருந்து ஓடின இரத்தத்திற்குப் பதிலாக, யாராவது ஒருவன், தன்னுடைய இரத்தத்தைக் கொடுப்பானேயானால், இவன் பிழைப்பான்" என்று சொன்னான். உடனே, என் தகப்பனார், தம் இரத்தத்தைக் கொடுப்பதாகச் சொன்னார். என் தகப்பனாருடைய இரத்தாசயத்தை வெட்டி, என் இரத்தாசயத்தோடு ஒட்டவைத்ததினால், என் தகப்பனாருடைய இரத்தம் என் உடம்பில் சென்று நான் பிழைத்தேன், என் தகப்பனாரோ இறந்தார்' என்றான். அதுபோலவே, நமதருமை ரக்ஷகர் பாவிகளுக்காக மரணமடைந்தார். யார் யாருடைய இருதயங்கள் அவருடைய இருதயத்தோடு இணைக்கப்பட்டிருக்கிறதோ, அவரவர்களுடைய ஆத்துமா ஜீவனடைகிறது. பிராணனுக்குப்பதில் பிராணன்தான். தகப்பன் உயிர்கொடுத்ததால் மகன் பிழைத்தான். நமதருமை ரக்ஷகர் தமது ஜீவனைக் கொடுக்க, நாம் உயிரடைகிறோம்.

புது ஜீவனடைந்தவன் அனுபவத்தில் கிறிஸ்தவனாயிருக்கிறான்.—நான் திபேத்து நாட்டிலிருந்தபோது, ஒரு இரத்தச்சாக்ஷியினுடைய சம்பவத்தை அறிந்தேன். அவன், சுவிசேஷத்தைப் பிரசங்கித்ததினிமித்தம், அவனைக்கட்டி, இரும்பு ஊசியைப் பழுக்கக்காய்ச்சி அவனுடைய சரீரத்தில் குத்தினார்கள். அப்படி செய்ததற்காக அவர்களுக்கு வந்தனமளித்து, அவர்களை நோக்கி: 'நீங்கள் எனக்கு வேதனை உண்டாக்கும்படி இப்படிச் செய்கிறீர்கள்; ஆனால், என் உள்ளத்திலிருந்து ஜீவநதி ஓடுகிறது. இந்த ஊசிகள் என் தேகத்தில் பாய்ந்தவுடனே, என் உள்ளத்திலிருந்துவரும் ஜீவதண்ணீரால் அதின் சூடு அணைந்துபோகிறது' என்று சொல்லி, கடைசியில் ஆர்ப்பரிப்போடும், ஆனந்தக்களிப்போடும், தன் ஆவியை தேவனிடத்தில் ஒப்புக்கொடுத்தான். இவ்விதமாக, அவன் தன் அனுபவத்தால் மெய்க்கிறிஸ்தவனாகக் காட்டினான். நாம் இயேசுவானவரோடு இணைக்கப்படும்பொழுது, அந்த ஜீவநதி நம்மில் பாய்ந்து, நமக்குப் புது ஜீவன் கொடுத்து, உலகத்தில் இயேசுவானவருக்காக துன்பங்களையும், பாடுகளையும் சகிக்க நமக்கு பெலன் கொடுக்கிறது. துன்பத்திலும், 'கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்' என்று சொல்லக்கூடியவர்களா யிருப்போம். நம் அனுபவத்தில், அவரைக் கண்டு ஜீவித்தால்தான் அவரும் நம்மில் ஜீவிப்பார். அப்பொழுதுதான் 'கிறிஸ்து இன்னும் உயிரோடிருக்கிறார்' என்று சாட்சி சொல்லக்கூடியவர்களாயிருப்போம்.

## GOD'S EYE

## தேவ கண்

குற்றவாளி போலீசார் கண்ணைக் கண்டு பயமடைகிறான். அக்கண்ணுக்குத் தப்ப, மலையோ குகையோ, கரையோ கடலோ, தீவோ தீவாந்தரமோ ஓடுகிறான், ஒளிகிறான், வேஷமாறுகிறான். இப்படியெல்லாம் செய்து சிலவேளை தப்பிக்கொள்வதுமுண்டு.

ஆனால் பாவிகளும் பாவத்தின்மேல் விருப்பங்கொண்டவர்களும் தேவ கண்ணுக்கு ஒருநாளும் தப்பமுடியாது. கடவுளுக்குச் சமீபமும் தூரமும் ஒன்றுதான், பகலும் இரவும் பேதமில்லை, வாக்கும் செய்கையும் நினைவும் ஒன்றே. ஆகார் என்ற அடிமைப்பெண்ணைத் தேவன் வனத்தில் சந்தித்து அவளுக்கு நல்லாலோசனை சொல்லியபோது, அவள் தேவனுக்கு 'என்னைக் காண்கிற தேவன்' என்று நாமகரணம் சூட்டினாள். அப்படியிருக்க, பொல்லாதவர்கள் 'நம்மைக் காண்கிறவர் யார், நம்மை அறிகிறவர் யார், தேவனுக்கு அது எப்படித் தெரியும்' என்று துணிகரமாய்ப் பேசுகிறார்கள். சகலமும் அவர் கண்களுக்கு முன்பாக வெளியரங்கமாயிருக்கிறதென்பதையும், 'நீ நட்சத்திரங்களுக்குள்ளே உன் கூட்டைக் கட்டினாலும் அவ்விடத்திலிருந்து உன்னை விழத்தள்ளுவேன்' என்பதையும் உணராதிருக்கிறார்கள்.

உத்தம பக்தனோ, மனுஷன் பார்த்தாலும் சரி, பாராவிட்டாலும் சரி, அன்புள்ள ஆண்டவர் தன்னை எப்போதும் பார்த்துக்கொண்டிருக்கிறார் என்று ஆனந்தமடைகிறான். தாய் தகப்பன் கண்ணுக்கு முன்னாக நிற்க, பிள்ளைக்கு ஆசையில்லையா? அன்றியும் கேயாசி, அனனியா, சப்பீராளைப்போல் பாவத்தில் சிக்கிக்கொள்ளாமல், யோசேப்பைப்போல் பாவத்துக்கு விலகி ஓடுகிறான். கஷ்ட நஷ்டங்கள், நோய் நொடிகள் சம்பவிக்கும்போது தேவ பிரசன்னத்தை உணர்ந்துகொண்டு திடனாயிருக்கிறான். 'அத்திமரத்தின் கீழே உன்னைக் கண்டேன்' என்ற இரட்சகர் வார்த்தை நாத்தான்வேலை உற்சாகப்படுத்தவில்லையா?

நண்பர்களே, நீங்கள் பணத்தில் கையிடும்போதும், கணக்கு எழுதும்போதும், உங்கள் உள்ளத்தில் ஆசாபாசங்கள் உற்பவிக்கும்போதும் தேவ கண் உங்களைப் பார்க்கிறதென்று நினைத்துக்கொள்ளுங்கள். அப்பொழுது தப்பிக்கொள்வீர்கள்.

Y. J. Taylor.



## TEMPTATION

## சாத்தானின் சோதனை

சோதனை என்னும் பதம் சாதாரணமாய் மூன்று கருத்தில் வழங்குகின்றது. ரூபாயைச் சுண்டிப்பார்த்தும் குடத்தைக் கொட்டிப்பார்த்தும் அவற்றின் யதாஸ்திதியைத் தெரிந்துகொள்வதுபோல, துன்பங்கள் மூலமாய் மனுஷனுடைய நிறை குறைகளைத் தெரிந்துகொள்ளுதல் முதலாவது கருத்து. பெற்றோர் பிள்ளைக்கு நடைவண்டி கொடுத்து அது விழுந்து விழுந்து, எழுந்து நடந்து பலப்படச் செய்வதுபோல, பரம தந்தையாகிய கடவுள் சிட்சையின்மூலமாய் நம்மை விசுவாசத்தில் ஸ்திரப்படுத்துதல் இரண்டாவது கருத்து. கள்ளன் சிறுவனுக்கு வாழைப்பழங் கொடுத்து ஏமாற்றி அவன் காப்பைக் கழற்றி உயிர்மோசம் செய்வதுபோல், சாத்தான் மனுஷனை ஏமாற்றி அவனுடைய ஆத்துமாவைக் கவிழ்த்துப்போடுதல் மூன்றாவது கருத்து. இந்தக் கடைசி வகையைக்குறித்துச் சிறிது சொல்வோம்.

1. சாத்தான் மனுஷரைக் கெடுப்பதில் வெகுகால அனுபவசாலி என்பதை நாம் நினைத்துக்கொள்ளவேண்டும். எழுத எழுத கைபடிகிறதுபோல சாத்தான் ஆறாயிரம் வருஷகாலமாக இத்தொழிலையே செய்து வருவதால் அவன் இதில் மகாதீரன். சொற்ப அனுபவமுடைய நாம் அவனுக்குத் தப்பிக்கொள்வது இலேசான காரியமா?

2. சாத்தான் சமயம் பார்த்து வருகிறான். மழை பெய்தவுடனே சமுசாரி கலப்பையை எடுத்துப் புறப்படுகிறதும், வியாபாரி அதிகாலையிலே சந்தைக்கு ஓடுகிறதும் நமக்குத் தெரியுமே. சாத்தானுக்கு அந்தந்த ஆளைப் பிடிக்கவேண்டிய சமயம் தெரியாதா? ஆதாம் ஏவாள் தோட்டத்தில் சுகித்திருந்த ஆரம்பத்திலேயே பிசாசு வரவில்லையா? இரட்சகர் இரட்சண்ய வேலை துவங்க ஆயத்தப்பட்டபோதே பிசாசு வந்துவிட்டானல்லவோ? அப்படியே நம்மையும் சமயம் பார்த்துக் கவிழ்க்க வருவான்.

3. சாத்தான் எப்போதும் சோர்பான பங்கில் வருவான். சத்துரு கோட்டையில் பலவீனமான பங்கைத் தாக்குவான். ஒவ்வொருவர் சரீரத்திலும் சோர்பான ஓர் பங்குண்டு, அதில்தான் முக்கியமாய் வியாதிவரும். சிலருக்குக் காய்ச்சல், சிலருக்கு இளைப்பு, சிலருக்கு ஜலதோஷம், அவரவருக்கு அதிலதில்தான் குணக்கம் வரும். ஆத்துமாவிலும் ஒவ்வொருவருக்கும் நெருங்கி நிற்கிற பாவமுண்டு. சிலருக்குப் பண ஆசை, சிலருக்குச் சிற்றின்பம். யார் யார் இன்னின்ன பாவத்துக்கு இலகுவாக இடம் கொடுப்பார்களென்று சாத்தானுக்குத்

தெரியும், அதிலேயே வந்து தாக்குவான். சகோதரியே, உன் ஆத்துமாவில் சோர்பான பங்கு எது? அதிலே சாத்தான் விசேஷமாய் வருவானென்று நினை.

4. சாத்தான் தன்னைக் காட்டாமலே மறைந்து நிற்பான். வேட்டைக்காரர் பட்சி மிருகங்களைச் சுடப்போகும்போது காக்கி உடைதரித்தும், தலை தெரியாமல் இலை குழைகளைக் கட்டியும் போகிறார்கள். சாத்தான் இவர்களுக்கு இளைத்தவனா? இந்த நய வஞ்சகனுடைய தந்திரங்களைக் கண்டுகொள்ள வெகுயூகம் வேண்டும்.

சாத்தானுடைய சாமர்த்தியம் எவ்வளவாயிருந்தபோதிலும் நமக்கு அனுகூலமான பங்குமுண்டு.

1. சாத்தானுக்கு ஒற்றைக்கண் பொட்டை, ஒற்றைக்காது செவிடு, ஒற்றைக்கை சொத்திக்கை, ஒற்றைக்கால் நொண்டி, வாய் திக்குவாய். அவன் பொய்க்கால் குதிரை, கில்ட் வேலைக்காரன். ஒரு திருஷ்டாந்தம் கேளுங்கள். கலியாணக்காரரெல்லாரும் விருந்து சாப்பிடப் போனபோது ஒரு கிழவனை வீடு காவலுக்கு வைத்துப்போனார்கள். அவனுக்கு இப்பவோ பிறகோ என்றிருந்தது. கலியாண வீட்டில் நகைநட்டுத் திறமாயிருக்குமென்று வீமன்போன்ற ஓர் இராட்சதன் மையக் கதவைத் தள்ளிப்பார்த்தான். அதற்குள்ளே கிழவன் தேக உபாதையினாலே மெதுவாக இருமினான். அவ்வளவுதான், திருடன் கண்ணுக்கு மாயமாய்ப் பறந்துவிட்டான். சத்தியத்துக்குக் குறைவானவர்கள் செயலெல்லாம் இப்படித்தான். சாத்தான் சத்தியத்துக்குக் குறைவானவன். அவன் பெலமாய்ப் பேசமுடியாது, பலமாய் ஒன்றும் செய்யமுடியாது. 'பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்.'

2. சாத்தான் காட்டுவானேயன்றி ஊட்டமாட்டான். குதிரைக்காரன் குதிரையைத் தண்ணீரண்டை கொண்டுபோய், இதோ இருக்கிறது தண்ணீர், குடி என்று சொல்வானேயன்றி ஊட்டுகிறதில்லை. நமது மனம் திடமாயிருந்தால் சாத்தானுடைய உபாயம் பலியாது. அவன் நம்மைக் கட்டாயமாய்ப் பாவத்துக்குட்படுத்துகிறதில்லை.

3. சாத்தானுடைய சாமர்த்தியம் தேவனுடைய வார்த்தைக்குமுன் நில்லாது. தேவவாக்கு காத்திரங்கொண்டது. இரட்சகர் தேவ வசனத்தினாலேயே பிசாசை வென்றார். சாத்தான் உன் காதுக்குள் வந்து, 'இப்போது நீ நன்றாய் நடக்கிறது சரிதான், முன் செய்த பாவங்களுக்கு வழியென்ன' வென்று கேட்பான். உடனே 'தேவனுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்' என்று சொல்.



4. இயேசு என்ற நாமம் சாத்தானுக்குத் திகிலையுண்டுபண்ணுகிறது. ஒரு சேவல் மற்றொரு சேவலுக்குத் தோற்றுப்போனால், என்றைக்குக் கண்டாலும் தோற்ற சேவல் ஜெயித்த சேவலைக் காணப் பயந்தான். அப்படியே இரட்சகருக்குப் பிசாசு எப்போதும் பயந்தான். இரட்சகரை யார் துணைக்கொள்ளுகிறார்களோ அவர்களுக்குச் சாத்தான் பயப்படுவான். சகோதரிகளே, வெற்றிவேந்தராகிய இயேசுவைக்கொண்டு சாத்தானை மேற்கொள்ளுங்கள். அப்போதுதான் உங்களுக்குக் கிரீடம் கிடைக்கும்.

Y. J. Taylor.

## GOLD SOVEREIONS

## தங்க ஸவரன்கள்

(தொடர்ச்சி)

இனி ஸவரன் வாங்க ஆலோசிப்போர் பின் குறிப்பிட்ட விஷயங்களை நன்கு கவனிக்கவேண்டும் :

(1) இந்த மாதம் 21-ம் தேதி இந்தியா கவர்ன்மெண்டார் 1,295,500 தோலா தங்கம் விற்றார்கள். விற்ற விலையைக் கணக்கிட்டுப் பார்த்தால் ஸவரன் ஒன்றுக்கு ரூ. 13-13-6 வீதமே விலை கிடைத்திருக்கிறது.

(2) ஆகஸ்டு மாதம் 4, 19-ம் தேதிகளிலும் செப்டம்பர் மாதம் முதல் தேதியிலும் 3,750,000 தோலா தங்கம் விற்கப்படுமென கவர்ன்மெண்டார் விளம்பரம் செய்திருக்கிறார்கள்.

(3) மேலும் இதர தேசங்களிலிருந்து தாராளமாய் இனி தங்கக் கட்டியும் ஸவரன் நாணயங்களும் இறக்குமதி செய்யப்படலாம். எக்ஸ்சேன்ஜ் ரேட்பிரகாரம் அமெரிக்காவில் ஸவரன் விலை ரூபாய் 13-12-0 என்றே தெரிகிறது. இங்கிலாந்திலும் ஜூன் மாதம் 25-ம் தேதி ஸவரன் ரூபாய் 13-12-4 வீதமே விற்கப்பட்டது.

(4) கான்லி கமிஷன் அங்கத்தினர்கள் செய்துள்ள சிபார்சுகளை இந்தியா மந்திரி ஒப்புக்கொண்டுவிட்டார்கள். அச்சிபார்சுகளை யொட்டியே இந்தியா கவர்ன்மெண்டாரும் ஒரு ரூபாயின் மதிப்பு ஸவரனுடைய பத்தில் ஒரு பாகமாக இருக்கவேண்டி முயற்சிசெய்து வரு

கிறார்கள். அதாவது ஸவரன் ரூ. 10 மதிப்புள்ளதாகச் செய்ய முயன்றுவருகிறார்கள்.

மேற்கூறிய காரணங்கள் பற்றி ஸவரன் விலை இத்தேசத்தில் மிகக் குறையுமென நினைக்க இடமுண்டு. ஆகையால் தங்கம் வாங்க உத்தேசிப்பவர்கள் சற்றுப் பொறுக்கலாம்.

ஆயினும் கவர்ன்மெண்டார் தங்களிடத்தில் ரூபாய் 10 கொடுத்தால் அதற்குப் பதிலாய் ஒரு ஸவரன் கொடுப்பதாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்று மாத்திரம் எண்ணவேகூடாது. ஸவரன் ரூபாய் 15 வீதம் விற்ற காலத்திலும் கவர்ன்மெண்டார் ரூபாய் 15 தங்களிடத்தில் கொடுத்தவர்களுக்கெல்லாம் ஒரு ஸவரன் கொடுப்பதாக ஒப்புக்கொள்ளவில்லை.

ஏற்கெனவே சொல்லப்பட்டபடி, இந்தியா மந்திரி கரன்ஸி கமிஷன் மெம்பர்களது சிபார்சுகளை ஒப்புக்கொண்டுவிட்டார். அச் சிபார்சுகளை யனுசரித்தே இந்தியா கவர்ன்மெண்டாரும் ஸவரன் விலை ரூபாய் 10 ஆக நிர்ணயிப்பதற்கு ஏற்பாடுகளும் செய்து வருகிறார்கள். ஆயினும் அந்த சிபார்சுகள் யாவற்றையும் அமுலுக்குக் கொண்டுவருவது சுலபமான காரியமல்ல. ஆகையினால் மேற் சொன்னபடி ஸவரன் ரூபாய் 10 மதிப்புள்ளதாக எப்போது ஆகும் என்று நிச்சயமாய் சொல்லுவதற்கில்லை. இது சம்பந்தமான மசோதாவை சீக்கிரத்தில் இந்தியா கவர்ன்மெண்டார் பிரேரேபிக்கப் போகிறார்கள் என்று முன்னமே சொல்லியிருக்கிறோம். ஆதலின் ஸவரன் மதிப்பு ரூ. 10 ஆகவே செய்யவேண்டுமென கவர்ன்மெண்டார் எண்ணங்கொண்டிருக்கிறார்கள் என்பது இதனால் தெளிவாகும்.

Publicity Bureau.

## LIFE OF LATE
## Mrs. ARULAMMAL NOAH GNANADICKAM

## கனம் அருளம்மாள் ஞானாதிக்கம் அம்மாள் ஜீவிய சரித்திரம்

தஞ்சாவூர் சங். நோவா ஞானாதிக்க சாஸ்திரியாரவர்களின் அருமைப் பத்தினியான அருளம்மாளவர்கள் தேவானுக்கிரகத்தால் தேவதாபக்தியிலும் புத்தியிலும் ஜெபசிந்தையிலும் சிறந்து விளங்கினவர். இந்த அம்மாள் தென் இந்தியா மதுராபுரியைச் சேர்ந்த திண்டுக் கல்லில் 1839-ம் ஷு ஜூலைமீ 3-ம் தேதி புதன்கிழமை 9 மணிக்கு ஜனனமானார்கள். அவர்கள் தகப்பனார் திருநெல்வேலி வடகன்



குளத்திலிருந்து போய், விசாரணை உபதேசியாராக திண்டுக்கல்லில் வாசம் செய்தார்கள். அவர்கள் தாயின் பேர் ஜீவரெத்தினம்மாள். இவர்கள் பெற்றோரும் பக்தியுள்ளவர்களாயிருந்ததினால் இவர்களை கர்த்தருக்கு பயப்படும் பயத்திலும் மெய்யறிவிலும் வளர்த்துவந்தார்கள். இவர்களுக்கு சவுந்திரம்மாள் என்ற ஒரு அக்காளும் தேவாசீர்வாதம் என்ற ஒரு தம்பியும் இருந்தார்கள், இந்த மூன்று பிள்ளைகளும் நல் வளர்ப்பிலே வளர்க்கப்பட்டு, சவுந்திரம்மாள் ஒரு தேவ ஊழியன் மனைவியாகவும் தேவாசீர்வாதம் என்றவர் லுத்தரன்மிஷனில் குருவாகவும் கிருபைபெற்றார்கள். இந்த அம்மாள் மதுரை அமெரிக்கன் மிஷன் கல்விச்சாலையில் படித்து வேதபாடம், கணக்கு, தையல் வேலைகளிலும் முக்கியமாய்த் தேறிவந்தார்கள். தமிழ் வாசிப்புகளிலும் பிழையற பொருள் விளங்க வாசிப்பதில் முதன்மையாயிருந்தார்கள்.

இதற்கிடையில் இவர்கள் தகப்பனார் இறந்துபோனதினால் இவர்களின் தாயாரே பிள்ளைகளை ஒழுங்கிலும் பக்தியிலும் புத்தியிலும் தேறும்படி கவனித்து நடத்திவந்தார்கள். இவர்கள் பாலியமாயிருந்த போது தஞ்சை வேதநாயக சாஸ்திரியாரவர்கள் தன் மகன் நோவா ஞானாதிக்க சாஸ்திரியாருக்கு திருமணமுடிக்க இந்தப் பெண்ணை ஏற்றது என்று நினைத்து அவர்கள் வெளியிட்டதாவது: 'நிறைந்த ஆபரணங்கள் பூண்ட அறிவிலிகளான மற்றப் பெண்களை விட கைம் பெண்ணின் மகளானாலும் கர்த்தருக்குப் பயப்படும் பயத்திலும் நல்லறிவிலும் வளர்க்கப்பட்ட இந்தப் பெண்ணை நமது இல்லத்துக் கேற்றது' என்றாராம். நீதி. 31 : 10-30.

'கள்ளி வயிற்றில் அகில் பிறக்கும்
மான் வயிற்றில் ஒள்ளரிதாரம் பிறக்கும்
அறிவாரார் நல்லாள் பிறக்கும் குடி.'

இப்படியாக சங். வேதநாயக சாஸ்திரியார் தான் கோரினபடியே ஜெபத்தோடே தன் மகன் நோவா ஞானாதிக்க சாஸ்திரியாருக்கு இந்த அருளம்மாளவர்களை 1854-ம் ஷு விவாகமுடித்தார்கள். தேவ பக்தியுள்ள சாஸ்திரியாரின் குடும்பத்துக்கு இந்த பக்தியுள்ள அம்மாள் மருமகளாக வந்தது தேவ கிருபையே.

இவர்கள் சாஸ்திரியார் வீட்டுக்கு ஆசீர்வாதமாகவும் குடும்பங்களுக்கு நல் மாதிரியாகவும் பிள்ளைகளுக்கு நல் வழிகாட்டியாகவும் புருஷர் மனைவிகளுக்குரிய ஐக்கியம் அன்பு குன்றாதொருமித்து வாழ்ந்ததோடு, அந்தப் பெரிய குடும்பத்தில் உள்ள தன் மாமன் மாமியார் மதனியார் கொழுந்தன் மைத்துனமார் இன்னும் அங்குற்ற குடும்

பத்தியுள்ள எளையோர்களுக்கும் அவரவர்க்குத் தக்கவாறு கீழ்ப்படிந்து சொல் தவறாது வாக்குமாறாதொழுகி நல் இல்லாளாக மதிக்கப்பெற்றனர்.

இப்பெரும் சமுசார வீட்டினில் குறைகளிருப்பினும் சமாதானத்தை நாடி தன்னயமின்றி பொறுமையைத் தனக்கு ஆபரணமாக்கி மக்களில் பட்சபாதமின்றி பகிர்ந்து கொடுத்து உள்ளன்போடே நடந்துகொண்டது விவரிக்குங்கால் ஆச்சரியத்தைக் கொடுக்கக்கூடியதாயிருக்கும். இவர்கள் பாலியமாயிருந்தாலும் இத்தகை குணங்களமைய நடந்துகொள்வது, அவர்களுடைய தனி ஜெபத்தின் மூலமாய் தேவ ஒத்தாசையைத் தேடிக்கொண்டு தினந்தோறும் கர்த்தருக்கு பயப்படும் பயத்தோடு ஜீவித்துவந்ததே காரணமாகும்.

இதோடே கூட நூற்றிருபது பிரபந்தங்களைப் பாடல்ரூபமாக உண்டுபண்ணின சாஸ்திரியாரவர்களுக்கு மருமகளானதுபற்றி அவர்களுக்கு உதவியாக அவர்கள் உண்டுபண்ணும் பாடல்களை சொல்லச் சொல்ல எழுதவும் வேதம் வாசிக்கவும் குறிப்புகள் எழுதவும் மிகுந்த உதவியாக இருந்தார்கள். இவர்கள் எழுதின குறிப்பைப் பார்த்துத்தான் மற்றவர்கள் வந்து பல பிரதிகள் எழுதி ஐயர்மார் சபைகளுக்கு அனுப்புவார்கள்.

சாஸ்திரியாரின் பெலவீனகாலத்தில் அவர்களுக்குப் பக்கத்திலிருந்து நாவறண்டுபோகும் வரைக்கும் வேதபுத்தகம் வியாக்கியான குறிப்புகளை வாசித்துக்கொண்டேயிருப்பார்களாம். இவர்கள் வாசிப்பது தெளிவாயும் பொருள்விளங்கக் கேட்போர் மனதில் நன்றாய் பதியும்படியான சத்தத்தோடும் எழுப்புதலாகவும் இருக்கும். இவர்கள் குடும்ப ஜெபத்திலும் பாடுபட்ட வாரங்களில் சதுர்ப்பிரசங்க சாலையிலும் தியானம் வாசிக்கும் வேலையை சந்தோஷமாய் தெரிந்துகொண்டு தனது 72-ம் வயதுமட்டும் வாசித்துவந்தார்கள்.

இவர்களிடத்தில் பெருமை, நான் என்கிற எண்ணம் சிறிதேனும் நிழல்கூட காட்டவில்லை என்பது, அவர்களை அறிந்தவர்களும் யாவரும் சாட்சிபகரக்கூடிய விஷயம்.

இவர்களுடைய முகம் கோபம்,,சண்டை, பொருமை என்பவைகளால் வேறுபட்டது இல்லை என்றே சொல்லவேணும்.

'வில்பிடித்து நீர்கிழிய எய்த வடுப்போல மாறுமே சீர் ஒழுகு சான்றோர் சினம்' என்றபடி, இவர்கள் கோபமும் நீடித்துக் காணப்படவேயில்லை! இவர்களுக்கு கடவுளின் கிருபாகடாட்சத்தினால் ஏழு குமாரத்திகளும், ஜெபதபங்களோடு பொருத்தனைபண்ணி வரம்கேட்டுப் பெற்ற ஏக புத்திரனுமுண்டு. இந்த அம்மாளின் ஜெபம் கேட்கப்பட்டது என்று நிச்சயிக்க ஒரு நடந்தசங்கதியை எழுதுகிறேன்.



இந்த அம்மாளுக்கு ஐந்து பெண்மக்கள் பிறந்தபிறகு தேவனுக்கு ஊழியம் செய்யும்படி கர்த்தர் தனக்கு ஒரு ஆண்மகவைக் கொடுக்கும்படி கர்த்தரிடம் மன்றாடின விவரத்தையும், கர்த்தர் தன் விண்ணப்பத்துக்குச் செவிகொடுத்து நடத்தின விஷயங்கள் ஆச்சரியமாக நிகழ்ந்தன என்றும் மெத்த விசுவாசத்தோடும் நன்றியறிதலோடும் பயபக்தியோடும் அறிக்கையிடுவார்கள். அதாவது 1869-ம் ௵ தஞ்சை கோட்டையிலிருக்கும் சுவார்ச்சு ஐயரவர்கள் கட்டின ஆலயம் வருஷப்பிறப்பு அதாவது ஜனுவரி ௴ 1-ம் தேதி திறந்து விசேஷித்தவிதமாய் தஞ்சை சபையார் பெரும் கூட்டமாய் மகிழ்ச்சியோடு ஆராதனை செய்துவரும் காலையில் இவர்கள் அதி பக்திவிணயமாய் நம்பிக்கையோடு ஜெபித்து, இவ்வாலயத்தில் திரும்ப நான் வரும்போது நீர் கொடுக்கும் ஆண்பிள்ளையைக் கையேந்தி ஞானதீட்சை கொடுக்கும்படி அருள் தரவேண்டும் என்று விண்ணப்பம் பண்ணினார்களாம். அவ்வாலயம் வருஷத்துக் கோர்முறைதான் திறந்து விசேஷித்த ஆராதனை நடத்தப்படும். மற்றக்காலங்களில் கிறிஸ்தவர்கள் நடுவிலிருக்கும் ஆலயத்தில் ஆராதனை நடத்தப்படும். ஆகையால் அடுத்த வருஷம் கோவில் திறக்கப்படும் நாளுக்குள் தனக்குப் பேறுகாலமாகவில்லையாயினும் நம்பிக்கையோடே காத்திருந்தார்கள். கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்கள் வெட்கப்பட்டுப் போவதில்லையே. இப்படியிருக்கும்போது சங். கெஸ்றையரவர்கள் கோட்டைக்கோவில் பழுது பார்க்கவேண்டியிருப்பதால், வழக்கப்படி புதுவருஷதினத்தில் அல்ல, உயிர்த்தெழுந்த திருநாளில் கோட்டை கோவிலில் ஆராதனை நடக்கும் என்று தெரிவித்தார்களாம். உடனே இவர்கள், சுவாமி மெய்யாய் என் ஜெபத்தைக் கேட்டார், என் மன்றாட்டிற்குச் செவிகொடுத்தார் என்று நிச்சயித்து 1870-ம் ௵ ஜனுவரி ௴ 20-ம் தேதி ஒரு ஆண்மகவைப் பெற்று உற்சாக காணிக்கையோடே கர்த்தரைத்துதித்து அதே தேவாலயத்தில் தீட்சை கொடுத்து, கர்த்தர் என் விண்ணப்பத்தின் சத்தத்தைக் கேட்டதினால் அவரில் அன்புகூருகிறேன் என்று அவருக்கு துதிதோத்திரம் செலுத்தினார்களாம். சங். 116 : 1. இந்த ஆண்பிள்ளைதான் இப்போது தஞ்சையிலிருக்கும் சாஸ்திரியாரவர்கள் வீட்டிலிருந்து தேவஊழியம் செய்துவருகிற வேதானந்த வேதநாயக சாஸ்திரியார். இவர் F. A. வரையில் படித்து தன் பெற்றோர் விருப்பப்படி கர்த்தருடைய நாமத்தைப் பாடலோடு பஜனை பிரசங்கம் நடத்திவருகிறார். இந்த அம்மாள் தன் மகன் பொருத்தனைப்படி தேவஊழியம் செய்வதைக்கண்டு களிக்கும் சலாக்கியம் பெற்று கர்த்தரைத் துதித்தார்கள்.

மேலும் இவர்கள் வீட்டிலே சனிக்கிழமை மத்தியானவேளை மூன்றுமணிக்கு பெண்பிள்ளைகள் கூட்டம் வைத்து குடும்பத்தாரும் உறவின்முறையாரும் அக்கம்பக்கங்களிலுள்ள பெண்பிள்ளைகளும் கூடிவந்து பாடி வேதம் வாசித்து சிறு பிரசங்கம் செய்து ஜெபம் செய்து ஜெபமாலை பாடி முடிப்பார்கள். இதிலே தன் மதினி மகள் வேதசாஸ்திரம் சாமுவேலம்மாள் உற்சாகமாயிருந்து நடத்துவதும் தன் சிறு பெண்மக்கள் பிரசங்கித்து ஜெபிப்பதுவும் சிறுவயதிலே தன் குடும்பத்திலுள்ள பிள்ளைகள் தேவஊழியம் செய்யப் பழகுவதையும் கண்டு சந்தோஷித்து, அவர்களும் இந்தக் கூட்டத்துக்கு ஒழுங்காய் வந்து ஜெபித்து உற்சாகப்படுத்துவார்கள். சனிக்கிழமை இரவு 7½ மணிக்கு ஆண்பிள்ளைகளுக்குப் பாலர்கூட்டமென்று வைத்து வீட்டுப்பிள்ளைகளும் தெருப்பிள்ளைகளும் கூடி பாடி ஜெபித்து பிரசங்கம் செய்வார்கள். இது சிறுவர்க்கு உற்சாகமும் வேதபக்தியின் வளர்ச்சிக்குக் காரணமும் பிற்காலத்தில் தேவஊழிய வாஞ்சையும் உண்டாக்கும் ஏதுக்களாக இருந்தது. இது மற்ற குடும்பத்தாரும் சுயேச்சையாய் கூட்டங்கள் நடத்த வழிவிடும் ஏதுக்களாய் இருக்கின்றன.

இவர்கள் தங்கள் வீட்டு பல வேலைகளோடு பிள்ளைகளுக்கு கணக்குப்பாடம், தையல் வேலைகள், பூத்தையல், மேல் ஜோடு, குல்லா பின்னும் விதங்களும் கற்றுக்கொடுப்பார்கள். கணக்குகளுக்கு விடை சரியாவென்று பரீக்ஷிக்கும் முறை படிப்பித்ததினால் இவர்கள் பிள்ளைகளெல்லாம் கணிதசாஸ்திரத்தில் தேறினவர்களாய் இருக்கிறார்கள்.

## A SIMPLIFIED ALPHABET FOR INDIAN LANGUAGES

## இந்திய சுதேச பாஷைகளுக்கேற்ப சுலபமான எழுத்துக்கள்

நமது இந்திய தேசத்தில் வாசிக்கத் தெரியாத ஏராளமான பேரிருக்கிறார்கள். சுதேச பாஷை எழுத்துக்கள் கற்கக் கடினமாயிருப்பதால், சகலரும் விசேஷமாய் அறிவீனரும் சுலபமாய்க் கற்றுக்கொள்ளத்தக்க எழுத்துக்களைத் தெரிந்து பாஷை எழுத்துக்களாக்கினால் யாவரும் கஷ்டமின்றி சீக்கிரத்தில் வாசிக்கக் கற்றுக்கொள்ளலாம். இந்த எழுத்துக்கள் சமஸ்கிருத பாஷை சப்தத்தை அனுசரித்திருந்தால் சகல இந்திய பாஷைகளுக்கும் பொதுவாய் உபயோகிக்கலாம். இந்த எழுத்துக்கள் சுலபத்தில் அறிந்துகொள்ளக்கூடியவைகளும் இலேசாய் எழுத அல்லது அச்சிடக்கூடியவைகளுமாயிருக்க வேண்டும்.



இவ்வித பாஷை எழுத்துக்களை யோசித்து எழுதுகிறவர்களுக்கு மூன்று வெகுமதி (Prizes) உண்டு. அவை முறையே 100 ரூ., 75 ரூ., 50 ரூ. பெறுமானவை. இவ்வித எழுத்துக்களை எழுதுவோர் இவ்விஷயத்தில் விசேஷித்த முயற்சி எடுத்துவரும் சென்னை ராயபுரம் 40 மெய்ன் ரோட்டிலிருக்கும் கனம் ஜே. ஸ்டேவர்ட் துரையவர்களுக்கு (Rev. J. Stewart, M.A., 40 Main Road, Rayapuram) மேல்விலாசம் போட்டு, நவம்பர் மாதம் 30-ம் தேதிக்குள் அனுப்பவேண்டியது. பழைய எழுத்துக்களையும் உபயோகிக்கலாம் அல்லது முற்றும் புதிய எழுதுக்கள் கண்டுபிடிக்கலாம்.

## WOMEN'S EVANGELISTIC FORWARD MOVEMENT

## பெண்கள் சுவிசேஷப் படைமுயற்சி

சுவிசேஷப் படைமுயற்சி ஆயத்தமாக கனம் குரோவர் அம்மாள் (Miss P. Grover) வீட்டில் ஸ்திரீகளுக்கென்று ஓர் கூட்டம் நடந்தேறியது. அதில் கனம் ஓர்மன் (Mr. Worman) என்பவர் படைமுயற்சிக்கு ஏற்ற ஆயத்தம் அவசியமென்பதைக் குறித்தும், பேசுகிறவர்கள் தாங்கள் வாசித்ததையாவது கற்றதையாவது அநுபோகமின்றிச் சொல்வதில் பிரயோஜனமில்லையென்றும், இயேசுவோடிருந்து மறுரூபமாகி அவர் தங்கள் இருதயத்தில் செய்த மாறுதலைச் சாட்சி சொல்வதில் பிரயோஜனமுண்டாகுமென்றும், அனுபவ சாட்சிகளால் வல்லமையாய் இவ்வேலை நடத்தப்படவேண்டுமென்றும், தனித்தனி ஆட்களைச் சந்தித்துப் பேசவேண்டுமென்றும் பேசினார்.

பின் படைமுயற்சியின் சம்பந்தமாய் பாடசாலைகளிலும் ஆஸ்பத்திரிகளிலும் கிராமங்களிலும் செய்த வேலைமுறைகளை எல்லாரும் ஆராய்ந்து, எப்படி ஜெபத்தினால் எல்லாரும் உதவிசெய்யலாமென்றும், வேத ஆராய்ச்சி படைமுயற்சிக்கு எவ்வித அவசியமென்றும், பாடலினால் சிறுவரும் வாலிபரும் எவ்வித உதவிபுரியலாமென்றும் ஆராய்ந்துபார்க்க சமயமிருந்தது.

கடைசியில் ஞானோதய வித்ய சங்கம் ஒன்று (Summer School) சென்னையிலும் ஏற்பட ஒழுங்குசெய்து அதற்கென்று கமிற்றிமார் நியமிக்கப்பட்டார்கள்.

ஜெபத்தோடும் சில எழுப்புதல் பாடலோடும் இக்கூட்டம் நடந்தேறியது. கூட்டம் துவங்குமுன் கனம் குரோவர் அம்மாள் (Miss P. Grover) எல்லாருக்கும் காப்பி, பன், பலகாரம் பரிமாறினார்கள். தூரத்திலிருந்தும், வேலையிலிருந்தும் வந்தவர்களுக்கு களையாற இது உதவியாயிருந்தது.

கூட்டமுடிவில் படைமுயற்சி வேலைக்கு அநுகூலமானதும் ஆயத்தமானதுமான புஸ்தகங்களும் பிரதிகளும் விற்பனையாயிற்று.

மற்ற இடங்களிலும் இப்படிப்பட்ட கூட்டங்கள் நடந்தேறினால் உதவியாயிருக்குமென்பதைக் கருதி இதைத் தெரிவிக்கிறோம்.

## LESSONS FOR FAMILY WORSHIP

# வேத வாசிப்பு ஒழுங்கு

### 1920-ஞ அக்டோபர்மீ

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | வெ. | மத். | 27. 39—54 | 11 | தி. | யாத். | 5. 14—23 | 21 | வி. | யாத். | 10. 16—29 |
| 2 | ச. | ,, | 27. 55—66 | 12 | செ. | ,, | 6. 1—13 | 22 | வெ. | ,, | 11. 1—10 |
| 3 | ஞா. | ,, | 28. 1—20 | 13 | பு. | ,, | 7. 1—13 | 23 | ச. | ,, | 12. 1—13 |
| 4 | தி. | யாத். | 1. 1—14 | 14 | வி. | ,, | 7. 14—25 | 24 | ஞா. | ,, | 12. 14—28 |
| 5 | செ. | ,, | 2. 1—10 | 15 | வெ. | ,, | 8. 1—15 | 25 | தி. | ,, | 12. 29—39 |
| 6 | பு. | ,, | 2. 11—25 | 16 | ச. | ,, | 8. 16—32 | 26 | செ. | ,, | 12. 40—51 |
| 7 | வி. | ,, | 3. 1—12 | 17 | ஞா. | ,, | 9. 1—12 | 27 | பு. | ,, | 13. 17-22 |
| | | | | | | | | | | | 14. 1-14 |
| 8 | வெ. | ,, | 3. 13—22 | 18 | தி. | ,, | 9. 13—26 | 28 | வி. | ,, | 14. 15—31 |
| 9 | ச. | ,, | 4. 1—17 | 19 | செ. | ,, | 9. 27—35 | 29 | வெ. | ,, | 15. 1—18 |
| 10 | ஞா. | ,, | 5. 1—13 | 20 | பு. | ,, | 10. 1—15 | 30 | ச. | ,, | 15. 19—27 |
| | | | | | | | | 31 | ஞா. | ,, | 16. 1—10 |

C. L. S. PRESS, MADRAS—1920


# மாதர் போதினி

No. 274 நவம்பர் 1920 No. 11


## EVANGELISTIC CAMPAIGN

## சுவிசேஷ படைமுயற்சி

செப்டெம்பர் மாதக் கடைசியிலும் அக்டோபர் முடிவிலும் சுவிசேஷ படைமுயற்சி வேலை அதிக ஜாக்கிரதையாய் நடந்தேறியது சந்தோஷமே. ஆனால் நாம் எப்போதும் இம்முயற்சியெடுப்பது அவசியம். தினந்தினம் தனி ஆள் வேலை செய்வதவசியம். சமயம் நேரிட்டாலும் நேரிடாவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கித்து சாட்சிசொல்லவேண்டும். சாட்சிசொல்வது தேவனுடைய பிள்ளைகள் எல்லோரும் செய்யவேண்டிய வேலை. சாட்சிசொல்லாவிட்டால் அப்படிப்பட்டோர் நிலைமை பரிதபிக்கப்படத்தக்கதே. தாங்களடைந்த வெளிச்சத்தை மரக்காலால் மூடுவது சரியாகுமா? பிறர் இந்த வெளிச்சத்தால் பயனடைய வேண்டாமா? 'திருவசனத்தைப் பிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ!'

தினந்தினம் ஊழியஞ் செய்பவரே படைமுயற்சி வாரத்திலுஞ் செய்ய ஏற்றவர். இவ்வித பழக்கமும் ஆயத்தமும் விசேஷ வாரத்துக்கு மிக்க அவசியம். ஜெயங்கிடைக்கவேண்டுமானால் ஜெபத்தினாலும் வசனத்தினாலும் தியானத்தினாலும் பரிசுத்தமான ஜீவியம் அவசியம். ஆகானுடைய பாவத்தால் இஸ்ரவேலர் ஓர் சிறு படைக்கு முன் முறிந்தோடினார்கள். சுவிசேஷ யுத்தத்தில் ஜெயம்பெற ஆகான் செய்ததைப்போன்ற பாவங்கள் கட்டோடே நீங்கவேண்டும். பாவத்துக்கும் மாமிசத்துக்கும் உலகத்துக்கும் சிலுவையிலறையப்படவேண்டும். சகல பாவங்களும் சுட்டெரிக்கப்படவேண்டும், புதைக்கப்படவேண்டும். புது ஜீவனோடு உயிர்த்தெழுந்த புது ஜீவியஞ் செய்யும் ஆத்துமாக்கள் இவ்வேலைக்குத் தேவை. மற்ற ஆத்துமாக்களைக் கிறிஸ்துவாகிய தளகர்த்தரண்டை நடத்த சுத்த ஜீவியம் அதிக அவசியம்.

VOL. XXXV.

ஒப்புக்கொடுக்கப்பட்ட ஜீவியம், பிரித்தெடுத்துப் பரிசுத்தமாக்கப்பட்ட ஜீவியம் ஆத்துமாக்களைக் கொண்டுவரும். உலகப்பிரகாரமான யுத்தத்தில் கள்ளச்சேவகரும், தகுந்த ஆயத்தமில்லாதவரும், ஊக்கமில்லாதவரும், யுத்தப்பழக்கமில்லாதவரும், பெலவீனமும் சுகவீனமுமுள்ளவரும் பிரயோஜனப்படாததுபோல, ஆவிக்குரிய யுத்தத்திற்கும் உள்ளத்தில் உண்மையுள்ளவரும், நிலைவரமான ஊக்க ஆவியுள்ளவரும், பயிற்சியுள்ளவரும், வேதவசனத்தாலும் ஜெபத்தாலும் ஆயத்தமாக்கப்பட்டவரும், ஆவியின் பெலங்கொண்டு பாவரோகம் நீங்கினவரும்தான் பிரயோஜனப்படுவார்கள்.

சுவிசேஷ படையில் சேர்ந்த சகோதரிகளே, இவைகளைக் கொண்டு ஆராய்ந்துபாருங்கள். நீங்கள் எப்படிப்பட்ட வீரரென்று பரிசோதியுங்கள். உங்கள் மாம்சம் சிலுவையிலறையப்பட்டிருக்கிறதா? உலகத்துக்காகவும் பாவத்துக்காகவும் சிலுவையிலறையுண்டிருக்கிறீர்களா? கிறிஸ்து உங்களில் பிழைத்திருக்கிறாரா? அவருடைய ஆவியின் பலம் உண்டா? இரட்சண்யத்தின் சந்தோஷமும் உற்சாகமான ஆவியும் உண்டா? அப்படியானால் ஜெயங்கிடைக்குமென்பது நிச்சயம். உங்களுக்காக உங்களிலிருக்கிற கிறிஸ்துவே யுத்தஞ்செய்வார். சமயமிருப்பதால் உடனே இவ்வித ஆயத்தத்தோடு யுத்தம் துவக்குங்கள். ஜெயம் கர்த்தரால் நமக்கு வரும்.

## CHRIST TENDERLY CALLING SINNERS HOME

## கிறிஸ்து பாவியை உருக்கமாயழைத்தல்

இராகம், சக்ரவாகம். ரூபகதாளம்.

('மனமயங்காதே' என்ற நடை.)

பல்லவி

உருகாயோ பாவி!—உன்னுள்ளம்
இன்னும் கல்லாமோ!

அநுபல்லவி

மருகிவான் விட்டிறங்கி வந்தேன்
வன்மரணங் கொண்டுயிர்த் தெழுந்தேன்— உருகாயோ பாவி

1

அரூபியா யிருந்தேன்—உனக்காய்
உரூபங் கொண்டு வந்தேன்
அருகில்வந்தால் சுகங் கொடுப்பேன்
அன்பின் பெருக்கத்தா லணைப்பேன்— உருகாயோ பாவி



2

ஆண்ட பெருமானான்—உன்னை
மீண்டு ரட்சிக்க வந்தேன்
தாண்டித் தரணியில் பாடுபட்டேன்
தாங்கி யுனையே நெஞ்சில்கொண்டேன்— உருகாயோ பாவி

3

பாவம் நீக்குதற்காய்—என்னங்கம்
பங்கப் படலானேன்
கங்குல் பகலாய்க் கஷ்டமுற்றேன்
காதல் கொண்டு கனிந்துவிட்டேன்— உருகாயோ பாவி

4

கரங்களின் காயம்பார்—எந்தன்
கால்களின் வடுக்கள் பார்
தொல்லுலகி லென்கோலம் பார்
கோரணி நிந்தைக ளவதிகள்பார்— உருகாயோ பாவி

5

சிரசின் முண்முடிபார்—விலாவில்
சோரி சிந்துது பார்
பாரில் பட்ட பாடெல்லாம்
பாவந் தொலைக்கத்தான் பாவி— உருகாயோ பாவி

6

அன்பின் பெருக்கம்பார்—உன்னாண்டவர்
ஆசை மிஞ்சுது பார்
நெஞ்சின் கவலையை நித்தம்பார்
நின்பவம் முற்றுங் குலைத்தேன்பார்— உருகாயோ பாவி

7

பிதாவின் மடிதுறந்தேன்—பக்தர்
பாட்டு தான் மறந்தேன்
சித்தர்கள் தூதர்கள் துதிமறந்தேன்
சிந்தையி லுன்னை வைத்துக்கொண்டேன்— உருகாயோ பாவி

8

காலம் போகுதுவீண்—மண்ணில்
காயம் க்ஷணம் மறையும்
ஜாலம், வீண் சாக்குகள்தானும்
ஞாலம், மகிமைகள், வாழ்வுகளொழியும்— உருகாயோ பாவி

9

எத்தனை சொன்னாலும்—உன்மனம்
சுத்தமாய் விடக் காணோம்
நித்தமும் என்னுரை வைத்துப்போவேன்
நிச்சயம் வேதநாயகன் சொல்வான்— உருகாயோ பாவி

V. D. Kailasam.

## LIFE OF LATE
## Mrs. ARULAMMAL NOAH GNANADICKAM
## கனம் அருளம்மாள் ஞானதிக்கம் அம்மாள் ஜீவிய சரித்திரம்

(தொடர்ச்சி)

நீதிமொழி 31 : 26-ல் சொல்லியபடி இந்த அம்மாள் தன் வாயை ஞானம்விளங்கத் திறந்து தயையுள்ள போதகத்தைப் பிள்ளைகளுக்கும் மற்றவர்களுக்கும் புகட்டிவந்தார்கள். எப்படியெனில், தன் பிள்ளைகளோடு உலாவிவரும்போது 'குருடர் செவிடர் ஊமையர் நொண்டிகள் முதலிய அங்கவீனர்களைக் கண்டால் பரிகாசம் செய்யக்கூடாது, அவர்களைப் பார்த்தவுடன் கடவுள் நமக்கு செய்திருக்கிற கிருபைகளை நினைத்து அவருக்கு நன்றியறிதலான ஸ்தோத்திரம் செலுத்தி, அவர்களுக்கு நம்மால் செய்யக்கூடிய உதவியைச் செய்து வழி நடக்கவேணும்' என்பார்கள். மேலும் 'அவர்களைவிட நாம் நல்லவர்களா? ஏன் அவர்களைப்போல உன்னையும் சிருஷ்டிக்கக்கூடாது? நீ குறைவற்றவனாய் சிருஷ்டிக்கப்பட்டு நன்றாய்ப் பேச பார்க்க ஓடி நடந்து திரியக்கூடியவனாயிருப்பதுவும் தேவன் உன்மேல் வைத்த கிருபை என்றெண்ணவேண்டும். அங்கவீனர்களையும் அந்தகர்களையும் அவமதித்தல், அவர்களைப் படைத்த சிருஷ்டிகரை அவமதித்து தூஷிப்பதாகும்' என்பார்கள். நீதிமொழி 17 : 5.

ஆலவிருட்சங்களைக் காண்பித்து, இந்த மரங்கள் எத்தனையோ வருஷங்களாயினும் பொந்து விழுந்து சரிந்துகிடப்பினும் இவ்வளவு பசுமையும் குளிர்ச்சியுமாயிருக்கக் காரணம் யாது என்று வினவி, அதன் அக்கம்பக்கங்களிலுள்ள விழுதுகளின் சாரத்தினால் ஊன்றப்பட்டு பலத்திருக்கிறது என்று காண்பித்து, இப்படியே பெற்றோர்கள் முதிர்வயதும் தளர்ச்சியுமடையும்போது பிள்ளைகள் விழுதுகளைப் போல பெற்றோரைத் தாங்கி நடத்தவேணும் என்பார்கள். அப்படியே அவர்கள் பிள்ளைகளும் சகோதரி பிள்ளை எஸ்தர் கர்நேலியுஸ் அம்மாளும் இவர்களை அந்தியகாலத்தில் இவர்களுக்கு வேண்டிய உதவிபுரிந்து தாங்கி நடத்திவந்தார்கள்.

இரவு நிலவு காலங்களில் அல்லது பிரயாணம் செய்யும்போது வீண் கட்டுக்கதைகளைப் பேசாமல் வேத விடுகதைகள் போட்டு முற்பிதாக்களின் படிப்பினையான சரித்திரங்களைச் சொல்லி ஞானகீர்த்தனைகளைப் பாடி சந்தோஷிப்பிப்பார்கள்.



பிள்ளைகள் யாராகிலும் மற்றவர்களை ஏமாற்றிப் பரிகாசம் செய்தால் அது கூடாது என்று எச்சரித்து, முற்பிதாவாகிய யாக்கோபு விளையாட்டுப்போல தன் தகப்பனை வஞ்சித்ததால் பிற்காலத்தில் தன் பிள்ளைகள் தன்னை வஞ்சிக்க துயரத்துக்காளாகி மனமடிவடைந்தான்.

'எய்தவினை எய்தவர்க் கெய்திடும்' என்னும் முதுமொழி பொய்யாது ஆகையால் நாம் ஒருவரையும் வஞ்சிக்கவும் ஏமாற்றவும் தகாது என்பார்கள்.

பிள்ளைகள் விளையாட்டுக்குக்கூட பொய் சொல்லாதபடி கவனித்து, தானும் பிள்ளைகளை பயமுறுத்தவாவது யாதுகாரணத்தினாலாவது 'பூச்சாண்டி வருகிறான், சடையாண்டி வருகிறான்' என்று மற்றத் தாய்மார் பொய் சொல்வதுபோல சொல்லவேமாட்டார்கள்; பெரிய பிள்ளைகளும் மற்றவர்களும் அப்படிச் சொல்லவும் இடங்கொடுக்கமாட்டார்கள்.

பிள்ளைகளுக்குச் சொன்ன வாக்குப் பொய்த்துப் போகாதபடி நிறைவேற்றக்கூடியதைத்தான் சொல்லுவார்கள். பிள்ளைகள் தங்களைப் பெருமையாகவும் மற்றவர்களை அற்பமாகவும் எண்ணிப் பேச இடங்கொடுக்கமாட்டார்கள். முதியோரையும் தங்கள் வயதுக்கு மிகுந்தவர்களையும் கண்டால் வணக்கமாய் மரியாதை செய்யப் பழக்குவிப்பார்கள்.

பிள்ளைகள் சுத்தமாயும் ஒழுங்காயும் அதனதன் காலத்தில் செய்யவேண்டியதைக் கிரமமாயும் செய்யப் பழக்குவார்கள். ஏனெனில், வெளிச்சுத்தம் அகச்சுத்தத்துக்கு ஓர் அடையாளமன்றோ? தேவனும் 'நாம் பரிசுத்தராயிருக்கிறதுபோல நீங்களும் பரிசுத்தராயிருங்கள்' என்றுரைக்கிறார்.

தன் பிள்ளைகளெல்லாரும் சத்தியத்திலே நடக்கிறார்கள் என்பதே அவர்களுக்கு சந்தோஷமென்கலாம்.

1881-ம் ஆண்டு கர்த்தரின் இரண்டாம் வருகை சமீபமாயிற்று என்றும், இந்த வருஷம் செப்டம்பர் மாதம் 9-ம் தேதி கர்த்தர் நிச்சயமாய் வருவார் என்றும் அருளானந்த பிரசங்கியார் முதலான சிலர் வந்து தேசத்தைக் கலக்கினார்கள். அப்போது இந்த அம்மாள் அவரைப் பார்த்து: 'கர்த்தர் வருகை நினையாத நேரம், அந்த நாளையாவது நாழிகையையாவது நாம் அறியக்கூடாது என்று சத்திய வேதத்தில் சொல்லியிருக்கிறது ஆகையால் இன்னம் 9 மாதங்களிருக்கிறதென்று நீங்கள் மெத்தெனவாயிருக்கவேண்டாம். இன்றைக்குக் கர்த்தருடைய வருகை இருந்தாலும் இருக்கும். ஆகையினால் நாம் எப்போதும் ஆயத்தமாயிருக்கவேண்டியது' என்று சொல்லி, அந்தக் கூட்டத்தாரை எச்சரித்துப் புத்திசொன்னார்கள்.

இது மாத்திரமல்ல, தாங்கள் படுக்கப்போகும் ஒவ்வொரு இரவிலும் தங்கள் மரணத்தை நினைவுகூர்ந்து அந்த நேரத்தில் தனக்கு ஜெபிக்கும்படியான அறிவு இருக்குமோ என்று எண்ணி பாவ மன்னிப்பு ஜெபம், மரண ஆயத்த ஜெபம், கர்த்தருடைய ஜெபமும் சொல்லி படுத்துக்கொள்வார்கள்.

'வாய் ஓய்ந்தும் ஓயேன்
மனத்தினாலே' துதிப்பேன்
நீயே எனக்கு நிலையே பராபரனே'

என்று சிந்தித்துக்கொண்டே நித்திரை செய்வார்கள். ஒவ்வொரு நாளும் பிலருக்காகிலும் இரட்சகரைப்பற்றி சொல்லத் தவறமாட்டார்கள். தனிஜெபம் ஒழுங்காய்ச் செய்து குடும்பங்கள் சபைகளுக்காக வேண்டிக்கொள்வது வழக்கம். இவர்கள் மாமனார் சங். வேத நாயக சாஸ்திரியார் தகப்பன் தேவசகாய ஞானியார் ஜெபத்தைப் பற்றிய பாடல்:

'ஜெபத்தினால் ஜெயமாகும் பிணியும் தீரும்
திரியேக பரமர்க்குப் பிரியமாகும்
ஜெபத்தினால் சத்துருவை ஜெயிக்கலாகும்
தீராத வினைகளெல்லாம் ஜெபத்தால் தீரும்
ஜெபத்தினால் பேய்க்கணங்கள் வெருண்டிட்டோடும்
ஜீவன் போம் சமயத்தும் ஜெபமே வேண்டும்
ஜெபத்தினால் சகல நன்மை வருகுமென்று
ஜெபம் துவக்கி ஜெபம் கடைசி முடித்தல் நன்றே'

அப்படியே இவர்களும் இவர்கள் குடும்பத்தார்களும் ஒவ்வொரு காரியத்தையும் இயேசுவின் நாமத்தில் ஜெபத்தோடு ஆரம்பித்து தோத்திரத்துடன் முடிப்பார்கள். வீட்டைவிட்டு வெளியே போகும் போதும் பிரயாணப்படும்போதும் சுருக்கமாக பின்வரும் பாட்டைச் சொல்லி புறப்படுவார்கள்.

'முன்றுனை சேர் நடுவின்றுனை கால முடிவின்றுனை
பின்றுனை பற்பல போதும்துனை பெரும் பாவியெனக்
கின்றும் அன்றன்றும் என்றென்றும் துனை
இனிமேல் என்னுயிர் போன்றும் பொழுதும் துனை
யேசு நாயகன் பொற்பாதமே.
சுவாமி கிருபையாயிரும். ஆமென்'

என்று ஜெபித்துக்கொண்டு புறப்படுவார்கள்.



ஊர்களிலிருந்து திரும்பிவந்தவுடனும், அல்லது கர்த்தர் நன்மையான காரியங்களை வாய்க்கச்செய்தருளினாலும், சந்தோஷ செய்திகள் கிடைத்தாலும், பிள்ளைகளுக்குப் பரீட்சை ஒப்பேறின செய்தி கேட்டாலும் உடனே தோத்திரகீதம் பாடி சமாரியனைப்போல மகா சத்தத்தோடு கர்த்தரை மகிமைப்படுத்தித் தோத்திரித்துப் பின்வரும் விருத்தத்தைப் பாடுவது வழக்கம். அதாவது:

'நினைத்தது தரும் சகாயா
நித்திய கிருபைத் தூயா
வினைத்துயர் தவிர்க்கும் ஆயா
விநோத உற்பன உபாயா
உனைத்துதி செய்வோம் ஐயா
தூழியோ டூழி நேயா
அனைத்துல குயிர்க்கும் தாயா
அன்பையா அல்லேலூயா'

என்றும் போக்கிலும் வரத்திலும், காலையிலும் மாலையிலும், பசிப்பிலும், எப்போதும் ஜெபம்செய்யத் தவறமாட்டார்கள். இவர்கள் கலியாண வீடுகளிலும் துக்கவீடுகளிலும் ஜெபித்துவருவார்கள். இவர்கள் சிறு வயதிலே பக்தியுள்ளவர்களாயிருந்தபோது இவர்கள் பர்த்தாவாகிய சங். நோவா ஞானதிக்க சாஸ்திரியாரவர்களும் அவர்கள் குடும்பத்தாரும் பக்தியுள்ளவர்களாயிருந்ததினாலே, இவர்கள் பக்தி அனல்மூண்டு நாளுக்குநாள் குடும்பவிஷயங்களிலும், புருஷபக்தியிலும், பிள்ளைகள் வளர்ப்பதிலுள்ள கண்டிப்பிலும், ஓய்வுநாள் ஆசரிப்பிலும், தர்மசிந்தையிலும், பரோபகாரத்திலும் சிறந்து விளங்கினது. இவர்கள் சாந்தம், அன்பு, இச்சையடக்கத்திலும் சமாதானக் கட்டிலும் எல்லாரும் கவனித்து மதிக்கும்படியாகவும் மற்றவர் யாவரும் பின்பற்றி நடக்கத் தக்க மாதிரியாகவும் நடந்துவந்தார்கள். இவர்களுடைய ஜீவியத்தைக் கவனித்த சபைகளும் ஊராரும் இவர்களை மதித்து மரியாதையாக எண்ணி கனம்பண்ணி வந்தார்கள். இவர்கள் பணத்தினாலல்ல, குணத்தினாலேயே மதிக்கப்பட்டார்கள். கர்த்தருடைய ஆசீர்வாதமும் இவர்களுக்கு அதிகமாகக் கிடைத்ததினால் தளர்வடையாமல் போதுமென்கிற மனதுடனே கூடிய தெய்வபக்தியே பெரிய ஆதாயமாக விளங்கினது. இவர்களுடைய பெண்மணிகளான பாமணி, அருள் மணி, இராகேல், சிகாமணி, ஞானசாஸ்திரம், மனோன்மணி, ஞான தீபம் என்ற ஏழு குமாரத்திகளுக்கும் அதனதன் காலத்திலே அவரவர் சுவாட்சணைக்கேற்ற அந்தஸ்துள்ள மருமக்கள்மாரைக் கட்டளையிட்டதும் தேவகிருபையே. 'ஐந்து பெண் பெற்றால் அரச

னும் ஆண்டியாவான்' என்ற பழமொழி பொய்த்துப்போயிற்று. எப்படியெனில், இவர்கள் கணவனுக்கு நிலையான சம்பளம் ஒன்றுமில்லாதிருந்தும், 'கடவுளால் கூடாதகாரியம் ஒன்றும் இல்லை, அவரை அண்டினோர்க்கு ஒன்றும் குறைவு படாது' என்ற வேத உரைப்படி, சகலமும் சந்தோஷமும் சமாதானமுமாக நிறைவேறக் கர்த்தர் துணை செய்தார்.

(இன்னும் வரும்.)

## A MODEL LESSON FOR THE BIBLE WOMEN'S WORK

## எப்படி இந்துப் பெண்களுக்கு வேதோபதேசம் செய்வித்தல்

### மலைப் பிரசங்க தொடர்ச்சி

| விஷயம் | போதனு முறை |
|---|---|
| 11-ம் பாடம். மத். 8: 14-17, 28-34.<br>வைத்தியரும் பிணியாளிகளும்<br>(1) காய்ச்சல் பிடித்த பெண்—பேதுருவின் மாமி.<br>(2) வல்லமை யுடைய தெய்வம்—இயேசுநாதர்.<br>(3) தொட்டார்—சுகம் கிடைத்தது.<br>(4) பணிவிடை செய்தாள்—நன்றியறிதல்.<br>(5) பிசாசுபிடித்த அநேகர்-வல்லமையுடைய ஒருவர்.<br>(6) வார்த்தையால் சுகம்—தேவ வாக்கு மருந்து.<br>பழமொழி<br>'தொட்டால் ஓடும் தொளாயிரம் பேய்கள்.'<br>வேதம். பசாசின் வல்லமையை அழிக்கவே கிறிஸ்து வந்தார். ஏசா. 9: 6. வல்லமையுள்ளவர். | பேதுருவுக்கும் ஆண்டவருக்கும் உள்ள சம்பந்தம் என்னவென்று காட்டி, மாமிக்கு சுகம் கொடுக்கும்படி இயேசுவானவரின் மனம் எப்படிப்பட்டது என்று கேள். பக்தியுடைய ஒரு ஆள் மூலம் மற்றவர்களுக்கும் உண்டாகும் நன்மையைக் காட்டவும். காய்ச்சல்காரருக்கு நாட்டுவைத்தியர் செய்யும் முறைகளைக் கேட்டு, இயேசுநாதரின் சரீரமெல்லாம் வியாதிகளை சுகப்படுத்தும் வல்லமையால் நிறைந்திருத்தல், தொட்டவுடன் சுகம், பெரும்பாடு ஸ்திரீ குணமானது இவைகளை விஸ்தரித்துச் சொல்லவும், பாவங்களை மன்னிக்கிற குணமாத்திரமல்ல, பாவத்தால் உண்டான ரோகங்களையும் சுகமாக்குகிறவரே மெய்த் தெய்வம் என்று சொல்லவும்.<br>தேவனுடைய வாக்கால் பூலோகம் யாவும் சிருஷ்டிக்கப்பட்டா |



| விஷயம் | போதனு முறை |
|---|---|
| பாவிசைப்பு. அண்டபுவன சகா சராசரம் தொண்டர் மக்கள் தூதர் மாதரை அண்டர்கோன் விண்டதால் ஜெனனமானார்.<br>மனன வசனம். 17.<br>பாரச்சுமையொடு பாரில் வருத்தங்கள், பட்டு உழல்வோரே—வாரும். | என்று சிருஷ்டிப்பைப் பற்றி சொல்லவும்.<br>கிறிஸ்து நமது நோய், பலவீனம் எல்லாம் சுமக்கும் சுமை தாங்கி என்று விளக்கி வசனம் படிக்கவும். 161-ம் கீர்த்தனம் பாடி சொல். |
| 12-ம் பாடம். பிசாசுகளும் பூசாரியும்.<br>(1) பேய் பிடித்த இருவர்—நிலமை.<br>(2) பிரேதக்கல்லறை—இருப்பிடம்.<br>(3) பயமுறுத்தினார்கள்-வேலை<br>(4) கூப்பிட்டார்கள்-ஜெபம்.<br>(5) வேண்டிக் கொண்டார்கள்-அழிவுக்கு தப்பும்படி.<br>(6) இயேசுவே—மகா ராஜாவே.<br>(7) வேதனைப்படுத்தாதேயும்—வேண்டுகோள்.<br>போங்கள். மனுஷரை விட்டுப் போங்கள், பன்றிகளுக்குள் போங்கள். வச. 32.<br>மனிதருக்கு :—<br>1. சுகமாகிப் போங்கள்.<br>2. வீட்டுக்குப் போங்கள்.<br>3. நன்மைசெய்யப் போங்கள்.<br>4. செய்திசொல்லப்போங்கள்.<br>5. கிறிஸ்துவை அறிக்கையிடப் போங்கள். | ஊரில் பேய் பிடித்த ஆண் பெண்களைப் பற்றி விசாரித்து அவர்கள் வெளியிலும் வீட்டிலும் எப்படி யிருக்கிறார்கள் என்று விசாரித்து, இவர்கள் சங்கதியை வாசித்து அல்லது கதையாகச் சொல்லவும். பேய் கோட்டிகளால் மனுஷர் நன்மைசெய்யவும், யோக்கியர்களாய் நடக்கவும், வீட்டில் வாசம்செய்யவும் கூடாதபடிக்குப் போகிறார்கள். இந்தப் பெண்களை பேய் எப்படி பிடிக்கிறது என்றும் அதற்குப் பரிகாரம் என்ன என்றும் விசாரிக்கவும். வசனங்களை விளக்கி, பிசாசுகள், மனிதர்கள், பன்றிகள், ஆண்டவர் இந்நான்குவகை யாட்களை விவரிக்கவும். இயேசுவின் பேயோட்டும் உடுக்கும் சவுக்கும், போங்கள் என்ற அதிகாரமான வாக்கு என்கவும். 32-ம் வசனம் மனனம். 17-ம் கீர்த்தனை முதல் சரணம். |
| 13-ம் பாடம். பாவியும் நேசரும். 9: 1-8.<br>நான்கு வகுப்பார்<br>1. கிறிஸ்துவும் சீஷரும். | மாற். 2: 1-12 இல் காட்டியதை வாசித்து திட்டமாய்ச் சொல்லி, வியாதிகளில் சிலவற்றைக் கேட்க அல்லது சொல்ல. நிமிர் |

## பிரசங்க தொடர்ச்சி

| விஷயம் | போதனு முறை |
|---|---|
| 2. திமிர்வாதக்காரனும் சுமந்தவர்களும்.<br>3. வேதபாரகரும் பரிசேயரும்<br>4. ஜனங்களும் வீட்டாரும்.<br>கிறிஸ்துவின் மனநிலைமை<br>1. விசுவாசத்தைக் கண்டார். வச. 5.<br>2. பாவத்தை மன்னித்தார். வச. 5.<br>3. சுகம் கொடுத்தார். வச. 11.<br>4. வல்லமைகொடுத்தார். வ. 11<br>நோயாளி<br>சுமந்து கொண்டுவந்தார்கள்.<br>மேல்வீட்டைப் பிரித்து இறக்கினார்கள்.<br>தேவனை மகிமைப் படுத்தினார்கள். | வாதம் ஒரு வேலையும் செய்யக்கூடாத ஓர் கொடிய நோய் என்று காட்டவும்.<br>நான்கு வகுப்பாரையும் சொல்லி கிறிஸ்துவைப்பற்றிய எண்ணம் என்னவென்பதை அறிய, வியாதியை சுகப்படுத்தல் மருந்தின் குணம், பாவத்தை மன்னிப்பது தேவனின் குணம் என்றும், எப்படி மனிதர்களின் பாவத்தை மன்னிக்கிறார் என்றும் நான்கு வழிகளால் விஸ்தரிக்கவும்.<br>12-ம் வசனம் மனனம். 174-ம் கீர்த்தனை 2-ம் கவி பாடு.<br>கிறிஸ்தியான் டாசன்.<br>(இன்னும் வரும்.) |

## TEMPERANCE LESSONS.

## மதுவிலக்குக் கதைகளும் பாடமும்

### நமது வீட்டுக்குள் நகர்ந்து வரப்பார்க்கிற பாம்பு

பிராணிகளில் நாம் மித்துருவாக எண்ணுகிறவைகளும் சத்துருவாக எண்ணுகிறவைகளும் உண்டு. சத்துரு பிராணிகளில் பாம்பு ஒன்று. அது ஒரு கொடியில் நம்மை மரணத்துக்குள்ளாக்கக் கூடியது. அது விஷம் நிறைந்த விஷப்பாம்புதான்.

கதை. முன் ஒரு காலத்தில் ஒரு பெரிய பங்களாவில் ஒரு சிறு பையனும் அவனுடைய தாய் தகப்பனும் குடியிருந்தார்கள். பங்களா தோட்டத்தைச் சுற்றிலும் சுவர் இருந்தது. அது ஒரு பழைய கட்டடம். அநேக இடங்களில் செங்கல்கள் விழுந்து துவாரமாய் இருந்தது. அத்தோட்டத்துக்குள் ஒரு நாகப்பாம்பும் வசித்துவந்தது. அதைச் சிலர் நல்லபாம்பு என்றும் சொல்லுவதுண்டு. அதற்குப் பல்லில் கொடிய விஷமுண்டு. அந்தப் பாம்பு பங்களாவிலிருந்த சிறு பையன்மேலே கவனம் வைத்தது. பின்பு அது: 'நான் இந்த பங்களாவுக்குள்ளே போய் அந்த சிறு பையனைக் கடித்துவிட்டால் அவன் இறந்துவிடுவான். அதற்கப்புறம் அவன் பெற்றோர் துக்கமடைந்து இந்த பங்களாவை விட்டுப் போய்விடுவார்கள். அப்போது பங்களா காலியாகிவிடும். நான் போய் அதில் வாசம் பண்ணுவேன். பங்களாவில் எலிகள் அதிகமுண்டு. நான் அவைகளைப் பிடித்துத் தின்றுகொண்டு சுகமாய் வாழ்ந்திருப்பேன்' என்று சொல்லிக்கொண்டது.

அந்த தோட்டத்தில் இருந்த ஒரு கீரிப்பிள்ளை பாம்பு சொன்னதைக் கேட்டு அது செய்யவிரும்பின சதியோசனையைத் தெரிந்துகொண்டது. ஆகையால் கீரிப்பிள்ளை சாயங்காலமானவுடனே பங்களாவுக்குப் போய் தாழ்வாரத்தில் அலைந்துகொண்டிருந்தது. அந்தக் கீரியைப் பையன் பார்த்தபோது பெரிய எலி என்று நினைத்தான். ஆனால், அவன் தகப்பன்: 'அது கீரிப்பிள்ளை. பாம்பு வீட்டுக்குள் வந்தால் இது அதோடு சண்டைபோடும்' என்றான். உடனே பையனுக்குக் கீரிப்பிள்ளைமேல் அதிகப் பிரியம் உண்டாகித் தன் சாப்பாட்டில் கொஞ்சம் அதற்கு வைத்தான். பின்பு எல்லாரும் தூங்கப் போய்விட்டார்கள். கீரிப்பிள்ளையோ தூங்கப் போகவில்லை. அது இருட்டுக்குள் வீட்டைச் சுற்றித் திரிந்துகொண்டிருந்தது. நடுச்சாமத்தில் வீட்டுக்கு வெளியே 'சர சர' என்ற சத்தம் கேட்டது. அப்போது பாம்பு பையனைக் கடிக்கப்போகிறதென்று கீரிக்குத் தெரிந்தது. அந்தக் கீரி, பையன் தூங்கும் அறைக்குள் மெதுவாய்ப் போய்விட்டது. அந்த அறைக்குப் பக்கத்தில் ஸ்நான அறை ஒன்று இருந்தது. தண்ணீர் வெளியே போக தரையோடு ஒரு குழாய் இருந்தது. இது பாம்புக்குத் தெரியும். அதன் வழியே மெள்ள வந்து பையன் தூங்கும் அறைக்குள் போய் அவனைக் கடித்துவிடலாம் என்று நினைத்துக் குழாய்க்கு வந்தது.

அந்தக் குழாய் கீரிக்கு நன்றாய்த் தெரியும். முந்தியே போய் கீரி காத்துக்கொண்டிருந்தது. பாம்பு அறைக்குள் தலையை நீட்டினவுடன் கீரி அதைப் பிடித்துக்கொண்டது.

பாம்பு தன் தலையை அங்குமிங்கும் ஆட்டிக் கீரியைச் சுவரோடு அடித்தது. ஆனால், கீரி தன் பிடியை விடவில்லை. இதற்குள் பாம்பு பலம் குன்றி தளர்ச்சியடைந்து செத்துப்போனது. இப்படியாக கீரிப்பிள்ளை சிறுபையனின் உயிரைக் காப்பாற்றினது. இதற்கிடையில் கீரிக்கும் பாம்புக்கும் நடந்த சண்டையின் அரவம் கேட்டு பையனுடைய பெற்றோர் கையில் லாந்தரைக்கொண்டு ஓடிவந்தார்கள். பையன் சுகமாயிருக்கக் கண்டார்கள். பின்பு தரையில் செத்

துக்கிடந்த பாம்பையும் பக்கத்தில் நின்ற கீரியையும் பார்த்தார்கள். அப்போது தகப்பன் தன் மனைவியைப் பார்த்து: 'பார், இந்த தைரியமுள்ள கீரி நம் பையனின் உயிரை ரக்ஷித்தது. ஒரு வீட்டில் பாம்பைப்போல கொடிய சத்துரு ஒன்றுமில்லை' என்றான்.

கள், சாராயம், பீர், பிராந்தி முதலிய மதுபானங்களும் இந்த விஷப்பாம்பைப்போல இருக்கின்றன. விஷப்பாம்பைப் பார்க்கிலும் அதிக பயங்கரமானது எது? புலியா? கோபமூட்டப்பட்ட காடியா? இருக்கலாம். வஞ்சகமுள்ள மனிதனா? ஆம், இந்த மனிதனைப் பார்க்கிலும் மோசமும் பயங்கரமுமான விரோதி வேறு இருக்கமுடியாது. பின் சொல்லப்படும் கதையினால் விளங்கும்.

* 2-ம் கதை. அநேக வருஷங்களுக்கு முன் ஐசுவரியவானான ஒரு வாலிபன் ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்குப் பிரயாணமாய்ப் போனான். அக்காலத்தில் ரெயில் வண்டிகள் இல்லாதபடியால் அந்த வாலிபன் குதிரைமேலேறிப் பயணம் செய்தான். அவனோடு இரண்டு மூன்று வேலைக்காரரும் போனார்கள். அவன் புறப்பட்ட ஊரின் அரசன் இவன் போகும் ஊரிலுள்ள ஒரு வியாபாரியிடம்பட்ட கடனைத் தீர்ப்பதற்காக இந்த வாலிபனிடம் விலையுயர்ந்த பல ஆபரணங்களைக் கொடுத்தனுப்பியிருந்தான். போகிற வழியில் திருடர் அதிகமென்று தெரிந்தபடியாலும், ஆபரணங்களைக் கொண்டு போவது தெரிந்தால் வழியில் மோசம் நேரிடும் என்று இவன் அறிந்தபடியாலும், வெளியே தன் பயணத்தைக் குறித்து யாரிடமும் சொல்லாமல் வெகு எச்சரிக்கையாய் இருந்தான்.

போகிற வழியில் ஒரு சத்திரத்துக்கு வந்துசேர்ந்தான். அங்கே சில நாள் தங்கிப் பிறகு பயணப்படத் தீர்மானித்தான். அச்சத்திரத்தில் இன்னும் பல பிரயாணிகளும் தங்கியிருந்தார்கள். சிலர் வடக்கேயும் சிலர் தெற்கேயும் போகவேண்டியவர்கள். அநேகர் இந்த வாலிபனைப்போலவே சிலநாள் சத்திரத்தில் தங்கினார்கள். மற்றவர்கள் ஒரு இரவு மாத்திரம் தங்கிவிட்டு தங்கள் வழியே போனார்கள். இன்னும் சிலர் புதிதாக சத்திரத்தில் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் மிகவும் பெருத்த வியாபாரிகள். இந்த வியாபாரிகளில் ஒருவன் வாலிபனுக்குச் சிநேகிதன் ஆனான். வாலிபனும் அந்த வியாபாரிகளை நம்பி தனக்குள் 'இவர்கள் ஒரு தீங்கும் எனக்குச் செய்யமாட்டார்கள். அதிக நல்லவர்கள். இவர்களோடு நானும் சேர்ந்து பிரயாணம் செய்வேன்' என்று சொல்லிக்கொண்டான்.

அந்த வியாபாரிகளும் வாலிபன் தங்களுடன் வருவதை அறிந்து மிகவும் சந்தோஷப்பட்டார்கள். பின்னும் சில நாள் சத்திரத்தில்



எல்லாரும் தங்கினபோது பல காரியங்களைக் குறித்துப் பேசிக்கொண்டார்கள். வாலிபன் வியாபாரிகளிடம் நம்பிக்கை வைத்து தன் பிரயாணத்தைப்பற்றி சொன்னான். தான் கொண்டுபோகும் ஆபரணங்கள் முதலியவைகளைப்பற்றிச் சொல்லவில்லை. வியாபாரிகளோ, அவன் எடுத்துப்போகும் பொருட்கள் என்னவென்றும் விசாரிக்கவில்லை. சிநேக பாந்தமாகவே அவனுடன் பேசி வந்தார்கள்.

கடைசியாக, அவர்கள் எல்லாரும் ஒன்றாய்ப் புறப்பட்டுச் சில நாட்களாகப் பிரயாணம் செய்தார்கள். அது வேனிற்காலமாய் இருந்தபடியால், ஒவ்வொருநாளும் வெயிலுக்கு ஒதுங்கித் தோப்பு நிழல்களில் தங்கிச் சாப்பாடு செய்து சாப்பிட்டுவிட்டு வெயில் தாழ்ந்து சற்று சாந்தமானவுடன் புறப்பட்டார்கள்.

ஒருநாள் இந்த வாலிபன் சாப்பிட்டுச் சற்று இளைப்பாறும்படி படுத்துத் தூங்கினான். கொஞ்சநேரம் தூங்கியிருப்பான். அதற்குள் யாரோ ஒருவன் வந்து அவன் தொண்டையை நெரிப்பதுபோல் இருந்தது. அவன் குதித்தெழுந்து ஓட நினைத்தான். இதற்குள் அவன் முகம் ஒரு கனத்த கம்பளியால் மூடப்பட்டது. அவன் கொல்லப்பட்டான்.

அவனோடு பிரயாணம செய்தவர்கள் உண்மையாகவே வியாபாரிகள் அல்ல. அவர்கள் திருடர். பணக்காரப் பிரயாணிகளிடம் தங்களை வியாபாரிகள் என்று தந்திரமாகக் காட்டி தாங்களும் அவர்களுடனேயே பிரயாணம் செய்து, அவர்களைத் தனிமையான இடத்தில் கொன்று அவர்களிடமுள்ள பொருட்களை அபகரித்து, செத்த பிணத்தைச் சமீபத்தில் புதைத்துவிட்டு தங்கள் வழியே போய் விடுவார்கள். அவர்கள் வழக்கமே இதுதான். இந்தக் கதையினால் நாம் உணர்ந்துகொள்ளவேண்டிய காரியங்கள் உண்டு.

நாம் கடவுளிடத்திலிருந்து பெற்றுக்கொண்டதும், விலையுயர்ந்த ஆபரணம் போன்றதும், எப்போதும் நம்முடனேயே இருக்கிறதுமான ஆச்சரியமான பொக்கிஷமாகிய நமது கண், காது, மனம் முதலிய அவயவங்களே. இவைகளை நம்மிடத்திலிருந்து அபகரிக்கும் திருடர்கள், கள், பிராந்தி, சாராயம், பீர் முதலான மஸ்துள்ள பானங்களே. இவைகள் நமக்குச் சிநேகிதர் போல் பாசாங்கு செய்து நமது கண்களை மங்கலாக்கி, புத்தியை மழுக்கி, அறிவைக் குறைத்து, பலத்தை முற்றிலும் குறைத்துவிடுகின்றன. ஒரு நல்ல மனிதனைக் கெட்டவனாக மாற்றிவிடும். ஒழுக்கமுள்ள ஒரு பெண்ணைச் சீர்கெட்டவளாக்கிவிடும். யோக்கியமான ஒரு மனுஷனைத் திருடனாக்கிவிடும். பக்ஷமுள்ள தாயைக் கொடுமையுள்ளவளாக்கும்.

ஒரு விஷப்பாம்பு நம்மைக் கடிக்கும்படியும், திருடர் வந்து நம்மைக் கொன்று நம் பொருட்களை அபகரிக்கும்படியும் நாம் உத்தரவு கொடுக்கமாட்டோம் அல்லவா? அப்படியே விஷபானங்களும் நம்மை அணுகவொட்டாமல், எப்போதும் நல்ல தண்ணீரையே பானம்பண்ணி, நம் சுகத்தைப் பேணி வரவேண்டும்.

## A CONTEST BETWEEN WATER AND LIQUORS

## ஜலபானமும் மதுபானமும் போராடுதல்

ப ல் ல வி

தாகமுள்ளோனே, இதோ! தண்ணீர் இருக்கிறது ;
தாகந் தீர்த்துக்கொள்ள நீ வா, வா, வா ; ஓ.

அ நு ப ல் ல வி

தாகந் தீர்க்கத் தண்ணீர்தான் வேண்டும் ;
தாகம் போக்க வெந்நீரும் போதும் ;
சோகந் தீர்ப்பது தண்ணீர் ; தேகம் ஏற்பது நன்னீர் ;
பானம் பண்ணிச் சோதித்துப் பார், பார், பார் ; ஓ.

ச ர ண ங் க ள்

1

கள்ளுக்கடைக்கு நீ போய், கள்ளுக் குடுவை தூக்கி,
கள்ளேன் நீ குடிக்கிறாய் ? சொல், சொல், சொல் ;
புளித்து நுரைத்த கள் குலைத்துவிடும் மானம்
மதி கெடுக்கும், இது மெய், மெய், மெய் ;
புளித்துப்போன பனங்கள்ளும், சளித்துப்போன தென்னங்கள்ளும்
ருசித்தால் தலைக்கேறும் ; குடித்தால் குரங்காட்டம் ;
குடுவையை விட்டோடிப் போ, போ, போ ; ஓ.— தாகம்

2

சாராயக் கடைக்குப் போய், சாராயப் புட்டி தூக்கி,
சாராயம் குடிப்பதேன் ? சொல், சொல், சொல் ;
காய்ச்சி வடித்த மது சாய்த்துப் போடுங் குடித்தால் ;
வேர்த்து விழுவாய், இது மெய், மெய், மெய் ;
யார்க்கு ரத்தங் கலங்கின கண் ? யார்க்குக் காரணமில்லாக் காயம் ?
யார்க்குப் புலம்பல், சண்டை ? யார்க்குத் துக்கம், வேதனை ?
சாராயம் நாடுவோர்க்கே—ஐ—யை—யோ ! ஓ.— தாகம்



3

ஜொலிக்கும் ஷாப்புக்குள், பளிங்குப் பாத்திரத்தில்,
குடித்த பானம் என்ன ? சொல், சொல், சொல் ;
பிடித்துக் கொள்ளும் உன்னை விஸ்கி, ஜின், ரம், பிராந்தி;
எரித்துவிடும், இது மெய், மெய், மெய் ;
மதுபானம் ஏற்கா உனக்கு ; சாராயம், கள், பீர் ஆகா ;
தோலும் எலும்புமாகி வீடுவாச விழப்பாய் ;
பேரும் போம், குறி சொன்னேன் கேள், கேள், கேள் ; ஓ.—தாகம்

G. Mercy Ammal,
Hobart Girls' School,
Asthempet, Salem.

## NOTICE

## விளம்பரம்

நீலகிரியிலும், சென்னையிலும் வேலூர் வட்டகையிலும், திருநெல்வேலியிலும் சுவிசேஷ ஊழியத்தில் வாஞ்சையுள்ள வேதாகம ஸ்திரீகள் இந்துக்களுக்குள் வேலை நடத்த தேவை.

30 வயதுமுதல் 40 வயது வரையுள்ள சுவிசேஷ வேலையில் கருத்துக்கொண்டவர்கள் இந்த வேலைக்காகத் தங்களை ஒப்புக்கொடுத்து தங்களுக்குப் பிரியமான இடத்தைக் குறிப்பிட்டு, சென்னை கனம் P. குரோவர் அம்மாளவர்களுக்கு பின்வரும் மேல்விலாசம் போட்டுத் தெரியப்படுத்தலாம்: Miss P. Grover, C. E. Z. M. House, Vepery, Madras.

வேலை துவக்குமுன் யாருக்காவது இவ்வேலையில் பயிற்சி வேண்டுமென்று விரும்பி தெரியப்படுத்தினால் அதற்கேற்ற ஏற்பாடுகள் செய்யப்படும்.

## A SIMPLIFIED ALPHABET FOR INDIAN LANGUAGES

## இந்திய சுதேச பாஷைகளுக்கேற்ப சுலபமான எழுத்துக்கள்

நமது இந்திய தேசத்தில் வாசிக்கத் தெரியாத ஏராளமான பேரிருக்கிறார்கள். சுதேச பாஷை எழுத்துக்கள் கற்கக் கடினமாயிருப்பதால், சகலரும் விசேஷமாய் அறிவீனரும் சுலபமாய்க் கற்

றுக்கொள்ளத்தக்க எழுத்துக்களைத் தெரிந்து பாஷை எழுத்துக்களாக்கினால் யாவரும் கஷ்டமின்றி சீக்கிரத்தில் வாசிக்கக் கற்றுக்கொள்ளலாம். இந்த எழுத்துக்கள் சமஸ்கிருத பாஷை சப்தத்தை அனுசரித்திருந்தால் சகல இந்திய பாஷைகளுக்கும் பொதுவாய் உபயோகிக்கலாம். இந்த எழுத்துக்கள் சுலபத்தில் அறிந்துகொள்ளக்கூடியவைகளும் இலேசாய் எழுத அல்லது அச்சிடக்கூடியவைகளுமா யிருக்க வேண்டும்.

இவ்வித பாஷை எழுத்துக்களை யோசித்து எழுதுகிறவர்களுக்கு மூன்று வெகுமதி (Prizes) உண்டு. அவை முறையே 100 ரூ., 75 ரூ., 50 ரூ. பெறுமானவை. இவ்வித எழுத்துக்களை எழுதுவோர் இவ்விஷயத்தில் விசேஷித்த முயற்சி எடுத்துவரும் சென்னை ராயபுரம் 40 மெய்ன் ரோட்டிலிருக்கும் கனம் ஜே. ஸ்டேவர்ட் துரையவர்களுக்கு (Rev. J. Stewart, M.A., 40 Main Road, Rayapuram) மேல்விலாசம் போட்டு, நவம்பர் மாதம் 30-ம் தேதிக்குள் அனுப்பவேண்டியது. பழைய எழுத்துக்களையும் உபயோகிக்கலாம் அல்லது முற்றும் புதிய எழுதுக்கள் கண்டுபிடிக்கலாம்.

## LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

1920-௵ நவம்பர்௴

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | தி. | யாத். | 16. | 11—26 | 11 | வி. | யாத். | 24. | 1—18 | 21 | ஞா. | யாத். | 33. | 1—11 |
| 2 | செ. | ,, | 16. | 27—36 | 12 | வெ. | ,, | 25. | 1—16 | 22 | தி. | ,, | 33. | 12—23 |
| 3 | பு. | ,, | 17. | 1—16 | 13 | ச. | ,, | 25. | 17—38 | 23 | செ. | ,, | 34. | 1—14 |
| 4 | வி. | ,, | 18. | 1—12 | 14 | ஞா. | ,, | 26. | 30—37 | 24 | பு. | ,, | 34. | 20—35 |
| 5 | வெ. | ,, | 18. | 13—27 | 15 | தி. | ,, | 28. | 1—12 | 25 | வி. | ,, | 35. | 20—35 |
| 6 | ச. | ,, | 19. | 1—15 | 16 | செ. | ,, | 28. | 29—38 | 26 | வெ. | ,, | 40. | 17—27 |
| 7 | ஞா. | ,, | 19. | 16—25 | 17 | பு. | ,, | 29. | 38—46 | 27 | ச. | ,, | 40. | 28—38 |
| 8 | தி. | ,, | 20. | 1—17 | 18 | வி. | ,, | 32. | 1—14 | 28 | ஞா. | 2 தெச. | 1. | 1—12 |
| 9 | செ. | ,, | 20. | 18—26 | 19 | வெ. | ,, | 32. | 15—24 | 29 | தி. | ,, | 2. | 1—17 |
| 10 | பு. | ,, | 23. | 14—25 | 20 | ச. | ,, | 32. | 25—35 | 30 | செ. | ,, | 3. | 1—18 |

C. L. S. PRESS, MADRAS—1920


# மாதர் போதினி

No. 275 டிசம்பர் 1920 No. 12


## A CHRISTMAS GREETING

## ஓர் கிறிஸ்து ஜனன வாழ்த்து

'God with us'
'Christ in you'
'தேவன் நம்மோடிருக்கிறார்'
'கிறிஸ்து உங்களில்'

கிறிஸ்மஸ் தினத்தை எவ்வாறு எதிர்பார்க்கிறோம்? அநேகருக்கு கிறிஸ்மஸ் என்றால் புது வஸ்திரம் உடுத்துவதும், பிறரிடமிருந்து வெகுமதிகளைப் பெறுவதும், நல்ல பக்ஷணங்களைப் புசிப்பதும், சிநேகருக்கும் பெரியோருக்கும் வெகுமதி அனுப்புவதும்தான். இயேசு இரட்சகர் முதல் கிறிஸ்மஸ் அன்று தம்மை வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலாகி, மனுஷர் அவர் தரித்திரத்தால் ஐசுவரியவான்களாகும்படி மனுவுருக்கொன்று தரித்திரரானார்.

இதை உணர்ந்து இயேசுவை ஏற்றுக்கொண்டு, அவருடைய மாதிரிப்படி குறைவுள்ளவர்கள் குறையை நிறைவாக்குவதே சரியான கிறிஸ்மஸ் பண்டிகையாகும்.

கிறிஸ்மஸ் அன்று யார் வீட்டில் கிறிஸ்து போஜனம் பண்ணுகிறாரோ, யார் வீட்டில் அவரைக் காணலாமோ, அவர்களுக்கே கிறிஸ்மஸ் சந்தோஷம் கிடைக்கும். உனக்கு கிறிஸ்மஸ் சந்தோஷம் உண்டாவதாக வென்று பிறர் நம்மை வாழ்த்துவதாலும், நாம் பிறரை வெறும் எழுத்தாலும் வார்த்தையாலும் வாழ்த்துவதாலும் கிறிஸ்மஸ் சந்தோஷம் உண்டாவதேயில்லை.

பசியாயிருந்தேன் எனக்கு போஜனங் கொடுத்தீர்கள், தாகமா யிருந்தேன் என் தாகத்தைத் தீர்த்தீர்கள், வஸ்திரமில்லாதிருந்தேன் வஸ்திரங் கொடுத்தீர்கள், வியாதியாயிருந்தேன் பார்க்கவந்தீர்கள் என்று நம்மைக்குறித்துச் சொல்லப்படுமா?

சகோதரியே, எத்தனையோ கிறிஸ்மஸ் தினங்களில் உண்மையான கிறிஸ்மஸ் சந்தோஷத்தைப் போக்கடித்திருக்கிறாய். இந்த கிறிஸ்மஸ் உனக்கு எப்படி யிருக்கப்போகிறது? கிறிஸ்து உனக்குள் இருக்கிறாரா? உன் வீட்டில் அவரைக் காணலாமா? இன்னொரு கிறிஸ்மஸ் உனக்கு வருமோ? தெரியாது. சீக்கிரம் துரிதமாய்க் கிறிஸ்துவை ஏற்றுக்கொள். அவர் உன்னில் வாசம்பண்ண விரும்புகிறார். அவர் இம்மானுவேல். அவர் உன்னிலிருந்தால் அவரைப் போல் தாழ்மையும், அவர் நிமித்தம் பிறருக்காக உன்னை நீ வெறுமையாக்கிக்கொள்வதும், அடையாளமாகும். நீ புது வஸ்திரம் உடுத்தாவிட்டாலும் பரவாயில்லை. வஸ்திரமில்லாதோருக்கு வஸ்திரங் கொடுத்தால், கிறிஸ்துவின் ஆடை உன்னை அலங்கரிக்கும். நீ ருசிகர பக்ஷணங்கள் சாப்பிடாவிட்டாலும் பரவாயில்லை, உணவில்லாமல் பசியாயிருப்போரைப் பசியமர்த்து. கிறிஸ்து உன் ஜீவ அப்பமாய் இருக்கிறார்.

ஜெபம். இயேசுவே, உம்மைப் பார்க்க ஆசையாயிருக்கிறேன். சகேயு வீட்டுக்குப் போனமாதிரி என் வீட்டுக்கு வாரும். உம்மை சந்தோஷமாய் ஏற்றுக்கொள்வேன். சகேயு விட்டமாதிரி, கொடுத்துத் தீர்த்தமாதிரி, எதை விடவேண்டியதோ எதைக் கொடுத்துவிடவேண்டியதோ கீழ்ப்படிய ஆயத்தமாயிருக்கிறேன்.

நீர் என் சரீரமாகிய வீட்டில் வாசஞ்செய்ய அதை உமக்குப் படைக்கிறேன். என் ஆவி ஆத்துமா மாத்திரமல்ல சரீரத்தையும் படைக்கிறேன். ஏற்றுக்கொண்டு என்னில் வாசஞ்செய்யும். கிறிஸ்து என் சரீரத்தில் வாசஞ்செய்யும்போது, என் சரீரம் பாவத்துக்குச் செத்து நீதிக்குப் பிழைத்திருக்கிறது என்றறிந்து துதிக்கிறேன் ஆமென்.

ஜாக்கிரதையாய்க் கிறிஸ்து உன்னில் வாசஞ்செய்யப் பார். அவர் ஆசையோடு காத்திருக்கிறார். நீதான் இடங்கொடுக்கவேண்டியது.

## SUMMER SCHOOL AT ENNORE FOR EVANGELISTIC WOMEN WORKERS

## சுவிசேஷப் படைமுயற்சி ஊழியருக்கென்று என்னூரில் ஞானோதய வித்தியாசாலை

சுவிசேஷ ஊழியஞ் செய்ய வாஞ்சையுள்ளவர்களையும் இதற்கு முன் ஊழியஞ்செய்துகொண்டு வந்திருப்பவர்களையும் ஒன்றாய்க் கூட்டி ஐக்கியப்படுத்தி, பிரத்தியேகமான இடத்தில் ஒன்றாய்ச்



சேர்த்து, பலவித தொழில் தொல்லைகளை மறந்து வேதவசனத்தாலும், ஜெபத்தாலும், ஸ்தோத்திரத்தாலும், ஒன்றுசேர்ந்த சம்பாஷணைகளாலும், ஆவிக்குரிய பிரசங்கங்களாலும், சுற்றிலுமுள்ள கிராம ஹிந்துக்களைச் சந்தித்துக் கிறிஸ்துவைப்பற்றி சாட்சிசொல்லிப் பேசுவதாலும், ஆவியில் எழுப்புதலும் புதுப்பெலனும் ஜீவனும் நிறைவாய் அடையச்செய்வதனால் திரும்பித் தங்கள் ஸ்தானத்திற்கு வரும்போது பலனுள்ள வல்லமையான ஊழியஞ்செய்ய சக்தி கிடைக்குமென்ற நம்பிக்கையோடே இவ்வித ஞானோதய வித்தியாசாலை சென்னைக் கருகிலிருக்கும் என்னூரில் 1921-ம் வருஷம் ஜனுவரிமாதம் 13-ம் தேதி முதல் 16-ம் தேதி வரை நடக்கும். இதற்கு சுவிசேஷ ஊழியஞ்செய்வதில் கருத்துள்ள எல்லாப் பெண்களும் வரலாம்.

இதற்கு ஆயத்தமாக அப்போஸ்தலர் நடபடிகள் 1–17 அதிகாரங்களை (1) விசுவாசம், (2) ஜெபம், (3) பரிசுத்தாவியானவர், (4) பிரசங்கித்தல் முதலிய பொருட்களை மனத்தில் கொண்டு அவைகளுக்கேற்க ஆயத்தஞ் செய்துவந்தால் Bible Circle வேதஆராய்ச்சிக் கூட்டத்திற்கு உதவியாயிருக்கும்.

சென்னைக்கும் என்னூருக்கும் ரெயில் செலவு Central Station இல் இருந்து $2\frac{1}{4}$ அணா மாத்திரம்தான்.

சென்னையிலிருந்து மாத்திரமல்ல, தஞ்சை, திருச்சி, மதுரை, மானாமதுரை, வேலூர், இன்னும் மற்ற தமிழ்நாடுகளிலுமிருந்து பெண்கள் யாராகிலும் வரலாம். கூட்டங்களில் பேசப்படும் பாஷை தமிழ்தான். Bible Circleஇல் மாத்திரம் ஓர் தெலுங்கு பாகமிருக்கும்.

இதை நினைத்து ஆயத்தஜெபஞ் செய்யும்படி ஏற்கனவே அறிவிக்கிறோம்.

இதற்கு வரப் பிரியமானவர்கள் தங்கள் பெயரையும் மேல்விலாசத்தையும், சென்னை ஜார்ஜ்டவுன் தம்புசெட்டி வீதியிலுள்ள Mrs. L. Pancharatnam அம்மாளுக்குத் தெரிவிக்கவேண்டியது.

Miss P. Grover அம்மாள் வீட்டில் டிசம்பர்மாதம் 6-ந் தேதி திங்கட்கிழமை நடக்கும் கூட்டத்தில் இதைப்பற்றித் திட்டமாய் அறிவிக்கப்படும்.

## THE FIRST ADVENT OF CHRIST

## கிறிஸ்துவின் முதல் வருகை

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்த காலத்தில் அவர்களடைந்த நிஷ்டூரங்களுக்குக் கணக்கு வழக்குகளில்லை. அவர்கள் அவ்வளவு கஷ்டமடைந்த காலம் மகா கறுப்புக்காலம், அந்தகாரம் பூண்டிருந்த காலமென்றே சொல்லலாகும். மகா சங்கடம் சேர்ந்திருந்த அக்காலத்தில் ஒரு பெரிய வெளிச்சம் மோசே என்பவன் மூலமாய்த் தோன்றிற்று. அவன் பிரமிக்கத்தக்க அற்புதங்களை நடப்பித்து எகிப்தியராகிய கொடியரின் மத்தியிலிருந்து இஸ்ரவேலரைப் பிரித்து மீட்சியுண்டாக்கினான். அப்பொழுது யேகோவாவால் குறிக்கப்பட்ட பஸ்கா என்ற பண்டிகையை மீட்கப்படப் போகிற இஸ்ரவேலருக்கு ஏற்படுத்தினான். அந்த வேளையில்தானே அவர்களுக்குப் போதித்தது யாதெனில், அப்பண்டிகை மீட்சியின் நினைவுகூருதலுக்காகத் தொன்றுதொட்டு அங்கீகரிக்கப்படவேண்டுமென்பதுதான். எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து புறப்பட்ட அன்று முதல் இக்காலம் வரைக்கும் வருஷத்துக்கு ஒரு முறை பஸ்காப்பண்டிகையை அநுசரிப்பது யூதர்களுக்கு வழக்கமாயிருக்கிறது. அதுபோல இயேசுகிறிஸ்துவாகிய பராபர வள்ளல் பூலோகமானது மனுமக்களுடைய பாவத்தினால் அந்தகாரப்பட்டுச் சொல்லிமுடியாத நிர்ப்பந்தங்களால் நிறைந்துபோயிற்றென்று கண்டு, சுமார் இரண்டாயிரம் வருஷங்களுக்குமுன் ஜெகத்துக்கு அதிசய ஒளியாக மானிடாவதாரம் பூண்டு தோன்றினார். இதை நினைவுகூரும் பொருட்டுத்தான் இக்கிறிஸ்மஸ் பண்டிகை வருஷத்துக்கு ஒருமுறை ஞாபகச்சின்னமாகப் பக்தர்களால் அங்கீகரிக்கப்பட்டு வருகிறது. புற மதஸ்தர்களுக்கும் அநேக பண்டிகைகளுண்டு. அப்பண்டிகைகளை அவர்கள் அநுசரிக்கிற விதம் முற்றிலும் உலோக சிற்றின்பங்கள் பொருந்திய தன்மையுடையன. அப்பண்டிகைகளின் நோக்கமும் சாதிப்பும் சரீர சுத்திக்கும் மாம்சிஷ போஷிப்புக்கும் உரிய முறைகளை யுடையவைகளுமாயிருக்கின்றன. தங்களைச் சுற்றிலுமிருக்கிற புற மதஸ்தர்களைக் கண்ணுற்றுக் கிறிஸ்தவர்களும் தங்கள் பண்டிகைகளும் அப்பேர்க்கொத்தவைகள் என்றெண்ணி கொண்டாடப் பார்க்கிறார்களென்பதை நோக்குங்கால் மகா சஞ்சலமான காரியமென்று யாரும் சொல்லலாகும். கிறிஸ்துவின் அவதாரத்தினாலுண்டான நன்மைகள் மாட்சிமைபொருந்தினதாக விருக்கின்றன. கிறிஸ்துவின் அவதாரம் ஆத்தும ஈடேற்றத்துக்கும் இனி வரப்போகிற ஜீவியத்துக்கும் உரியதாயிருக்கிறது.



ஆகையால் அப்பண்டிகையைப்பற்றி நன்குணர்ந்துகொள்வது நன்மையாயிருக்கும்.

கிறிஸ்து பிறந்த பண்டிகையில் கவனிக்கவேண்டிய குறிப்புகளாவன:

முதலாவது. எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தையுண்டாக்கும் நற்செய்தி. லூக். 1 : 10.

'சந்தோஷம்', 'நற்செய்தி' என்ற பதங்கள் எல்லாப் பாஷைகளிலும் எவ்வகையான மனுஷருக்கும், சிறந்தவைகளும் விரும்பப்படத் தக்கவைகளுமாயிருக்கின்றன. கிறிஸ்துவின் பிறப்பினால் எல்லாப் பூலோக மனுப்புத்திரர்களுக்கும் சந்தோஷம் கூறப்பட்டது. ஆம், ஐந்து வருஷங்களாய் ஐரோப்பாவில் நடந்த பயங்கர யுத்தம் முடிவு பெற்ற நாள் எவ்வளவு சந்தோஷகரமான நாளாயிருந்தது! உள்ளபடி அந்த யுத்தத்தினால் பெரும் கஷ்டமடைந்த பேர்களுக்கு யுத்தம் முடிந்தது என்ற செய்தி அளவுக்கடங்காத சந்தோஷத்தை யுண்டாக்கியிருக்கும். அவ்விதமே உலகமுண்டானதுமுதல் மூவாயிரம் நாலாயிரம் வருஷங்களாய் பாவத்தில் கெட்டழிந்துபோன மனுக்கோடிகளுக்கு கிறிஸ்துவின் பிறப்பினால் எவ்வளவு சந்தோஷமுண்டாகும்! பாவத்தின் கெடுதிகளையும் அதினாலுண்டான அழிவையும் நன்குணர்ந்தவர்களுக்கு நிச்சயமாகவே சந்தோஷந்தான். கிறிஸ்தவர்களுக்கு இந்த சந்தோஷ செய்தி எப்படியிருக்கிறது? பாவத்தின் கெடுதிகள் கிறிஸ்துவின் அவதாரத்தினால் ஒழிந்துபோயிற்றா? இன்னமும் திகில்கள், பாவப் பயங்கரங்கள், பாவப் போராட்டங்கள் இருதயத்திலே குடிகொண்டிருக்குமானால் நற்செய்தியும் சந்தோஷமும் வருஷா வருஷம் கூறப்பட்டாலும் என்ன பிரயோஜனம்! ஆகையால்நல் உணர்வோடே இந்தச் சந்தோஷத்தை அநுபவிப்போமாக. அதை ஏற்றுக்கொள்வோமாக.

இரண்டாவது. கிறிஸ்து என்னும் இரட்சகர். லூக். 1: 11.

கிறிஸ்து என்றால் அபிஷேகம் பெற்றவர். இரட்சகர் என்றால் மனுஷரைப் பாவத்தினின்று இரட்சிக்கிறவர். அதாவது மனுஷரைப் பாவத்தினின்று இரட்சிக்க அபிஷேகம் பெற்றவர் என்று அர்த்தமாம். கிறிஸ்து உலகத்தில் வந்து தேவன் எத்தன்மையுடையவரென்றும் அன்பாவது என்னவென்றும் விளக்கிக் காட்டினதுமன்றி தம்மூழியத்தினாலும், பாடுகளினாலும், மரணத்தினாலும், உயிர்த்தெழுதலினாலும், பரமேறுதலினாலும், எத்தனையோ கோடிக்கணக்கான மாந்தர்கள் ஆத்தும ஈடேற்றத்தை யடைந்து சந்தோஷித்துப் பூரிக்கும்படி செய்திருக்கிறார். அளவிறந்த நன்மைகள் உலகுக்கு உண்

டாயிற்று. ஆனால் கிறிஸ்தவர்களாயிருந்துகொண்டு மன மாறுதலில்லாமல் எத்தனை வருஷமிருந்தாலும், எத்தனை கிறிஸ்மஸ் பண்டிகைகளைக் கொண்டாடினாலும் கடுகளவு பிரயோஜனமுமில்லை. அவர்கள் அதிக கணக்குக் கொடுக்கவேண்டியவர்களாயிருக்கிறார்கள். குணமாறாமல், பாவம் நீங்காமல், பழைய துர்ச்சுபாவம் கொஞ்சமென்கிலும் ஒழியாமல் இருக்கும்போது கிறிஸ்மஸ் என்ன கிறிஸ்மஸ்! அவர்கள் பாவத்தோடே பாவத்தைக் கூட்டிச்சேர்க்கிறவர்களாயிருந்து அநேக புறமதஸ்தர்கள் மத்தியில் இடறல்களாயிருந்து தங்களுக்குத் தீமையை வருவித்துக்கொள்ளுகிறவர்களாய் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் பண்டிகை தினத்தில் சாப்பாட்டுக் காரியங்களைப் பற்றியும், உடைகள் பட்டுகள் வாங்குகிறதைப்பற்றியும், நகைகள் செய்கிறதையுமே மனதிற்கொண்டு கிறிஸ்துவை முற்றிலும் மறந்து வெளிவேஷ மார்க்கமாக்கிப்போடுகிறார்கள். இது சபைக்குள்ளே, கோவில்களுக்குள்ளே, குடும்பங்கள் மத்தியிலே, சாத்தான் வைத்த சதியோசனை என்றே சொல்லவேணும். உலக சிந்தையாயிராமல் கிறிஸ்துவின் சிந்தையாயிருப்போமாக. சாப்பிடுகிறது, உடுக்கிறது இன்னோர் நாளில் செய்துகொள்ளலாம். ஆனால் நாம் இந்த அவதாரம், மகிமை துறத்தல், பாவத்தின் கொடுமை, நம்முடைய நிலைமை, கணக்கற்ற புறமதஸ்தர் சாத்தானால் பாவமாகிய அந்தகாரச் சங்கிலியினால் கட்டப்பட்டு இயேசுகிறிஸ்துவின் மீட்பில்லாமலிருக்குதல், இவைகளைச் சிந்தித்து தக்க முறைகளை உபயோகித்தால் எவ்வளவு நன்மையை யுண்டாக்கும்! கிறிஸ்து மார்க்கமும், பண்டிகைகளும் பேச்சும் புசிப்பும் குடிப்புமல்ல, பெலத்திலேதானிருக்கிறது. ஓர் பக்தியுள்ள உத்தம கிறிஸ்தவனுக்கு எல்லா நாட்களும் ஓய்வுநாட்கள்தான், எல்லா நாட்களும் பண்டிகை தினங்கள்தான், எல்லா நாட்களும் விசேஷித்த நாட்கள்தான். ஆகையால் கிறிஸ்துவை யணிந்து அவர் சிந்தையாயிருப்பதே கிறிஸ்மஸ் பண்டிகை.

மூன்றாவது. தேவனுக்கு மகிமை, பூமியிலே சமாதானம், மனுஷர்மேல் பிரியம். லூக். 2 : 14.

கிறிஸ்துவை உலகத்தில் அனுப்பினதினாலே பிதாவாகிய தேவனுக்கு மகிமையுண்டாயிற்று. அவருக்கு எல்லா மகிமையுமுண்டு. ஆனால் பாவிகளை இரட்சிக்கக் கிறிஸ்து பூலோகத்துக்கு மனுஷாவதாரமாய் வந்ததினால் அவருக்கு இன்னமும் மகிமையுண்டாயிற்று. மற்றப்படி தம்முடைய மகிமைக்குக் குறைவு என்பதுபோல பாவிகளுக்கு தம்மன்பை விளங்கப்பண்ணினார். தேவன் பார்த்து மனுஷர்கள் குறைவை நிவிர்த்திசெய்தபோது பூமிக்குச் சமாதானமிராதா! ஒரு பெரிய ராஜா ஒரு அற்பமான மனுஷனை உயர்த்தும்போது அந்த மனுஷனுக்கு எவ்வளவு சந்தோஷமும் சமாதானமும் இருக்கும்! பாவந்தான் தேவனுக்கும் மனுஷனுக்கும் இடையிலே தடுப்புச் சுவர் போல் நின்றது. மனுஷன் கடவுளைப் பார்க்கக்கூடாதவனாயிருந்தான். ஆனால் இப்போதோ கிறிஸ்துவின்மூலமாய் தேவனை நிமிர்ந்து பார்க்கக்கூடியவனாயிருக்கிறான்; அவரோடு தாராளமாய்ப் பேசக் கூடியவனாயிருக்கிறான்; எந்த நன்மையையும் பெற்றுக்கொள்ளக் கூடியவனாயிருக்கிறான். ஏன்! கிறிஸ்துவின் பிறப்பினால் மனுஷர் மேல் பிரியமுண்டானதினாலேதான். நாம் இப்படிப்பட்ட சந்தோஷத்தை அனுபவிக்கும்போது இப்படிப்பட்ட சந்தோஷ செய்தியை நம்மைச் சுற்றிலுமிருக்கிற ஜனங்களுக்கு அறிவிக்க எவ்வளவு ஆவலாயிருக்கவேணும். சுவிசேஷம் அறிவிக்கப்பட ஏற்ற ஏற்பாடுகளைச் செய்ய இந்தப் பண்டிகையிலே துவங்குவோமாக. அப்பொழுது தேவனுடைய பூரண சந்தோஷமும் பிரியமும் நம்மேலுண்டாயிருக்கும்.

V. D. Kailasam.

## THE SECOND ADVENT OF CHRIST

## கிறிஸ்துவின் இரண்டாம் வருகை

('சென்றான் சென்றான்' என்ற நடைப்படி பாடலாம்.)

இராகம், மத்தியமாவதி. அடதாளசாப்பு.

பல்லவி

வருவார் வருவார் கிறிஸ்து—முகில்மேலே
வருவார் வருவார் கிறிஸ்து.

அனுபல்லவி

வந்தவ ரொருகால மிந்தப் பூவியின் மீது
வலுபாவ நாசஞ்செய்து பரலோகஞ் சென்றவர்— வருவார்

1

பரிவாக மானிடர்க்காய்—தம்மைப் பரிகார மாகச்செய்தவர்
பட்சம்வைத் துலகோர்க்காய்த்—தம்மை தத்தம் சமர்ப்பித்தவர்
பாரினி லுள்ளவரைக் கூவி யழைத்தவர்
பரகதி வாழ்வைப் பகர்ந்திவே னென்றவர்
படியோர் களின்மேற் பரிதாபங் கொண்டவர்
பரனோடு பாவிகளை உறவாகச் செய்தவர்— வருவார்

2

பாதாளத்திற் சென்று திறவு–கோலை கொண்டு ஏகிச்சென்றவர்
பிசாசின் சிரத்தை யொடித்துப்–பக்தரை பரகதி சேர்ப்பேனென்றவர்
பொல்லாத உலோகத்தின் பவமெல்லாம் ஜெயித்தவர்
பேரதி சயங்களைச் செய்து ஜொலித்தவர்
புண்ணிய னெனப்பெயர் புவியினிற் தரித்தவர்
பிரமிப் புண்டாகவே பிரசங்கஞ் செய்தவர்— வருவார்

3

இரண்டாம் விசை வருகை–வெகு பயங்கரமா யிருக்கும் [கும்
இரவிற் திருடன் வரும்போல–அவர்வருகை எதிர்பாராக் காலமிருக்
இங்குமங்கு மோடிற் தத்தளிப்பா யிருக்கும்
இரவும் ஒளியா யெங்கும் பிரகாசிக்கும்
இழிவான பாவஞ்செய்தோர் எங்கேயோடிச் சென்றாலும்
இறைவன் கரமவரை யெட்டிப் பிடித்திழுக்கும்— வருவார்

4

வானம் மடமடென்க–ஆகாய சத்துவங் குலுங்கியதிர
வரைகடக் தேகித் தரையில்–தூதர்கண மூதும் எக்காளத்தோடே
வந்துவுலகின் நாலா திக்குதிசையிற் சென்று
வாகாக மனுஷரை ஏகமாய்ச் சேர்த்துமே
வல்லகர்த்தன் முன்பு ஏகமாய்க் கூட்டியே
வரிசை வரிசையாக அவர்முன்பு நிறுத்துவார்— வருவார்

5

கோடானுகோடி தூதர்கள்–அவரைச் சூழ்ந்து கும்பலாக வருவார்
கோதில்லாப் பரிசுத்தர்கள்–அவரைச் சூழ்ந்து தோத்திரகீதம் படிப் [பார்
கோமானேசு வப்போ வுலகத்தோர் பார்க்கவே
கிரீடாதி பதியாகப் பிதாவின் மாட்சிமையோடு
கீழிறங்கி யாரும் திகில்கொண்டு அதிர்ந்திட
கேடானர் யாவரும் குலுங்கி நடுங்கிட— வருவார்

6

ஜோதிய ரேசுபெருமான்–பன்னருஞ் சர்வாதி காரத்தோடும்
சாற்றரும் மகிமையோடும்-சர்வ சிட்டோர்கள் சங்கத்தோடும்
சக்ர வர்த்தியாக சகல மனுடரையும்
சாஷ்டாங்கஞ் செய்திட கூட்டியே சேர்த்திடுவார்
சகல மனுஷரும் அவர்பாதம் பணிகுவார்
சத்ய விரோதிகளைச் சங்காரஞ் செய்குவார்— வருவார்



7

பக்தர்க ளேகோபித்துப் புதுப்–பாட்டொன்று ஆலாபிப்பார்
பற்பல இராகங்களினால் ஏசுபுகழ் பரிவாக இசைசெய்குவார்
பாசம்பொங்கிப் பல கவிவாண ரெழும்புவார்
பாட்டினாற் தம்மன்பை பகர்ந்து துதிசெய்வார்
பாலனும் சிற்றுக்கவி வேத நாயகனும்
பாண்பாகச் சுவிசேஷ மாண்பைப் புகழ்ந்திடுவான்.— வருவார்

D. V. Kailasam.

## WORLD'S NEWS

## உலக வர்த்தமானங்கள்

சீனா தேசத்தில் பஞ்சமுண்டாகி ஐந்து மாகாணங்களில் அதிக மும்முரமாயிருக்கின்றது. இதினால் ஐந்து கோடியே எண்பது லட்சம் ஜனங்களுக்கு அதிகக் கஷ்டமுண்டாகியிருக்கிறது. அதில் ஒரு கோடியே நாற்பது லட்சம் ஜனங்கள் ஆகாரக் குறைவினால் நிர்ப்பாக்கிய திசையிலிருக்கிறார்களாம். இதை நிவிர்த்தி செய்வதற்கு ஐந்து கோடிப் பவுன் தேவையென்று உத்தேசிக்கப்பட்டிருக்கிறதாம்.

தென் ருஷியாவில் கிரிமியாவுக்குச் சமீபத்தில் ரெட்ஸ் என்ற பால்ஜவிக் சேனைக்கும் ஜெனரல் ராங்கலின் சேனைக்கும் கடும் யுத்தம் அநேக காலங்களாய் நடந்துகொண்டுவருகிறது. தற்சமயத்தில் ருஷ்யர்கள் அதிகக் கடினமாய்த் தாக்குகிறபடியால் இருகட்சிக்காரருக்கும் பெருத்த நஷ்டமுண்டாகியிருக்கிறது. என்னமாய் முடியுமோ தெரியாது.

போலண்டுகாரருக்கும் ருஷ்யருக்கும் பெருத்த யுத்தம் அநேக மாதங்களாய் நடந்து போலண்டுக்காரர் ஜெயகெம்பீரர்களானார்கள். ஆகவே இருதிறத்தாருக்கும் சமாதான உடன்படிக்கை யுண்டாகியிருக்கிறது.

தற்காலத்தில் உலகமுழுவதிலும் ஏறக்குறைய அநேக ராஜ்யங்களிலும் தேசங்களிலும் பெரும் மாறுதல்கள் நேரிட்டுக்கொண்டு வருகின்றன. உள்நாட்டுக் கலகங்களினால் ஏராளமான பேர் மாண்டுபோனார்கள். இதற்குக் காரணம் ராஜாங்க விவாதத்தைப் பற்றினதுதான். நம்முடைய இந்தியா தேசமும் அப்படிப்பட்ட பயங்கர நிலைமைக்கு வாராதபடி காந்தி என்பவரும் அவரைச்சேர்ந்த மகான்களும் மாட்சிமைதங்கிய கருணைநிறைந்த கவர்ன்மென்றோடே

ஒத்திணங்கி பெரும் நன்மைகளைப் பெற்றுக்கொண்டால் நலம். அப்படி இசைந்து சீர்திருத்தங்கள் செய்தால் உயிர்நஷ்டம், பொருள் நஷ்டமில்லாமல் எல்லாம் நன்மையாய் முடியுமென்பதற்குச் சந்தேகமில்லை.

ஐர்லாந்து தேசத்தின் நிலைமை இன்னும் சீர்கெட்டதாகத்தான் இருக்கிறது. அதிகமான உயிர்நஷ்டங்கள் பொருள்நஷ்டங்கள் பிரதிதினமும் சகஜமாய் நடந்துகொண்டுவருகின்றன. இவைகளை நிவிர்த்திக்கும்பொருட்டு கவர்ண்மென்றார் அநேக பிரயத்தனங்களைச் செய்துவருகிறார்கள்.

நணம் ஹார்டிங் என்பவர் அமெரிக்கா தேசத்திற்குப் புது பிரசிடெண்டாகத் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிறார்.

ஓர் ரெயில்வே விபத்து.—நவம்பர் மாதம் 3-ந் தேதி எழும்பூர் ஸ்டேஷனுக்கு ஆபீசர்கள் ஏற்றிய ரெயில் வரும்போது மிதிபலகையில் நின்றவர்கள் பக்கத்தில் நின்ற டிரக் வண்டியில் மோதியதால் இரண்டுபேர் படுகாயப்பட்டு ஜெனரல் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப்பட்டார்கள்.

## I COME TO THEE MY SAVIOUR, AS I AM

## இரட்சகரிடத்தில் சேருதல்

இராகம், மலையாமி. திரிசுரதாளம்.

பல்லவி

பாவி எனைக் காரும்—தேவே
பாதக னானாலும்.

மேவிநீர் கல்வாரி மேட்டினிற் சிந்திய
மேன்மை உதிரபலம்—கெட்ட
பாவியா மென்னையும் மீட்க மாவல்லதே
பார்த்திபா வந்தேன் வந்தேன்— பாவி

என்நீச கோலமாய் என்நீதி கந்தையென்
றெண்ணி வருகின்றேனே—மன்னா
உன் றுதிரத்தினா லென்னையும் சுத்திசெய்
ஓடிநான் வந்தேன் வந்தேன்— பாவி

நான்நீச பாதகனா னாலும் கிருபையாய்
நாதனெனைக் காரும்—ஓகோ
கோனா ருதிரத்தா லென்னையும் மீட்கச்செய்
கொற்றவா வந்தேன் வந்தேன்— பாவி



நான்நீச பாதகனா னாலும் ஏழையாம்
நாயெனைக் காருமையா—ஓகோ
என் இந்த அன்பு குருசினிற் காட்டினீர்
என்பரா வந்தேன் வந்தேன்— பாவி

எங்கே நானோடுவேன் பாதகன் நானையா
ஏசுவே உம்சரணம்—என்னை
ஏற் றுதிரத்தினால் மீட்டுக் கழுவிடும்
ஏகனே வந்தேன் வந்தேன்— பாவி

கடன்களெல்லாம் தீர்க்கச் சிவனை விட்டவென்
கர்த்தனே யென்கடனும்—முற்றாய்
அடங்க நிவிர்த்திசெய் தந்த னருளினால்
ஆறுதல் செய்வாயே— பாவி

எங்கே நானோடுவேன் பாதகன் நானையா
ஏசுவே உம்சரணம்—எந்தன்
பங்குகதி வேறு இல்லையே அப்பனே
பாதகன் வந்தேன் வந்தேன்— பாவி

யேசுஎன் ராசாநீர் கூப்பிட்டதால் வந்தேன்
என்னையு மேற்றிடுமேன்—ஓகோ
நீசன்நான் ராசனின் சத்தத்தைக் கேட்டேனே
நீதிபா வந்தேன் வந்தேன்— பாவி

பாவத்தா லுண்டான துன்பங்க ணீங்கிடப்
பார்த்திபா பாடுபட்டீர்—அந்த
ஆயத்தால் கல்வாரி மேட்டில் அகற்றினீர்
அன்பா நான் வந்தேன் வந்தேன்— பாவி

குற்றமா தீங்குகள் செய்தேனே யானாலும்
கொற்றவா நின்மரணம்—பலன்
சற்றுங் கறையிலா தென்னையு மாக்கிடும்
சற்பரா வந்தேன் வந்தேன்.— பாவி

Late Rao Saheb J. L. Christmas Pillai,
Diwan of Singampatti.

## CHRIST'S TRANSFIGURATION

## இரட்சகரின் மறுரூபம்

நமது அருமைநாதராகிய இயேசு கலிலேயா கடலின் வட திசையிலுள்ள செசாரியா பிலிப்பு பட்டணத்திலிருந்து பேதுரு, யாக்கோபு, யோவான் என்ற மூன்று சீஷரை அழைத்துக்கொண்டு, உயரமான ஓர் மலையிலேறி அங்கே ஜெபித்துக்கொண்டிருந்தார். அச்சமயத்தில் அவரில் ஒரு பெரிய மாறுதல் காணப்பட்டது. அவருடைய முகம் சூரியனைப்போல பிரகாசித்தது, அவருடைய வஸ்திரம் வண்ணான் ஒருகாலும் வெளுக்கக்கூடாத அவ்வளவு வெண்மையாக இலங்கினது. மோசே, எலியா என்ற இருவர் அவருடன் சம்பாஷிக்கிறவர்களாய்க் காணப்பட்டார்கள். அந்த மூன்று சீஷரும் இக்காட்சியைக் கண்டு, பிரமைகொண்டு அங்கே தானே எப்பொழுதும் இருந்துகொள்ளலாமென்று ஆசைகொண்டார்கள். உடனே ஒரு மேகம் காணப்பட்டு அதிலிருந்து ‘இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவிகொடுங்கள்’ என்று இயேசுவைக் குறித்து அசரீரி வாக்குப் பிறந்தது. இந்தக் காட்சியிலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் சில பாடங்களாவன :

1. இதில் ஜெபத்தின் வல்லமையைக் காண்கிறோம். இரட்சகர் ஜெபித்துக்கொண்டிருக்கையில் இந்த மறுரூபத்தைப் பெற்றார். நண்பர்களே, நீங்கள் ஜெபித்துக்கொண்டிருக்கையில் உங்களுக்குள்ளே மாறுதலைப் பெற்றீர்களா? நீங்கள் பிறருக்காக ஜெபிக்கும்போது அவர்களுக்குள்ளே மாறுதலைக் கண்டிருக்கிறீர்களா? உங்கள் பிள்ளைகளுக்காக ஜெபித்தபோது அவர்களுக்குள் மனமாறுதலைக் கண்டீர்களா?

2. இரட்சகர் மறுரூபமானபோது அவர் தமக்கு இல்லாத ஒரு ரூபத்தைப் பெற்றுக்கொள்ளவில்லை. அவர் பூமியிலிருந்தபோது காணப்பட்டதுதான் பாடுள்ள மறுரூபம், இப்போது அவர் மலையில் காணப்பட்டது அவரது இயற்கையான மகிமை. தமது சுயரூபத்தை இங்கே காட்டினார். ஆ! அது எவ்வளவு மாட்சிமைபொருந்தினது! நாமும் ஆண்டவர் நமக்கு ஆதியில் கொடுத்த சுயரூபத்தை அடைந்து கொள்ளுகிறதானால், அதற்கு நிகர் உண்டோ?

3. இதில் பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் ஒன்றென ரூபகாரமாகிறது. யூதர்கள் இயேசுவின் போதனையைச் சரியானபடி விளங்கிக்கொள்ளாமல் அவர் பழைய ஏற்பாட்டுக்கு விரோதமானவர்



என்று நினைத்தார்கள். அப்படியல்ல. பழைய ஏற்பாடு ஆரம்பம், புதிய ஏற்பாடு முடிவு; பழைய ஏற்பாடு நிழல், புதிய ஏற்பாடு பொருள். பழைய ஏற்பாட்டு மகான்களாகிய மோசேயும் எலியாவும் தங்களுடைய பணிவிடையை இயேசுவின் பாதத்தில் வைத்து, அவர் எருசலேமில் நிறைவேற்றப்போகிற மாட்சிமையான சுய யாகத்தைக் குறித்துச் சம்பாஷித்துக்கொண்டிருந்தார்கள். மேலும் கடவுள் கொடுத்த சாட்சியினாலே இயேசு மற்றெல்லோருக்கும் மிக்க மேலானவரென்று ரூபிக்கப்பெற்றார்.

4. இது இயேசு எருசலேமில் நிறைவேற்றப்போகும் சுய யாகத்துக்கு அவரை முஸ்திப்புச் செய்தது. பிரயாணிகள் வழிக்கு முஸ்திப்புச் செய்வதுபோலும், யுத்தவீரர் யுத்தத்துக்கு முஸ்திப்புச் செய்வதுபோலும், இக்காட்சி இயேசுவை அவருடைய பாடுகளுக்கு முஸ்திப்புச் செய்தது. கெத்செமனே பாடுகள் சாமான்யமானவையா? ஆசாரியன் வீட்டிலும், சங்கத்தின் முன்பும், பிலாத்துவின் அரமனையிலும் அவர் அடையப்போகிற அவமானங்களும் இம்சைகளும் இலேசானவையா? சிலுவையில் ஆணிகளால் கடாவப்பட்டு, ஈட்டியால் குத்தப்பட்டுப் பாவிகளின் நிந்தனைக்கும் பரியாசத்துக்கும் இடமானது இம்மட்டென்று சொல்லக்கூடுமா? இவ்வளவுக்கும் அவருக்கு ஊக்கம் கொடுத்தது என்ன? அவர் பிதாவின் சமுகத்தில் அடையப்போகிற மகிமைக்கு அச்சாரமான மறுரூபமல்லவா? சிநேகிதர்களே, நீங்கள் உங்களுக்கு வரும் பாடுகளை எதனால் தாங்கிக் கொள்ளுகிறீர்கள்? இக்காலத்துப் பாடுகள் இனிவரும் மகிமைக்கு ஈடானவை அல்ல என்று நினைக்கிறீர்களா?

5. இது சீஷருடைய விசுவாசத்தைத் திடப்படுத்தும் காட்சியாயிருந்தது. அவர் பிடிபட்ட சமயத்தில் இக்காட்சியை நோக்கச் சற்று மறந்தார்கள்போலிருக்கிறது. பின்னாடி இதை நினைத்துத் திடங்கொண்டார்கள். நேசர்களே, நீங்கள் இக்காட்சியை உற்று நோக்கிப் பார்த்தால் உங்கள் விசுவாசம் கொழுந்துவிட்டெரியாதா? மானுட ரூபமாய்க் காணப்பட்ட ஆண்டவரை ஏற்றி ஏற்றித் தொழமாட்டீர்களா?

6. இது மறுமையை நமக்குக் காட்டும் கண்ணாடியாயிருக்கிறது. மரணத்துக்குப் பின்னுள்ள. நிலைமையைக் குறித்து உலகத்தார்க்குத் தெளிவில்லை. நமக்கோ இது உள்ளங்கை நெல்லிக்கனிபோலிருக்கிறது. ஆயிரம் வருஷத்துக்கு முன்னிருந்த மோசேயும் எலியாவும் திரும்ப மகிமையோடே வருகிறதாயிருந்தால், நண்பனே நீயும் நானும் மரணத்துக்குப்பின் இருக்கமாட்டோமா? சந்தேகமின்றி

இம்மை கடந்தவுடன் மறுமைக்குட்பட்டு நாம் நேசிக்கிற, நம்மை நேசிக்கிற இரட்சகரைக்கண்டு களிகூர்வோம், இந்த நினைவு நம்மைத் தேற்றக்கடவது.

Y. J. Taylor.

## LIFE OF LATE Mrs. ARULAMMAL NOAH GNANADICKAM

## கனம் அருளம்மாள் ஞானதிக்கம் அம்மாள் ஜீவிய சரித்திரம்

(தொடர்ச்சி)

அன்றியும் அந்த மருமக்கள்மாரும் தெய்வபயத்துடன் ஜீவித்து தங்களுக்குக் கிடைத்திருக்கும் ஊழியங்களை உண்மையோடு நடத்தி நல்ல பெயரெடுத்து, கவர்ண்மெண்ட் வேலைக்காரராக இருந்தாலும் எத்தனை அவசரவேலை யிருந்தாலும் காலை மாலை குடும்பஜெபங்கள் தவறாது நடத்தி சந்தோஷமாயும் சமாதானமாயும் வாழ்ந்து, குறை கூறாது இவர்களுக்கும் சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடியவர்களாகவே இருந்தார்கள்.

இதுவுமன்றி இவர்கள் ஏகபுத்திரனுக்கு வாய்த்த பெண்ணும் அழகிலும் குணத்திலும் சிறந்ததெனவே சொல்லவேணும். திருநெல்வேலியில் பிறந்து வளர்ந்த பெண்ணாயினும், தஞ்சை சங். சாஸ்திரியாரவர்கள் வீட்டுக்கு எல்லா விஷயங்களிலும் ஒத்து நடந்துகொள்ளக்கூடிய நற்குணசாலியாகக் கிடைத்ததும் தேவகிருபையே. 'மாமியார் மெச்சிய மருமகளில்லை' எனப் பழமொழியுண்டு. ஆனால் ரூத்தும் நகோமியும் போல இவர்களும் இவர்களுடைய மருமகளும் ஒருவருக்கொருவர் நட்பாயிருப்பதும், தன் மருமகள் மதனி சம்பந்திமாருக்கு ஏற்க நடந்து நட்புடன் உறவாடி ஒற்றுமையாயிருப்பதும், தன் மாமன் மாமியார் இவர்களுடைய சுகவீனத்தில் மருமகள் கவலையுடன் கரிசனையாய் ஊழியம் செய்வதும் கவனிக்குங்கால், இவர்கள் ஒருவர்பேரில் ஒருவர் வைத்திருக்கும் களங்கமில்லாத மாயமற்ற சிறந்த அன்பே எனக் கூறலாம்.

'ஆ! சகோதரர் ஒன்றாய்
ஏகமான சிந்தையாய்
சஞ்சரித்தால் எத்தனை
சீர்த்தியான இனிமை!'



இந்த அம்மாள் தன் மாமியாருக்கு எவ்வித அன்புடன் நடந்துகொண்டார்களோ, அந்தப்படியே இவர்களுக்கும் அந்தியகாலத்திலும் சடையாது கவனித்து நடத்தும் நற்குணசாலியான மருமகளை தேவன் கடாக்ஷித்தார். இதுவும் இவர்கள் வீட்டுக்குக் கிடைத்த ஆசீர்வாதங்களில் ஒன்றெனலாம். இதினாலே அவர்கள் பெரிய குடும்பத்தில் சமாதானம் நிலைபெறவும் இடமாயிற்று.

இந்த அம்மாள் வேதவாசகங்களையும் பக்திக்குரிய புஸ்தகங்களையும் வாசிப்பதுபோல தன் மருமகளும் வேலையொழிந்து இருக்கும் நேரங்களில் பக்திக்குரிய புஸ்தகங்களை வாசிக்கப் பழக்குவித்தார்கள். இவர்கள் யாவரோடும் சாந்தமாயும் அன்பாயும் அருமையாயும் சுகக்ஷேமாதி காரியங்களை விசாரித்துப் பேசுவார்கள். ஆனால் வீண்பேச்சுகளும் கட்டுக்கதைகளும் அவர்களுக்குப் பிரியமிராது.

(இன்னும் வரும்.)

## NOTICE

## விளம்பரம்

நீலகிரியிலும், சென்னையிலும், வேலூர் வட்டகையிலும், திருநெல்வேலியிலும் சுவிசேஷ ஊழியத்தில் வாஞ்சையுள்ள வேதாகம ஸ்திரீகள் இந்துக்களுக்குள் வேலைநடத்த தேவை.

30 வயது முதல் 40 வயது வரையுள்ள சுவிசேஷ வேலையில் கருத்துக்கொண்டவர்கள் இந்த வேலைக்காகத் தங்களை ஒப்புக்கொடுத்து தங்களுக்குப் பிரியமான இடத்தைக் குறிப்பிட்டு, சென்னை கனம் P. குரோவர் அம்மாளவர்களுக்கு பின்வரும் மேல்விலாசம் போட்டுத் தெரியப்படுத்தலாம்: Miss P. Grover, C. E. Z. M. House, Vepery, Madras.

வேலை துவக்குமுன் யாருக்காவது இவ்வேலையில் பயிற்சி வேண்டுமென்று விரும்பி தெரியப்படுத்தினால் அதற்கேற்ற ஏற்பாடுகள் செய்யப்படும்.

162017

## LESSONS FOR FAMILY WORSHIP

# வேத வாசிப்பு ஒழுங்கு

### 1920-ஆம் டிசெம்பர்மீ

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | பு. | ஏசா. | 1. | 1—17 | 11 | ச. | ஏசா. | 25. | 1—12 | 21 | செ. | ஏசா. | 35. | 1—10 |
| 2 | வி. | ,, | 1. | 18—31 | 12 | ஞா. | ,, | 26. | 1—13 | 22 | பு. | ,, | 38. | 1— 8 |
| 3 | வெ. | ,, | 2. | 1—17 | 13 | தி. | ,, | 27. | 1—13 | 23 | வி. | ,, | 38. | 9—22 |
| 4 | ச. | ,, | 5. | 1—10 | 14 | செ. | ,, | 28. | 9—20 | 24 | வெ. | ,, | 39. | 1— 8 |
| 5 | ஞா. | ,, | 5. | 11—25 | 15 | பு. | ,, | 28. | 21—29 | 25 | ச. | மத். | 1. | 18—25 |
| 6 | தி. | ,, | 6. | 1—13 | 16 | வி. | ,, | 29. | 13—24 | 26 | ஞா. | சங். | 27. | 1—14 |
| 7 | செ. | ,, | 8. | 13—22 | 17 | வெ. | ,, | 30. | 8—21 | 27 | தி. | ,, | 28. | 1— 9 |
| 8 | பு. | ,, | 9. | 1— 7 | 18 | ச. | ,, | 30. | 27—33 | 28 | செ. | ,, | 29. | 1—11 |
| 9 | வி. | ,, | 11. | 1—12 | 19 | ஞா. | ,, | 32. | 1—20 | 29 | பு. | ,, | 30. | 1—12 |
| 10 | வெ. | ,, | 12. | 1— 6 | 20 | தி. | ,, | 33. | 13—24 | 31 | வெ. | ,, | 31. | 14—24 |

C. L. S. PRESS, MADRAS—1920